ஜாய்ஸ் மேயர்

30 இலட்சத்திற்க்கும் அதிகமான பிரதிகள் விற்பனையாகும் சிறந்த ஆசிரியர்

# சிந்தையின் போர்க்களம்



## உங்கள் சிந்தையில் ஏற்படும் போரில் வெற்றி பெறுதல்



# சிந்தையின் போக்குகள்

# சிந்தையின் போர்க்களம்

*உங்கள் சிந்தையில் ஏற்படும் போரில் வெற்றி பெறுதல்*

**ஜாய்ஸ் மேயர்**

JOYCE MEYER MINISTRIES®

Nanakramguda, Hyderabad - 500 008

If you purchase this book without a cover you should be aware that this book may have been stolen property and reported as "unsold and destroyed" to the publisher. In such case neither the author nor the publisher has received any payment for this "stripped book."

Unless otherwise indicated, all Scripture quotations are taken from *The Amplified Bible* (AMP). *The Amplified Bible, Old Testament,* copyright ©1965, 1987 by the Zondervan Corporation. *The Amplified New Testament,* copyright © 1954, 1958, 1987 by The Lockman Foundation. Used by permission.

Scripture quotations marked NKJV are taken from *The New King James Version* of the Bible. Copyright © 1979, 1980, 1982 by Thomas Nelson, Inc., Publishers. Used by permission.

Scripture quotations marked NKJV are taken from the *King James Version* of the Bible.

Copyright © 2014 by Joyce Meyer Ministries - Asia

All rights reserved. No part of this publication may be reproduced, distributed, or transmitted in any form or by any means, or stored in a database or retrieval system, without the prior written permission of Joyce Meyer Ministries - Asia.

Joyce Meyer Ministries - Asia
Nanakramguda, Hyderabad - 500 008
Phone: +91-40-2300 6777
Website: www.jmmindia.org

Battlefield of the Mind - *Tamil (R1 - 2014)*
*Winning the Battle in Your Mind*

*Printed at:*
Caxton Offset Pvt. Ltd.
Hyderabad-500 004

# அர்ப்பணிப்பு

என்னுடை மூத்த மகனான டேவிட்டுக்கு "இந்த சிந்தை ஓர் போர்க்களம்" என்ற இப்புத்தகத்தை அர்ப்பணிக்கிறேன்.

உன்னுடைய ஆளியல் என்னைப் போன்றதாக இருப்பதால் உன்னுடைய மனதில் உனக்கே உரித்தான போராட்டங்களை கொண்டிருந்தாய் என்பதை நான் அறிந்திருக்கிறேன். நீ அனுதினமும் வளர்ந்து கொண்டிருப்பதை நான் காண்கிறேன். உன் மனதை புதிதாக்குவதால் ஏற்படும் வெற்றிகளையும் நீ அனுபவித்துக் கொண்டிருக்கிறாள் என்பதையும் நான் அறிந்திருக்கிறேன்.

டேவிட் நான் உன்னை நேசிக்கின்றேன். உன்னைக் குறித்து பெருமையடைகின்றேன். தொடர்ந்து முன்னேறிச்செல்.

# பொருளடக்கம்


பாகம் I *சிந்தையின் முக்கியத்துவம்*

| | | |
|---|---|---|
| | முகவுரை | 11 |
| 1 | நமது சிந்தை ஓர் போர்க்களம் | 17 |
| 2 | முக்கியமான தேவை | 33 |
| 3 | விட்டு விடாதிருங்கள்! | 39 |
| 4 | கொஞ்சம் கொஞ்சமாக | 47 |
| 5 | உறுதியான நோக்கத்தோடு இருங்கள் | 55 |
| 6 | மனதை கட்டும் ஆவிகள் | 71 |
| 7 | நீங்கள் எதை சிந்திக்கிறீரகளோ அதைப் பற்றி யோசித்துப் பாருங்கள் | 79 |

பாகம் II *சிந்தையின் தன்மைகள்*

| | | |
|---|---|---|
| | முகவுரை | 91 |
| 8 | எப்பொழுது எனது சிந்தை இயல்பான நிலையில் இருக்கிறது? | 97 |
| 9 | அலைந்து திரிகிற அதிசயிக்கும் சிந்தை | 107 |
| 10 | குழம்பிய சிந்தை | 115 |
| 11 | சந்தேகமும், அவிசுவாசமும் நிறைந்த சிந்தை | 129 |
| 12 | பதட்டமும், கவலையும் நிறைந்த சிந்தை | 147 |
| 13 | நியாயந்தீர்க்கிறதும், குற்றம் காண்கிறதும், சந்தேகிக்கிறதுமான சிந்தை | 165 |
| 14 | செயலற்ற, மந்தமான சிந்தை | 185 |
| 15 | கிறிஸ்துவின் சிந்தை | 199 |

பாகம் III *வனாந்தர மனப்பான்மை*

| | | |
|---|---|---|
| | முகவுரை | 231 |
| 16 | வனாந்தர மனப்பான்மை #1: “எனது வருங்காலம், எனது கடந்த காலத்தாலும், நிகழ்காலத்தாலும் நிர்ணயிக்கப்படுகிறது” | 237 |

| | | |
|---|---|---|
| 17 | வனாந்தர மனப்பான்மை #2: "யாராவது ஒருவர் எனக்காக செய்யட்டும்; நான் உத்தரவாதத்தை எடுக்க விரும்பவில்லை." | 247 |
| 18 | வனாந்தர மனப்பான்மை #3: "தயவாக எல்லாவற்றையும் எளிதாக்குங்கள்; காரியங்கள் கடினமாய் இருக்குமானால் எதையும் என்னாலே கிரகிக்க முடியாது!" | 261 |
| 19 | வனாந்தர மனப்பான்மை #4: "முறுமுறுத்தலுக்கும், குறை காணுதலுக்கும், குறை கூறுதலுக்கும் நான் அடிமையாகிவிட்டேன்; இதை என்னாலே தவிர்க்க முடியாது." | 271 |
| 20 | வனாந்தர மனப்பான்மை #5: "எதற்கும் என்னைக் காத்திருக்கப் பண்ணாதிரும்; எல்லாமே எனக்கு உடனே வேண்டும்" | 285 |
| 21 | வனாந்தர மனப்பான்மை #6: "எனது நடக்கை தவறாக இருக்கலாம், ஆயினும் அது எனது பிழையல்ல!" | 297 |
| 22 | வனாந்தர மனப்பான்மை #7: "எனது வாழ்க்கை மிகவும் பரிதாபமானது; எனது வாழ்க்கை மிகவும் மோசமாக இருப்பதால் நான் எனக்காக வருந்துகிறேன்!" | 311 |
| 23 | வனாந்தர மனப்பான்மை #8: "நான் தகுதியற்ற நிலையில் இருப்பதால் தேவனுடைய ஆசீர்வாதங்கள் எனக்குத் தேவையில்லை." | 321 |
| 24 | வனாந்தர மனப்பான்மை #9: "எல்லாரும் என்னைக் காட்டிலும் சிறந்தவர்களாக இருக்கும் போது நான் ஏன் பொறாமையோடு இருக்கக்கூடாது?" | 333 |
| 25 | வனாந்தர மனப்பான்மை #10: "எனது வழியில் நான் அதை செய்யப் போகிறேன், அல்லது ஒன்றுமே செய்யமாட்டேன்." | 345 |
| | குறிப்புகள் | 353 |
| | குறிப்புகள் விவரங்களைத்தரும் புத்தகப்பட்டியல் | 355 |
| | ஆசிரியரைப் பற்றி | 357 |

# பாகம் I

# *சிந்தையின் முக்கியத்துவம்*

# முகவுரை

நீதிமொழிகள் 23:7 -ல் கூறியபடி அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான் என்பதன் முக்கியத்துவத்தை நமது சிந்தையின் முக்கியத்துவத்தோடு எவ்வாறு விளக்க முடியும்?

தேவனுடைய வார்த்தையை நான் எந்த அளவிற்கு வாசித்து, ஊழியம் செய்கிறேனோ அந்த அளவிற்கு மனிதனுடைய வார்த்தைகள், எண்ணங்கள், இவைகளின் முக்கியத்துவத்தை நான் அதிகமாய் உணருகிறேன். பரிசுத்த ஆவியானவர் தாமே இப்பகுதிகளை நான் நன்கு கற்றறிய ஒழுங்கான அடிப்படையில் என்னை நடத்துகிறார்.

*எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக் கேற்றவைகளாயிராமல், (மாம்சமும், இரத்தமும்) அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவ பலமுள்ளவைகளாய் இருக்கிறது.*

*அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற (உண்மையான) அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயி ருக்கிறோம்.*

2 கொரிந்தியர் 10:4-5

இப்பூமியில் நாம் இருக்கும் காலமளவும் நாம் அனைவரும் நமது எண்ணங்கள், சிந்தைகள், வார்த்தைகள் ஆகிய இப்பகுதிகளை நன்கு கற்றறிவது நமக்கு மிகவும் அவசியம் என நான் உண்மையாய் நம்புகிறேன். ஒரு குறிப்பிட்ட பகுதியை எவ்வளவு அதிகமாய் நாம் கற்றறிந்தாலும், அவைகளை அவ்வப்போது புதுப்பித்துக் கொள்வதும், புதியவைகளை நாம் கற்றுக்கொள்வதும், நமக்கு மிகுந்த பயனுடையதாய் இருக்கும்.

நிதிமொழிகள் 23:7-ன் உண்மையான பொருளை கவனிப்போமேயானால் ஒரு மனிதன் தன் இருதயத்தில் எதை

எண்ணுகிறானோ அப்படியே அவனும் இருக்கிறான் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. "மேலும் ஒரு மனிதன் தன் இருதயத்தில் எப்படி சிந்திக்கிறானோ, அப்படியே அவனும் மாறிவிடுகிறான்" என்றும், வேறொரு மொழியாக்கம் இதன் பொருளை நமக்கு விளக்குகிறது.

எல்லா கிரியைகளுக்கும் நமது சிந்தை ஒரு தலைவனாக அல்லது ஒரு முன்னோடியாக நமக்காகச் செயல்படுகிறது. இதைத்தான் நாம் ரோமர் 8:5-ல் தெளிவாக வாசிக்கிறோம்: அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்.

நம் ஒவ்வொருவருடைய சிந்தையிலிருந்து புறப்படும் எண்ணங்களின் நேரடி விளைவே நாம் செய்யும் கிரியைகளாகும். எதிர்மாறான சிந்தை நமக்கு இருக்குமேயானால் நாம் எதிர்மாறான வாழ்க்கையையே நடத்துவோம். மாறாக தேவனுடைய சித்தம், தேவனுடைய வார்த்தை இவைகளை கொண்டு நம்முடைய மனதை அவருக்கு, "நன்மையும் பிரியமுமான நிலையிலே நிரூபித்துக் காண்பிப்பதே தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கும் கிரியையாகும்." (ரோமர் 12:2)

இப்புதகத்தை மூன்று பெரும் பிரிவுகளாக நான் பிரித்திருக்கிறேன். இந்த முதல் பாகமானது சிந்தனைகளின் முக்கியத்துவத்தை நமக்கு எடுத்துக்கூறுகிறது. நீங்கள் உங்கள் இருதயங்களில் எவைகளைச் சிந்திக்கிறீர்களோ அவைகளைப் பற்றி யோசிக்க நீங்கள் ஆரம்பிக்க வேண்டும் என்ற கருத்தை உங்கள் இருதயத்தில் என்றும் பதிக்க விரும்புகிறேன்.

அநேகருடைய பிரச்சனைகளானது, அவர்கள் எதைச் சிந்தையில் சிந்திக்கிறார்களோ அதைச் சார்ந்தே அவர்களது வாழ்க்கையின் அனுபவப் பிரச்சனைகளாக உருவாகின்றன. சாத்தான் தவறான சிந்தைகளை ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் விதைக்க முயலுவான், ஆனால் அவனது அந்த கிரியையை நாம் அங்கீகரிக்க அவசியமில்லை. பரிசுத்த ஆவியானவரால் அங்கீகரிக்கப்படுகிற சிந்ததனைகள் எவைகள் என்றும், அங்கீகரிக்கப்படாத சிந்தனைகள் எவை என்றும், நாம் கற்றுக்கொள்வோமாக.

நம்முடைய சிந்தையின் எண்ணங்கள், எந்த அளவுக்கு தேவனுடைய சிந்தையின் எண்ணங்களோடு சார்ந்திருக்கின்றன என்பதை ஒப்பிட்டுப் பார்க்க தேவனுடைய வார்த்தையை நன்கு நாம் அறிந்திருக்க வேண்டும் என 2 கொரிந்தியர் 10:4-5இல் காண்கிறோம். மேலும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாக எழும்புகிற எந்த எண்ணத்தையும் நாம் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படுத்த அவற்றை சிறைப்படுத்துகிறவர்களாயிருக்க வேண்டும்.

இப்புத்தகம் அதைச் செய்ய நமக்கு உதவி செய்ய வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன்.

நமது சிந்தை ஒரு போர்க்களம், ஆகவே, தேவ சிந்தையோடு நமது சிந்தையை நாம் ஒருமுகப்படுத்துவது மிக மிக முக்கியமானது. இது, நேரத்தைச் செலவழித்து, தியானித்துக் கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு முன்னேற்றப்பாதையாகும்.

சிறிது சிறியதாகவே நீங்கள் மாற்றத்தை அடைய முடியும். ஆகவே சோர்ந்து போக வேண்டாம். நன்மைக்காக உங்கள் சிந்தையை நீங்கள் எந்த அளவிற்கு மாற்றுகிறீர்களோ, அந்த அளவிற்கு நன்மைக்காக உங்கள் வாழ்க்கையும் மாறிவிடும். தேவனுடைய நல்ல திட்டத்தை உங்களுக்காக உங்கள் சிந்தனையில் நீங்கள் காண ஆரம்பிக்கம்போது, அந்த நல்ல திட்டத்தில் நீங்கள் நடக்கவும் ஆரம்பிப்பீர்கள்.

# அதிகாரம்
# 1

## *நமது சிந்தை ஓர் போர்க்களம்*

**அதிகாரம்**
**1**

# *நமது சிந்தை ஓர் போர்க்களம்*

*நமது சிந்தை ஓர் போர்க்களம். ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, (சரீரப்பிரகாசமாக எதிர்க்கும் சக்தி) துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், (நம்மை மேற்கொள்ள விரும்பும் பிரதான ஆவிகளாகிய) இப்பிரபஞ்சத்தின் அந்தகார லாகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள (இயற்கைக்கு அப்பாற்பட்ட) பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.*

எபேசியர் 6:12

மேற்காணும் வசனத்தின் மூலம் நாமனைவரும் ஒரு போர்க்களத்தில் இருப்பதாக அறிகிறோம். இவ்வசனத்தைக் கவனமாய் நாம் வாசிக்கையில் நாம் சந்திக்கும் இம்மாபெரும் யுத்தம் மற்ற மனிதரோடே அல்ல, ஆனால் பிசாசோடும், அவனுடைய கூட்டத்தோடுமே என்றும் அவனை எதிர்த்தே நாம் போரிடுகிறோம் எனவும் தெளிவாய் அறிந்து கொள்கிறோம். நமது சத்துருவாகிய சாத்தான் அவனது திட்டமிட்ட துணிச்சலான வஞ்சக சூழ்ச்சிகளினால் நம்மைத் தோற்கடிக்க முயற்சி செய்கிறான்.

பிசாசு ஒரு பொய்யன் யோவான் 8:44ல் இயேசு அவனை பொய்யனும், பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறான் எனக் கூறுகிறார். உங்களிடத்திலும் என்னிடத்திலும் அவன் பொய் பேசுகிறான். அவன் நம்மிடத்தில், நம்மைப்பற்றியும், சூழ்நிலைகளைப் பற்றியும், உண்மையற்ற கருத்துக்களைக் கூறுகிறான். மேலும் தான் கூறும் பொய்யை அவன் ஒரு போதும் ஒரே நேரத்தில் நம்மிடத்தில் கூறுவதுமில்லை.

பிசாசு தனது திறமையுள்ள சூழ்ச்சியைப் பயன்படுத்தி அற்பமானதும், சந்தேகத்திற்குரியதும், பயத்திற்க்குரியதும், வியப்பை உருவாக்கும் பற்பல மனோ தத்துவங்கட்குரியதுமான எண்ணங்களினாலே நமது சிந்தையைத் தாக்க ஆரம்பிக்கிறான். பின்னர் மெதுவாகவும் மிகக் கவனமாகவும் தனது உறுதியுள்ள முன்னேற்பாட்டின்படி செயல்பட்டு

முன்னேறுகிறான். தனது போர் நிலைக்கு சரியான திட்டத்தை உடையவனாயிருக்கிறான். நீண்ட காலம் ஏற்கனவே அவன் நம்மை கற்றறிந்தவனாயிருக்கிறான் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

நமது விருப்பு, வெறுப்புகளை அவன் அறிந்தவன். நமது பாதுகாப்பற்ற நிலைமை, தம்முடைய சுய பலவீனங்கள், நமது பயங்கள் இவை யாவற்றையும் சாத்தான் நன்கு அறிந்தவன். நம்மை அதிகமாக கலக்குகிற சூழ்நிலைகளையும் அவன் அறிவான். நம்மைத் தோற்கடிப்பதற்கு எப்பேற்பட்ட நிலையிலும் தனது நேரத்தை முதலீடு செய்வதற்கும் அவன் ஆயத்தமாயிருக்கிறான். பிசாசின் பலத்த ஆயுதங்களில் ஒன்று பொறுமை.

## அரண்களை நிர்மூலமாக்குதல்

> எங்களுடைய போராயுதங்கள் மாமசத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவ பலமுள்ளவைகளாயிருக்கிறது.
>
> அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்.
>
> 2 கொரிந்தியர் 10:4-5

கவனமும் தந்திரமுமான திட்டங்களோடு சாத்தான் தனது “அரண்களை” நமது சிந்தையில் உருவாக்குவான். ஒரு குறிப்பிட்ட நிலையில் மாத்திரம் நாம் ஒன்றைச் சிந்திக்கையில், நாம் ஒரு வித கட்டுக்குள் வருவோமாகில் அதுவே சாத்தானுடைய பலத்த அரண் என்னும் எல்லையாக மாறிவிடுகிறது.

இவேத பகுதியில் அப்போஸ்தலனாகிய பவுல் சாத்தானுடைய பலத்த அரண்களை மேற்கொள்ளத் தேவைப்படுகிற ஆயுதங்கள் நமக்குண்டு என்பதை நினைப்பூட்டுகிறார். இதைப்பற்றி பின்வரும் அதிகாரங்களில் அதிகமாய் நாம் கற்றுக் கொள்ளப்போவதாய் இருந்தாலும், நாம் ஒரு ஆவிக்குரிய யுத்தத்தில் இருக்கிறோம் என்பதைத் திட்டவட்டமாய்

அறிந்துகொள்ள வேண்டும். 5ம் வசனம் நமது இந்த ஆவிக்குரிய யுத்தத்தின் நிலையை நமக்குத் தெளிவுற விளக்குகிறது.

நாம் இந்த ஆயுதங்களை எடுத்து, தர்க்கங்களை நிர்மூலமாக்க வேண்டும் என்று நமக்குக் கூறுகிறது. பிசாசானவன் நம்மோடு தர்க்கம் பண்ணுகிறான். காரணங்களையும், தத்துவங்களையும் உருவாக்கி, அதன் மூலம் குழப்பமான சூழ்நிலையை ஏற்படுத்தி நமது சிந்தனையை சிதறடிக்கிறான்.

*நமது சிந்தையே ஓர் போர்க்களம்.*

## சூழ்நிலைகள் குறித்த தொகுப்பு

நமது சிந்தனைக்கு:

1. நாம் ஒரு யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறோம்.
2. நமது சத்துரு சாத்தான்.
3. நமது சிந்தை ஓர் போர்க்களம்.
4. நமது சிந்தையில் அரண்களை ஏற்படுத்த பிசாசு மிகவும் கவனமாய் இருக்கிறான்.
5. துணிச்சலுள்ள வஞ்சகத்தோடும், முன்னேற்பாடுள்ள திட்டத்தோடும் அவன் அதைச் செய்கிறான்.
6. அவன் அவசரப்படுகிறவனல்ல; தன் திட்டத்தை நிறைவேற்ற தனக்குத் தேவையான நேரத்தையும் எடுத்துக் கொள்கிறான்.

ஒரு உவமையின் மூலமாய் அவனுடைய திட்டங்களை இன்னும் தெளிவாய் அறிவோமாக.

## மேரியின் பக்கம்

மேரியும் அவளது கணவர் ஜானும் மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கையை அனுபவிக்கவில்லை. எப்போதும் அவர்கள் இருவருக்கும் இடையே சண்டைதான் நடந்தது. இவ்விருவரும் கோபமுள்ளவர்களாயும்,

கசப்பும், முரட்டாட்டம் நிறைந்தவர்களாயும் இருந்தார்கள். குடும்பத்தில் ஏற்பட்ட இப்பிரச்சனையால் அவர்களின் இரண்டு பிள்ளைகளும் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார்கள். பெற்றோரின் இச்சண்டையினால் பிள்ளைகளின் நடத்தையும் பள்ளி வாழ்க்கையும் பாதிக்கப்பட்டிருந்தது. அவர்களில் ஒருவன் நரம்புகளில் பாதிப்பு ஏற்பட்டு, அதன் காரணமாக வயிற்றுக் கோளாறினால் பெரிதும் அவதிப்பட்டான்.

மேரி, தனது கணவரைத் தன் குடும்பத்தின் தலைவராக எப்படி வைக்க வேண்டும் என்று தெரியாதவளாய், அவர் மீது ஆதிக்கம் செலுத்தினாள். தானே எல்லாத் தீர்மானங்களையும் எடுக்க வேண்டும் என்றும், பணப்பிரச்சனை, பிள்ளைகள் பிரச்சனை எல்லாவற்றையும் தானே தலையிட்டு சரியாக்க வேண்டும் என்றும் எண்ணினாள். தன் சொந்த தேவையைக் கருதி, “தானே” பணத்தைக் கையாளும்படி வேலை செய்ய விரும்பினாள். ஒரு சுயாதீனப்பெண்ணாக, கூச்சலிடும் சுபாவத்தோடுள்ள தன்னிச்சையின் பெண்ணாக செயல்பட்டாள்.

“இந்தப் பெண்மணிக்குரிய பதிலை நான் அறிந்திருக்கிறேன். இவளுக்கு இயேசு தேவை” என்று இப்போது நீங்கள் எண்ணலாம்.

ஆனால் அவள் ஐந்து வருடங்களுக்கு முன் இயேசுவை நன்கு அறிந்து தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவள், அதன் பின் மூன்று வருடங்கள் கழித்து ஜாணை திருமணம் செய்துக்கொண்டாள்!

“அப்படியானால் மேரி இயேசுவை இரட்சகராக அறிந்ததிலிருந்து அவள் வாழ்க்கையில் எந்த வித மாறுதலும் ஏற்படவில்லையா?”

ஆம், அங்கே ஒரு மாறுதல் ஏற்பட்டது. அவளது கெட்ட நடத்தைகளானது, தொடர்ந்து ஆக்கினைத் தீர்ப்பின் உணர்வுக்குள்ளாக அவளைக் கொண்டு வந்தாலும், தான் மோட்சத்திற்குத்தான் போவேன் என்று அவள் விசுவாசித்தாள். அவளுக்கு இப்போதும் நம்பிக்கை உண்டு. இயேசுவை சந்திப்பதற்கு முன்பு அவளுக்கு எந்தவிதமான நம்பிக்கையும் இருந்ததில்லை; அவள் பரிதபிக்கப்படக் கூடியவளாய் இருந்தாள். ஆனால் இப்போதோ அவளுக்கு நம்பிக்கை உண்டு, ஆகவே, பரிதபிக்கப்படக்கூடிய நிலையில் மட்டுமே அவள் காணப்படுகிறாள்.

தனது நோக்கம் தவறு என்று மேரிக்கு நன்றாய் தெரியும். அவள் மாற விரும்பினாள் இருவரிடத்திலிருந்து அவள் நல்ல ஆலோசனைகளை பெற்றிருந்தாள். மட்டுமல்ல, எங்கெல்லாம் தேவபிள்ளைகள் ஜெபிக்கிறார்களோ அங்கெல்லாம் தவறாமல் போய், கோபம், முரட்டாட்டம், மக்கிக்காத சுபாவம், அகங்காரம், கசப்பு போன்ற தீய சுபாவங்களிலிருந்து விடுதலை பெற ஜெபித்து வந்தாள். ஆனால் முன்னேற்றத்தை அவளால் காணமுடியவில்லை ஏன்?

ரோமர் 12:2 ல் இதற்கான பதிலைக் காண்கிறோம். நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்தவேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.

மேரி தனது சிந்தையில் பலத்த அரணை உடையவளாய் இருந்தாள். பல ஆண்டுகளாக அவர்கள் குடும்பமாக அங்கே தங்கி இருந்தாலும் தாங்கள் எப்போது எங்கே குடிபெயர்ந்தோம் என்பதை அவள் விளங்கிக்கொள்ளாதவளாய் இருந்தாள். முரட்டாட்டமாய் ஆதிக்கம் செலுத்துகிற ஒருத்தியாய் இருக்கக்கூடாதென்று அவள் நன்கு அறிந்திருந்தும், தனது சுபாவத்தை மாற்ற என்ன செய்ய வேண்டும் என அறியாதவளாயிருந்தாள். அவள் தன்னுடைய செயல்களை கட்டுப்படுத்த முடியாத நிலையில் இருந்ததாள், சில சூழ்நிலைகளில் மாறுபாடான செயல்களை செய்கிறவளாய் காணப்பட்டாள்.

தனது சிந்தையை அடக்க முடியாத நிலையில் மேரி இருந்தபடியால் தனது கிரியையையும் அவளால் அடக்க முடியவில்லை. அவளது வாழ்க்கையின் ஆரம்பக் கட்டத்தில் அவளது சிந்தனைப்பகுதியில் பிசாசின் பலமான அரண் இருந்தபடியால் தனது சிந்தையை அவள் அடக்கவில்லை.

சாத்தான் தனது முன்னேற்பாட்டுத் திட்டத்தை துவங்கி இளம் பிராயத்திலேயே தனது துணிகர வஞ்சகத்தை நமக்குள் விதைத்துவிடுகிறான். மேரியின் பால்ய வாழ்க்கையில் இவ்வாறாகத்தான் அவளது பிரச்சனைகள் துவங்கின.

இளம் பிராயத்திலேயே அதிகமாக தனது தந்தையிடமிருந்து அடிகளையும், வேதனைகளையும் மேரி அனுபவித்ததின் காரணம், அவளது தந்தைக்கு இருந்த கெட்ட மனநிலையே எனத் திட்டமாய் கூற முடியும். அவள் ஒரு தவறைச் செய்வாளானால் அவள் தந்தை அவள் மீது தன் கோபத்தையே ஊற்றிவிடுவார். தன்னையும், தன் தாயையும் துன்புறுத்தும் தன் தந்தையால் மேரி அநேக ஆண்டுகளாய் உதவியற்றவளாகக் காணப்பட்டாள். தனது மனைவியினிடமும், மகளிடமும் அவர் மிகவும் தரக்குறைவாக நடந்து கொண்டார். ஆனால் மேரியின் சகோதரன் சிறுவனாயிருந்தபடியால், எந்தத் தவறையும் செய்ய முடியவில்லை. ஆகவே, தந்தையின் அன்பைப் பெற்றவனைப் போலக் காணப்பட்டான்.

மேரிக்கு பதினாறு வயதாகும் போது, சாத்தான் தனது பொய்களினாலே அவளது சிந்தையை நிரப்பி, மூளைச் சலவை செய்ய விரும்பினான்: "மனுஷர் எங்கேயும் எல்லா இடத்திலும் ஒரே மன நிலையில் தான் இருப்பார்கள்; ஆகவே எந்த மனிதனையும் நம்ப முடியாது என்பதான பொய்களை அவள் சிந்தையிலே போட்டான். மேலும் மனிதர் உன்னை வேதனைப்படுத்துபவர்கள் உன்னை மேற்கொள்பவர்கள், நீ ஆணாய் பிறந்தால் மட்டுமே இவ்வுலகில் வாழ முடியும், அப்போது மாத்திரமே, நீ விரும்புவது அனைத்தையும் செய்ய முடியும், உன்னைச் சுற்றிலுமுள்ள மக்களுடைய செல்வாக்கை நீ பெற முடியும், உனது மனைவி, பிள்ளைகளையும், மற்றவர்களையும் உன் விருப்பப்படி, நீ நடத்த முடியும், நீ சொல்வதுதான் சட்டம்" என்ற தவறான மனப்பான்மையையும் சாத்தான் அவள் மனதில் கொடுத்துவிட்டான்.

இதன் பலனாக "நான் இந்த இடத்தை விட்டு போய்விடுவேனானால், அதுவே நலம் யாரும் என்னை நெருக்கவோ, நொறுக்கவோ மாட்டார்கள் என்ற வெறுப்புணர்வுக்கு மேரி அதிகமாகத் தள்ளப்பட்டாள்!"

சாத்தான் அவளது சிந்தனைப் பகுதியில் ஏற்கனவே தனது யுத்தத்தை ஆரம்பித்துவிட்டான். இப்பேற்பட்ட எதிர்மாறான சிந்தையின் எண்ணங்களை திரும்பத் திரும்ப ஒரு லட்சம் தடவையோ அல்லது பத்து ஆண்டுகளோ உங்களது எண்ணத்தில் போட்டுக் குழப்புகின்ற நிலையில், உங்கள் திருமணத்தின் மூலம் ஒரு நல்ல குணசாலியான, இனிமையான,

கீழ்ப்படிதலுள்ள மனைவியாக நீங்கள் இருக்க முடியுமா? என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். ஏதோ சந்தர்ப்பவவசத்தால் நீங்கள் அறியமாட்டீர்கள். இன்று தன் வாழ்வில், இப்படிப்பட்ட குழப்ப நிலையில் மேரி தன்னைக் காண்கிறாள், அவளால் என்ன செய்ய முடியும்? அல்லது இப்பேற்ப்பட்ட சூழ்நிலையில் நாம்தான் என்ன செய்ய முடியும்?

## வார்த்தையின் ஆயுதங்கள்

> நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராய் இருப்பீர்கள், சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்.
>
> யோவான் 8:31-32

சாத்தானுடைய பொய்களை நாம் எவ்வாறு மேற்கொள்ள முடியும் என இங்கே இயேசு நமக்குச் சொல்கிறார். நாம் நமக்குள்ளே தேவ சத்தியத்தின் அறிவை எடுத்து, அவரது வார்த்தையினால் நமது மனதைப் புதுப்பித்து, தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாக எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கத்தக்க 2 கொரிந்தியர் 10:4-5 குறிப்பிடுகிற ஆயுதங்களை நாம் உபயோகப்படுத்த வேண்டும்.

இந்த வசனமாகிய “ஆயுதங்களை” நாம் பிரசங்கங்கள், உபதேசங்கள், புத்தகங்கள், ஒலி நாடாக்கள், கருத்தரங்குகள் தனிப்பட்ட வேதபாடங்கள் மூலமாகப் பெற்றுக் கொள்ள முடிகிறது. ஆனால் பரிசுத்த ஆவயினால் ஏவப்பட்டு, அந்த வசனம் ஒரு வெளிப்படுத்தலாய் வரும் வரை நாம் அந்த வசனத்தில் “நிலைத்திருக்க” வேண்டும். வசனத்தைத் தொடர்ந்து கடைப்பிடித்தல் அதனிலும் முக்கியம் வாய்ந்தது. மாற்கு 4:24ல் வசனத்தை எந்த அளவுக்குக் கேட்க நீங்கள் உங்களை விட்டுக் கொடுக்கிறீர்களோ, அந்த அளவுக்கு அவ்வசனத்தைப் பற்றிய அறிவு உங்களுக்கு வரும் என்று இயேசு கூறுகிறார். வசனம் என்னும் ஆயுதத்தை நாம் உபயோகப்படுத்த, கண்டிப்பாக அதில், நாம் தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டும்.

துதி, ஜெபம் என்ற மற்ற இரண்டு ஆயுதங்களையும் நாம் உபயோகிக்க முடியும் எந்த ஒரு யுத்தத் திட்டத்தைக்காட்டிலும் துதி என்னும் ஆயுதம்

சத்துருவை எளிதில் தோற்கடிக்க முடியும். ஆனால் ஏதோ ஒரு முயற்சியாகவோ, அல்லது உதட்டளவு துதியாகவோ அது இல்லாதபடி இருதயத்தின் ஆழத்திலிருந்து வருகிற உண்மையான துதியாக இருக்க வேண்டும். இந்தத் துதியும் ஜெபமும் எப்பொழுதும் வசனத்தைச் சம்மந்தப்படுத்தியே வருகிறது. தேவனுடைய வார்த்தையின்படியும், தயவின்படியும் மாத்திரமே நாம் கர்த்தரைத் துதிக்கிறோம்.

ஜெபமானது தேவனோடுள்ள ஒரு உறவாகும். அது, நம்மைச் சந்திக்கின்ற ஓர் சூழ்நிலையிலிருந்து வருகிற, தேவனை நோக்கிப் பேசுகிற அல்லது அவரிடத்தில் பதிலைக் கேட்கிற ஒன்றாகும்.

வல்லமையான ஜெப ஜுவியத்தை நீங்கள் விரும்புவீர்களானால் பிதாவோடு ஒரு நல்ல உறவைப் பரிபாலனம் செய்யுங்கள். அவர் உங்களை நேசிக்கிறார் என்பதையும், இரக்கம் நிறைந்தவர் என்பதையும், திட்டமாய் அவர் உங்களுக்கு உதவி செய்வார் என்பதையும் அறியுங்கள். அவர் உங்கள் நண்பர். ஆகையால் இயேசுவை நன்கு அறியுங்கள். உங்களுக்காகவே அவர் மரித்தார், உங்களுக்கு எப்பொழுதும் உதவி செய்ய, என்றும் உங்களோடிருக்கிற பரிசுத்தாவியானவரை நன்கு அறியுங்கள். அவரே உங்களுக்கு உதவட்டும்.

தேவனுடைய வார்த்தைகளால் உங்கள் ஜெபங்களை நிறைக்கக் கற்றுக் கொள்ளுங்கள். நாம் அவரிடத்தில் வர தேவ வசனமும், உங்கள் தேவையுமே மிக மிக அவசியம்.

ஆகவே, வெவ்வேறு நிலைகளில் உபயோகப்படுத்தும் அவருடைய வசனங்களே நமது ஆயுதங்களாகும். நம்முடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகள் அல்ல, ஆனால் ஆவிகேற்றவைகளே எனப் பவுல் குறிப்பிடுகிறார் (2 கொரிந்தியர்) நமது போராட்டங்கள் மாமிசத்தோடல்ல; அவைகள் ஆவிக்குரிய போராட்டங்கள் சாத்தானோடுள்ள எஜமான் ஆவிகளோடு நமக்குப் போராட்டங்கள் இருக்கிறபடியால், நமக்கு ஆவிக்குரிய ஆயுதங்கள் தான் மிக அவசியமாயிருக்கிறது. பிசாசைத் தோற்கடிக்க, இயேசுவும் வனாந்தரத்திலே வசனம் என்னும் ஆயுதத்தைத்தான் உபயோகப்படுத்தினார். (லூக்கா. 4:1-13) பிசாசு பொய் சொன்ன

ஒவ்வொரு வேளையும், இயேசு "எழுதியிருக்கிறதே" என்ற வசனங்களைக் குறிப்பிட்டார்.

இவ்வண்ணமாக மேரி தனது ஆயுதங்களை உபயோகப்படுத்தக் கற்றுக் கொள்ளும் போது தனது சிந்தையில் கட்டப்பட்டுள்ள அரண்களை நிர்மூலமாக்க ஆரம்பிப்பாள். தன்னை விடுதலையாக்கும் சத்தியத்தை அவள் அறிவாள். தனது பூமிக்குரிய தகப்பனைப் போலவே எல்லா மனிதரும் இல்லை என்பதை அவள் அறிவாள். சிலர் அப்படி இருக்கலாம். ஆனால், அநேகரில்லை. அவளது கணவன் ஜான் அப்படியில்லை, மேரியை அதிகமாய் நேசிக்கிறான்.

## ஜான் பக்கம்

இந்தக் கதையின் மற்றொரு பக்கத்தில் ஜானை நாம் பார்க்கலாம். ஜானும் அவனது மனைவியும் தங்கள் இல்லறம், வீடு, குடும்பம் ஆகிய சூழ்நிலையில் சந்திக்கிற பிரச்சனைக்களுக்கு ஒரு வகையில் ஜானுடைய பிரச்சனைகள் தான் காரணம் என்று சொல்லலாம்.

தனது குடும்பத்தின் தலைவன் என்ற நிலையை ஜான் வகிக்கிறான். அவனது குடும்பத்தின் ஆசாரியனாக அவன் இருக்க வேண்டுமென்பதே தேவனடைய நோக்கமாக இருக்கிறது. மறுபடியும் பிறந்த ஜான், தனது குடும்பத்தின் தெய்வீக ஒழுங்குகளை திட்டமாய் அறிந்தவன். வீட்டுக் காரியங்கள், பொருளாதாரம், பிள்ளைகள், கணவன் இப்படி எல்லாவற்றையும் தனது மனைவி தான் ஆட்கொண்டு நடத்த வேண்டும் என்ற நிலை தவறு என்று இந்த ஜானுக்கு நன்றாய் தெரியும். தான் அதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதும் அவனுக்குத் தெரியும். இவையெல்லாவற்றையும் ஜான் அறிந்திருந்தும், எதையும் சரியாகச் செய்யாமல், ஒரு தோல்வி காரணமாகத் தன்னைப் பொழுதுபோக்குகளில் ஈடுபடுத்திக் கொண்டான்.

எதிர்ப்புகளை ஜான் வெறுத்தப்படியால், தனது உத்தரவாதங்களை விட்டு அவன் ஒழிந்து கொண்டான், "இந்தச் சூழ்நிலையைக் கண்டும் காணாமல் விட்டு விட்டால் காலப் போக்கில் எல்லாமே சரியாகிவிடும்"என அவன் எண்ணினான். அல்லது, தான் இந்தச் சூழ்நிலை மாறும்படி

“ஜெபித்தால் காலப்போக்கில் எல்லாமே சரியாகிவிடும்” என அவன் நினைத்திருக்கலாம். ஆனால், ஜெபமானது ஒரு பக்கத்தில் நல்ல ஒரு கருவியாக இருந்தாலும், நமது மெத்தனப் போக்கான உத்தரவாத வாழ்க்கையை அது உருவாக்கும் ஒன்றல்ல.

தன்னுடைய குடும்பத்தில் தனக்கு தேவனால் கொடுக்கப்பட்ட அந்தஸ்தை ஜான் எவ்வாறு நிலை நிறுத்தியிருக்க வேண்டும் என்று நான் உங்களுக்கு விளக்குகிறேன். தனது அதிகாரத்தை அவன் “துஷ்பிரயோகம்” செய்ய வேண்டும் என்று நான் கூறவில்லை. கிறிஸ்து சபையில் அன்பு கூர்ந்தது போல, ஒரு புருஷன் தன்னுடைய மனைவியில் அன்பு கூற வேண்டும் என எபேசியர் 5:25ல் பவுல் குறிப்பிடுகிறார். ஜான் தனது உத்தரவாதத்தை எடுத்து, அந்த உத்தரவாதத்தோடுள்ள அதிகாரத்தைக் குடும்பத்தில் உபயோகப்படுத்த வேண்டும். தனது மனைவியினிடத்தில் அவன் உறுதியோடு இருக்க வேண்டும். அன்புள்ள உறுதி தேவை. மேரி, தன்னைத் தேவனிடத்தில் விட்டுக் கொடுத்து, அவரை நம்பும்போது, எல்லா மனிதரும், இளம் வயதில் தன்னை துன்புறுத்திய தந்தையைப் போல இருப்பவர் அல்ல என்ற உண்மையை அறிய முடியும் என்ற நிலைக்கு ஜான் அவளுக்கு உறுதி கூற வேண்டும்.

அநேகக் காரியங்களை ஜான் செய்திருக்கலாம். ஆனால் மேரியைப் போல் சாத்தானுக்குக் கதவை திறந்துவிடவும், அதன் மூலம் சாத்தானுக்கு அடிமையாகவும் கூடிய தவறான மன நிலையை அவன் கொண்டிருந்தான். அதனால் ஜானுடைய சிந்தையிலும் ஒரு யுத்தம் நடந்து கொண்டிருந்தது. மேரியைப் போலத் தனது இளம் பிராயத்தில் அவன் ஏளனமாக நடத்தப்பட்டான். “நீ மோசமானவன்,” “ஒன்றுக்கும் உதவாதவன்,” என்று அவனுடைய வாயாடி தாயார் அவனை அடிக்கடி திட்டி அவன் மீது ஆதிக்கம் செலுத்தினாள்.

தனது தாயிடம் நற்பெயரை வாங்கவும், அவளைப் பிரியப்படுத்தவும் ஜான் எவ்வளவோ முயற்சி செய்தான். ஆயினும், எவ்வளவு கடினமாய் அவன் முயற்சித்தானோ அந்த அளவுக்கு அதிகமாய் ஜான் தவறு செய்து கொண்டேயிருந்தான். சுத்தமாய் தன்னை வைத்துக் கொள்கிற பழக்கம் ஜானுக்கு இல்லாதபடியால், அவனுடைய தாய் அவனது இளம் பிராயத்தில் அவனைப் புனைப் பெயர் வைத்து அழைப்பது வழக்கம். தனது

தாயைப் பிரியப்படுத்த, பயந்து போய் காரியங்களைச் செய்கையில் நடுங்கியவனாய் பொருட்களைக் கீழே போட்டு உடைத்து இன்னும் தோல்வியையே சந்தித்தான்.

மேலும் தனக்கு நண்பர்களாக்க தான் விரும்பிய சக சிறுவர்களிடமிருந்தும் மனச் சோர்வையே அனுபவித்தான். நம்மில் அநேகருக்கு இப்பேற்பட்ட நிலை அவ்வப்போது நேரிடுகிற ஒன்றாயினும், தனது தாயுடைய துன்புறுத்தலும் சேர்ந்து வரும் போது ஜானால் அதைத் தாங்கவே முடியவில்லை.

மேலும் தனது பள்ளிப் பருவத்தில் தான் விரும்பிய ஒரு பெண்ணை இன்னொருவன் விரும்பியதால் அப்பெண் ஜானை கைவிட்டுவிட்டாள், இம்மனச் சோர்வு அவனுக்குள் வேர் கொண்டது. இப்பேற்பட்ட பல சூழ்நிலைகள் ஜானுடைய வாழ்க்கையைத் தாக்கியதால், பிசாசு இவைகளை நல்ல சந்தர்ப்பங்களாய் பயன்படுத்தி, ஜானுடைய சிந்தையில் பல ஆண்டுகளாக பலத்த அரண்களைக் கட்டி எழுப்பியபடியால் ஜான் ஒரு கோழையாகவும், பயந்தவனாகவும், வெட்கமுடையவனாகவும் தன் வாழ்க்கையில் மாறிவிட்டான் என்பதில் சந்தேகமில்லை. ஒரு தைரியமற்ற மௌன சாமியாராக மாறிவிட்டான்.

எந்தத் தீர்மானத்தையும் எடுத்து செயல் பட முடியாத நிலையில் ஒரு கீழ்த்தரமான நிலைக்கு ஜான் தள்ளப்பட்டான். "நீ எதைச் சொன்னாலும் யாரும் உனக்கு செவி சாய்ப்பதில்லை, நீ நினைப்பதை மற்றவர்களுக்குச் சொல்லுவதில் எந்தவித பயனும் இல்லை," என்பதான நிலைக்கு அவனைத் தள்ளிய எண்ணங்கள் தான் அவன் சிந்தையை நிரப்பிவிட்டன. "மற்றவர்கள் உன்னை அங்கீகரிக்க நீ விரும்பினால், அவர்கள் மனம் போல் தான் நீ நடக்க வேண்டும் என்ற கீழான நிலைக்குத் தள்ளப்பட்டான்."

சில சந்தர்ப்ப சூழ்நிலைகளில் தான் நிற்க விரும்பினாலும், எப்பொழுதுமே தோல்வியையே அவன் சந்தித்தபடியால், இனி முயற்சிப்பதில் பயனில்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டான்.

"எதைச் செய்தாலும் முடிவில் நான் தோற்றுத்தான் போவேன்." ஆகவே, "எதையும் துவங்காமலிருப்பதே நலம்" என்ற நிலையில் திருப்தியானான் இந்த ஜான்.

## பதில் என்ன?

கர்த்தருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார். தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார், இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும் நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும்.

கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார்.

லூக்கா 4:18-19

குழப்பம் நிறைந்த பிரச்சனைகளோடு இருந்த ஜான், மேரி இவர்களுடைய குடும்ப வாழ்க்கை எப்படி இருந்திருக்கும் என்று நாம் கற்பனை செய்துவிடலாம். குடும்பத்தில் அதிகமான சண்டை. சண்டை எனக் கூறும் போது அது எப்போதும் ஓர் மூர்க்கம் நிறைந்த மறைமுக சக்தி. அதை அனைவரும் அறிந்திருந்தாலும், அதில் யாரும் குறுக்கிடுவதில்லை. ஆனால் குடும்பத்திலுள்ள சூழ்நிலை பயங்கரமாய் இருக்கையில் பிசாசு அதை அதிகமாய் விரும்புகிறான்!

ஜான், மேரி, பிள்ளைகள் இவர்களுக்கு என்ன நடைபெறும்? இவர்கள் அதைச் சமாளிப்பார்களா? இவர்கள் கிறிஸ்தவர்கள் தானே. இவ்வாறான இவர்களது திருமண வாழ்க்கையையும், சின்னாபின்னமான குடும்பத்தையும் காண்பது எவ்வளவு வெட்கக் கேடாய் உள்ளது. இது இவர்களைச் சார்ந்ததாய் இருந்தாலும் யோவான் 8:31-32 ஆகிய வசனங்கள் இவர்கள் எடுக்க வேண்டிய தீர்மானத்தின் திறவுகோலாகும். தேவனுடைய வசனத்தை இவர்கள் தொடர்ந்து படிப்பார்களானால் இவர்கள் சத்தியத்தையும் அறிவார்கள். அந்தச் சத்தியத்தில் செயல்படும் போது விடுதலை நிச்சயமாய் அவர்களுக்கு உண்டு. ஆனால், அவர்கள் முதலாவது தங்கள் இருவரைக் குறித்த சத்தியத்தையும், தங்கள் கடந்த காலத்தைக் குறித்த உண்மை நிலையையும் தங்களுக்கு தேவன் வெளிப்படுத்துகிற நிலையில் நன்கு உணர வேண்டும்.

சத்தியம் எப்போதும் தேவனுடைய வசனத்தின் மூலமாய் வெளிப்படுத்தப்படுகிறது. இதை ஜனங்கள் எப்பொழுதும்

அங்கீகரிப்பதில்லை. நம்முடைய சொந்தத் தவறுகளைச் சிந்தித்து அதை சரியாக்குவதென்றால் அதைப் போன்ற வேதனை நமக்கு வேறொன்றுமில்லை. பொதுவாகக் கூறுவேனென்றால் ஜனங்கள் தங்கள் தவறுகளைத்தான் எப்போதும் நியாயப்படுத்திக் கொள்வார்கள். தங்கள் கடந்த காலத்துக்கு அவர்கள் இடங்கொடுத்து, தாங்கள் வளர்ந்த நிலைமையை வைத்து தங்கள் வருங்காலத்தை எதிர்மாறான நிலைமையை வைத்து தங்கள் வருங்காலத்தை எதிர்மாறான நிலையில் கணக்கிட்டுக் கொள்வதே மனிதருடைய இயல்பு.

நாம் படும் கஷ்டங்களின் காரணத்தை நமது கடந்த கால அனுபவம் விளக்கலாம். ஆனால் தொடர்ந்து அடிமைத்தனத்தில் வாழ அவைகளைக் காரணங்களாகக் காட்டக்கூடாது.

சிறைப்பட்டவர்களை விடுதலையாக்க இயேசு எப்போதும் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும் ஆயத்தத்தோடு இருக்கிறபடியால் யாரும் சாக்குப்போக்குச் சொல்ல இடமில்லை. அவரோடு கூட எல்லா சூழ்நிலைகளிலும் ஊடுருவி நடக்க நாம் ஆயத்தமாயிருப்போமேயாகில், எந்தப் பகுதியிலும் நாம் ஜெயத்தோடு நடக்க அவர் நம்மோடு கூட வருவார்.

## தப்பித்துக் கொள்ளும் போக்கு

> மனுஷனுக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார், உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடு கூட அதற்குத் தப்பிக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.
>
> 1 கொரிந்தியர் 10:13

மேற் கூறப்பட்ட உதாரணத்தின் மூலமாக, சாத்தான் நமது வாழ்க்கையில் குடும்ப சூழ்நிலைகளைப் பயன்படுத்தி, அரண்களைக் கட்டி எழுப்பி, நமது சிந்தையை ஓர் யுத்தக்களமாக மாற்றுகிறான் என்ற

உண்மையை நீங்கள் விளங்கிக் கொண்டிருப்பீர்கள். ஆனால், இந்தப் பலத்த அரண்களை நிர்மூலமாக்கும் ஆயுதங்களை அவர் நமக்குத் தந்தபடியால் ஆண்டவருக்கு ஸ்தோத்திரம். நம்மை தேவன் ஒரு போதும் உதவியற்ற நிலையில் கைவிட்டுவிடவில்லை. 1 கொரிந்தியர் 10:13 ல் நமது திராணிக்கு மிஞ்சி நம்மைச் சோதிக்காதபடி, மாறாக, சோதனையோடு கூட தப்பித்துக் கொள்ளும் போக்கையும் அவர் உண்டாக்குபவராயிருக்கிறார் என்று கூறப்பட்டிருக்கிறது.

இதை வாசிக்கும் நம்மில் சிலர் இந்த மேரியாகவோ அல்லது ஜானாகவோ இருக்கலாம். உள்ளான பிரச்சனைகளோடு, நம்மில் அநேகர் இந்நிலையில் இருக்கலாம். அவர்களது உள்ளான நிலையை வெளி வாழ்க்கையானது அப்படியே பிரதிபலித்துக் காண்பிக்கிறது. நமது சிந்தையை அடக்கிவிட்டால் நமது செயல்களையும் தன்னால் அடக்கிவிட முடியும் எனச் சாத்தானுக்கு நன்றாய் தெரியும்.

இன்றைக்கும், தகர்க்கப்பட வேண்டிய சில பிரதானமான பலத்த அரண்கள் உங்கள் வாழ்க்கையிலும் இருக்கலாம். “ஆனால் தேவன் உங்கள் பட்சத்தில் இருக்கிறார்” என உங்களைத் தைரியப்படுத்துகிறேன். ஓர் யுத்தம் நடந்து கொண்டேயிருக்கிறது. உங்கள் சிந்தை ஓர் போர்க்களம். ஆனால், தேவன் உங்களுக்காக, உங்கள் பட்சத்தில் இருந்து யுத்தம் செய்கிறார் என்பதே மாபெரும் நற்செய்தி.

# அதிகாரம்
# 2

## *முக்கியமான தேவை*

அதிகாரம்
2

# *முக்கியமான தேவை*

> *அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்.*
>
> நீதிமொழிகள் 23:7

நாம் சரியாய் சிந்திக்கிறோமோ என்பதை அறிவது எவ்வளவு முக்கியம் என்பதைக் காட்ட இந்த வசனம் நமக்குப் போதுமானது. நினைவுகள் சக்தி வாய்ந்தவை, அவை உருவாக்கும் ஆற்றலும் உள்ளவைகள். நாம் எவ்வண்ணமாய் இருக்கப்போகிறோம் என்பதை நமது சிந்தை நிர்ணயிக்கிறது என்றால், நாம் சரியான நினைவுகளை நினைப்பது, மிக மிக முக்கியமானது.

தேவனுடைய வசனத்தோடு மாத்திரமே உங்கள் எண்ணங்கள் இருக்க வேண்டும் என நான் மிகவும் வற்புறுத்த விரும்புகிறேன்.

*எதிர்மாறான சிந்தை உங்களுக்கு இருப்பின், சீரான வாழ்க்கை நீங்கள் வாழவே முடியாது.*

## மாம்ச சிந்தை ஆவிக்குரிய சிந்தை

> அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள், ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்.
>
> ரோமர் 8:5

வேறொரு விதத்தில் இவ்வசனத்தை நாம் திருப்பிப் பார்த்தால், நாம் மாம்சத்துக்குரியவைகளைச் “சிந்திக்கும் போது” மாம்சத்தின்படியும்; ஆவிக்குரியவைகளைச் “சிந்திக்கும் போது” ஆவிக்கேற்றபடியும் நடக்கிறோம் என்பது தெளிவாகிறது.

மாம்சீகமான, தவறான, எதிர்மாறான நினைவுகளை நாம் சிந்திக்கும் போது ஆவியில் நடக்க முடியாது. வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கைக்கு புதுப்பிக்கப்பட்ட தெய்வீக சிந்தைதான் மிக அவசியம்.

கவனம் செலுத்த வேண்டிய காரியங்களுக்கு நாம் அதிக முக்கியம் கொடுக்காவிட்டால், நாம் சில நேரங்களில் சோம்பலுள்ள மனிதராக மாறிவிடுகிறோம். ஆனால், பெரிய பிரச்சினையைக் கொண்டுவரும் ஒரு முக்கிய காரியம் அது என உணரும் போது, நாம் மிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் அதற்கு முக்கிய கவனம் செலுத்துகிறோம்.

உதாரணமாக, வங்கியில் நீங்கள் பணம் எடுக்கையில், வங்கியிருப்புக் கணக்கில் இருப்பதைக் காட்டிலும் அதிகமான தொகையை நீங்கள் அறியாமல் வங்கியிலிருந்து எடுத்து விடும் போது, அதை வங்கிக் கணக்கர் கண்டுபிடித்து உங்களிடம் கூறுகிறார் என வைத்துக் கொள்வோம். உடனடியாக அந்தப் பிரச்சனையை நீங்கள் உணர்ந்து கொண்டு, அதை சரியாக்க முயற்சிப்பீர்கள் அல்லவா? ஒரு வேளை உங்கள் கணக்கை நீங்கள் பரிசீலிக்கையில், உங்கள் வங்கியிலுள்ள உங்கள் கணக்கில் பணத்தை முதலீடு செய்ததாக நீங்கள் நினைத்துக் கொண்டிருப்பீர்கள். ஆனால், உண்மையில் நீங்கள் பணத்தை முதலீடு செய்யவில்லை என்பதைக் கண்டுபிடிக்கையில் மேற்கொண்டு எந்தப் பிரச்சனையும் வராதபடி நீங்கள் எவ்வளவு துரிதமாய் அதைச் சரிசெய்யும்படி செயல்படுவீர்கள்.

இதைப் போலவேதான் நமது மனம் புதிதாகிற நிலைமையும் இருக்கிறது.

தவறான நினைவுகள் நிமித்தம் உங்கள் வாழ்க்கை சின்னாபின்னமாக மாறியிருக்கலாம். அப்படியானால், உங்கள் சிந்தனைப் பகுதியைச் சரியாக்கினால் மட்டுமே நீங்கள் உங்கள் வாழ்க்கையை நேராக்க முடியும் என்ற முடிவுக்கு வர வேண்டும். இதை உங்கள் வாழ்க்கையில் நீங்கள் மிகவும் முக்கியமாகக் கருத வேண்டும். உங்கள் மனதில் சாத்தான் கட்டி எழுப்பும் ஒவ்வொரு பலத்த அரணையும் அழிப்பதைக் குறித்து மிக மிக ஜாக்கிரதையாயிருங்கள். தேவ வசனம், துதி, ஜெபம் என்பவைகளாகிய உங்கள் ஆயுதங்களை உபயோகிக்க அஞ்சாதிருங்கள்.

## ஆவியினாலே

பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

சகரியா 4:6

விடுதலையைப் பெற்றுக் கொள்ளக்கூடிய சிறந்த வழிகளில் ஒன்று, தேவனிடத்தில் திரும்பத் திரும்ப ஒத்தாசையைக் கேட்பது மட்டுமே.

ஆயுதங்களில் ஒன்று, ஜெபம் அல்லது தேனிடத்தில் கேட்பது என நாம் கவனித்தோம். தீர்மானத்தினால் மட்டுமே உங்கள் சூழ்நிலைகளை நீங்கள் மேற்கொள்ள முடியாது. உங்கள் சொந்த மாம்ச முயற்சியால் தீர்மானம் செய்யாமல், பரிசுத்த ஆவியினாலே நீங்கள் தீர்மானிக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு உதவி செய்பவர். அவரது ஒத்தாசையைத் தேடுங்கள். அவரையே சார்ந்திருங்கள். அப்போது தனியாக ஒருபோதும் எந்தத் தீர்மானத்தையும் நீங்கள் எடுக்கவே முடியாது.

## அத்தியாவசியத் தேவை

ஒரு விசுவாசிக்கு மிகவும் முக்கியமானது அவனுடைய சரியான சிந்தனையாகும். “அது இல்லாமல் வாழ முடியாது” என்பது தான் ஒரு அத்தியாவசியத் தேவை என நாம் அறிகிறோம். ஒரு இருதயத்துடிப்பு அல்லது இரத்த அழுத்தம் நாம் உயிர்வாழ எவ்வளவு முக்கியமோ அதைப்போலவே ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் அத்தியாவசியமான தேவைகள் உண்டு.

ஜெபத்தின் மூலமாகவும், வேத வசனத்தின் மூலமாகவும் அவரோடு வைக்கும் தனிப்பட்ட உறவைப்பற்றிய முக்கியத்துவத்தை தேவன் என் வாழ்வில் எனக்கு அதிகமாய் வலியுறுத்தினார். இவைகள் இரண்டும் மிக அத்தியாவசியமானவைகள் என்பதை அவர் எனக்குச் சரிவரக் காண்பிக்கும் மட்டும், அவைகளை என் வாழ்வில் நான் தினமும் கடைப்பிடிக்க எனக்கு மிகவும் கடினமாய் இருந்தது. என்னுடைய சரீரப்பிரகாரமான வாழ்விற்கு நான் கடைப்பிடிக்க வேண்டிய சில அத்தியாவசிய காரியக் கடமைகள் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியமாய் எனது ஆவிக்குரிய வாழ்க்கைக்காக தேவனோடு நான் ஒழுங்கான, போதுமான நேரத்தைச் செலவிட வேண்டியதாயிருந்தது. இந்த ஐக்கியத்தில் உறவின் முக்கியத்துவத்தை நான் கற்றவுடன் தேவனோடு பாராட்டும் உறவுக்கு அதிக நேரமும், முக்கியத்துவமும் என் வாழ்வில் கொடுக்கலானேன்.

அதைப்போலவே, சரியான எனது நினைவுகள் தான் எனது ஜெயமான வாழ்விற்கு ஆதாரம் என்று எப்போது அறிந்தேனோ அப்போதே எனது எண்ணங்களுக்கும், சரியான எண்ணங்களைத் தெரிந்து கொள்வதற்கும் மிகுந்த கவனத்தையும், ஜாக்கிரதையையும் செலுத்தினேன்.

## நீ எப்படி சிந்திக்கிறாயோ, அப்படியே இருக்கிறாய்

> மரம் நல்ல தென்றால், அதின் கனயும் நல்லதென்று சொல்லுங்கள். மரம் கெட்டதென்றால், அதின் கனியும் கெட்டதென்று சொல்லுங்கள், மரமானது அதின் கனியினால் அறியப்படும்.
>
> மத்தேயு 12:33

மரமானது அதன் கனியினாலேயே அறியப்படும் என்று வேதம் சொல்லுகிறது.

நமது வாழ்க்கையிலும் இது மிக மிக உண்மை. நல்ல சிந்தைகளை நாம் எண்ணும்போது, நமது வாழ்க்கையிலுள்ள கனிகளும் நல்லதாகவே இருக்கும். கெட்ட எண்ணங்களை நாம் எண்ணும்போது நமது வாழ்வின் கனிகளும் கெட்டதாகவேயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஒருவனுடைய வாழ்க்கையில் அவனது செயலை நாம் கண்டாலே, அவனது வாழ்வின் பிரதான சிந்தை என்ன என்பதை நாம் கண்டறிந்து விடலாம். இனிமையும், தயவும் நிறைந்த ஒருவன் கீழ்த்தரமானதும், மூர்க்கமானதுமான ஜீவியத்தை உடையவனாக இருக்கமாட்டான். அதைப்போலவே மோசமான ஒருவன் ஒருபோதும் அன்புள்ள நல்லெண்ணம் கொண்டவனாய் இருக்கவே முடியாது.

நீதிமொழிகள் 23:7ல் உள்ளபடி அவன் இருதயத்தின் நினைவுகள் எப்படியோ அப்படியே அவன் இருக்கிறான் என்பதை மனதிற்கொண்டு உங்கள் வாழ்வை ஆராயுங்கள்.

# அதிகாரம்
# 3

## *விட்டு விடாதிருங்கள்!*

**அதிகாரம்**
**3**

# *விட்டு விடாதிருங்கள்!*

*நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக, நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம்.*
கலாத்தியர் 6:9

உங்கள் வாழ்க்கையும், உங்கள் சிந்தையும் எந்த மோசமான நிலமையிலிருந்தாலும் பரவாயில்லை, சோர்ந்து போகாதிருங்கள்! உங்களிடமிருந்து பிசாசு திருடிய உங்கள் எல்லையைத் திரும்ப சுதந்தரித்துக் கொள்ளுங்கள். தேவையானால் ஒரு அங்குலம் ஒவ்வொரு தடவையும் திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள், நீங்கள் விரும்பும் பதிலைப் பெற உங்களையே நீங்கள் சாராமல் எப்பொழுதும் தேவனுடைய கிருபையையே சார்ந்து கொள்ளுங்கள்.

கலாத்தியர் 6:9ல் பவுல் தொடர்ந்து முன்னேற மிகவும் தைரியப்படுத்துகிறார். நிறுத்திவிடக்கூடாது! விட்டுவிடக்கூடாது! ஆனால், "கைவிடுகிற" பழைய ஆவியுடன் அல்ல; தேவன் தம்மோடு இறுதி வரை நடந்து வருபவரைத்தான் ஊக்கப்படுத்துகிறார்.

## ஊடுருவிச் செல்க

> நீ தண்ணீர்களைக் கடக்கும் போது நான் உன்னோடு இருப்பேன். நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை. நீ அக்கினியில் நடக்கும் போது வேகாதிருப்பாய், அக்கினி ஜீவாலை உன் பேரில் பற்றாது.
>
> ஏசாயா 43:2

உங்கள் வாழ்வில் எவைகளையெல்லாம் நீங்கள் எதிர்நோக்குகிறீர்களோ அல்லது அனுபவிக்கிறீர்களோ, அவைகளையெல்லாம் நீங்கள் செயலாற்ற முற்படுங்கள், விட்டு விடாதிருங்கள்!

ஆபகூக் 3:19ல் காண்பது போல, “அவர் என் கால்களை மான் கால்களைப் போலாக்கி, உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப்பண்ணுவார்” மானானது உயரமான கால்களோடு, உயர்ந்த மலையில் வாழும் ஒரு பிராணியாகும். ஒரே இடத்தில் நின்றுவிடாமல் கலக்கம், நெருக்கம், பாடுகள் அல்லது உத்தரவாதங்கள் நடுவிலும் உயரமான இடங்களில் முன்னேறிச் செல்வதை அது குறிக்கிறது!

கடினப்பாதைகள் வரும்போது, முன்னேறுங்கள், “விட்டுவிடாதிருங்கள்” என்ற தேவன் தரும் தைரியமூட்டும் வார்த்தைகளே ஆவிக்குரிய முன்னேற்றத்தில் நமக்குத் தரும் உற்சாகமாக அமைகிறது.

நிறுத்திவிடுவது எளிது; ஆனால் தொடர்ந்துச் செல்ல விசுவாசம் தேவை.

## தெரிந்து கொள்ளுங்கள்!

நான் ஜீவனையும், மரணத்தையும், ஆசீர்வாதத்தையும், சாபத்தையும் உனக்கு முன் வைத்தேன் என்று உங்கள் மேல் வானத்தையும் பூமியையும் இன்று சாட்சி வைக்கிறேன். ஆகையால், நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு, நீ ஜீவனைத் தெரிந்து கொள்.

உபாகமம் 30:19

அனுதினமும் ஆயிரக்கணக்கான சிந்தனைகள் நமக்கு முன்பாக வருகின்றன. மாம்சத்தின்படி பின்பற்றாமல், ஆவிக்குரிய நிலையில் பின்பற்ற நம்முடைய மனம் புதிதாக வேண்டும். நமது மனதிலே தவறான சிந்தனைகள் உருவாவதற்கு எந்த முயற்சியும் நமக்குத் தேவையில்லை. ஏனெனில் நமது சிந்தை மாம்சீக நிலையில் செயல்படுவதே வழக்கமாகிவிட்டது.

அதற்கு மாறாக நாம் சரியான சிந்தனைகளை தீர்மானமாகத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. தேவனோடு ஏக சிந்தையாயிருக்க நாம் *தெரிந்து கொண்ட* பிறகு சரியான எண்ணங்களை நாம் எண்ணவும், தொடர்ந்து அவைகளை நாம் *சிந்திக்கவும்* வேண்டும்.

சிந்தையின் போர்க்களத்தில் நடக்கும் சிந்தனைப்போரை நாம் ஜெயிக்க முடியாது என்று நமது எண்ணத்தில் நாம் எண்ணுவோமானால், நாம் ஒருபோதும் அதில் வெற்றி கொள்ளவே முடியாது! ஆனால், இப்படி வரும் எண்ணங்களைக் கீழே தள்ளிவிட்டு, நாம் ஜெயிப்போம் என்று சிந்திக்கத் துவங்குவோமேயானால், நிச்சயமாகவே நமது சிந்தனைப் போரில் நாம் ஜெயம் கொள்ளுவோம். ஜெயம் கொள்வோம் என்று எண்ணுவதைத் தெரிந்து கொள்வதோடு நின்று விடாதபடி, அந்த எண்ணத்தைத் தொடர நாம் தீர்மானிக்க வேண்டும். சந்தேகம், பயம் இவைகளைப் புறம்பே தள்ளிவிட்டு, "நான் ஒருபோதும் கீழே விழமாட்டேன், தேவன் என்னோடு இருக்கிறார், அவர் என்னை நேசிக்கிறார்" அவர் எனக்கு உதவி செய்கிறார், என உறுதியாய் நில்லுங்கள்.

நமது வாழ்நாளெல்லாம் நாம் எடுக்க வேண்டிய அநேக தெரிந்து கொள்ளுதல்கள் நமக்கு உண்டு. உபாகமம் 30:19ன் படி கர்த்தர் தமது ஜனங்களுக்கு முன்பாக ஜீவனையும், மரணத்தையும் வைத்து, ஜீவனைத் தெரிந்துக் கொள்ள அவர்களை ஊக்குவிக்கிறார். நீதிமொழிகள் 18:21ல் மரணமும், ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும், அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது.

நமது எண்ணங்களே நமது வார்த்தைகளாக மாறிவிடுகின்றன. ஆகவே, ஜீவன் தரும் எண்ணங்களை மட்டும் நாம் தெரிந்து கொள்வது மிகவும் அவசியமாயிருக்கிறது. நாம் அதைச் செய்யும் போது, சரியான வார்த்தைகள் பின் தொடரும்.

## சோர்ந்து போகாதிருங்கள்!

யுத்தம் முடிவற்ற நிலையில் "நான் ஒருபோதும் ஜெயிக்க முடியாது" என்ற எண்ணங்கள் நம்மை மேற் கொள்ளுமானால், ஒன்றை நாம் அறிந்து கொள்ள வேண்டும். தேவன் எண்ணுவது போல் நாம் எண்ணாதபடி நமது சிந்தையை மாம்சீக, உலக ரீதிக்கு சாதகமாக நாம் மாற்றிக் கொள்கிறோம்.

கூடாதா? இல்லை, *கூடாது!*

கடினமா? *ஆம்!*

ஆனால் தேவன் உங்களது அணியில் உள்ளார் என்பதை மறந்து விடாதிருங்கள் அவர் ஒருவரே ஒரு சிறந்த கம்ப்யூட்டர் ஒருங்கிணைப்பாளர், நமது ஒவ்வொருவரது சிந்தனைப் பகுதியும், நமது வாழ்க்கை முழுமையையும் தன்னகத்தே கொண்ட ஒரு குப்பைக் கூழக் கம்ப்யூட்டர் இயந்திரமாக இருக்கிறது. எனினும், தேவன் உங்களில் செயலாற்றுகிறார். உங்களது சிந்தனைகளை அவர் அடக்கி ஆள வேண்டும் என நீங்கள் விரும்பும் போது அவர் நிச்சயமாகவே அதை ஆட் கொள்ளுகிறார். உங்கள் குப்பைக்கூழ மனதை அவர் ஒழுங்காக்குகிறார். அவருக்குத் தொடர்ந்து ஒத்துழைப்புக் கொடுப்பீர்களானால் நீங்கள் வெற்றி பெறுவீர்கள். *சோர்ந்து போகாதிருங்கள்!*

அது ஒரு எளிதான காரியமல்ல. அதற்கு நேரம் தேவை. உங்கள் எண்ணத்தில் தேவனது சிந்தனை வழியை நீங்கள் சிந்திக்கத் தெரிந்து கொள்ளும்போது, நீங்கள் சரியான திசையை நோக்கிச் செல்கிறீர்கள். ஏதோ ஒரு காரியத்தைச் செய்ய நீங்கள் உங்களது நேரத்தைச் செலவிடும் போது, ஒரே இடத்தில் நீங்கள் நின்றுவிடாதபடி உங்கள் வாழ்நாளெல்லாம் அதில் முன்னேறிக்கொண்டே செல்ல அது ஏதுவாயிருக்கும்.

## திரும்பி உங்கள் உடைமையைப் பெற்றுக் கொள்ளுங்கள்!

> நீங்கள் இந்த மலையருகே தங்கியிருந்தது போதும். இதோ, இந்த தேசத்தை உங்களுக்கு முன்பாக வைத்தேன். நீங்கள் போய்... தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்.
>
> உபாகமம் 1:6-8

உபாகமம் 1:2ல் மோசே இஸ்ரவேலரிடத்திலே கானானுக்குப் போய்ச் சேர பதினொரு நாட்களே போதும் எனச் சுட்டிக்காண்பிக்கிறார். எனினும், அவர்கள் அங்கு போய் சேர நாற்பது ஆண்டுகள் ஆயிற்று. 6ம் வசனத்தில் “நீங்கள் இந்த மலையருகே தங்கியிருந்தது போதும் என்கிறார்.”

ஒரேப் மலையில் நீண்ட நாள் நீங்கள் தங்கியது உண்டா? பதினொரு

நாளில் முடிக்க வேண்டிய காரியத்தை செயலாற்ற நாற்பது ஆண்டுகள் உங்களுக்கு எடுத்ததா?

எனது சொந்த வாழ்க்கையிலே நான் ஒன்றுமில்லாத ஓரிடத்துக்கு நேராகச் செல்லுகிறேன் என்பதை உணர்ந்தேன். *வெற்றியற்ற ஒரு கிறிஸ்தவளாகவே நான் வாழ்ந்தேன்.* எனது சிந்தையிலும், மேரி, ஜானைப் போலவே பல தவறான சிந்தனைக் குறுக்கீட்டின் தடைகளை அநேக ஆண்டுகளாக நான் கொண்டுள்ளவளாயிருந்தேன். பிசாசு என்னிடம் பொய்களைச் சொன்னான். அவைகள் எல்லாவற்றையும் நான் நம்பி இருந்தேன். ஆகவே ஏமாற்றத்துக்குள் நான் வாழ்ந்து கொண்டிருந்தேன்.

அதே மலையில் நீண்ட நாட்களாக நான் இருந்து கொண்டிருந்தேன். தேவனுடைய சத்திய வார்த்தைகளை மட்டும் நான் அறிந்திருந்தால் நான் செலவிட்ட நாற்பது ஆண்டுகளை விட பதினொரு நாட்களிலே எனது வெற்றியை நான் கண்டிருப்பேன்.

இஸ்ரவேலர் வனாந்தரத்தில் தங்கியிருந்தபடியால் "வனாந்தர மனநிலையைக்" கொண்டிருந்தார்கள் என தேவன் எனக்குக் காண்பித்தார். குறிப்பிட்ட தவறான எண்ணங்கள் அவர்களை அடிமைப்படுத்தியிருந்தது. உங்கள் மனம் புதிதாக்கப்பட வேண்டும் என நீங்கள் இப்பொழுதே தீர்மானித்து, உங்கள் சிந்தனைகளை சரியான நிலையில் தெரிந்து கொள்ளக் கற்றுக் கொள்ளுங்கள் என்று உங்களை பட்சமாய் கேட்டுக் கொள்ளுகிறேன். ஜெயத்தைப் பெற்று, உங்களுக்கு உரிமையான சுதந்தரத்தை சுதந்தரிக்கும் மட்டும் நான் சோர்ந்து போகாமல் முன்னேறுவேன் என்ற தீர்மானத்தைத் தயவாக எடுத்துக் கொள்ளுங்கள்.

# அதிகாரம்
# 4

## கொஞ்சம் கொஞ்சமாக

# *கொஞ்சம் கொஞ்சமாக*

**அதிகாரம்**
4

*அந்த ஜாதிகளை உன் தேவனாகிய கர்த்தர் கொஞ்சம் கொஞ்சமாய் உன்னை விட்டுத் துரத்தி விடுவார், நீ அவர்களை ஒருமிக்க நிர்மூலமாக்க வேண்டாம், நிர்மூலமாக்கினால் காட்டு மிருகங்கள் உன்னிடத்தில் பெருகிப்போகும்.*

உபாகமம் 7:22

உங்கள் மனம் புதிதாவது கொஞ்சம், கொஞ்சமாகத்தான் உங்களில் நிறைவேறும், ஆகவே முன்னேற்றம் மெதுவாயிருப்பின் நீங்கள் சோர்ந்து போக வேண்டாம்.

காட்டுமிருகங்கள் அவர்கள் நடுவில் பெருகாதபடி, அவர்களுடைய சத்துருக்களை கொஞ்சம், கொஞ்சமாகத்தான் துரத்திவிடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

உடனடி விடுதலையை அதிகமாக நாம் பெறுவோமானால் பெருமை என்னும் "காட்டுமிருகம்" நம்மை முற்றிலும் கட்சித்துப்போடும் என்று நான் எண்ணுகிறேன். ஒரு நேரத்தில் ஒரு பகுதியில் விடுதலையைப் பூரணமாய் பெற்றுக் கொள்வதுதான் நலம் என நான் எண்ணுகிறேன். அப்படியாக வரும்போது நாம் நமது ஜெயத்தை அதிகமாய் பாராட்டி மகிழலாம். நமது சுய பலத்தினால் அந்த ஜெயம் வராமல், தேவனுடைய சுத்தக் கிருபையால் தான் அந்த ஜெயம் வந்தது என நாம் நிச்சயமாய் அறிய முடியும்.

## பாடுகள் மூலம் வரும் விடுதலை

கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சகாலம்

பாடநுபவிக்கிற உங்களைச் சீர்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக.

1 பேதுரு 5:10

"கொஞ்சக்காலம்" நாம் பாடனுபவிப்பது ஏன் நமக்கு அவசியம்? நமக்கு ஒரு பிரச்சனை உள்ளது என நாம் அறியத் தொடங்கியதிலிருந்து, அப்பிரச்சனையிலிருந்து இயேசு நம்மை விடுதலையாக்கும் மட்டும், நாம் ஒருவித பாடுகளின் ஊடே கடந்து போகிறோம் என்பதில் நமக்குச் சந்தேகமில்லை. ஆனால் விடுதலை வரும்போதோ, அதிலே நாம் அதிகமாகக் களிகூருகிறோம். நமது சுயமாக ஏதாவது ஒன்றை நாம் செய்ய முயற்சிக்கும் போது, அதிலே நாம் தோற்றுப் போகிறோம். பின்னர் நாம் அவரிலே காத்திருப்போமானால், நம்மாலே செய்ய முடியாததை அவர் எழுந்து நமக்காகச் செய்யும் போது, அவரை நாம் துதித்து, நமது இருதயங்கள் மகிழ்ச்சியினால் நிறைகிறதை உணர்கிறோம்.

## ஆக்கினைத் தீர்ப்பில்லை

ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்கு உட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின் படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை.

ரோமர் 8:1

கெட்ட நாட்களும், சரிவுகளும் இருக்கிற வேளையில் ஆக்கினைத் தீர்ப்பை பெற்றுக் கொள்ளாதிருங்கள். பின் திரும்பிப்போய் தூசியை உதறிவிட்டு, மீண்டும் துவங்குங்கள். ஒரு குழந்தை சரியாய் நடக்க ஆரம்பிப்பதற்கு முன் விழுந்து, விழுந்து எழுந்துதான் நடக்கப்பழகும். ஆனால், அக்குழந்தையை நாம் உற்றுப்பார்க்கையில், அது விழுகிற வேளையில் சற்று அடிபட்டாலும் அழுது கொண்டே மீண்டும் எழுந்து நடக்க முயற்சிக்கும்.

உங்கள் மனதைப் புதுப்பிக்கிற வேளையில், பிசாசு தன்னால் இயன்ற அளவு உங்களை நிறுத்த முயலுவான். தவறான சிந்தனைகளை நீங்கள் வெறுத்து, சரியான சிந்தனைகளை நீங்கள் தெரிந்துகொள்கையில், உங்கள் மீது, தான் கொண்டிருந்த ஆதிக்கத்திற்கு ஒரு முடிவு வந்துவிட்டது என அவனுக்கு நன்றாகத் தெரியும். அவ்வேளையில் அதைரியம், ஆக்கினைத் தீர்ப்பு இவைகளைக் கொண்டு உங்களை அவன் நிறுத்த விரும்புவான்.

ஆக்கினை உங்கள் மேல் வருகையில் ரோமர்: 8:1 ஐச் சொல்லி உங்கள் "வார்த்தை எனும் ஆயுதத்தை" உபயோகியுங்கள். நீங்கள் மாம்சத்தின்படியல்ல. ஆனால், ஆவியின்படி நடக்கிறீர்கள் என்ற உண்மையை உங்களுக்கும், சாத்தானுக்கும் நினைப்பூட்டிக் கொள்ளுங்கள். உங்களைச் சார்ந்து நடப்பது மாம்சத்தின் சிந்தை. ஆனால், தேவனைச் சார்ந்து நடப்பதோ ஆவியின் சிந்தையாகும்.

நீங்கள் தோற்றுப் போவீர்களாகில், உங்களை ஒரு தோல்வியுள்ளவனாக எண்ணிக் கொள்ள வேண்டாம். எல்லாவற்றையும் நீங்கள் சரியாகச் செய்கிறவர்களல்ல என்பதைத்தான் அது காண்பிக்கிறது. நமது பலத்தின் மத்தியில், அவ்வப்போது நமக்கு பலவீனமும் உண்டென்கிற உண்மையை நாம் எப்போதும அங்கீகரிக்க வேண்டும். உங்கள் பெலனாக அமைவாராக.

*ஆக்கினைத்தீர்ப்பைப் பெற்றுக் கொள்ளாதிருங்கள்.* "கொஞ்சம், கொஞ்சமாக" நிச்சயமாக உங்கள் ஜெயத்தை நீங்கள் ஒரு நாளில் பெற்றுக் கொள்வீர்கள்.

## அதைரியப்படாதிருங்கள்

> என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு, அவர் சமுகத்து இரட்சிப்பினிமித்தம் நான் இன்னும் அவரைத் துதிப்பேன்.
>
> சங்கீதம் 42:5

நம்பிக்கையை அதைரியம் அழித்துவிடுகிறது. ஆகவே, பிசாசு எப்போதும் நம்மை அதைரியப்படுத்துவதற்கு முயலுவான். நம்பிக்கையில்லாமல், சோர்ந்து போய்விடுகிறோம். இதைத்தான் பிசாசு விரும்புகிறான். அதைரியப்படாதே என்றும், கலங்காதே என்றும் வேதம் திரும்பத்திரும்ப நமக்குக் கூறுகிறது. நாம் அதைரியப்படுவோமானால் நாம் ஜெயிக்கவே முடியாது என்று தேவன் நன்றாய் அறிவார். ஆகவே தான் நாம் ஒன்றைச் செய்ய ஆரம்பிக்கிற வேளையில், "அதைரியப்படாதே" என்ற நல்வார்த்தையைக் கூறி அக்காரியத்தைச்

செய்ய ஊக்குவிக்கிறார். நாம் அதைரியப்பட அல்ல. தைரியப்படவே தேவன் விரும்புகிறார்.

அதைரியமும், ஆக்கினையும் நம்மை மேற்கொள்ள முயலும்போது, உங்கள் சிந்தனை வாழ்க்கையைப் பரிசீலித்துப் பாருங்கள். எந்தவிதமான எண்ணங்களை நீங்கள் யோசிக்கிறீர்கள்? பின்வருமாறு அவைகள் தொனிக்கின்றனவா?

“இது கடினமான ஒன்று. என்னாலே இதைச் செய்ய முடியாது. நான் தோற்றுப்போய்விட்டேன். ஆகவே, இனி நான் செய்வதெல்லாம் தோல்வியாகவே இருக்கும். ஒருபோதும் ஒன்றுமே மாறாது. நான் அனுபவிக்கிற துன்பங்களைப்போல், பிறர் அனுபவிப்பதில்லை. நான் இதைத் தொடராமல் விட்டுவிட்டால் எனக்கு நலம். முயற்சிப்பதிலேயே சோர்ந்து போனேன். நான் ஜெபம் செய்தாலும், தேவன் எனது ஜெபத்தைக் கேட்பதுபோல எனக்குத் தோன்றவில்லை. நான் செய்யும் எனது கிரியைகளைக் கண்டு மிகவும் ஏமாற்றம் அடைகிறதால் அவர் எனது ஜெபத்தைக் கேட்கவில்லை போலும்” என்ற பிசாசின் அதைரியத் தொனி உங்கள் சிந்தையில் உருவாகிறதா?

ஒருவேளை, இந்த உதாரணமானது, உங்கள் சிந்தையை பிரதிபலிக்குமேயாகில் நீங்கள் அதைரியப்பட்டு, ஆக்கினைக்குள்ளாவதிலே எவ்விதச் சந்தேகமுமில்லை. நீங்கள் எதை எண்ணினீர்களோ, அப்படியாகவே மாறிவிட்டீர்கள். அதைரிய எண்ணங்களை நீங்கள் யோசிக்கையில், ஆக்கினைக்குள்ளாகவே செல்லுவீர்கள். உங்கள் சிந்தையை மாற்றி, விடுதலை அடைவீர்களாக.

எதிர்மாறாய் எண்ணுவதற்குப் பதிலாக இவ்வாறு எண்ண ஆரம்பியுங்கள்.

“காரியங்கள் மெதுவாய் நடைபெறுகின்றன. ஆனால் சில முன்னேற்றங்களை நான் அடைகிறேன். தேவனுக்கு மகிமை. விடுதலைக்கு என்னை வழி நடத்தும் வெற்றியின் பாதைக்கு நேராய் நான் முன்னேறுவதை நான் அறிந்து மகிழ்கிறேன். நேற்றையதினம் மிகவும் மோசமான ஒரு நாளாய் எனக்கு இருந்தது. தவறான சிந்தையையே நான் முழுமையாய் எண்ணத் தீர்மானித்திருந்தேன். பிதாவே, நீர் என்னை

மன்னியும் நான் தொடர்ந்து முன்னேற எனக்கு உதவி செய்வீராக. நான் ஒரு பிழை செய்திருந்தாலும், இனி அந்த ஒரு பிழையையும் கூட நான் செய்யாதிருக்க எனக்கு உதவுவீராக. இன்று ஒரு புதிய நாள். இன்று நீர் என்னை நேசிக்கிறீர். ஆண்டவரே உம்முடைய கிருபை, காலைதோறும் என்றைக்கும் புதிதாயிருக்கிறது."

"நான் அதைரியப்பட மாட்டேன். ஆக்கினைக்குள்ளாக்கப்பட நான் மறுக்கிறேன். பிதாவே, நீர் என்னை ஆக்கினைக்குள் தீர்க்கிறவரல்ல என வேதாகமம் எனக்குச் சொல்லுகிறது. எனக்காகவே மரிக்க நீர் இயேசுவை அனுப்பினீர். நான் நன்றாயிருப்பேன். இந்த நாள் ஒரு மகத்துவமான நாள். இன்று நான் நல்ல சிந்தைகளை யோசிக்க எனக்கு உதவி செய்வீராக" என வெற்றியின் சிந்தைக்குள்ளாவீர்களாக.

இப்படிப்பட்ட மகிழ்ச்சியான சாத்தியக்கூரான, தேவனுடைய சிந்தனைகளைப் போன்ற சிந்தனைகளை நீங்கள் சிந்திப்பதன் மூலம் ஜெயத்தை நீங்கள் உணருகிறீர்கள் என நான் நம்புகிறேன்.

எல்லாம் உடனே நடைபெற வேண்டும் என நாம் விரும்புகிறோம். நமது இதயத்தின் உள்ளே பொறுமையின் கனியை நாம் உடையவர்களாய் இருந்தாலும், அது வெளியான நிலைக்காக தன் கிரியைச் செய்கிறது. சில வேளைகளிலே, தேவன் நமக்கு முழு விடுதலையை அருளும்படி சற்றுகால அவகாசத்தை எடுக்கிறார். நம்முடைய விசுவாசம் சரியான நிலையில் கிரியை செய்து, பொறுமையான தனது பூரண கிரியைச் செய்யும்படி நமது வாழ்க்கையின் கடினமான சூழ்நிலைகளை தமது கரத்தில் தேவன் எடுக்கிறார். (யாக்கோபு 1:4) தேவனுடைய நேரம் பூரணமானது. அவர் ஒருபோதும் பிந்துகிறவரல்ல. காலம் தாழ்த்துகிறவருமல்ல.

இன்னொரு நல்ல சிந்தையையும் நான் உங்களுக்குத் தருகிறேன். நான் தேவனை விசுவாசிக்கிறேன். சூழ்நிலைகள் எவ்வாறு தோன்றினாலும், அல்லது நான் எந்த நிலையில் உணர்ந்தாலும், எனக்குள் அவர் கிரியை செய்கிறார் என நான் விசுவாசிக்கிறேன். தேவன் எனக்குள் ஆரம்பித்த நற்கிரியையை அவர் நிச்சயமாகவே நிறைவேற்றுவார். (பிலிப்பியர் 2:13; 1:6)

பலத்த அரண்களை நிர்மூலமாக்க நீங்கள் இந்த நிலையிலே உங்கள் வார்த்தை என்னும் ஆயுதத்தை வல்லமையாக உபயோகப்படுத்த முடியும். சரியான சிந்தைகளை நீங்கள் எண்ணுவதோடு நின்று விடாதபடி, அவற்றை அறிக்கையாக சத்தமாக உங்கள் வாயைத் திறந்து நீங்கள் அறிவிக்க வேண்டும் என நான் உங்களை ஊக்குவிக்கிறேன்.

கொஞ்சம், கொஞ்சமாக தேவன் உங்களை விடுதலையாக்குகிறார் என்பதை மனதிற்கொண்டு, அதைரியப்படாதபடியும், தவறு நேரிடினும் ஆக்கினைக்குட்படாதபடியும் மகிழ்வுடன் முன்னேறுங்கள்.

*உங்களுக்குள்ளேயே நீங்கள் பொறுமையோடிருங்கள்!*

# அதிகாரம்
# 5

## உறுதியான நோக்கத்தோடு இருங்கள்

# *உறுதியான நோக்கத்தோடு இருங்கள்*

**அதிகாரம்**
5

> *விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது.*
>
> மத்தேயு 8:13

உறுதியான சிந்தை சாத்தியக்கூரான வாழ்வை உருவாக்கும். எதிர்மாறான சிந்தையோ எதிர்மாறான வாழ்வையே உருவாக்கும். உறுதியான சிந்தை, எப்போதும் விசுவாசமும், நம்பிக்கையும் நிறைந்தவையாகவே இருக்கும். எதிர்மாறான சிந்தையோ எப்போதும் கவலையும், பயமும் நிறைந்தவையாகவுமே இருக்கும்.

தங்கள் வாழ்வில் அதிகமான வேதனைகளைச் சந்தித்தவர்கள் எப்பொழுதும், எதையும் நம்பப்பயப்படுவார்கள். தம் வாழ்வில் அநேக ஏமாற்றங்களை அவர்கள் சந்தித்தபடியால் மற்றொரு வேதனையைச் சந்திக்க மிகவும் பயப்படுவார்கள். இன்னொரு வேதனையை சந்திக்க முடியாத நிலையில், ஏமாற்றம் அடையாதபடி நம்ப மறுத்துவிடுவார்கள்.

வேதனைப்படாதபடி தங்களைக் காத்துக்கொள்ள நம்பிக்கையை ஏற்க மறுக்கிறார்கள் அல்லது தள்ளி விடுகிறார்கள். ஏமாற்றம் வேதனையை உருவாக்குகிறது. ஆகவே, மீண்டும் வேதனைப்படுவதற்குப் பதிலாக, எந்த நன்மையும் என்றைக்காவது தங்களுக்கு நடந்துவிடும் என விசுவாசித்து நம்ப அவர்கள் மறுத்துவிடுகிறார்கள். இப்படிப்பட்ட எண்ணம் அவர்களுக்குள் உருவாகிவிடுகிறது. சிந்தனைகள் எதிர்மாறாயிருக்கிறபடியால் எல்லாமே எதிர்மாறாய் மாறிவிடுகின்றன. நீதிமொழிகள் 23:7 ஐ மனதிற்கொள்ளுவோம். "அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்."

பல ஆண்டுகளுக்கு முன்பாக நான் முற்றிலும் எதிர் மாறாகவே இருந்தேன். எப்பொழுதெல்லாம் எனது சிந்தையிலே இரண்டு எண்ணங்கள் ஒரே வரிசையில் இருக்கிறதோ அப்பொழுதெல்லாம் எனது மனம் குழம்பிவிடுகிறது. "ஏதாவது ஒரு நல்ல காரியம் நடைபெறும் என நீ எதிர்பார்க்காத நிலையில் அது உண்மையிலேயே நடைபெறாத

பட்சத்தில் அதைக்குறித்து நீ ஏமாற்றம் அடையமாட்டாய்" என்ற கருத்து என் இருதயத்தில் பதிந்துவிட்டது.

எனது வாழ்க்கையில் அநேக ஏமாற்றங்களை நான் சந்தித்திருக்கிறேன். அநேக துயரச்சம்பவங்கள் எனக்கு நேரிட்டிருக்கின்றன. இவைகளையெல்லாம் நான் சந்தித்தபடியால், எந்த நல்ல காரியமும் எனக்கு நடக்கும் என விசுவாசிக்க நான் பயந்தேன். எல்லாச் சூழ்நிலைகளையும் எதிர்மாறான கண்ணோட்டத்தோடேயே நான் கண்டேன். எனது எண்ணங்கள் எல்லாம் எதிர்மாறாக இருந்தபடியால் எனது வார்த்தைகளும் எதிர்மாறானதாகவே இருந்தன; ஆகவே, எனது ஜீவியமும் அவ்வாறே மாறிவிட்டது.

ஆயினும், தேவனுடைய வசனத்தை நான் உண்மையாய் நம்ப ஆரம்பித்தபோது, தேவன் என்னை எப்படியும் பாதுகாப்பார் என்ற நம்பிக்கை எனக்குள் உருவாகிற்று. அவ்வேளையில், முதலாவதாக எதிர்மாறான நிலைமை என்னிடத்திலிருந்து வெளியேற வேண்டும் என்று நான் உணர்ந்தேன்.

மத்தேயு 8:13ல் நாம் விசுவாசித்தபடியே நமக்கு உண்டாகும் என்று இயேசு குறிப்பிடுகிறார். நான் விசுவாசித்ததெல்லாம் எதிர்மாறாக இருந்தபடியால் அநேக எதிர்மாறான காரியங்கள் தான் எனக்கு நேரிட்டன.

அதனால், நாம் எண்ணுவதை எல்லாம் நாம் பெற்று விட முடியும் என்பது அர்த்தமல்ல. தேவன் நம்மைக் குறித்துப் பூரணமான நோக்கத்தை உடையவராயிருக்கிறபடியால் நாம் நமது எண்ணங்களினாலும் வார்த்தைகளினாலும் அவரைக் கட்டுப்படத்த முடியாது. ஆனால் அவர் நம்முடைய வாழ்க்கையில் நமக்காக வைத்துள்ள திட்டத்தைச் சார்ந்தே நாம் பேசவும் எண்ணவும் வேண்டும்.

தேவனுடைய திட்டம் ஒன்று உங்களுடைய வாழ்க்கையைப் பற்றி உள்ளது என்ற அறிவு உங்களுக்கு இல்லாவிடில், இன்றே, "தேவசித்தம் என்னவென்று எனக்குத் தெரியாவிட்டாலும், அவர் என்னை நேசிக்கிறார் என்று நான் திட்டமாய் அறிந்திருக்கிறேன்" என்று உங்கள் மனதில் யோசிக்க ஆரம்பியுங்கள். "அவர் எதைச் செய்தாலும் அது நன்மையாகவே இருக்கும். அதனால் நான் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பேன்" எனக் கூறுங்கள்.

உங்கள் வாழ்க்கையைக் குறித்து உறுதியான சிந்தையைச் சிந்திக்க ஆரம்பியுங்கள்.

வாழ்க்கையில் ஏற்படுகின்ற ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் சாத்தியக்கூரான நிலையில் இருக்கவே அனுபவப்படுங்கள். ஒருவேளை நீங்கள் விரும்பத்தகாத சூழ்நிலைகள் அவ்வப்போது நேரிட்டடாலும், அதிலிருந்தும் தேவன் ஒரு நன்மையைக் கொண்டுவருவார் என எதிர்பாருங்கள். அவருடைய வாக்குத்தத்தம் அவருடைய வசனத்தில் நமக்கு அப்படியாகத்தான் உள்ளது.

## எல்லாம் நன்மைக்கே

> அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.
>
> ரோமர் 8:28

இவ்வேதவசனமானது, எல்லாம் நன்மையானதாய் இருக்கிறது என்று சொல்லவில்லை. மாறாக *சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது* எனக் கூறுகிறது.

உதாரணமாக நீங்கள் பொருட்கள் வாங்க, கடைக்குச் செல்லத் தீர்மானிக்கிறீர்கள். உங்கள் வாகனத்தில் ஏறுகிறீர்கள். ஆனால், என்ஜின் ஸ்டார்ட் ஆகவில்லை. இரண்டு வழிகளிலே நீங்கள் இந்தச் சூழ்நிலையை நோக்கலாம். நீங்கள் பின் வருபவைகளை உங்களுக்குள்ளே சொல்லலாம். "வண்டி நன்றாக இருந்தாலும்! நான் எப்பொழுதெல்லாம் ஒன்றைச் செய்ய விரும்புகிறேனோ அப்பொழுதுதான் வாகனத்தில் ஒரு பிரச்சனை உண்டாகும் என்பதை நான் நன்கு அறிவேன்; ஆகவே நான் இன்று கடைக்குச் செல்வேனாகில் எல்லாமே தோல்வியாய் முடிந்துவிடும்" என்று நீங்கள் எண்ணலாம். இல்லையேல் "நான் கடைக்குப் போக விரும்பினேன். ஆனால் ஏனோ இப்போது முடியவில்லை. கார் சரியாக்கப்பட்ட பின்பு, நான் கடைக்குப் போய் வருவேன். இந்தச் சூழ்நிலையைப் பற்றி நான் ஏமாற்றமடையப் போவதில்லை. எல்லாம் நன்மைக்கே நடை பெறுகிறது. ஏதோ காரணத்திற்காக நான் வீட்டிலிருக்க

வேண்டுவது இன்று அவசியமாயிருக்கிறது. ஆகவே நான் இந்த நாளில் சந்தோஷமாக என் மற்ற காரியங்களைக் கவனிப்பேன்" எனவும் கூறலாம்.

ரோமர் 12:16ல் பவுல் ஜனங்களுக்கும், காரியங்களுக்கும் இணங்குங்கள் எனக் கூறுகிறார். நாம் திட்டமிடுகிற செயல்கள் நடைபெறாமல் போனாலும், எந்தச் சூழ்நிலையிலும் சோர்ந்து போகாமல் இணங்கிப் போகிற அனுபவம் நமக்குத் தேவை.

சமீபத்தில் இந்தக் கொள்கையை அனுபவத்தில், கொண்டுவர எனக்கு ஓர் சந்தர்ப்பம் கிடைத்தது. நானும் எனது கணவர் டேவும் பிளாரிடாவில் மூன்று நாட்கள் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்துவிட்டு, வீட்டிற்குப் போக எங்கள் பயணப் பொருட்களை ஆயத்தப்படுத்தினோம். விமானப் பயணத்திற்கு வசதியான ஆடையை நான் அணியத் திட்டமிட்டிருந்தேன்.

என் ஆடைகளை அணியத் தேடுகிற வேளையில் எனது ஒரு ஆடையைக் காணவில்லை. எல்லா இடங்களிலும் தேடி இறுதியாக ஓரிடத்தின் அடியில் அந்தக் குறிப்பிட்ட ஆடையைக் கண்டெடுத்தோம். ஆடை தொங்கிய இடத்திலிருந்து அது நழுவி கீழே விழுந்துவிட்டபடியால் அது கசங்கிப்போய் இருந்தது. இஸ்திரிப் பெட்டியால் அதன் சுருக்கங்களை நான் அகற்ற விரும்பினேன். ஆனால் அது சரியாக வரவில்லை. ஆகவே நான் விரும்பும் ஆடைக்குப் பதிலாக வேறொரு ஆடையைத்தான் இப்பொழுது அணிய வேண்டும்.

இந்தச் சூழ்நிலையால் எனது மனோபாவனை பாதிக்கப்பட்டு, நிலைகுலைவதை என்னால் உணர முடிந்தது. சில வேளைகளில் நமது விருப்பத்திற்கு மாறாக ஏதாவது நடக்கும் போது, நமக்குள்ளே எதிர்மாறான உணர்வுகள் எழும்பி, நமக்காக நாமே பரிதபிக்கக் கூடிய ஒரு சூழ்நிலையை நாம் அனுபவிக்கிறோம். உடனடியாக, நான் முடிவு எடுக்க வேண்டியது அவசியம் என்பதை அறிந்து கொண்டேன். நான் எதை விரும்பினேனோ, அதைச் செய்ய முடியாத நிலையிலே ஒன்று நான் எனக்குள்ளே எரிச்சலுள்ளவளாய் மாறியிருக்கலாம். அல்லது, எதிர்மாறான சூழ்நிலையை உதறிவிட்டு, பயணத்தை இனியதாக நான் மாற்றியிருக்கலாம்.

உறுதியான நிலையில் இருக்கிற ஒருவனுக்கும் கூட, அவன் எதிர்பார்க்கிறபடி எல்லாம், எப்போதுமே நடந்துவிடாது. ஆனால் அப்பேற்பட்டவன் என்ன வந்தாலும் வரட்டும் என்ற நிலையில் தீர்மானமுள்ளவனாய் முன்னேறி தன் நிலையில் மகிழ்கிறான். எதிர்மாறானவனோ ஒருபோதும் ஒன்றிலும் மகிழவே மாட்டான்.

எதிர்மாறான நிலையில் இருக்கிற ஒருவனில் எந்த ஒரு மகிழ்ச்சியும் இல்லை, தான் செய்யும் ஒவ்வொரு காரியத்திலேயும் ஒருவித மந்தாரத் தோற்றத்தையே அவன் உருவாக்குவான். அவனைப்பற்றி, அவனுக்கே ஒரு "பாரம்" உண்டாயிருக்கும். அவன் குறை கூறுபவனும், முறுமுறுக்கிறவனும், குறைகண்டு பிடிக்கிறவனுமாகவே இருப்பான். எவ்வளவு நல்ல காரியங்கள் தன் வாழ்க்கையிலே குறுக்கிட்டாலும், பிரச்சனையான ஒன்றுதான் அவன் கண்களுக்குமுன் நிற்கும்.

எதிர்மாறான உச்சக்கட்டத்தில் நான் வாழும் போது, புதிதாக அலங்கரிக்கப்பட்ட ஒரு வீட்டிற்குள்ளே நான் செல்லுகையில் அதிலுள்ள அத்தனை அலங்காரங்களையும் நான் கண்டு மகிழாமல், எங்கேயோ ஒரு மூலையில் தொங்கிக் கொண்டிருக்கிற அலங்கோலமான காகிதத்தை மட்டும் கண்டு குறை சொல்லுவேன். ஆயினும் இப்பொழுதோ வாழ்க்கையிலுள்ள நல்ல காரியங்களைக் கண்டு, அனுபவிக்கும்படி இயேசு என்னை விடுதலையாக்கிவிட்டபடியால் நான் மிகவும் மகிழ்கிறேன். அவருக்குள்ளான விசுவாசம், நம்பிக்கை இவைகளை விசுவாசிக்க நான் விடுதலையாக்கப்பட்டபடியால், கெட்ட சூழ்நிலைகளும் நல்ல சூழ்நிலைகளாக எனக்கு மாறிவிடுகின்றன.

ஓர் எதிர்மாறான நிலையிலுள்ளவர்களாக நீங்கள் இருப்பீர்களானால், *ஆக்கினைக்குள்ளவர்களாக நீங்கள் உங்களை எண்ணாதிருங்கள்!* எதிர்மாறான சிந்தையுடையவர்களாகிய நீங்கள் உங்கள் எதிர்மாறான எண்ணங்களைக் கொண்ட பிரச்சனைகளிலிருந்து விலகி உங்களைச் சரியாக்கும்படி தேவன் மேல் நம்பிக்கை வைக்கும்படியாக இவைகளை நான் உங்களுக்கு ஆலோசனையாகப் பகருகின்றேன்.

நாம் சந்திக்கும் பிரச்சனைகளிலே சாக்குப் போக்குச் சொல்லாதபடி இருப்போமானால் அதுவே விடுதலையின் பாதையாய் நமக்கு அமைகிறது. நீங்கள் ஒரு எதிர்மாறான ஆளாய் இருப்பீர்களென்றால் அதில் ஒரு

காரணம் உண்டு, எப்போதும் உண்டு என்று எனக்கத் திட்டமாய் தெரியும். ஆனால் ஒரு கிறிஸ்தவனாக வேதத்தின்படி நீங்கள் இப்பொழுது ஒரு புதிய சிருஷ்டி என்பதை மறவாதிருங்கள்.

## ஓர் புதிய நாள்!

ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதாயின.

2 கொரிந்தியர் 5:17

கிறிஸ்துவுக்குள் வாழும் உங்கள் “புதிய வாழ்க்கையை” உங்கள் வாழ்க்கையின் பழைய நிகழ்ச்சிகள் எந்த வகையிலும் பாதித்து விடாதபடி காத்துக் கொள்ளுங்கள், காரணம் நீங்கள் இப்போது ஒரு புதிய சிருஷ்டியாயிருக்கிறீர்கள். தேவனுடைய வசனத்தின்படி உங்கள் மனதை நீங்கள் புதுப்பிக்க முடியும். நல்ல காரியங்கள் உங்களுக்கு நடக்க முடியும்.

களிகூறுங்கள்! இது ஒரு புதிய நாள்!

## பரிசுத்த ஆவியின் கிரியை

நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன், நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும், நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார் நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்.

அவர் வந்து, பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்.

யோவான் 16:7-8

எதிர்மாறான நிலையிலிருந்து விடுபட வேண்டுமெனில் சுயநிலையை உணர்ந்து, கீழ்க்கண்டவாறு உண்மையை ஒத்துக் கொள்வதேயாகும். “நான் ஒரு எதிர்மாறானவன் நான் மாறிட விரும்புகிறேன். நானாக என்னை

மாற்றிவிடமுடியாது. ஆனால் தேவன் என்னை மாற்றுவார் என்று நான் விசுவாசிக்கிறேன். அது நிறைவேறச் சற்று காலம் எடுத்தாலும், நான் என்னிலே அதைரியம் கொள்ளமாட்டேன். தேவன் எனக்குள்ளே ஒரு நற்கிரியையை ஆரம்பித்திருக்கிறார். அதை முற்றுப் பெறவைக்க அவராலே நிச்சயமாய் முடியும்" பிலிப்பியர் 1:6 குறிப்பிடுகிறபடி *"என்னில் நற்கிரியைத் தொடங்கியவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்தி வருவாரென்று நம்புகிறேன்."*

எதிர்மாறான நிலைமைக்குப் போகும் போதெல்லாம் பரிசுத்த ஆவியானவர் உங்களை உணர்த்தும் படி கேளுங்கள் அது அவருடைய வேலை. யோவான் 16:7-8ல் பரிசுத்தாவியானவர் பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும் கண்டித்து உணர்த்துவார் என்று நமக்குக் கற்றுத்தருகிறார். உணர்வு வரும்போது தேவன் உங்களுக்கு உதவி செய்ய அவரைக் கேளுங்கள். நீங்களாகவே இதைச் செய்ய முடியும் என எண்ணிவிட வேண்டாம். அவரையே சார்ந்து கொள்ளுங்கள்.

நான் எதிர்மாறான நிலையில் அதிகமாய் காணப்பட்டாலும், உறுதியான நிலைக்குக் கொண்டு வர அவராலே முடியும் என தேவன் என்னை புரிந்து கொள்ளச் செய்தார். நேர்மறையான நிலைக்கு என் மனதை மாற்ற மிகவும் கடினமாய் முயற்சித்தேன். இப்பொழுதோ என்னாலே எதிர்மாறாய் நிற்க முடியவில்லை. புகைபிடிக்கிற ஒருவனைப் போல அது இருக்கிறது. புகைபிடிக்கும் பழக்கத்திலிருந்து விடுதலையான ஒருவரிடத்தில் சிகரெட்டுகளைப் பற்றிக் கேட்டால் அதைப்பற்றிக் கொஞ்சம் கூட அவர் மீண்டும் சிந்திப்பதில்லை. ஆம், பல ஆண்டுகளாக நான் புகைபிடித்துக் கொண்டிருந்தேன், ஆனால் அப்பழக்கத்தை விட்டபிறகோ புகையின் வாசனைப் பக்கத்திலே கூட என்னால் நிற்க முடியவில்லை என்று கூறுவார்.

எதிர்மாறான நிலையிலும் நான் அவ்வாறாகத்தான் இருக்கிறேன். எதிர்மாறான நிலையிலே இருந்த என்னாலேயே இப்போது அந்நிலையிலே நிற்க முடியவில்லை. அது எனக்கு ஒரு எதிராளியைப்போல உள்ளது. இந்த எதிர்மாறான சூழ்நிலையிலிருந்து நான் மாறிவிட்ட பிறகு, எனது வாழ்வில் அநேக நல்ல மாற்றங்கள் ஏற்படுவதை நான் காண்கிறேன்.

உண்மை நிகழ்ச்சியை நான் காண்பதினால், நீங்களும் அதே காரியத்தைச் செய்ய நான் உங்களை ஊக்குவிக்கிறேன். நீங்கள் வியாதியோடு இருக்கும் போது, "எனக்கு வியாதி இல்லை" என்று சொல்வது உண்மை அல்ல, ஆனால் அதற்கு மாறாக, "தேவன் என்னை சுகமாக்குகிறார் என்று நான் விசுவாசிக்கிறேன் "எனக் கூறுங்கள். "எனது வியாதியின் நிலைமை மோசமாகி, மருத்துவமனையில் நான் அனுமதிக்கப்பட நேரிடும் எனச் சொல்லாமல்"; "தேவனுடைய சுகமாக்கும் வல்லமை எனக்குள் கிரியை செய்கிறது, நான் சுகமாகிவிடுவேன் என்று விசுவாசிக்கிறேன்" எனக் கூறுங்கள்.

எல்லாமே சம நிலையில் இருக்க வேண்டும். இதனால், உங்களுடைய நேரான எண்ணங்களோடு, சிறிது எதிர்மாறான எண்ணங்களைக் கலந்து சமநிலைக்குக் கொண்டு வந்து விட வேண்டும் என்பது பொருளல்ல. எந்த நிலையிலும் என்ன நேரிட்டாலும் நான் அதை "சந்திக்கத்தயார்" என்ற சவாலை மேற்கொள்ளுதல் அவசியம்.

## ஆயத்தமுள்ள சிந்தை

அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால் தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்.

அப்போஸ்தலர் 17:11

ஆயத்தமுள்ள சிந்தை நமக்கு வேண்டும் என்று வேதம் நமக்குச் சொல்லுகிறது. நம்மைக்குறித்த தேவனுடைய சித்தம் எதுவாயிருந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளுவதற்கு நம்மிடையே ஒரு திறந்த மனம் எப்போதும் அவசியம் என்பது தான் இதனுடைய பொருள்.

உதாரணமாக, சமீபத்தில் ஒரு வாலிபப் பெண் தன் திருமணத்துக்கென நிச்சயிக்கப்பட்டு, அதிலே தோற்றுப்போனாள். அவளும், அவளுக்கென்று நியமிக்கப்பட்ட வாலிபனும் உடனடியாகத் திருமணம் செய்ய விரும்பாவிட்டாலும், தொடர்ந்து தாங்கள்

ஒருவரையொருவர் நேசிக்க வேண்டுமா? என்று ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். அந்த வாலிபப் பெண் தொடர்ந்து அந்த உறவைப் பரிமாற்றம் செய்ய விரும்பினாள்.

காரியங்கள் நமது மனதுக்குச் சாதகமாய் இல்லாவிட்டாலும் அதை அங்கீகரிப்பதற்கு உகந்த "ஆயத்தமுள்ள மனதை" அவள் உடையவளாயிருக்க, நான் அவளுக்கு ஆலோசனைக் கூறினேன். ஆனால் அவளோ, "அப்படியல்ல, இது எதிர்மாறான மனதாயிருக்கிறது" எனக் கூறினாள்.

*இல்லவே இல்லை, அது எதிர்மாறான ஒன்று அல்ல!*

எதிர்மாறான நிலைமை என்பது "எனது வாழ்க்கை அவ்வளவுதான், யாரும் என்னை ஒருபோதும் விரும்பவில்லை. நான் தோற்றுப்போனேன். எனது வாழ்நாளெல்லாம் எனக்கு இந்தப் பரிதாப நிலைதான்" என்று எண்ணிக் கொள்வதாக இருக்கிறது!

ஆனால் நேர்முக சிந்தை என்பது, "இந்த காரியம் எனக்கு நேர்ந்ததைக் குறித்து நான் துக்கப்படுகிறேன். அதனால் நான் தேவனை நம்பப் போகிறேன். இன்னும் நானும், எனது வாலிப நண்பனும் தொடர்ந்து ஒருவரையொருவர் நேசிக்க முடியும் என நான் நம்புகிறேன். எங்களுடைய சிநேகம் புதுப்பிக்கப்பட நான் தேவனை விசுவாசித்துக் கேட்கப் போகிறேன். ஆனால், எல்லாவற்றைக் காட்டிலும் தேவனுடைய சித்தம் மட்டுமே என்னில் நிறைவேற நான் விரும்புகிறேன். ஏதாகிலும், என் விருப்பத்திற்கு மாறாக நேரிட்டாலும், *இயேசு என்னில் ஜீவிக்கிறபடியால் நான் எப்படியும் பிழைப்பேன்.* கொஞ்ச நாட்கள் என் மனதிற்கு இந்தச் சூழ்நிலை கடினமாயிருந்தாலும் நான் கர்த்தரை நம்புவேன். எல்லாம் நன்மைக்கே நடக்கும் என நான் விசுவாசிக்கிறேன்" என எண்ணுவதாகும்.

இது நமது ஆயத்தமுள்ள சிந்தையைக் காண்பிக்கிறது.

*இதுதான் சமநிலை.*

## நம்பிக்கையின் சக்தி

உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்று சொல்லப்பட்டபடியே, தான்

அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தாள்.

அவன் விசுவாசத்திலே பலவீனமாயிருக்கவில்லை. அவன் ஏறக்குறைய நூறு வயதுள்ளவனாயிருக்கும்போது, தன் சரீரம் செத்துப் போனதையும், சாராளுடைய கர்ப்பம் செத்துப் போனதையும் எண்ணாதிருந்தான்.

தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படவில்லை.

ரோமர் 4:18-20

கிறிஸ்துவின் சரீரத்தில் பங்கு பெற்றுள்ள எங்களுடைய ஊழியம் ஒவ்வொரு நாளும் வளரும் என்று நானும், டேவும் தினமும் நம்புவது வழக்கம். எப்பொழுதும் இன்னும் அநேகருக்கு உதவி செய்யவே நாங்கள் விரும்புவது வழக்கம். ஆனால், வருடத்தின் முடிவில் எங்களது ஊழியம் எந்த நிலையிலும் வளராதபடி அதே நிலையிலிருந்தால் அதைக் குறித்து நாங்கள் துக்கிக்காமல், தேவன் வேறொரு திட்டத்தோடு எங்கள் ஊழியத்தில் செயல்படுகிறார் என்றே உணருவோம்.

*அநேக காரியங்களுக்காக* நாங்கள் விசுவாசித்தாலும், ஒருவரிலே எங்கள் விசுவாசம் உறுதியாயிருக்கும். அவர் தான் இயேசு. என்ன நடைபெறப்போகிறது என்று எப்போதும் நாம் அறிவதில்லை. ஆனால், சகலமும் நன்மைக்கே நடக்கும் என்பதைத் தான் எப்போதும் அறிந்திருக்கிறோம்!

நீங்களும் நானும் எந்த அளவிற்கு சாத்தியக் கூரான நிலைமைக்கு நம்மைக் கொண்டு வருகிறோமோ, அந்த அளவிற்கு நாம் தேவனுடைய வழியில் காணப்படுவோம். நிச்சயமாகவே, தேவன் நேர்முக நிலையில்தான் உள்ளார். அவரோடு ஒத்துப்போவதற்கு நாமும் நேர்முகமாய் இருப்போமாக.

உங்களுக்கு உண்மையாகவே ஒரு எதிரிடையான சூழ்நிலையாக இருக்கலாம். "ஜாய்ஸ் என்னுடைய சூழ்நிலையை நீங்கள் அறிந்திருப்பீர்களென்றால், நான் முற்போக்காக இருக்க வேண்டும் கூட நீங்கள் எதிர்பார்க்க மாட்டீர்கள்" என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கலாம்.

ரோமர் 4:18-20 வரை மீண்டும் ஒருமுறை வாசித்துப் பாருங்கள் ஆபிரகாம் தனது சரீரம் செத்து போன நிலையிலும், தன் மனைவியின் கர்ப்பம் செத்துப் போன நிலையிலும், மனித சூழ்நிலை பிள்ளையை ஈன்றெடுக்கும் தன்மைக்கு விரோதமாய் இருந்தாலும், அவன் உறுதியாய் விசுவாசித்தான்.

*ஆபிரகாம், எதிர்மாறான சூழ்நிலையில் மிகவும் உறுதியாக நேர்முக சாத்தியத்திலே வாழ்ந்து காட்டினான் !*

நம்பிக்கைதான் நமது ஆத்தும நங்கூரம் என்று எபிரெயர் 6:19 குறிப்பிடுகிறது. சோதனையான வேளைகளில் நம்பிக்கைதான் நம்மை உறுதியாய்க் காக்கிறது. நாம் நமது நம்பிக்கையை ஒருபோதும் விட்டுவிடக் கூடாது. அப்படி விட்டுவிடுவோமானால் நமது வாழ்க்கை மிகவும் ஒரு பரிதாபமான நிலைமைக்கு வந்துவிடும். ஏற்கனவே, உங்கள் வாழ்க்கை ஒரு பரிதாபமான நிலையில் இருக்குமானால், நம்பிக்கையற்ற நிலையில் நம்ப ஆரம்பியுங்கள். பயப்படவே வேண்டாம். நீங்கள் விரும்புவது போல எப்போதுமே நடக்கும் என நான் உங்களுக்கு உறுதியாய்க் கூற முடியாது. நீங்கள் ஒருபோதும் ஏமார்ந்து போகமாட்டீர்கள் எனவும் நான் உங்களுக்கு வாக்குக் கொடுக்க முடியாது. ஆனால், ஏமாற்ற வேளைகளிலும் அவைகள் சம்பவிக்கும்போது நீங்கள் நம்பி, நேர்முகமாய் வாழ முடியும். தேவனுடைய அற்புதம் செய்யும் எல்லைக்குள்ளே உங்களை உட்படுத்துங்கள்.

உங்கள் வாழ்வில் ஓர் அற்புதத்தை எதிர்பாருங்கள்.

பெரிய காரியங்களையே எதிர்பாருங்கள்!

## பெற்றுக்கொள்ள எதிர்பாருங்கள்!

ஆனாலும் உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார், உங்கள் மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார், கர்த்தர் நீதி செய்கிற தேவன் அவருக்குக் காத்திருக்கிற அனைவரும் பாக்கியவர்கள்!

ஏசாயா 30:18

எனக்கு அதிகமாய் விருப்பமான வேத வசனமாக இது இருக்கிறது. நீங்கள் இதைத் தியானிக்கையில் இந்த வசனம், உங்களுக்குள்ளே ஒரு

பெரிய நம்பிக்கையை உருவாக்கும் நல்ல சிந்தையுள்ளவனையே தேவன் எதிர்பார்க்கிறார். ஆனால் அப்பேற்பட்டவன் எதிர்மாறான அல்லது உவர்ப்பான மனநிலையை உடையவனாக இருக்கவே முடியாது. தனக்கு தேவன் நல்லவராயிருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறவனே தான் அவன்.

## தீங்கின் மனோதுக்கம்

"தீங்கின் மனோதுக்கம்" என்றால் என்ன?

ஒரு நாளில் வேதவசனத்தை நான் கற்றுக் கொண்ட பிறகு எனது குளியலறையிலிருந்து, எனது தலை முடியை வாரிக்கொண்டிருந்தேன். அவ்வேளையில் ஏதோ ஒரு தீமையான காரியம் எனக்கு நேரிடப் போகிறதை போன்ற ஒரு பயங்கரமான, வெறுமையான சூழ்நிலையை உணர்ந்தேன். அது என்னைப் பயமுறுத்தும் ஒரு உணர்வாகவே எனக்கு இருந்தது. அடிக்கடி இப்படிப்பட்ட பயம் எனக்குள் வருவதை நான் உணர ஆரம்பித்தேன்.

"இந்த உணர்வு என்ன?" என்று என் ஆண்டவரிடம் நான் கேட்டேன்.

அதுதான் "தீங்கின் மனோதுக்கம்" என்று ஆண்டவர் எனக்கு வெளிப்படுத்தினார்.

அது என்ன என்று முதலாவது எனக்கு விளங்கவில்லை. ஆனால் பின்னர், சிறுமைப்பட்டவனுடைய நாட்களெல்லாம் தீங்குள்ளவைகள், மனரம்மியமோ நித்திய விருந்து. (நீதிமொழிகள் 15:15) என்ற வசனத்தை நான் வாசித்தபோது அதை நன்கு விளங்கிக் கொண்டேன்.

எனது வாழ்க்கையின் அதிக கால அளவு, தீமையான சிந்தைகளாலும், மனோதுக்கத்தினாலும் நிறைந்திருக்கிறது என்று நான் விளங்கிக் கொண்டேன். கடினமான சூழ்நிலைகளை என் வாழ்வில் வந்தன. உண்மைதான். ஆனால், இப்படிப்பட்ட சூழ்நிலைகள் எனக்கு நேரிடாமற்போனாலும், எனது எண்ணங்களும் சிந்தைகளும் எனது வாழ்வையும் நல்ல நாட்களையும் நான் அனுபவியாதபடி எனது வெளித்தோற்றத்தைக் களவாடிவிட்டபடியால் நான் இன்னும் பரிதபிக்கக் கூடிய நிலையில்தான் இருந்தேன்.

# உன் நாவை பொல்லாப்புக்கு விலக்கிக் காத்துக்கொள்!

ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காண வேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக்காத்து...

1 பேதுரு 3:10

ஜீவனை விரும்பி நல்ல நாட்களை அனுபவிக்க நமக்கு சாத்தியமான, நேர்முக மனதும் வாயும் நிச்சயம் அவசியம் எனத் தெளிவாக இவ்வசனம் கூறுகிறது.

எந்த நிலையில் எதிர்மாறாய் நீங்கள் இருந்தாலும், எவ்வளவு நாட்கள் இருந்தாலும் அதைப் பற்றிப் பரவாயில்லை. நான் மாறினபடியால், உங்களாலும் மாற முடியும் என்று எனக்கு நன்றாய் தெரியும். பரிசுத்த ஆவியின் "ஒத்தாசையைப் பெற்று," கால அளவு அதிகமானாலும், நாம் அதைப் பெறமுடியும்.

உங்களுக்கும் அது பயனுள்ளதாயிருக்கும்.

என்ன நேர்ந்தாலும் தேவனை நம்பி, நேர்முக நிலையில் முன்னேறுவோமாக.

# அதிகாரம்
# 6

## மனதை கட்டும் ஆவிகள்

அதிகாரம் 6

# *மனதை கட்டும் ஆவிகள்*

*நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.*

*அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்.*

பிலிப்பியர் 4:6-7

எனது தேவனோடு நான் நடந்து வந்த நாட்களில் ஒரு சமயம், நான் ஏற்கனேவே நம்பிய சில காரியங்களை, நம்ப முடியாத ஒரு நிலைக்கு வந்தேன். என்னிலே என்ன தவறு இருக்கிறதென்று அவ்வமயம் விளங்கிக் கொள்ள முடியாமல் குழப்பத்திற்குள்ளானேன். இந்நிலை எந்த அளவிற்கு நீண்ட கால அளவாயிருந்ததோ அந்த அளவிற்கு நான் எனக்குள் குழப்பம் அடைந்து இருந்தேன். அவ்விசுவாசமானது எனக்குள்ளே கட்டுக்கடங்காமல் வளர்ந்து கொண்டே செல்வதை நான் எனக்குள்ளே உணர முடிந்தது. எனது அழைப்பைக் குறித்து எனக்குள்ளே கேள்வி மேலே கேள்வி கேட்டு, தேவன் தமது ஊழியத்தினிமித்தம் எனக்குக் கொடுத்த எனது தரிசனங்களை எனக்குள்ளே இழப்பது போன்ற ஓர் உணர்வுக்குள்ளானேன். மிகவும் பரிதபிக்கக்கூடிய ஆவிக்குரிய நிலையிலானேன்.

இரண்டு நாட்கள் தொடர்ந்து இந்த உணர்வு எனக்குள்ளிருந்தது: *"மனதைக் கட்டும் ஆவிகள்"* என்ற சொற்றொடர் வெளியே வருவதை உணர்ந்தேன். முதல் நாளிலே அதைக் குறித்து நான் அதிகமாக எண்ணவில்லை. ஆகிலும் இரண்டாவது நாளிலே பரிந்து பேசும் சமயத்தை நான் ஆரம்பிக்கையில், மீண்டும் நான்காவது ஐந்தாவது தடவை *"மனதைக் கட்டும் ஆவிகள்"* என்ற சொற்றொடரை நான் கேட்டேன்.

நான் ஊழியம் செய்திருக்கிற அனைத்து மக்களிடமிருந்தும் பெற்ற அனுபவம் என்னவெனில் விசுவாசிகளான ஆயிரக்கணக்கானவர்களும் மனதளவில் பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டவர்களே. மனதைக் கட்டி வைக்கும் ஆவிகளை எதிர்த்து கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்காக நான் ஜெபிக்க வேண்டுமென பரிசுத்த ஆவியானவர் என்னை ஏவுகிறார் என்று நான் எண்ணினேன். ஆகவே, நான் ஜெபிக்க ஆரம்பித்து, இயேசுவின் நாமத்தினாலே "மனதைக் கட்டுகிற ஆவிகளுக்கு" விரோதமாய்க் கடிந்து கொள்ள ஆரம்பித்தேன். ஜெபித்த சிறிது நேரத்திலே, ஓர் பெரிய விடுதலையானது எனது மனதுக்குள்ளே வந்ததை நான் உணர்ந்தேன். இது மிகவும் பரவசமாக இருந்தது.

## மனதைக் கட்டும் ஆவிகளினின்றுள்ள விடுதலை

தேவன் எனக்குத் தந்த ஒவ்வொரு விடுதலையும் நான் தேவனுடைய வார்த்தையை அறிக்கை செய்வதினாலும், விசுவாசிப்பதாலும் வந்த ஓர் முன்னேற்றப் பாதையாயிருந்தது. யோவான் 8:31-32ல் நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள், சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என இயேசு கூறினார். மேலும், சங்கீதம் 107:20ல் அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார் என வாசிக்கிறோம்.

ஆனால் இந்த வேளையில் ஏதோ ஒன்று எனது மனதிலே நடந்துள்ளது என்பதை நன்றாக உணர்ந்தேன். என்னுடைய ஜெப வேளைக்கு முன்பு, எந்தெந்த காரியங்களிலெல்லாம், நம்பிக்கையற்று இருந்தேனோ, அவற்றிலெல்லாம் நம்பிக்கை உடையவளானேன்.

உதாரணமாக ஒன்றைக் கூறுகிறேன். கவனியுங்கள், மனதைக் கட்டும் பிசாசினால் தாக்கப்படுமுன்னர், பென்டன் மிசௌரி என்ற பெயருள்ள இடத்திலிருந்து வந்த யாருமே அறியாத சாதாரணப் பெண்மணியாக நான் இருந்தாலும், சத்திய வசனத்தின்படி இது என்னுடைய வாழ்க்கையையோ அல்லது ஊழியத்தையோ எந்த வகையிலும் பாதிக்காது என்பதை நான் விசுவாசித்தேன். (கலாத்தியர் 3:28) தேவன் ஆயத்தமாயிருக்கும் போது,

ஒருவரும் பூட்டக்கூடாத வாசல்களை அவர் திறப்பார். (வெளிப்படுத்தல் 3:8) தேவன் எனக்குக் கொடுத்த அனுபவரீதியான விடுதலையாக்கம் செய்திகளை நான் உலக முழுவதும் பிரசங்கிப்பேன்.

உலக முழுவதும் வானொலியின் மூலமாக சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் சிலாக்கியத்தை நான் பெறுவேன் என்று நான் விசுவாசிக்கிறேன். எந்தச் சூழ்நிலையிலும் அதை நான் செய்வேன். ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்திலே பைத்தியமானவர்களைத் தெரிந்து கொண்டார். (1 கொரிந்தியர் 1:27) வியாதியஸ்தர்களை சுகமாக்கும்படியாக தேவன் என்னை உபயோகப்படுத்துவார் என நான் விசுவாசிக்கிறேன். தேவன் எனது இருதயத்தில் வைத்துள்ள எல்லா அற்புதமானக் கிரியைகளையும் நான் விசுவாசிக்கிறேன்.

எப்படியும் மனதைக் கட்டிவைக்கும் ஆவிகள் என்னைத் தாக்குகையில் எதையும் நான் அதிகமாக விசுவாசிக்க முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. ஆகிலும், "இது மட்டும் நான் செய்து விட்டேன். அதைச் செய்ய வேண்டும் என விரும்பினபடியால் அதை அப்படியே விசுவாசித்தேன். ஆனால் ஒருவேளை அது ஒருபோதும் நடக்காது என்பவைகைளைப் போலவும் நான் யோசித்தேன்." ஆனால் இந்த மனதைக் கட்டும் ஆவி என்னைவிட்டு நீங்கிய போதோ, விசுவாசிக்கும் திறன் எனக்குள்ளே திரும்பவும் ஊற்றெடுத்தது.

## விசுவாசிக்கத் தீர்மானித்தல்

> அப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெரு மூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்.
>
> ரோமர் 8:26

கிறிஸ்தவர்களாகிய நாம், *விசுவாசிக்கும்படி தீர்மானிக்கக்* கற்றுக் கொள்ள வேண்டியது நமக்கு அவசியம். ஆவியின் உற்பத்தியாகிய

விசுவாசத்தைத் தேவன் எப்போதும் நமக்குத் தந்து, நமது மனம் ஒத்துக்கொள்ள முடியாத சில காரியங்களை விசுவாசிக்கப் பண்ணுகிறார். மனமானது எல்லாவற்றையும் விளங்கிக் கொள்ள விரும்புகிறது. ஏன்? எப்படி? எப்போது? என்ற எல்லாவற்றையும் அது அறிந்துகொள்ள விரும்புகிறது. சில நேரங்களில் இந்த அறிவு நமக்குத் தேவனால் கொடுக்கப்படாத பட்சத்தில் விளங்கிக் கொள்ள முடியாததை இந்த மனமானது விசுவாசிக்க மறுத்துவிடுகிறது.

ஒரு விசுவாசி தனது உள்ளான மனுஷனிலே ஒன்றை அறிந்து கொண்டாலும் அவனுடைய மனமானது அதற்கு விரோதமாய்ப் போராடும்போது இவ்வண்ணமாய் அவ்வப்போது நடக்கிறது.

தேவனால் எனக்கு வெளிப்படுத்தப்பட்ட வாக்குத்தத்தங்களையும் என்னோடு அவர் பேசிய வார்த்தைகளையும் ஏன், எப்போது, எப்படி என நான் விளங்கிக் கொள்ள முடியாவிட்டாலும், அவைகள் எப்படி என் வாழ்வில் நிறைவேறும் என நான் அறியாவிட்டாலும், வசனம் எதை எனக்குச் சொல்லுகிறதோ அதை நான் விசுவாசிப்பதற்குத் தீர்மானித்து விட்டேன்.

ஆனால் இங்கே நான் சொல்லுகிற போராட்டமோ முற்றிலும் வித்தியாசமானதாக இருக்கிறது; அது எனது தீர்மானத்திற்கு அப்பாற்பட்டது. இந்த விதமான மனதைக் கட்டும் ஆவிகளால் நான் கட்டப்பட்டுள்ளபடியால் என்னைத் தானே விசுவாசிப்பதற்கு என்னைக் கொண்டு வர முடியவில்லை.

நான் எவ்வண்ணமாய் ஜெபிக்க வேண்டும் என பரிசுத்த ஆவியாகிய அவர் எனக்குக் காண்பித்தபடியால் அவருக்கு நன்றி. நான் ஜெபிக்க ஆரம்பிக்கும்போது, எனக்காகவே நான் ஜெபிக்கிறேன் என்பதை நான் அறியாவிட்டாலும், அவரது வல்லமை என்னை மேற்கொள்ள முடிகிறது.

இப்புத்தகத்தை வாசிக்க வேண்டும் என்ற ஓர் நடத்துதல் உங்களுக்குள் இருந்தபடியால் தான் இதை வாசிக்கிறீர்கள். இப்பகுதியில் உங்களுக்கும் கூட பிரச்சனைகள் இருக்கலாம். அப்படியிருக்குமானால் இயேசுவின் நாமத்திலே நீங்கள் ஜெபிக்க வேண்டுமென்று உங்களை ஊக்குவிக்கிறேன். இயேசுவின் இரத்தத்தின் வல்லமையால் மனதைக்

கட்டும் ஆவிகளுக்கு விரோதமாய் எழும்புங்கள். ஏதோ ஒரு வேளையில் மாத்திரம் அல்ல. ஆயினும், எப்போழுதெல்லாம் நீங்கள் இப்பகுதியில் கடினபாதையை அனுபவிக்கிறீர்களோ, அப்போதெல்லாம் இந்த முறையில் ஜெபம் செய்யுங்கள்.

நாம் முன்னேறிச் செல்லும்போது பிசாசு ஒருபோதும் தனது கூர் அம்புகளை நம் மீது எறிவதை நிறுத்திக் கொள்ளவே மாட்டான். அப்பொழுது உங்களது விசுவாசம் என்னும் கேடகத்தை உயர்த்திப் பிடித்துக் கொண்டு, யாக்கோபு 1:2-8 வசனங்களில் சொல்லப்பட்ட வார்த்தைகளின்படி பிரச்சனைகளின் வேளைகளில் ஆண்டவரிடம் ஞானத்தைக் கேட்கும் போது நாம் என்ன செய்ய வேண்டும் என அவர் காட்டுவார்.

இதற்கு முன்பு பிசாசின் கூர் அம்புகளை சந்திப்பதிலும் அவற்றை மேற்கொள்வதிலும் எனக்கும் பிரச்சனை இருந்தது. ஆனால் நான் எப்படி ஜெபிக்க வேண்டும் என தேவன் எனக்குக் காட்டியபடியால் நான் விடுதலையாக்கப்பட்டேன்.

நீங்களும் விடுதலை ஆவீர்கள் என்பதில் சந்தேகமேயில்லை.

# அதிகாரம்
# 7

## *நீங்கள் எதை சிந்திக்கிறீர்களோ அதைப் பற்றி யோசித்துப் பாருங்கள்*

# *நீங்கள் எதை சிந்திக்கிறீர்களோ அதைப் பற்றி யோசித்துப் பாருங்கள்*

**அதிகாரம்**
7

> *உமது கட்டளைகளைத் தியானித்து, உமது வழிகளைக் கண்ணோக்குகிறேன்.*
>
> சங்கீதம் 119:15

எதைப்பற்றி தியானிக்க நமது நேரத்தை செலவிட வேண்டுமென்று கர்த்தருடைய வார்த்தை நமக்குச் சொல்லித் தருகிறது.

தான் தேவனுடைய கட்டளைகளைத் தியானிப்பதாக சங்கீதக்காரன் தன் அனுபவத்தைக் கூறுகிறான். தேவனுடைய வழிகளை தியானிப்பதிலேயே தனது அதிகமான நேரத்தை அவன் செலவிட்டான் என்பது தான் அதன் பொருள். இப்படிச் செய்கிறவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான். அவன் செய்வதெல்லாம் வாய்க்கும் என சங்கீதம் 1:3ல் நாம் வாசிக்கிறோம்.

தேவனுடைய வார்த்தையை தியானிப்பது மிகவும் பயனுள்ள ஓர் அனுபவம். எந்த அளவிற்கு ஒருவன் தேவனுடைய வார்த்தையை தியானிக்க அதிக நேரத்தைச் செலவிடுகிறானோ, அந்த அளவிற்கு அதிகமாய் அவன் ஆசீர்வாதத்தை வசனத்திலிருந்து அறுப்பான்.

## நீங்கள் யோசிப்பதைக் குறித்து கவனமாயிருங்கள்!

> நீங்கள் கேட்கிறதைக் கவனியுங்கள், எந்த அளவினால் அளக்கிறீர்களோ, அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும், கேட்கிற உங்களுக்கு அதிகம் கொடுக்கப்படும்.
>
> மாற்கு 4:24

எவ்வளவு அருமையான சத்திய வசனம்! எவ்வளவு நேரம் நாம் வாசிப்பதிலும், கேட்பதிலும் நேரத்தைச் செலவழித்து, வசனத்தைத் தியானிக்கிறோமோ அந்த அளவு நாம் வல்லமையையும், திறமையையும் வசனத்தின் மூலம் பெற்று அவற்றைச் செயல்படுத்துகிறவர்களாயிருப்போம். நாம் வாசித்துக் கேட்ட அளவிற்குத்

தகுந்த அளவு, வெளிப்படுத்தலை நாம் உடையவர்களாயிருப்போம். நம்முடைய அனுபவத்தையே நாம் தேவனுடைய வசனத்திலிருந்து தான் பெற்றுக் கொள்கிறோம் என்பது தான் பொருள்.

தேவனுடைய வார்த்தைக்கு நேராய் நாம் செலவிடும் தியான சிந்தையின் அளவிற்கு நாம் ஒழுக்கத்தையும், தேவ அறிவையும் மீண்டும் பெற்றுக்கொள்கிறோம்.

“வல்லமை” எனப் பொருள் கொள்ளும் “டூனமிஸ்” என்ற கிரேக்கப் பதத்திற்கு ஒழுக்கம் என்ற “பொருளை” ஓர் குறிப்பிட்ட சொல் அகராதி விளக்குகிறது. வேறொரு சொல் அகராதியானது “டூனமிஸ்” என்ற அதே வார்த்தைக்கு “திறமை” என்ற பொருளைக் கொடுக்கிறது. அநேகர் தேவனுடைய வார்த்தையின் ஆழத்துக்குள்ளே கடந்து வருவதில்லை. ஆகவே தான் அவர்கள் வெற்றியற்றதும், வல்லமையற்றதுமான கிறிஸ்தவ ஜீவியத்தைச் செய்கிறார்கள். குழப்பமும் அடைகிறார்கள்.

சுயமாய் வேதத்தைத் தியானிக்க அநேகர் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளாமல் இருப்பதே இதற்குக் காரணம். மற்றவர்களுடைய பிரசங்கத்தையும், உபதேசத்தையும் கேட்க அவர்கள் இங்கும், அங்கும் ஓடலாம். பிரசங்க ஒலி நாடாக்களைக் கேட்பதும், அவ்வப்போது வேதத்தை வாசிப்பதும் அவர்கள் பழக்கமாக இருக்கலாம். ஆனால் வேதத்தை வாசித்து, தியானித்து, அதை ஆராயும் இன்றியமையாத பழக்கம் அவர்களிடம் இல்லாமலிருப்பதே அவர்களின் குறைவாக அமைந்துவிடுகிறது.

மாம்சீகமானது சோம்பலான நிலையில் இருப்பதினால் அநேக ஜனங்கள் தாங்கள் விரும்பும் ஒன்றைப் பிரயாசப்படாமலே பெற்றுக் கொள்ள விரும்புகிறார்கள். அவ்விதத்திலே கிரியை எதுவும் நடக்கவே நடக்காது. *அப்படிப்பட்டவன், தான் ஒன்றைச் செய்ய விரும்பும் போது, வசனத்திற்கு வெளியே தான் காணப்படுகிறான்.*

## வசனத்தைத் தியானித்தல்

துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில்

உட்காராமலும், கர்த்தருடைய வேத்தில் பிரியமாயிருந்து, இரவும், பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

சங்கீதம் 1:1-2

"வெப்ஸ்டர்" மொழி பெயர்ப்பானது "தியானம்" என்ற வார்த்தைக்கு பிரதிபலிப்பது. "ஆராய்வது என்றும், அல்லது ஒன்றை நியமிப்பதற்கு சிந்தையில் திட்டமிடுவது என்றும் பொருள் கூறுகிறது." வேறொரு மொழி பெயர்ப்பானது கவனம் செலுத்துவது, அனுபவப்படுத்துவது, கரிசனையாயிருப்பது, செயல்படுத்துவது என பல விளக்கங்களைத் தருகிறது. மேலும், அந்த வசனத்தைப் பற்றிய முக்கிய உணர்வைப் பெறுதல், கற்பனை செய்து ஆராய்ந்து பார்த்தல், முன் கூட்டி தியானித்தல் எனப் பல விளக்கங்களை வேறுபட்ட மொழிபெயர்ப்புகளில் நாம் காண்கிறோம்.

நீதிமொழிகள் 4:20ல் "என் மகனே, என் வார்த்தைகளைக் கவனி, என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய்" எனவும் நாம் காண்கிறோம். இவ்வசனத்தின்படி நாம் "தியானம்" என்ற வார்த்தையை விளக்குவோமானால், நாம் அவருடைய வசனத்தை ஆராய்ந்து, உள்நோக்கத்துடன் தேடி நமது எண்ணங்களிலே அதை நிலை நிறுத்துதல் அவசியம். வேத வசனத்தின் படி அப்படியே நாம் நடக்க விரும்பினால், அதை யோசித்து ஆராய்வதற்கு நேரத்தை நாம் செலவிட வேண்டும் என்பதே அதன் பொருளாகும்.

"முயற்சி திருவினையாக்கும்" என்ற பழமொழிக்கேற்ப அதிகமான பயிற்சியைச் செய்து முயற்சி செய்து சிறந்தவர்களாக வளர நாம் செயல்படாதபடியினாலே தான் நமது கிறிஸ்தவ வாழ்க்கையிலே எந்த விதமான முன் மாதிரியும் இல்லாமல் இருக்கிறது.

## தியானம் வெற்றியை உருவாக்குகிறது

இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக. இதில் எழுதியிருக்கிறவைகளின் படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி இரவும் பகலும் அதைத்

> தியானித்துக் கொண்டிருப்பாயாக, அப்பொழுது நீ உன் வழியை வாய்க்க பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்து கொள்வாய்.
>
> யோசுவா 1:8

உங்கள் கிரியைகள் எல்லாவற்றிலேயும் நீங்கள் வெற்றியுள்ளவர்களாயும், செழிக்கிறவர்களாயும் இருக்க நீங்கள் விரும்பினால் நீங்கள் இரவும் பகலும் வசனத்தைத் தியானிக்கிறவர்களாய் இருக்க வேண்டும்.

தேவனுடைய வார்த்தைகளை யோசித்து, தியானிப்பதற்கு எவ்வளவு நேரம் நீங்கள் செலவிடுகிறீர்கள்? உங்கள் வாழ்க்கையின் ஏதாவது ஓர் பகுதியில் ஓர் குறிப்பிட்ட பிரச்சனையை அனுபவித்துக் கொண்டிருப்பீர்களாகில், இக்கேள்விக்கான உண்மையான பதில் அக்காரணத்தை வெளிப்படுத்தும்.

நான் எதை தியானிக்கிறேன் என்று என் வாழ்வில் அதிகமான பகுதியில் நான் ஒருபோதும் யோசித்ததில்லை. என் தலைக்கு வந்ததெல்லாவற்றையும் யோசித்தேன். எனது சிந்தையில் சாத்தான் யோசனைகளை விதைக்கிறான் என்ற எண்ணமே எனக்கு இல்லாதிருந்தது. எனது மனதிற்குள் இருந்ததெல்லாம் சாத்தான் சொல்லும் பொய்களும், சில மதியீனமான காரியங்களுமேயன்றி வேறில்லை. பயனற்ற காரியங்களைத் தான் என் மனதில் சிந்தித்து என் நேரத்தை வீணாக்கிக் கொண்டிருந்தேன். பிசாசு எனது சிந்தனைகளை ஆட்கொண்டிருந்தபடியால் அவன் எனது வாழ்க்கையையும் ஆட்கொண்டிருந்தான்.

## நீ எதை யோசிக்கின்றாயோ அதை சிந்தனை செய்!

> அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்.
>
> எபேசியர் 2:3

பவுல் இங்கே நம் ஒவ்வொருவரையும் நமது மாம்சீக சுபாவங்களால் ஆட்கொள்ளப்படக் கூடாதென்றும் நமது மனதும், மாம்சமும் விரும்புகிறவைகளுக்குக் கீழ்ப்படியக் கூடாதென்றும் எச்சரிக்கிறார். நான் ஒரு கிறிஸ்தவனாயிருந்தாலும் எனது சிந்தனைகளை என்னால் அடக்கிக் கொள்ள முடியாத பிரச்சனைக்குள்ளாக நான் காணப்பட்டேன். எனது சிந்தையை எப்போதும் நிறைக்கக் கூடிய எண்ணங்களை எண்ணியவளாக, நேர்முக நிலையிலே எதையும், செய்ய முடியாதவளாகவே நான் காணப்பட்டேன்.

*எனது யோசனையின் பகுதியை நான் மாற்ற வேண்டுவது எனக்கு அவசியமாயிற்று!*

தேவன் சொன்ன ஒரு காரியமானது எனது மனதின் போர்க்களத்தில் முற்றிலும் ஒரு திருப்புமுனையை உருவாக்கிற்று. "எதையெல்லாம் யோசிக்கின்றாயோ, அதையெல்லாம் சற்று சிந்தனை செய்" என்று தேவன் என்னோடு கூடச் சொன்னார். அப்படியே நான் செய்ய ஆரம்பித்தபோது எனது வாழ்வில் இத்தனை நாட்கள் இருந்தப் பிரச்சனைகளின் காரணத்தை விளங்கிக் கொண்டேன்.

*எனது மனமெல்லாம் ஓர் குப்பைக்கூழம் போலவே காணப்பட்டது!*

பல தவறான சிந்தனைகளையே நான் சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

நான் ஆலயத்துக்குச் சென்று, இத்தனை ஆண்டுகளாகக் காரியங்களைச் செய்தாலும் நான் ஆண்டவர் பேசக் கேட்டதைப் பற்றி சற்றேனும் சிந்தித்துப் பார்க்கவில்லை, சொல்லப் போனால் ஒரு செவியின் வழியாய் உள்ளே போய், மற்ற செவியின் வழியாய் அது வெளியேறிவிட்டது. வேதத்திலிருந்து சில வசனங்களை நான் வாசித்தும், ஒரு போதும் நான் வாசித்ததை சிந்தித்ததில்லை. வேதவசனத்துக்குள்ளே என் கவனத்தை நான் செலுத்தியதில்லை. நான் கேட்டதைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற சிந்தையே என்னில் உருவானதில்லை. ஆகவே எந்த அறிவையும் ஒழுக்கத்தையும் நான் அறிந்து பெற்றுக் கொண்டவளாகக் காணப்படவில்லை.

## தேவனுடைய கிரியைகளைத் தியானியுங்கள்

தேவனை, உமது ஆலயத்தின் நடுவிலே, உமது கிருபையைச் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

சங்கீதம் 48:9

கர்த்தருடைய அற்புதக் கிரியைகளைச் சிந்திப்பதைக் குறித்து சங்கீதக்காரன் தாவீது அவ்வப்போது குறிப்பிடுகிறான். தேவனுடைய நாமம், அவருடைய கிருபை இன்னும் அநேகக் காரியங்களைக் குறித்துச் சிந்தித்துக் கொண்டிருப்பதாக அவன் கூறுகிறான்.

அவன் மிகவும் சோர்ந்து போயிருக்கையில் சங் 143:4-5ஐ எழுதினான். "என் ஆவி என்னில் தியங்குகிறது, என் இருதயம் எனக்குள் சோர்ந்து போகிறது. பூர்வநாட்களை நினைக்கிறேன், உமது செய்கைகளையெல்லாம் தியானிக்கிறேன், உமது கரத்தின் கிரியைகளை யோசிக்கிறேன்." தாவீது தனது சோர்ந்து போன இக்கட்டான சூழ்நிலைகளிலும், உணர்வுகளிலும் ஒரு போதும் தனது பிரச்சனைகளை யோசிக்கவில்லை. மாறாக, கடந்த கால நல்ல நாட்களை அவன் நினைவு கூறுவதன் மூலமாகத் தனக்கு விரோதமாய் வந்த பிரச்சனைகளை எதிர்த்து வருகிறான். அவருடைய கரங்களின் நல்ல கிரியைகளைத் தியானித்து ஆராயத் தெரிந்து கொள்கிறான். நல்ல காரியங்களை அவன் எண்ணியதன் மூலமாக மனச் சோர்வை அவனால் மேற்கொள்ள முடிந்தது.

*உங்கள் வாழ்க்கையின் வெற்றியில் உங்கள் மனதானது மிகவும் முக்கியமான இடத்தை வகிக்கிறது* என்பதை மறந்துவிடாதிருங்கள்.

பரிசுத்த ஆவியின் வல்லமை தேவனுடைய வார்த்தையின் மூலமாகக் கிரியை செய்து நமக்கு வாழ்க்கையில் இந்த ஜெயத்தைத் தருகிறது. ஆனால், தேவனோடும் அவருடைய வார்த்தையோடும் நமது சிந்தையை நாம் ஒருமுகப்படுத்த வேண்டுமென்றால் நாம் செய்ய வேண்டிய காரியத்தைக் குறைவில்லாதபடிச் செய்ய வேண்டியதாயுள்ளது. இதைச் செய்ய நாம் மறுத்துவிடுவோமானால் அல்லது முக்கியமில்லாதவைகளுக்கு நாம் முதலிடம் கொடுப்போமானால் நாம் ஒருபோதும் வெற்றியை நமது வாழ்க்கையில் அடையவே முடியாது.

# உங்கள் மனம் புதிதாகிறதினால் மறுரூபமடையுங்கள்

நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும், பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.

ரோமர் 12:2

நமது மனம் புதிதானால் மட்டுமே நமது வாழ்வில் தேவனுடைய நன்மையையும் பரிபூரணமுமான சித்தத்தையும் நாம் நிரூபித்துக்காட்ட முடியும் என்று இந்தப் பகுதியில் அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். தேவனுடைய வழியில் சிந்திக்கும்படி புதுப்பிக்கப்படுகிற அனுபவமே இது. இந்த விதமான புதிய வழியில் யோசித்து நாம் முன்னேறுவதன் மூலமாக தேவனுடைய நோக்கத்திற்கு நேராக நாம் நம்பிக்கை வைத்தால் மறுரூபமடைகிறோம். இயேசு தமது மரணம், உயிர்த்தெழுதல் இவற்றினால் நமக்கு இதை சாதகமாக்கினார். மனம் புதிதாகிறதினால் இக்காரியம் நமது வாழ்வில் நிஜமாகிறது.

சரியான சிந்தைக்கும், இரட்சிப்புக்கும் எந்தவிதமான சம்மந்தமும் கிடையாது. இரட்சிப்பானது அவருடைய இரத்தம், மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தான் இருக்கிறது. அநேகர் இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டதனிமித்தமாக மோட்சத்திலே இருந்தாலும், அவர்களில் அநேகர் அவருடைய வசனத்தின்படி தங்கள் மனம் புதிதாக்கப்படாதபடியால் ஒரு போதும் தங்கள் வாழ்க்கையில் ஜெயமான பாதையில் நடந்திருந்திருக்க மாட்டார்கள். தேவனுடைய நல்ல திட்டத்தை அனுபவித்தும் இருந்திருக்க மாட்டார்கள்.

அநேக ஆண்டுகளாக நானும் அவர்களில் ஒருவளாகவே காணப்பட்டேன். நான் மறுபடியும் பிறந்து மோட்சத்திற்குப் போகிறவளாகக் காணப்பட்டேன். ஆலயத்துக்கு ஒழுங்காகச் சென்று மத சம்மந்தமானக் கொள்கையைப் பின்பற்றினேன். ஆனால், என் வாழ்வில் நான் ஒருபோதும் எந்த வெற்றியையும் காணவில்லை. தவறான காரியங்களை நான் எண்ணிக் கொண்டிருந்ததே இதற்குக் காரணம்.

## இவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்

கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்.

பிலிப்பியர் 4:8

எப்படிப்பட்ட நல்ல காரியங்களை நாம் சிந்திக்க வேண்டும் என வேதம் ஒரு பட்டியலை நமக்குத் தந்து நம்மை அறிவுறுத்துகிறது. நம்மைக் கீழே தள்ளாதபடி, நம்மைக் கட்டி எழுப்பக் கூடிய நல்ல காரியங்கள் எவைகள் என்பதை நாம் வேத வசனங்கள் மூலமாகத்தான் அறிய முடிகிறது.

நமது யோசனைகள் எல்லாமே நிச்சயமாகவே நமது நோக்கங்களையும் மனநிலைமையையும் பாதிக்கிறவைகளாக இருக்கின்றன. நம்மை மகிழ்ச்சியாக்கக் கூடியவைகள் எவைகள் என்றும், நம்மைப் பரிதாப நிலைமைக்குள் தள்ளுபவைகள் எவைகள் என்றும் அவருக்கு நன்றாய் தெரியும். ஒருவனுடைய சிந்தை முழுவதும் தவறான சிந்தனைகளால் நிறைந்திருக்குமானால் அவன் ஒரு மோசமான நிலையிலே காணப்படுகிறான். ஒருவன் இப்படிப்பட்ட மோசமான நிலையில் வரும்போது தான் கெட்டுப்போவது மாத்திரமல்ல, மற்றவர்களையும் கெடுத்துவிடுகிறான்.

நீங்களே உங்களைக் குறித்த புள்ளி விபரங்களை எடுத்து "எதைப் பற்றி நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்?" என்ற கேள்வியைக் கேட்டு, உங்களையே ஆராய்ந்து பாருங்கள்.

நீங்கள் எதை யோசிக்கிறீர்கள் என்பதை சிந்தித்துப் பார்ப்பது மிக மிக முக்கியமானது. ஏனெனில், இப்படிப்பட்ட நிலையில் தான் நம்மைப் பரிதாபகரமான சூழ்நிலைகளுக்குட்படுத்த சாத்தான் அதிகமாக முயற்சி செய்கிறான். அவர்களுடைய சுற்றுப்புற சூழ்நிலைகளினால்தான் அவர்கள் மகிழ்ச்சியற்றவர்களாய் இருக்கிறார்கள் என்று அவர்கள் நம்ப வேண்டும் என்று அவன் விரும்புகிறான். ஆனால் உண்மை என்னவென்றால், உள்ளே

நடைபெறுகிற சிந்தனைப் போராட்டமே, அவர்களை மிக மிகப் பரிதாபகரமான நிலைக்குள்ளே ஆக்கிவிடுகிறது.

அநேக ஆண்டுகளாக, மற்றவர்கள் செய்கின்ற அல்லது செய்யாத காரியங்களை நான் கண்டு, நான் மகிழ்ச்சியற்ற ஒரு பெண் என்றே என்னை விசுவாசித்துக் கொண்டிருந்தேன். எனது பரிதாபகரமான சூழ்நிலைக்கு நான் எனது புருஷனையும், எனது பிள்ளைகளையும் குறைகூறுவது வழக்கம். எனது கணவரோ, பிள்ளைகளோ எனக்கு நன்றாய்ச் செவிகொடுத்து, எனக்கு உதவி செய்து, என்னோடு கூட இருப்பார்களானால், நான் எண்ணுவதற்கெல்லாம் ஒத்துப் போவார்களானால், எனக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாகிறது. சந்தோஷத்திற்குக் காரணம் அதுதான் என்று நான் எண்ணிக் கொண்டிருந்தேன். இறுதியாக உண்மையை நான் அறிந்து கொண்டேன். ஒரு வருடம் ஒரு அனுபவம், மற்ற வருடம் இன்னொரு அனுபவம் என்பதாக இனி இருக்கக் கூடாது என நான் தீர்மானித்தேன். சரியான எண்ணங்களை உடையவளாயிருக்கையிலே நான் மகிழ்ச்சியாயிருக்க முடியும் என்ற நிலைமைக்குள்ளாக உணர்த்தப்பட்டேன்.

மீண்டுமாக ஒருமுறை நான் சொல்லுகிறேன். *நீங்கள் யோசிப்பவைகளெல்லாவற்றையும் சற்று சிந்தித்துப் பாருங்கள்,* உங்கள் பிரச்சனைகளைக் கண்டுபிடித்து துரிதமாகவே ஒரு விடுதலையின் பாதையில் நடப்பீர்கள்.

பாகம் II

# சிந்தையின் தன்மைகள்

# *முகவுரை*

> *...எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது.*
>
> 1 கொரி 2:16

உங்கள் மனநிலைமை எப்படி இருக்கிறது?

உங்கள் மனநிலைமை மாறுகிறதை நீங்கள் கவனித்ததுண்டா? ஒரு சமயம் அமைதியையும், சமாதானத்தையும் நீங்கள் உணருகிறீர்கள். மற்றொரு வேளையில் குழப்பத்தையும், கவலையையும் அடைகிறீர்கள். அல்லது ஒரு திட்டவட்டமானத் தீர்மானம் ஒன்றை எடுத்துவிட்டு, திடீரென்று உங்கள் மனமானது நீங்கள் எடுத்தத் தீர்மானத்தைக் குறித்துக் குழப்பமடைந்து நிச்சயமற்ற ஒரு நிலையை உருவாக்கிவிடுகிறது.

எனது வாழ்விலும், மற்றவர்கள் வாழ்விலும் இதே போலுள்ள அனுபவங்களை நான் அதிகமாக அனுபவித்ததுண்டு. தேவனை எந்த விதப் பிரச்சனையுமின்றி நான் நம்பிய சூழ்நிலைகள் ஒரு பக்கம் இருந்தாலும் அதே சூழ்நிலைகளிலே மீண்டும் அவரை நம்ப முடியாத குழப்ப நிலைமையை நான் அனுபவித்ததுண்டு. கவலைகளும், அவிசுவாசமும் சந்தேகமுமே என்னை அமிழ்த்துவிட்டன.

எனது மனமானது பலவிதமான நிலைகளிலே மாறிக் கொண்டிருந்தபடியினால் எப்பொழுது எனது மனம் இயல்பான நிலையில் இருக்கிறது என்பதை என்னாலே விளங்கிக் கொள்ள முடியவில்லை. இயற்கையான மனோநிலையை நான் பெற்றுக்கொள்ள விரும்பி, அதன் மூலமாய், குழப்பமடைந்த மனநிலைமை வரும் போது அதை அறிந்து கொள்ளவும் விரும்பினேன்.

உதாரணமாக ஒரு விசுவாசிக்கு வரும் சிந்தனைகள், குற்றம் காண்கிற, குற்றம் சாட்டுகிற, நியாயம் தீர்க்கிற, சந்தேகப் பார்வையோடுள்ளவைகளான நிலைகளிலே இருக்குமானால் அவ்விசுவாசிக்கு அது வழக்கத்திற்கு மாறான சிந்தையாக அமைந்து

விடுகிறது. எப்படியும், எனது வாழ்வின் பெரும்பாலான பகுதியில் இப்படிப்பட்ட எண்ணங்கள் எனக்கு இயல்பான நல்ல சிந்தைகளாகவே அமைந்தன. எனது வாழ்க்கையிலே சிந்தையில் வரும் எண்ணங்களெல்லாம் தவறாய் வந்து எனது சமாதானத்தைக் கெடுக்கும் பிரச்சனைகளை உருவாக்கினாலும், நான் சிந்திப்பதில் எல்லாம் எவ்விதத் தவறும் இருப்பதாக நான் எண்ணவில்லை.

எனது சிந்தனை வாழ்வில், என்னாலே ஏதாவது ஒன்றை நான் செய்ய முடியும் என அறியாதவளாகவே இருந்தேன். நான் ஒரு விசுவாசியாக அநேக ஆண்டுகள் வாழ்ந்தேன். எனினும் சிந்தனை வாழ்வைப் பற்றியோ, அல்லது ஒரு விசுவாசிக்கு இருக்க வேண்டிய சிந்தனைத் தரம் இன்னதென்றோ எந்தக் கல்வியோ, அறிவோ எனக்கு இருந்ததில்லை.

மறுஜென்ம அனுபவத்தை நமது சிந்தைப் பகுதி பெற்றுக் கொள்கிறதில்லை. அவைகள் புதிதாக வேண்டும். (ரோமர் 12:2) இதற்கு முன்னர் நான் அதிகமாய்க் குறிப்பிட்டது போல நமது மனம் புதிதாக வேண்டும் என்றால் அதற்கு கொஞ்சக் காலம் தேவை. அதைரியப்படவோ, பதட்டமடையவோ வேண்டாம். இப்புத்தகத்தின் இரண்டாம் பாகத்தை நீங்கள் வாசிக்கையில் கிறிஸ்துவை தனது இரட்சகராக உரிமை கொண்டாடுகிற ஒருவனுக்கு இருக்கக்கூடாத எதிர்மாறான நிலையிலே உங்கள் மனம் பெரும்பாலான நேரங்களில் இருப்பதைக் காண்பீர்கள். பிரச்சனையைப் புரிந்து கொள்வதே, பரிகாரம் பெற்றுக்கொள்வதற்கு முதல் படியாகும்.

எனது சொந்த வாழ்க்கையிலே, நான் தேவனோடு கொண்டிருந்த உறவின் பாதையில் தேவன் என்னோடு வெளிப்படுத்திய பிரதான உண்மை ஒன்று உண்டானால் எனது அநேக பிரச்சனையானது எனது தவறான எண்ணங்களிலே தான் வேர் கொண்டு உருவாகின்றன என்பதே அது. எனது சிந்தை முழுவதும் ஒரு குப்பைக் கூழமாகவே இருந்தது. எப்போதுமே எனது மனநிலை இப்படியே தான் இருக்குமென நான் எண்ணினேன். ஆனால் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இந்நிலைமை அதிக நாட்கள் நிலைத்திருக்கவில்லை.

தவறான யோசனைகளுக்கு எந்த அளவிற்கு நான் அடிமைப்பட்டிருந்தேன் என்று என்னைத் தானே, நான் காண்கிற

வேளையில் நான் அப்படியே எனக்குள்ளே உணர்ச்சி வசப்பட்டேன். தவறான சிந்தனைகளை என்னை விட்டு வெளியேற்ற நான் முயற்சி செய்வேன். ஆனாலும் அதே சிந்தனைகள் மீண்டும் எனக்குள் புகுந்துவிடும். ஆனால் விடுதலையானது, கொஞ்சம் கொஞ்சமாக எனக்கு வந்தது என்பதில் மகிழுகிறேன்.

உங்கள் மனது புதிதாகிறது என சாத்தான் காணும்போது அவன் அதை எதிர்த்து மிகவும் வல்லமையாகப் போராடுவான். ஆனால், நீங்கள் விடாமல் போராடி, ஜெபத்திலும், வேதம் வாசிப்பதிலும் கவனமாயிருந்து, தொடர்ந்து முன்னேறும்போது நிச்சயமாகவே உங்களுக்கு வெற்றி கிடைக்கும்.

எப்போது உங்கள் மனம் அல்லது சிந்தை அமர்ந்து தூய்மையாயிருக்கும். எல்லா இடங்களிலும் அலைந்து, திரிந்து இருக்கிற நிலையிலா? அல்லது உங்கள் மனதை, நீங்கள் செயல்படுத்துகிற குறிப்பிட்ட காரியத்திலே பதித்து வைக்கிற நிலையிலா? நீங்கள் குழம்பிய நிலையில் இருக்க வேண்டுமா? உங்கள் மனது அல்லது சிந்தையானது சந்தேகம், அவிசுவாசம் இவைகளால் நிறைந்து, கவலை, பயம் இவைகளினால் அலைக்களிக்கப்பட்ட நிலையில் இருக்க வேண்டுமா? இல்லையேல், தேவபிள்ளையின் சிலாக்கியமான கர்த்தர் மேல் பாரத்தைப் போடுகிற அனுபவத்தோடு நாம் வாழ வேண்டுமா? (1 பேதுரு 5:7)

நாமனைவரும் கிறிஸ்துவின் சிந்தையை உடையவர்களாக இருக்க வேண்டும் என்றுதான் வேதம் நமக்குக் கட்டளை தருகிறது. இயேசு பூமியில் வாழும்போது அவருடைய சிந்தை எவ்வண்ணமாக இருந்திருக்கும்? தேவ குமாரனின் சிந்தையா? மனுஷகுமாரனின் சிந்தையா?

*சிந்தையின் போர்க்களம்* என்ற இந்நூலின் இரண்டாம் பகுதிக்குள் ஜெபத்துடன் நுழைந்து வாசிக்கையில் வழக்கத்துக்கு மாறான சிந்தனைப் பகுதி, சரியான மனோபாவனையாக மாறி, இயேசுவின் சீஷனாக ஜெயத்தின் பாதையில் நடக்க உங்கள் மனதின் கண்களைத் திறந்துவிடும் என்பதில் ஐயமில்லை.

# அதிகாரம்
# 8

## *எப்பொழுது எனது சிந்தை இயல்பான நிலையில் இருக்கிறது?*

# *எப்பொழுது எனது சிந்தை இயல்பான நிலையில் இருக்கிறது?*

**அதிகாரம்**
8

*நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருள வேண்டுமென்றும்,*

*தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்...*

*நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்க வேண்டுமென்றும் வேண்டிக்கொள்கிறேன்.*

எபேசியர் 1:17-19

பிரகாசமுள்ள “மனக்கண்களைப்” பெறுவதன் மூலம் நீங்களும் நானும் ஞானத்தை அடைய இங்கு பவுல் ஜெபிக்கிறார். நான் கற்ற பல காரியங்களின் மூலம், மனதை “இருதயத்தின் கண்கள்” என்றே கண்டறிந்தேன்.

ஒரு கிறிஸ்தவனாக நமது சிந்தை எந்த நிலையில் இருக்க வேண்டும்? மற்றொரு நிலையில் சொல்வேனாகில், ஒரு விசுவாசியின் சிந்தையின் இயல்பான தன்மை என்ன? இதன் பதில் விளங்கும்படி, சிந்தை ஆவி இவற்றின் வித்தியாசப்பட்ட செயல்பாட்டை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

வேதத்தின்படி நமது சிந்தையும் ஆவியும் இணைத்தே செயல்படுகிறது. “ஆவிக்கு உதவி செய்யும் சிந்தை” என இதை அழைக்கலாம்.

இந்தத் தத்துவத்தைப் புரிந்து கொள்ள ஒரு விசுவாசியின் வாழ்வில் இது கிரியை செய்யும் விதத்தை நாம் பார்ப்போமாக.

## சிந்தை - ஆவியின் கொள்கை

மனஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷருக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான்.

1 கொரிந்தியர் 2:11

ஒருவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் போது அவனுக்குள் தங்கும்படி பரிசுத்த ஆவியானவர் இறங்கிவருகிறார். பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய சிந்தையை அறிவார் என வேதம் நமக்கு கற்றுத் தருகிறது. ஒரு மனிதனுடைய ஆவி மட்டும் அவனுடைய சிந்தையில் வரும் எண்ணங்கள் அறியக் கூடியது போல, தேவனுடைய ஆவியானவர் மட்டுமே தேவனுடைய சிந்தையை விளங்கிக் கொள்கிறார்.

பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளே வாசமாயிருக்கிறபடியாலும், தேவனுடய சிந்தையை அவர் அறிந்திருக்கிறபடியாலும் அவர் தேவனுடைய ஞானத்தையும், வெளிப்படுத்துதல்களையும் நமக்கு வெளிப்படுத்திக் காண்பிக்க வேண்டுமென்பதே அவருடைய நோக்கமாய் இருக்கிறது. அந்த ஞானமும், வெளிப்படுதலும் நமது ஆவிக்குள்ளே புகுத்தப்பட்டு, நமது மனதின் கண்களைப் பிரகாசிப்பிக்கிறது. அதுவே நமது சிந்தை ஆவிக்குரிய நிலையிலே, நமக்குள் செயல்படுவதை நாம் அனுபவ ரீதியான அளவிலே புரிந்து கொள்ளும் படியாய் பரிசுத்த ஆவியானவர் இதைச் செய்கிறார்.

## இயல்பானதா - இயல்பற்றதா?

விசுவாசிகளான நாம் இயல்பானவர்களும், ஆவிக்குரியவர்களாயும் இருக்கிறோம். இயற்கை எப்போதும் ஆவிக்குரியவைகளை விளங்கிக் கொள்ளும் என நாம் சொல்ல முடியாது. ஆகவே தான், நமது ஆவியில் எது தொடர்ந்து நடைபெறுகிறது என்பதை அறிவது நமது சிந்தையின்

பிரகாசத்தைப் பரிசுத்த ஆவியானவர் கொடுக்க விரும்பினாலும் நாம் *ஒவ்வொருவருடைய மனமும் பல்வேறு காரியங்களை யோசிப்பதில் மிகவும் தீவிரமாய் இருப்பதினாலே அவைகளை நமது சிந்தை இழந்துவிடுகிறது.* தீவிரமாய் உள்ள சிந்தை இயல்பற்றதாகக் காணப்படுகிறது. ஆனால், சிந்தைப் பகுதி அமைதியாயிருக்கும் போது அது இயல்பான நிலையில் உள்ளதாகக் காணப்படுகிறது.

நமது சிந்தையானது பலவிதமான காரணங்கள், கவலைகள், தேவையற்ற எதிர்பார்ப்புகள், பயங்கள் இவைகளால் நிறைந்திருக்கவே கூடாது, அது அமைதியாகவும், மௌனமாகவும், நிம்மதியாகவும் இருக்க வேண்டும். தொடர்ந்து இந்நூலை நாம் வாசிக்கும்போது, வழக்கத்திற்கு மாறான பல விதமான மனோவிலைமையை அறிந்து உங்கள் சொந்த சிந்தைப்பகுதியிலேயே அவைகள் செயல்படுவதை நீங்கள் கண்டு கொள்வீர்கள்.

எப்பொழுதும் நமது மனதை இயல்பான நிலையில் வைத்துக் கொள்ள மிகவும் கவனமுள்ளவர்களாய் இருக்க வேண்டியது அவசியம். நமது வழக்கமான மன நிலையோடு இச்சூழ்நிலையை ஒப்பிட்டுப் பார்ப்போமானால் நாம் ஏன் தேவ ஞானத்திலும், வெளிப்படுத்துதலிலும் குறைவுள்ளவர்களாய் அவ்வப்போது காணப்படுகிறோம் என்பதை பரிசுத்த ஆவியானவர் நமக்காக வெளிப்படுத்திக் காண்பிப்பார்.

பரிசுத்த ஆவியானவர் ஒரு விசுவாசியின் மனதின் கண்களைப் பிரகாசிப்பிக்க எப்பொழுதும் செயல்படுகின்றார் என்பதை மனதில் கொள்ளுங்கள். பரிசுத்த ஆவியானவர் மனுஷனுடைய ஆவியினிடத்தில், தேவனிடத்திலிருந்து வருகிற செய்தியைக் கொடுக்கிறார். மனிதனுடைய ஆவியும் சிந்தையும் இதைப் பெற்றுக்கொண்டு இணைந்து செயல்படுமானால் மனிதன் தெய்வீக ஞானத்திலும், வெளிப்படுத்துதலிலும், நடக்க முடியும், ஆனால் சிந்தை, மற்றப் பல்வேறு காரியங்களால் நிறைந்திருக்கும் போது, அவனது ஆவியின் மூலமாய் தேவன் வெளிப்படுத்த விரும்பும் காரியத்தை இழந்துவிடுகிறது.

## அமர்ந்த மெல்லிய சத்தம்

அப்பொழுது அவர். நீ வெளியே வந்து கர்த்தருக்கு முன்பாகப் பர்வதத்தில் நில் என்றார். அப்பொழுது, இதோ, கர்த்தர் கடந்து போனார் கர்த்தருக்கு முன்பாகப் பர்வதங்களைப் பிளக்கிறதும் கன்மலைகளை உடைக்கிறதுமான பலத்தை பெருங்காற்று உண்டாயிற்று ஆனாலும் அந்தக் காற்றிலே கர்த்தர் இருக்கவில்லை. காற்றிற்குப்பின் பூமி அதிர்ச்சி உண்டாயிற்று. பூமி அதிர்ச்சியிலும் கர்த்தர் இருக்கவில்லை.

பூமி அதிர்ச்சிக்குப்பின் அக்கினி உண்டாயிற்று அக்கினியிலும் கர்த்தர் இருக்கவில்லை அக்கினிக்குப்பின் அமர்ந்த மெல்லிய சத்தம் உண்டாயிற்று.

1 இராஜாக்கள் 19:11-12

எனக்குள்ளே வாசமாயிருக்கிற பரிசுத்த ஆவியின் மூலமாய் காரியங்களை தேவன் எனக்கு வெளிப்படுத்திக் காண்பிக்கும் படியாக அநேக ஆண்டுகளாக நான் ஜெபித்துக் கொண்டு வந்தேன். அதே வேதத்திற்கு ஏற்றதாயுள்ள வேண்டுகோள் என்று நான் அறிவேன். தேவ வார்த்தையை நான் நம்பி, நான் கேட்டுப் பெற்றுக்கொள்ளுவேன் என்ற நிச்சயம் எனக்குள் இருந்தது. ஆனால் பின்னர் ஒரு உண்மையை அறிந்து கொண்டேன். அது என்னவென்றால் எனது சிந்தை மிகவும் நெருக்கப்பட்டக் காரியங்களால் நிறைந்திருந்தபடியால், பரிசுத்த ஆவியானவர் எனக்குக் காரியங்களை வெளிப்படுத்த விரும்பினாலும், அவைகள் என் சிந்தையில் அதிகமாகத் தங்க முடியாத நிலையை அறிந்து கொண்டேன். கொடுக்கப்படுகிற ஆவியானவரின் செய்திகளை நான் சிந்தையிலே கொள்ளாதபடி இழந்து கொண்டிருந்தேன்.

ஒரு அறையில் இரண்டு பேர் சேர்ந்து இருக்கிறார்கள் என்பதைக் கற்பனை செய்து பார்ப்போம், ஒருவன் மற்றொருவனிடத்திலே ஒரு இரகசியத்தைச் சொல்ல முயற்சி செய்கிறான். ஒருவேளை அந்த அறையானது பலவித சத்தங்களால் நிறைந்திருக்குமானால் அந்த இரகசியச் செய்தி அறிவிக்கப்பட்டாலும் கூட, அறை முழுவதும் மற்ற சத்தங்களால் நிறைந்திருக்கிறபடியால் கேட்பவன் செய்தியை

முற்றிலும் அறிய வாய்ப்பில்லை. அவன் மிகவும் உன்னிப்பாய் கவனித்தாலொழிய தன்னிடத்தில் ஒரு செய்தி செல்லப்பட்டதாகவும் அவன் அறியமாட்டான்.

அதே போலத்தான் தேவனுடைய ஆவிக்கும் நமது ஆவிக்குமிடையே நடக்கிற உரையாடலும் இருக்கிறது. பரிசுத்த ஆவியின் வழிகள் மென்மையானது. அநேக முறை அவர் எலியா தீர்க்கதரிசியிடம் பேசியவாறு நம்மோடு கூட "மெல்லிய சத்தத்தோடு" பேசுவார். ஆகவே தேவ தொனியைக் கேட்டக்கூடிய நிலையில் நமது சிந்தையை தயாராக வைத்துக் கொள்வது மிக மிக முக்கியம்.

## ஆவியும் - சிந்தையும்

> இப்படியிருக்க செய்ய வேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன் கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்.
>
> 1 கொரிந்தியர் 14:15

"சிந்தனைக்கு உதவும் ஆவியை" சரியாக விளங்கிக் கொள்ள ஒரே வழி ஜெபத்தைப் பற்றி எண்ணுவதாகும். ஆவியோடும், சிந்தையோடும் ஜெபிப்பேன் என்று பவுல் இவ்வசனத்தில் குறிப்பிடுகிறார்.

எனது வாழ்வில் இந்த அனுபவம் இருக்கிறபடியால் பவுல் பேசுவது எனக்கு நன்கு விளங்குகிறது. அவ்வப்போது நான் அந்நிய பாஷையில் பேசுவது வழக்கம், கொஞ்சநேரம் இந்நிலையில் ஜெபித்த பிறகு, அடிக்கடி என் தாய் மொழியில் நாம் ஜெபிக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் தோன்றும். இப்படியாக சிந்தை. ஆவிக்கு உதவுகிறது, நான் தேவனுடைய ஞானத்தையும், வெளிப்படுதலையும் பெற்றுக் கொள்ளும்படியாகவும், விளங்கிக் கொள்ளும்படியாகவும் இவ்விரண்டும் இணைந்து செயல்படுகின்றன.

இவை மாறியும் செயல்படுகின்றன. நான் சில வேளைகளில் ஜெபிக்கும்படி விரும்புகையில் என் சிந்தையை தேவனுக்கு முன்பாகத் திருப்புகிறேன், ஆனால் ஆவியின் உந்துதல் எனக்கு இல்லாவிடில், எனது மனதிலிருந்து எந்த குறிக்கோளும் இல்லாமல் நான் ஜெபிக்க

ஆரம்பிக்கிறேன். எனக்குத் தெரிந்த காரியங்கள், சூழ்நிலைகளைப் பற்றி நான் ஜெபிக்கிறேன். சில வேளைகளில் இந்த ஜெபங்களானது வெறுமையானவைகளைப் போல் தோற்றமளிக்கிறது. எனது ஆவியிலிருந்து எந்த விதமான உதவியும் வெளியே வருகிறதில்லை. குறிக்கோளற்ற ஜெபமாயிருப்பதால் தத்தளிப்பதோடு மட்டுமல்ல. ஏற்கனவே நான் அறிந்த சிலவற்றிக்காக மட்டும் ஜெபிக்கிறேன்.

பரிசுத்த ஆவியானவர் எனக்குள்ளிருந்து ஒரு குறிப்பிட்ட காரியத்துக்காக இடைப்படும் மட்டும் இப்படியாக நான் தொடருகிறேன். அவர் அதைச் செய்யும் போது, ஏதோ, நான் ஜெபிக்க முயற்சி செய்த காரியத்தைப் பற்றி அல்ல. அவர் எதைப் பற்றி நான் ஜெபிக்க வேண்டுமென்று விரும்பினாரோ அந்தக் குறிப்பை நான் தொட்டுவிட்டேன் என்பதை விளங்கிக் கொள்ளுவேன். இவ்வண்ணமாய் எனது மனமும் எனது ஆவியும் இணைந்து, ஒன்றுக்கொன்று உதவி செய்து தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றச் செயல்படுகிறது.

## பாஷைகளும் வியாக்கியானமும்

> அந்தப்படி அந்நிய பாஷையில் பேசுகிறவன் அதின் அர்த்தத்தையும் சொல்லத்தக்கதாக விண்ணப்பம் பண்ணக்கடவன்.
>
> என்னத்தினாலெனில், நான் அந்நிய பாஷையிலே விண்ணப்பம் பண்ணினால் என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும்.
>
> 1 கொரிந்தியர் 14:13-14

பாஷைகளின் வரமும், அவைகளை வியாக்கியானம் செய்யும் வரமும் கிரியை செய்யும் போது, ஆவியும் சிந்தையும் இணைந்து செயல்படுகிறது.

நான் அந்நிய பாஷையைப் பேசும்போது தேவன் எனக்கோ அல்லது வேறொருவருக்கோ அதன் அர்த்தத்தை விளங்கப் பண்ணினாலொழிய அது கனியற்றதாகவே இருக்கும்.

பல பாஷைகளும், மொழிபெயர்ப்பும் வரங்கள் அல்ல, மொழி பெயர்ப்பு என்றால், வார்த்தைக்கு வார்த்தை அதன் அர்த்தங்களைக்

கூறுவதாகும். வியாக்கியானமோவென்றால், இன்னொருவன் சொன்னதை மற்றொருவன் விளங்கி, அதற்கான விளக்கத்தைத் தருவதாகும். ஆனால், அவன் அதை தனது சொந்த ஆள் தத்துவத்திலே இருந்து தன் சொந்த நடையிலே கூறுகிறான்.

உதாரணமாக சகோதரி ஸ்மித் அவர்கள் சபையிலே எழுந்து நின்று அந்நிய பாஷையில் ஒரு செய்தியை கொடுக்கிறார்கள் என வைத்துக் கொள்வோம். அது அவர்களுடைய ஆவியிலிருந்து வருகிறது. அவர்களோ அல்லது வேறு யாருமோ அவர்கள் என்ன கூறினார்கள் என்பதை விளங்கிக் கொள்ளவில்லை. அப்போது ஒரு பொதுவான முறையிலே நான் அந்தச் செய்தியை விளங்கிக் கொள்ள தேவன் எனக்கு உதவி செய்கிறார். நான் விசுவாசத்திலே அடி எடுத்து வைக்கும் போது, நான் சொல்லப்பட்ட செய்தியை வியாக்கியானித்து மற்றவர்களுக்கு விளங்கப்பண்ணுகிறவளாய் நான் மாறுகிறேன். ஆனால் என் மூலமாக அது ஓர் ஒப்பற்ற நிலையில் எனது சொந்த விளக்கத்தோடு வருகிறது.

அந்நிய பாஷைகளில் ஆவியில் ஜெபிப்பதும், அப்பாஷைகளை வியாக்கியானம் செய்வதும் சிந்தையை ஊக்குவிக்கும் ஆவியின் தத்துவத்தை விளங்கப்பண்ணும் ஓர் அற்புதமான வழியாக இருக்கிறது.

இப்பொழுது இதை சற்று யோசித்துப் பார்ப்போம். சகோதரி ஸ்மித் அவர்கள் அந்நிய பாஷையில் பேசும் போது, அதன் வியாக்கியானத்தை ஒருவர் கொடுக்க வேண்டுமென்றால் தேவன் ஒருவரைத் தேடிக் கொண்டிருக்கிறார். அவ்வேளையில் எனது சிந்தை மிகவும் மற்ற காரியங்களால் நிறைந்து இருக்குமானால் அவர் என்னை விட்டுக் கடந்து போய்விடுவார். ஒருவேளை எப்படியாவது என் மூலமாக அந்த வியாக்கியானத்தைக் கொடுக்க விரும்பினாலும் நான் அதைப் பெற்றுக் கொள்ள மாட்டேன்.

நான் புதிதாக இரட்சிக்கப்பட்ட நிலையில் ஆவிக்குரிய வரங்களைப் பற்றி நான் கற்றுக் கொண்டிருந்தேன். அப்போது அதிகமாக நான் அந்நிய பாஷையிலே தான் ஜெபிப்பது வழக்கம். கொஞ்ச நாட்கள் கழித்து எனது ஜெப வாழ்க்கையில் நான் சோர்வையும், சலிப்பையும் உணர ஆரம்பித்தேன் ஏன்? என்று ஆண்டவரிடத்தில் இதைப் பற்றிக் கேட்கையில், நான் எதற்காக ஜெபிக்கிறேனோ அதைக் குறித்து சற்றேனும்

விளக்கமின்றி ஜெபிக்கிறதாக அவர் சுட்டிக் காண்பித்தார். ஆவியிலே நான் ஜெபிக்கும்போது நான் சொல்லுகிற வார்த்தைகளை நான் எப்போதும் புரிந்து கொள்ள வேண்டியதில்லை என்பதை நான் உணர்ந்தாலும், இந்த வகையான ஜெபம் வெறுமையானதென்பதையும் கனியற்றதென்பதையும் அறிந்து கொண்டேன்.

## சமாதானமும், விழிப்புமுள்ள சிந்தை

> உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் மனுஷன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர்.
>
> ஏசாயா 26:3

மேற்கண்ட உதாரணங்களை வாசித்த நீங்கள் உங்கள் மனதும் ஆவியும் இணைந்து செயல்படுவதைப் பற்றி அறிந்திருப்பீர்கள். *ஆகவே தான் உங்கள் சிந்தையை நீங்கள் இயல்பான நிலையில் பரிபாலனம் செய்து கொள்வது மிக மிக முக்கியம். இல்லையேல் உங்கள் ஆவியை அது தூண்ட முடியாது.*

இந்த உண்மையை சாத்தான் நன்கு அறிந்தவன் ஆதலால் அவன் உங்கள் சிந்தையைத் தாக்கவும், உங்கள் சிந்தனைப் போர்க்களத்தல் உங்களுக்கு விரோதமாய்ப் போராடவும் அவன் தீவிரமாய் செயல்படுவான். உங்களுடைய சிந்தையைப் பலவிதமான தவறான யோசனைகளாலும் எண்ணங்களாலும் நிரப்பி பாரமாக்கவும், அலைக்கழிக்கவும் முற்படுவான். உங்கள் சொந்த மனுஷீக ஆவியின் மூலமாக பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்யாதபடி தடை செய்வான்.

நமது சிந்தையானது சமாதானமாக இருக்க வேண்டும். ஏசாயா கூறுவது போல சரியான காரியங்களில் நமது மனம் பதிக்கப்பட்டிருக்கும் போது எது இளைப்பாறுதலோடு இருக்கும்?

நமது சிந்தை விழிப்புள்ள ஜாக்கிரதையோடு கூட இருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. தன்னிலே தேவையில்லாத காரியங்கள் நிறைக்கப்பட்டிருக்கும் போது இது கூடாத காரியமாகி விடுகிறது.

எவ்வளவு நேரம் உங்கள் மனம் இயல்பான சிந்தையாக இருக்கிறது?

# அதிகாரம்
# ௯

## *அலைந்து திரிகிற அதிசயிக்கும் சிந்தை*

# அலைந்து திரிகிற அதிசயிக்கும் சிந்தை

அதிகாரம்
9

> *ஆகையால் உங்கள் மனதின் அரையைக் கட்டிக் கொண்டு...*
>
> 1 பேதுரு 1:13

தேவையற்ற காரியங்களால் நிறைந்த சிந்தையானது இயல்புக்கு மாறானதாக இருக்கும் என நாம் முந்தைய அதிகாரத்தில் கற்றுக்கொண்டோம். அதைப்போல, அங்கும் இங்கும் அலைந்து திரிகிற சிந்தையும் இயல்பற்ற சிந்தையாக அமைகிறது. கவனச் சிதைவு சிந்தையில் ஏற்படும் போது, அது பிசாசு கொடுக்கும் தாக்குதலாக இருக்கிறது.

பலர், தங்களுடைய சிந்தைகளில் ஒழுக்கத்தை கடைப்பிடிக்காததினால் தங்களுடைய எண்ணங்களை வருடக்கணக்கில் அங்கும் இங்கும் அலைய விட்டிருக்கிறார்கள்.

தங்கள் சிந்தனைகளை சீராக்க முடியாதவர்கள் ஏதோ தங்கள் மன நிலைமை பாதிக்கப்பட்டுள்ளதாகக் கருதி விடுகிறார்கள். எப்படியும், இக்குறைவானது அநேக முறைகளிலே, அநேக ஆண்டுகளாக தங்கள் கவனத்தை அலைந்து திரிய அதன் இஷ்டத்துக்கு இடம் கொடுத்து விட்டபடியாலும், எப்பொழுதும், எங்கும் மனதை சிதறடிக்க விட்டுக் கொடுத்தபடியாலுமே இந்த அவல நிலை அநேகருக்கு ஏற்பட்டு விட்டது. கவனக் குறைவு, வைட்டமின் சத்துக் குறைவையும் காண்பிக்கிறது. ஆகவே, ஒரு பக்கத்திலே சரியான தேக ஆரோக்கியத்தோடு காணப்படுகிறோமா என்பதையும் நாம் கவனித்துக் கொள்வோமாக.

அதிகமான களைப்புள்ளவர்களாக நாம் காணப்படுகிற வேளைகளையும் சாத்தான் பயன்படுத்தி நமது சிந்தையின் கவனத்தைச் சிதறடித்துவிடுவதை நான் அறிந்திருக்கிறேன். இச்சந்தர்ப்பங்களில் நாம் அவனுக்கு எதிர்த்து நிற்பது முடியாத காரியம் என்று அவனுக்கு நன்றாய் தெரியும். அவனுக்கு நாம் எந்தப் பாதகமும் செய்யமலிருக்கும்படி பிசாசு நமது மனநிலை பாதிக்கப்பட்ட உணர்வை நமக்குள்ளே கொண்டு

வருவான். தான் சொல்லும் அத்தனைப் பொய்களையும் நாம் அப்படியே நம்ப வேண்டும் என்று அவன் விரும்புகிறான்.

எனது ஒரு மகள் தனது இளம் பிராயத்தல் இப்படிப்பட்ட கவனக் குறைவினால் மிகவும் பாதிக்கப்பட்டாள். கவனித்தலும், கிரகித்தலும் இணைந்து செயல்படாதபடியால் வாசிப்பதே அவளுக்கு மிகவும் கடினமாயிருந்தது. அநேக சிறுவர்களும், பெரியவர்களும் தாங்கள் வாசிப்பதை ஒருபோதும் கிரகிப்பதில்லை. அவர்களுடைய கண்களானது புத்தகப் பக்கங்கள் மேல் பதிந்திருந்தாலும், மனமானது எங்கேயோ, சிதறிக் கொண்டிருக்கும். வாசிப்பது என்ன என்றே விளங்காது.

கிரகிப்பதின் குறைவானது, கவனக் குறைவாக மாறிவிடுகிறது. நானும் கூட வேதத்திலேயோ அல்லது ஒரு புத்தகத்திலேயோ ஒரு அதிகாரத்தை வாசிக்கும் போது திடீரென்று என்ன வாசித்தேன் என்றே அறியாதபடி மனம் வேறு எங்கோ போயிருக்கும். திரும்பவும் வாசித்த அதே பகுதியை வாசிக்கும் போது அவ்வதிகாரமே ஒரு புதிய பகுதியாயிருக்கும். காரணம், நான் முதல் முறை வாசித்த போது எனது கவனம் முழுமையும் ஊரைச் சுற்றியிருக்கும். நான் செய்வதில் எனது கவனத்தைச் செலுத்தாதபடியால் நான் வாசித்ததை கிரகித்துக் கொள்ளத் தவறிவிட்டேன்.

அலைந்து திரிகிற மனது தான் கிரகிப்பதன் தோல்வியை அடிக்கடி உருவாக்கிவிடுகிறது.

## அலைகிற சிந்தை

உன் நடையைக் காத்துக் கொள்

பிரசங்கி 5:1

“உனது நடையைக் காத்துக் கொள்” என்றால் “நீ போகும் வழியையோ உன் சமநிலையையோ இழந்துவிடாதே” என்பது தான் பொருள். தான் செய்யும் காரியத்திலே விலகாமல் தன் மனதை உறுதியாய்ப் பற்றிக் கொள்ளுதல் என்று ஒரு வேத மொழிபெயர்ப்பு கூறுகிறது.

அலைந்து திரிகிற மனது அல்லது சிந்தை எனக்கு இருக்கிறது. ஆகவே நான் அதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர பயிற்சி கொடுக்க வேண்டும். அது அவ்வளவு எளிதல்ல. சில நேரங்களில் அது திரும்பத் தலைதூக்கிவிடுகிறது. ஒரு காரியத்தை நான் செய்து கொண்டிருக்கையில் திடீரென்று எனது மனம் வேறு எங்கேயோ தனது கவனத்தைச் செலுத்துகிறபடியால் நான் முடிக்க வேண்டுமென்று விரும்புகிற காரியத்தை என்னாலே முடிக்க முடியாமற் போய் விடுகிறது. ஒரு பூரண கவனத்தின் எல்லைக்கு நான் வந்து சேராவிட்டாலும், எனது மனதை இங்கும் அங்கும் அலையவிடக்கூடாது என்ற உண்மையை நான் விளங்கிக் கொள்ளுகிறேன்.

"அலைதல் என்ற வார்த்தைக்கு நோக்கமற்று அலைதல், திரிதல், என்றும், குறிகோளற்றுச் சுற்றிவருதல் என்றும் ஒழுங்கீனமான நிலையிலே காரியங்களைத் தொடருதல் என்றும் அர்த்தங்களாக ஓர் அகராதி கூறுகிறது." (வெப்ஸ்டர்)

நீங்கள் என்னைப் போல இருப்பீர்களானால், ஒரு ஆராதனையில் நீங்கள் அமர்ந்து கொண்டு ஒரு ஊழியக்காரன் சொல்லும் வார்த்தைகளைக் கவனிக்கிறீர்கள். அவருடைய வார்த்தை உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாகவும் அனுபவிக்கக் கூடியதாகவும் உள்ளது. ஆயினும் திடீரென்று உங்கள் மனம் இங்கும் அங்கும் உலாவ ஆரம்பிக்கிறது. சற்று நேரம் கழித்து, அங்கு என்ன நடைபெற்றது என்பதை சற்றேனும் அறியாதவராய் விழித்துவிடுகிறீர்கள். ஆலயத்திலே உங்கள் சரீரம் இருந்தாலும், உங்கள் மனமெல்லாம் பல்பொருள் அங்காடியிலும், சமையல் அறையிலும் சுற்றிக் கொண்டிருக்கும்.

ஆவிக்குரிய யுத்தத்தில் நமது சிந்தை ஒரு போர்க்களம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது அங்கே தான் சத்துரு தனது தாக்குதல்களைக் கொண்டு வருகிறான். ஒருவன் சபைக்கு ஒழுங்காக வந்தாலும், தனது மனதை அங்கும் இங்கும் கூறப்படுவதில் செலுத்தாவிட்டால், அவன் சபைக்கு வந்து எந்தப் பயனும் இல்லை என்று பிசாசுக்கு நன்றாய்த் தெரியும். ஒருவன் தனது சிந்தையை அடக்கி, தான் செய்யும் கிரியையில் பதிக்காதபடி இருக்கும்போது அவன் தன் மனதை அடக்கி

எந்தக் கிரியையும் செய்து முடிக்க முடியாது என்று பிசாசுக்கு நன்றாய் தெரியும்.

நாம் ஒருவரோடு ஒருவர் பேசும்போது கூட இந்த அலைகிற சிந்தை செயலாற்றுகிறது. எனது கணவர் என்னோடு சில சமயங்களில் பேசுகையில், கொஞ்ச நேரம் தான் கவனிப்பதுண்டு . ஆனால், திடீரென்று அவர் என்ன பேசினாரென்று எனக்கே தெரியாது. காரணம், என் சிந்தை அங்கும் இங்கும் சிதறடிக்கப்பட்ட நிலையில் நான் காணப்படுகிறேன். எனது சரீரம் அங்கு இருந்தாலும், என் சிந்தையில் நான் எதையும் உட்கிரகிக்கவில்லை.

அநேக ஆண்டுகளாக எனக்கு இந்நிலை ஏற்படும்போது எனது கணவர் சொல்லுவதெல்லாம் எனக்குத் தெரியும் என்ற நிலையில் நான் மாய்மாலம் செய்வது வழக்கம். ஆனால், இப்போதோ அவரைப் பார்த்து தயவு செய்து இன்னொருமுறை எனக்குச் சொல்லுங்கள், எனது சிந்தையை நான் அலையவிட்டுவிட்டேன் எனக் கூறி எனது நிலையை சரிசெய்து விடுகிறேன்.

இப்படியாக இந்தப் பிரச்சனையை நான் மேற்கொள்ளப் பார்க்கிறேன். ஜெயிக்கக் கூடிய நிலையை நாம் அணுகும்போது எப்போதுமே நமக்கு வெற்றியுண்டு.

அலைந்து திரிகிற எனது சிந்தையோடு பிசாசு என்னைத் தாக்க முற்படும்போது, தான் கேட்டறியக் கூடிய ஒன்று அவ்வமயம் கூறப்பட்டது என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

இதை மேற்கொள்ளக் கூடிய வழிகளில் ஒன்று, பிரசங்க ஒலிநாடாக்களை வாங்கிக் கேட்டுக் கொண்டேயிருக்கலாம். ஆதலால், தேவாலயத்தில் கொடுக்கப்படுகிற செய்தியை உங்களால் கவனித்துக் கேட்க முடியாத ஓர் பிரச்சனை உங்களுக்கு இருக்குமானால், அந்த வாரச் செய்திகளை வாங்கி, அந்த ஒலிநாடாக்களை மீண்டும் மீண்டும் போட்டுக் கேட்டு, தேவ செய்திகளின் ஆழத்திற்குள்ளே வாருங்கள்.

*இதைக் கண்டு, பிசாசு சோர்ந்து போய் உங்கள் மனதை இனித் தொந்தரவு செய்யமாட்டான்.*

நீங்கள் மனநிலையில் பாதிக்கப்பட்டவர்கள் என்று பிசாசு உங்களையே சிந்திக்க வைப்பான். ஆனால், அந்த நேரத்திலே நீங்கள் உங்கள் சிந்தையை அடக்கி, ஆள அறிந்து கொள்ள வேண்டும். அது விரும்பிய இடமெல்லாம் சிதற, உங்கள் மனதிற்கு இடம் கொடுக்க வேண்டாம். நீங்கள் செய்கிற காரியத்திலே, உங்கள் சிந்தையையும், உங்கள் காலையும் உறுதியாய் காத்துக் கொள்ளுங்கள். சிறிது காலம் நீங்கள் அதிலே பயிற்சி செய்ய வேண்டியதாயிருக்கும். பழையவைகளை முறித்து, புதியவைகளைக் கட்டி எழுப்ப எப்பொழுதும் காலம் செல்லும். ஆனால் முடிவோ, மகிமையாயிருக்கும்.

## வியந்திடும் சிந்தை

எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து, நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்திலே சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஆதலால், நீங்கள் ஜெபம் பண்ணும்போது எவைகளைக் கேட்டுக் கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்.

மாற்கு 11:23-24

நமது அன்றாடக் கடமைகளைச் செய்கிற வேளையில் சில சந்தர்ப்பங்களில் ஓர் குழப்ப நிலையில் காரியம் நடக்குமோ, இல்லையோ என "வியந்து" நம்மை நாமே கேள்விகள் கேட்டுக் கொள்கிறோம் உதாரணமாக:

"நாளை சீதோஷ்ணம் எப்படி இருக்கிறதோ தெரியவில்லை."

"நாளைய தினம் எதை உடுத்தலாம் என எனக்குத் தெரியவில்லை."

"எனது மகன் என்ன மதிப்பெண் வாங்குவானோ என்று தெரியவில்லை."

"நாளை கருத்தரங்குக்கு எத்தனை பேர் வருவார்களோ எனத் தெரியவில்லை என்பதைப் போன்ற சந்தேகக் கேள்விகளே இவை."

இக்கேள்விகளின் பொருளை "சந்தேகக் குழப்பம்" எனப் பெயர்ச் சொல்லிலும், ஆர்வம், சந்தேகம் இவற்றால் நிறைவது என வினைச் சொல்லிலும், அகராதி நமக்குக் கூறுகிறது.

எல்லாவற்றையும் எனது கற்பனையில் போட்டுப் போட்டு, குழப்புவதைக் காட்டிலும், சாத்தியமான நிலையில் காரியங்களை செயல்படுத்துவதே நலம் என நான் கருதுகிறேன். மகன் என்ன மார்க்குகள் வாங்குவானோ என நினைப்பதற்குப் பதிலாக, அவன் நல்ல மதிப்பெண்கள் வாங்குவான் என விசுவாசிப்பதே மேலானது. எந்த உடையை உடுத்தப்போகிறேன் என மனதைக் குழப்புவதற்குப் பதிலாக எந்த உடையை உடுத்துவேன் எனத் தீர்மானிப்பதே மேலானது. காலநிலை, கூட்டத்திற்கு வரும் எண்ணிக்கை இவற்றினை மனதில் போட்டுக் குழப்பாதபடி காரியங்களைக் கர்த்தரிடம் சொல்லி எல்லாம் அவர் பார்த்துக் கொள்ளுவார் என்று அவரை நம்புவதே மேலானது.

சந்தேக வியப்புகள் ஒருவனை காரியங்களைத் தீர்மானிக்க முடியாத நிலையிலும், தீர்மானிக்க முடியாத நிலை, அவனைக் குழப்ப மனப்பாவனைக்குள்ளும், குழப்ப மனப்பாவனை, அவன் தன் விசுவாசத்தின் மூலம் தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலையையும் உருவாக்கி விடுகிறது.

மாற்கு 11:23-24ல் இயேசு அதைத்தான் கூறுகிறார். "நீங்கள் ஜெபம் பண்ணும்போது எவைகளைக் கேட்டுக் கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள் என்கிறார். கிடைக்குமோ இல்லையோ என சந்தேகிக்கக் கூடாது!"

கிறிஸ்தவர்களாகிய நமக்கு நம்பிக்கை தான், முக்கியம், சந்தேகம் அல்ல!

# அதிகாரம்
# 10

## *குழம்பிய சிந்தை*

# குழம்பிய சிந்தை

அதிகாரம்
10

> *உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும், ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்.*
>
> *ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன். சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான்.*
>
> *அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக.*
>
> *இருமனமுள்ளவன் தன் வழிகளிளெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்.*
>
> யாக்கோபு 1:5-8

வியந்துக்கொள்ளுதலும், குழப்ப நிலையும், ஒன்றுக்கொன்று உடன்பாடுள்ளது என நாம் கண்டு கொண்டோம். திட்டவட்டமான சிந்தையற்ற நிலைமை, சந்தேகத்தையும் குழப்பத்தையும் கொண்டு வருகிறது.

தேவனிடத்திலிருந்து நமது தேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு மனதில் ஏற்படும் வியப்பு, குழப்பம், சந்தேகம் இவைகளை மேற்கொள்ளும் உதவிகளை இவ்வசனங்களில் நாம் காணமுடிகிறது. இருமனமுள்ளவன் ஒரு போதும் ஒரு திட்டவட்டமான முடிவுகளை எடுக்க முடியாமல் முன்னும் பின்னும் ஊசலாடிக் கொண்டிருக்கிறான். அவன் ஒன்றை யோசித்துத் தீர்மானிக்கையில், அங்கே குழப்பநிலையும் சந்தேகங்களும், வியந்து கொள்ளுதலும் உள்ளே நுழைந்து இருமனநிலைக்குள்ளே குழப்பத்தை உருவாக்கி விடுகிறது.

நானும் கூட, எனது சிந்தை ஒரு போர்க்களம் என்றும் எனக்கு விரோதமாக பிசாசு ஒரு யுத்தத்தை எழுப்பியுள்ளான் என்றும் அறியாதவளாக நீண்ட காலம் வாழ்ந்து கொண்டிருந்தேன். எல்லாவற்றையும் குறித்து, நான் முற்றிலும் குழப்பம்

நிறைந்தவளாயும் ஏன் என்று விளங்காதவளாகவுமே என் வாழ்வில் இருந்தேன்.

## யோசித்துக் கொண்டேயிருத்தல் குழப்பத்தை மனதில் உருவாக்கும்

...நீங்கள் உங்களுக்குள்ளே யோசனை பண்ணுகிறதென்ன?

மத்தேயு 16:8

நாம் இதுவரை வியந்துக்கொள்ளுதலைப் பற்றி படித்தோம். சந்தேகத்தைப் பற்றி அடுத்த அதிகாரத்தில் படிப்போம், இப்போதோ மனக்குழப்பத்தை நான் இன்னும் சற்று உங்களுக்கு விளக்க விரும்புகிறேன்.

தேவபிள்ளைகளில் அதிக சதவிகிதத்தினர் ஒப்புக்கொள்ள த்தக்கவிதத்தில் குழப்பமடைந்துள்ளனர். ஏன்? நாம் ஏற்கனவே பார்த்ததைப் போன்று அதின் ஒரு காரணம் ஆச்சரியப்படுவது, மற்றொரு காரணம் விவேகமுள்ள வாதம் செய்வது. வாதம் என்ற வார்த்தைக்கான அகராதி விளக்கமானது, “ஒரு சர்ச்சைக்குரிய காரியம் அல்லது ஒரு நிகழ்வை நியாயப்படுத்தும் ஒரு நோக்கம் என்று அதனை வினைச்சொல்லாகவும் நியாயப்படுத்துதல் அல்லது பகுத்தறிதல் என்று பெயர்ச்சொல்லாகவும்” கொடுக்கப்பட்டுள்ளது.

ஒரு காரியத்தின் பின்னாலிருப்பது “என்ன” என்பதை ஒருவன் அறிய முற்படும்போது ஏற்படுவது பகுத்தறிதல் என்று எளிமையாக கூறலாம். பகுத்தறிதலானது மனதை ஓர் குறிப்பிட்ட சூழ்நிலையையோ, பிரச்சனையையே, நிகழ்வையோ சுற்றி சுற்றி வந்து அதின் எல்லா நுண்மையான பகுதிகளை அறிந்துக்கொள்ள முயலுகிறது. நாம் ஒரு கூற்றையோ அல்லது ஒரு போதனையையோ அது நியாயமானதாக இருக்கிறதா என்று சோதித்துப் பார்த்து அவ்வாறாக இல்லையேயென்றால் அதை புறக்கணிக்க பகுத்தறிந்துப் பார்க்கின்றோம்.

இப்படி நாம் யோசனை பண்ணுவதினாலே நமக்குள்ளே இருக்கும் தெய்வீக சித்தத்தை, சாத்தான் நம்மை விட்டுத் திருடிவிடுகிறான். தேவன் ஒன்றைச் செய்யும்படி நம்மை நடத்தும் போது, நமது மூளைக்கு அது

எட்டாமலோ அல்லது செயல்படுத்த முடியாத நிலையோ வரும்போது நாம் அதை அல்லத் தட்டிவிட அது நமக்கு ஓர் சோதனையாய் மாறிவிடுகிறது. ஒருவனை, ஒன்றினைச் செய்யும்படி தேவன் நடத்தும் போது எப்போதும் அவனுடைய மனதிற்குள் அங்கீகரிக்கிற ஒன்றாய் அமைகிறது. அவனது ஆவி அதை ஒத்துக்கொண்டாலும் அவனது சிந்தையோ அதை உதறித்தள்ளிவிடும். விசேஷித்த வண்ணமாக ஒருவேளை அக்குறிப்பிட்ட காரியம் வழக்கத்திற்கு மாறாகவோ அல்லது உங்கள் விருப்பத்திற்கு மாறாகவோ அல்லது தனிப்பட்ட ரீதியிலோ நீங்கள் அக்காரியத்தினிமித்தம் தங்களையே தியாகம் செய்யக்கூடிய நிலையிலோ வரும் போது இத்தெய்வீக நடத்துதலை நமது சிந்தையைவிட்டு உதறித் தள்ளி விடுகிறோம்.

## மனதிலே யோசனை பண்ணிக்கொண்டிராமல் ஆவியிலே கீழ்ப்படியுங்கள்

ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளான். அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும். அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்.

1 கொரிந்தியர் 2:14

ஆவிக்குரிய கீழ்ப்படிதலை சம்மந்தப்படுத்தி, ஒரு அனுபவ ரீதியான, சம்பவத்தை நமது விளக்கத்துக்காக கீழே காண்போமாக.

ஒருநாள் நான் ஒரு கூட்டத்திலே கலந்து கொள்வதற்காக புறப்படத் தயாராகிற வேளையில், எங்கள் ஊழியத்திற்கு மிகவும் உறுதுணையாக நின்ற உண்மையுள்ள ஒரு சகோதரியை ஆசீர்வதிக்கலாம் என்ற எண்ணம் எனது உள்ளத்திலே தோன்றியது.

“பிதாவே, ரூத் என்ற பெண்மணி எனது ஊழியத்திற்கு மிகவும் பயனுள்ளவளாக இருக்கிறாளே அவளை நான் ஆசீர்வதிக்க என்ன செய்யலாம்” என்று எனக்குள்ளே கேட்டுக் கொண்டேன்.

உடனடியாக எனது அறையில் தொங்கிக் கொண்டிருந்த ஒரு அழகிய சிவப்பு ஆடை எனது கண் முன் நின்றது. ஆண்டவர் நான் அதை எடுத்து ரூத்துக்குக் கொடுக்க விரும்புகிறார் என்று எனக்கு நன்கு தெரியும். அதை வாங்கி மூன்று மாதங்கள் ஆயினும் இன்னும் அதை நான் ஒரு முறையாவது அணிந்து கொள்ளவில்லை. அதை கடையிலிருந்து எப்படி வாங்கினேனோ அப்படியே இன்னும் தொங்கிக் கொண்டிருந்தது. அதை எத்தனையோ முறை அணிய விரும்பியும், எப்படியோ நான் அதை வாங்கி அணிய முடியாத ஒரு சூழ்நிலை உருவாகிவிட்டது.

அதைக் கண்டவுடனே இந்த நல்ல ஆடையை நான் ரூத்துக்குத் தான் கொடுக்க வேண்டும் என்று எனக்கு நன்றாய்த் தெரியும். என்றாலும் நான் அதை அவளுக்குக் கொடுக்க மனமில்லாமல் தேவனிடம் போராடிக் கொண்டிருந்தேன். ஆந்த ஆடைக்கு இணையாக அணிகலன்களை நான் வாங்கிவிட்டதாலும், அது ஒரு விலையேறப் பெற்ற ஆடையாய் இருந்ததாலும், மேலும் இதுவரை நான் அதை அணிந்து பாராததாலும் எனக்கு அதை அவளுக்குக் கொடுக்க மனம் வரவில்லை.

இவ்விதமான நிலையில் நான் என் மாம்ச சுபாவத்திற்கு என்னை விட்டுவிடாமல் தேவ சித்தத்திற்கு செவி கொடுத்திருந்தால் எல்லாமே சுகமாக முடிந்திருக்கும். ஆனால், நாம் தேவசித்தத்தைச் செய்ய விரும்பாத வேளையில் நமது மனதையே குழப்பிக் கொண்டு நம்மையே நாம் வஞ்சித்துக் கொள்ளும் திறமையோடு இருக்கிறோம் என சொன்னால் அது மிகையாகாது. ஒரு சில நிமிடங்களிலேயே நான் அந்தச் சூழ்நிலையை மறந்துவிட்டு எனது சொந்தக் கடமைகளைச் செய்ய ஆரம்பித்துவிட்டேன். அடிப்படையான உண்மை என்னவெனில் நான் அந்த நல்ல ஆடையைக் கொடுக்க விரும்பவில்லை என்பதே. இப்போது எனது மனம் சொல்லுவது என்ன? தேவன் கொடுத்த ஆசீர்வாதமான அந்த நல்ல ஆடையைப் பிசாசு சூறையாட விரும்புகிறான் என்ற தவறான எண்ணங்கள் தான் எனது சிந்தனையில் உருண்டோடி என்னையே குழப்பவாதியாக மாற்றிவிட்டது.

ஒரு சில வாரங்கள் கழித்து அதே இடத்திலே இன்னொரு கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி நான் செல்ல ஆயத்தப்பட்டுக் கொண்டிருந்தேன். அவ்வேளையிலும் கூட ரூத் என்ற அந்தப் பெண்ணின் நினைவு திரும்ப

எனக்கு வந்தது. நான் அவளுக்காக ஜெபிக்க ஆரம்பித்தேன். முந்தைய நிலையை முற்றிலுமாய் திரும்ப என் மனதில் கொண்டு வந்து "ஆண்டவரே,ரூத் எங்களுக்கு எவ்வளவோ உதவுகிறவளாயிருக்கிறாள்; அவளை நான் எப்படி ஆசீர்வதிக்கலாம் ?" எனக் கேட்டேன் உடனடியாக என் கண் முன் அந்தச் சிவப்பு ஆடை தான் வந்து நின்றது. எனது மாம்ச பலவீனத்தை என்னால் உணர முடிந்தது.

இந்தத் தடவை இதைக் குறித்த எந்த ஆராய்ச்சியும் எனது சிந்தையில் இல்லை; மாறாக, நான் எதைச் செய்ய வேண்டும் என்பதை கர்த்தர் தெளிவாகக் காண்பிக்கிற நிலையை நான் உணர்ந்தேன். "ஆயினும், ஆண்டவரே நீர் என்ன சொல்லுகிறீர் என்பதை அறிகிறேன். என்றாலும் நீர் சொல்லுவதை இப்பொழுது நான் செய்யப் போகிறதில்லை" என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன். அவருக்குக் கீழ்ப்படியாதபடி என் விருப்பப்படி நான் செய்யக் கூடிய நிலையில் அவரை அத்தனை அதிகமாய் நான் நேசித்துவிட்டேன் என நினைத்துக் கொண்டேன். ஆகவே, அந்தச் சிவப்பு ஆடையைப் பற்றி அவரிடம் நான் போராட ஆரம்பித்தேன்.

ஒரு சில நிமிடங்களில், முந்தைய சம்பவம் என் மனதிற்குள் வரவே, தேவ சித்தத்திற்கு மாறாக நான் கிரியை செய்ததை உணர்ந்து கொண்டேன். அப்படி நான் வழிவிலக எனக்குச் சிறிது நேரம் தான் பிடித்தது. அந்த ஆடை புதிதாயிருந்ததால், கர்த்தர் அதைக் கொடுத்து விடு என்று சொல்லமாட்டார் என்று எண்ணினேன். ஆனாலும் பழையவைகளை மட்டும் கொடுத்துவிட வேண்டும் என்று வேதம் சொல்லவில்லை! ஒரு ஆடை புதிதாயிருந்து அதை ரூத்துக்குக் கொடுத்தால் அதுவே பெரிய தியாகமும் பிரயோஜனமுமாயிருக்கும்.

இவ்வண்ணமாய் நான் ஆண்டவரிடத்தில் என் இருதயத்தைத் திறக்கிற வேளையில், நான் அந்தப் புதிய ஆடையை ரூத் என்பவளுக்குத் தான் வாங்கி வைத்துள்ளேன் என ஆவியானவர் தெளிவாய் பேச ஆரம்பித்தார். ஆகவே தான், நான் ஒருபோதும் அந்த ஆடையை அணிய முடியவில்லை. அந்த வேளையிலே ரூத்தை ஆசீர்வதிக்க தேவன் என்னை ஒரு கருவியாகப் பயன்படுத்தத் திட்டமிட்டிருந்தார். ஆனால் எனது ஆடையைப் பற்றிய சொந்த அபிப்பிராயத்தை நான் உடையவளாயிருந்தது அந்த அபிப்பிராயத்தை நான் பலி பீடத்தில்

வைக்குமட்டுமாய் கர்த்தர் என்னை ஆசீர்வதிக்க முடியவில்லை. ஆவியானவர் என்னை நடத்தவும் முடியவில்லை.

இக்குறிப்பிட்ட பாடம் அநேகக் காரியங்களை எனக்குப் போதித்தது. நமது சொந்த சிந்தையால் நாம் நடத்தப்படும் போது தேவசித்தத்தை செய்யாதபடி அது நம்மைத் "துரத்துகிற" நிலையையும், அதனால் என் மனம் எனக்குள்ளேயே குழம்புகிறதையும் நன்கு நான் விளங்கிக் கொண்டேன்.

1 கொரிந்தியர் 2:14ன் படி ஜென்ம சுபாவமுள்ள மனிதன் ஆவிக்குரியவைகளைப் புரிந்து கொள்ள மாட்டான். எனது ஜென்ம சிந்தையானது இது மட்டும் நான் அணிந்திராத ஒரு புத்தாடையை பிறருக்குக் கொடுக்க வேண்டும் என்பதை விளங்கிக் கொள்ளவில்லை. மாறாக யோசனையைப் பற்றிய பயத்தைத்தான் எனக்குள்ளே உருவாக்கிற்று. ஆனால் எனது ஆவிக்குரிய சிந்தையோ அதை நன்கு விளங்கிக் கொண்டது.

தேவனுடைய சித்தத்தில் முன்பைவிட இன்னும் அதிகமாக நடக்க இந்த உதாரணமானது இப்பகுதியில் உங்களுக்கு இன்னும் அதிகமான விளங்கிக்கொள்ளுதலை கொண்டுவரும் என்று நான் நம்புகிறேன்.

(அந்த ஆடையை நான் ரூத்துக்குக் கொடுத்தேனா என்பதை நீங்கள் அறிய விரும்பலாம். ஆம், அந்தச் சிவப்பு ஆடையை நான் அவளுக்குக் கொடுத்தேன். அடிக்கடி அவள் அந்த ஆடையை அலுவலத்திற்கு வரும் போது அணிந்து கொண்டு வருகிறாள்)

## வசனத்தின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்!

அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்.

யாக்கோபு 1:22

எப்போதெல்லாம் ஒன்றைச் செய்யும்படி வேத வசனம் சொல்லுகிறதோ அப்போதெல்லாம் நாம் அதைச் செய்யாதபடி விட்டுவிடும்போது, நமது

சிந்தையானது தேவையற்ற யோசனைகளாலே குழம்ப ஆரம்பிக்கிறது. சத்தியத்தை விசுவாசியாதபடி வேறொன்றை நாம் விசுவாசிக்க ஏதுவாகிறது. வசனம் சொல்லுகிற ஒவ்வொன்றையும் நாம் அப்படியே தியானித்து மூளை அறிவிலே அதை விளங்கிக் கொள்ள முடியாது, அதற்கு நமக்கு நேரமுமில்லை.

என்னவாயிருந்தாலும், நன்மையாயிருந்தாலும், தீமையாயிருந்தாலும் நான் அவருக்கு நம்மோடு பேசும் போது, நமக்குள்ளேயே அதைப் போட்டுக் குழப்பாதபடி அவர் சொன்னது சரியா அல்லது தவறா என்பதை விளங்கிக் கொள்வோம்.

*தேவன் பேசும்போது நாம் செயல்பட வேண்டும். அந்த வார்த்தைகளை ஆராய்ந்து ஆலோசியுங்கள். மனதிலே போட்டுக் குழப்பிக் கொள்ளாதீர்கள்.*

## மனிதனின் காரணத்தை அல்ல தேவனையே நம்புங்கள்

> உன் சுயபுத்தியின் மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிரு
>
> நீதிமொழிகள் 3:5

எதற்கும் காரணம் கேட்டுக் கொண்டு, மனதைக் குழப்ப வேண்டாம். இப்படிச் சிந்தித்துக் கொண்டிருந்தால், குழப்பமும், ஏமாற்றமுமே மிஞ்சும்.

ஏன் அநேகர் தங்கள் மனதில் குழப்பத்திற்கு இடம் கொடுக்கிறார்கள், என ஆண்டவரிடத்தில் ஒரு நாளில் கேட்டேன். எல்லாவற்றையும் கண்டுபிடிப்பதில் மனதைச் செலுத்துவதை நிறுத்தும்போது குழப்பமடைவதிலிருந்து அவர்கள் விடுதலையாவார்கள் என்று அவர்களுக்குச் சொல் என்று ஆண்டவர் கூறினார். இதை மெய் என்று நான் கண்டு கொண்டேன். காரணம் கண்டுபிடித்தலும், குழப்பமடைதலும் எப்பொழுதும் இணைந்து தான் செல்லும்.

நீங்களும் நானும் ஒரு காரியத்தைக் குறித்து இருதயத்தில் யோசித்து நமக்கு அவர் அறிவைக் கொடுக்க அவருக்கு முன்பாக அதை வைத்து

எதிர் நோக்குகையில், குழப்பமடையும் ஒரு நிமிடம் வருமாகில், அப்பொழுது ஆண்டவரைவிட்டு அதிக தூரம் சிந்தையில் நாம் போய்விடுகிறோம்.

அநேக காரணங்களால் இப்படி நமது மனதில் காரணக் கேள்விகள் வருகின்றன. நமக்கு அர்த்தமாகின்ற ஒரு காரியத்தை நன்கு நாம் ஆராய்ந்து அறிய முற்படலாம். ஆனால் அப்படி அறிய ஆராய்கையில் நமது மனதிற்கு சரியாய்த் தோன்றுவது இன்னும் சரியற்ற ஒன்றாகவே இருக்கலாம்.

மனுஷீக சிந்தையானது தத்துவத்தையும், கட்டளைகளையும், காரணங்களையும் விரும்புகிறது. எதை விளங்கிக் கொள்ளுகிறதோ, அதை வைத்தே காரியங்களில் குறுக்கிட விரும்புகிறது. ஆகவே தான் நமது சிந்தையின் சிறிய பகுதிகளில் காரியங்களை அப்படியே ஒழுங்காக அடுக்கி வைத்துக் கொள்ள விரும்புகிறோம். பின்னர், என் மனதிலே அல்லது சிந்தையிலே இக்காரியம் நன்கு பொருந்திவிடுகிறது என நம்மையே திருப்பதி செய்துவிடுகிறோம். ஆயினும் இன்னும் தவறாகவே நாம் இருக்கிறோம்.

பவுல் அப்போஸ்தலன் ரோமர் 9:1ல் நான் சொல்லுகிறது பொய்யல்ல, கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன் என்று பரிசுத்த ஆவிக்குள் என் மனச்சாட்சியும் எனக்குச் சாட்சியாயிருக்கிறது. எனக் கூறுகிறார்.

நாம் முன்பு வாசித்தது போல், சில வேளைகளில், சிந்தை, காரியங்களைச் செய்து, ஆவியை ஏவி விடுகிறது. மனதும், ஆவியும் இணைந்து செயல்படுகிறது. ஆனால் நமது ஆவியோ இந்தச் சிந்தை அல்லது மனதைக் காட்டிலும் சிறந்த பகுதியாய் சிந்தைக்கும் மேலாய்க் கனப்படுத்தப்படுகிறது.

நமது ஆவியிலே ஒன்றைத் தவறு என நாம் அறியும்போது அக்காரியத்தைச் செய்யும்படி, சிந்தையானது நம்மிடத்தில் பேசவோ அல்லது அதைச் செயல்படுத்தவோ இடம் கொடுக்கக்கூடாது. மேலும், நாம் ஒன்றை சரி என அறியும் போது அதைச் செய்யாதபடி நமது சிந்தையைத் தடை செய்ய அனுமதிக்கக் கூடாது.

அநேகக் காரியங்களில் தேவன் நமக்கு அறிவைக் கொடுத்திருந்தாலும் கர்த்தரோடு நடப்பதற்கும், அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிவதற்கும் எல்லாவற்றையும் அறிந்து விளங்கிக் கொள்ள அவசியமில்லை. நமது விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணும் படியாக சில நேரங்களில் தேவன் நமது வாழ்க்கையிலே பெரும் கேள்விக் குறிகளை ஆயுதமாகப் போட்டுவிடுவார். பதில் பெறாத கேள்விகளானது மாம்சீக வாழ்க்கையை சிலுவையில் அறைந்துவிடுகிறது. தேவனை மட்டும் நம்பி மற்ற எந்தக் காரியத்தையும் அலசி ஆராய்ந்து இருப்பது மனித வாழ்வுக்குக் கடினம் தான். ஆனால் ஒரு தடவை இச்செயல்முறை முற்றுப் பெற்றுவிடுமாயின் சிந்தை இளைப்பாற ஆரம்பிக்கிறது.

பகுத்தறிவையும், வெளிப்பாட்டின் அறிவையும், தடை செய்யும் “நெருக்கமான நிகழ்ச்சிகளே” இப்பேற்பட்ட அநாவசிய மன அலைச்சல்களுக்கும் காரணமாகும்.

இதை வாசிக்கும் உங்களைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. ஆனால், எனது சிந்தையில் வெளிப்படுத்தப்பட்ட யோசனைகள் சரிதான் என்று எனது ஆவியில் நான் அறிய தேவன் எனக்குக் காரியங்களை வெளிப்படுத்த வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நான் என் மனதில் குழப்பமடைந்து, ஒன்றுமில்லாமல் போகுமட்டும், நான் என் மனதை அங்கும் இங்கும் உருட்டிப் புரட்டவோ அல்லது தத்துவரீதியாய்க் காரியங்களைக் கண்டு பிடித்து அலசவோ விரும்பவில்லை. மாறாக, நான் தேவனை நம்புவதன் மூலமாக மன நிம்மதியையும், இருதய அமைதியையுமே அனுபவிக்க விரும்புகிறேன்.

நாம் ஒன்றை அறியாவிட்டாலும், எல்லாவற்றையும் அறிந்த ஒருவரை அறிந்து கொள்ளும் ஓர் திருப்தியான இடத்தில் மட்டும், நீங்களும் நானும் வளர வேண்டும்.

## கிறிஸ்துவையே அறிந்துகொள்ள உறுதிப்படுங்கள்

சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்தபோது தேவனைப்பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை.

> இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்.
>
> 1 கொரிந்தியர் 2:1-2

அறிவு, யோசனை இவற்றுக்கு நேராயுள்ள பவுலின் கண்ணோட்டம் இதுவே. அதை நான் விளங்கிப் பாராட்டுகிறேன். அநேக சந்தர்ப்பங்களிலே நான் எந்த அளவு குறைவாகக் காரியங்களை அறிந்து கொள்கிறேனோ, அந்த அளவுக்கு அதிக மகிழ்ச்சியுள்ளவளாயிருக்கிறேன். இதை நான் விளங்கிக் கொள்ள அநேக நாள் சென்றாலும், இறுதியிலே அதைச் சரியாய் அறிந்து கொண்டேன். சில நேரங்களில் நடைபெறும் சம்பவங்களை எந்த அளவுக்கு அதிகமாய் நாம் அறிகிறோமோ, அத்தனை அளவு அதிகமாய் பரிதபிக்கும் எல்லையை நாம் அடைந்து விடுகிறோம்.

காரியங்களை அறிந்து கொள்ளும் ஆர்வமும், ஏக்கமும், எனக்கு எப்பொழுதும் உண்டு. திருப்தியோடு காணப்பட எல்லாவற்றையும் சரியாய்க் கண்டுபிடிக்க முயலுவேன். இப்படியாகக் காரியங்களை அறிய வேண்டும் என, காரணங்களைத் தேடி அறிந்து கொள்ள முயலுதல்தான் எனது மனக் குழப்பங்களுக்குக் காரணம் என தேவன் எனக்கு காண்பித்தார். மேலும் அந்நிலையானது தேவன் எனக்குக் கொடுக்க விரும்பியவைகளை நான் பெற்றுக் கொள்ள முடியாதபடி தடை செய்தன என்பதையும் அவர் காண்பித்தார், பகுத்தறிவைப் பெற்றுக்கொள்ள மாம்சீக சுயயோசனையைத் தள்ளிவைக்க வேண்டும் என்ற உண்மையை தேவன் திட்டமாய் எனக்குக் காண்பித்தார்.

காரியங்கள் ஒழுங்கான நிலைக்கு வரும்போது நான் பத்திரமான நிலைக்குள் இருக்கிறேன் என்பதை இப்போது அறிந்து கொண்டேன். எனது வாழ்விலே எந்தவிதமான இளகிய முடிவுகளையும் நான் விரும்பவில்லை. ஒரு கட்டுப்பாட்டுக்குள் இருக்கும்படியாக நான் விரும்பினேன். காரியங்களின் விபரங்களை நான் அறியாத நிலை வரும் போது கட்டுப்பாட்டின் எல்லைக்கு அப்பாலே நான் இருப்பதைப் போலும் பயமுறுத்தப் பட்ட நிலையில் இருப்பதைப் போலுமே நான் உணருகிறேன். ஆனாலும் நான் ஒன்றிலே குறைவுபட்டவளாகக் காணப்பட்டேன். சரீரப்பிரகாரமாக சோர்வுற்றவளாகவும் மன நிம்மதியை அற்றவளாகவும் காணப்பட்டேன்.

இப்படிப்பட்ட தவறான மனநிலை தான், உங்கள் சரீரத்தைக் கூட பெலவீனப்படுத்துகிறது. உங்கள் ஆன்மீக, சரீர சக்திகளையெல்லாம் உறிஞ்சி விடுகிறது!

இப்படிப்பட்ட நிலையை நானும், என்னைப் போலத் தங்கள் மனதின் காரியங்களை அநாவசியமாய் ஆராயும்படி குழப்பிக் கொள்ளுகிற அடிமைத்தனத்தில் இருக்கிற ஒவ்வொருவரும் விட்டு விடும்படி தேவன் விரும்புகிறார். இது ஒரு அடிமைத்தனம் என்றே நான் சொல்லுவேன். ஒருவன் ஒரு போதைப் பொருளுக்கோ அல்லது குடிப்பழக்கததிற்கோ அடிமையாவது போல், தவறான மனநிலைமைக்கும் நாம் அடிமையாகிவிடுகிறோம். நான் அநாவசியமாக, காரியங்களை நோண்டி அறிய முயலுவதற்கு அடிமைப்பட்டவளாயிருந்தேன். ஆனால் இப்போது அதை விட்டு விட்ட போது அதை என்னைவிட்டு விலகியதற்கான அறிகுறிகளை அனுபவிக்கிறேன். என்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை அறியாததால், தனிமைப் பட்ட சூழ்நிலையையும் பயங்கொண்ட சூழ்நிலையையும் உணர்ந்தேன்.

எந்த அளவுக்கு அநாவசியமாய்க் காரியங்களின் உள்ளறைகளை ஆராய என் மன நேரத்தைச் செலவிட்டேனோ அந்த அளவிற்கு அதை விட்டுவிலகும் போது மனச்சமாதானத்தைப் பெற்றுக்கொண்டேன். கொஞ்சக்காலம் அது ஓர் வித அலுப்பை ஏற்படுத்தியிருந்தாலும் மாற்றப்பட்ட அந்நிலையை இப்பொழுதும் விரும்புகிறேன். எப்பொழுதும், எல்லாவற்றிலேயும் என் சிந்தையை இங்கும் அங்கும் ஓடவிட்டதால் அன்று அனுபவித்த வேதனை இப்போது எனக்கில்லை.

சந்தேகப்படுகிற இயல்பான நிலையில் நம்முடைய சிந்தை ஆட்கொள்ளப்பட்டிருப்பதை தேவன் விரும்பவில்லை.

பலவித காரணங்களால் நமது சிந்தை நிறையும்போது அது இயல்பான நிலையில் இல்லையென்பதை உணர்ந்து நாம் ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். வெற்றிகரமாய் இருக்க விரும்புகிறவனுக்கு இது இல்லாவிட்டாலும் தனது சிந்தையில் நடைபெறும் போர்க்களத்தில் நின்று வெற்றியை எதிர்பார்க்கிற விசுவாசிக்கு இந்த உணர்வு நிச்சயமாய் இருக்க வேண்டும்.

# அதிகாரம்
# 11

## *சந்தேகமும், அவிசுவாசமும் நிறைந்த சிந்தை*

# *சந்தேகமும், அவிசுவாசமும் நிறைந்த சிந்தை*

**அதிகாரம்**
11

*...அற்ப விசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய்?*

மத்தேயு 14:31

*அவர் அவர்கள் அவிசுவாசத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்.*

மாற்கு 6:6

வழக்கமாக நாம் அவிசுவாசத்தையும் சந்தேகத்தையும் இணைத்தே பேசுவோம். இவைகள் இரண்டும் ஒன்றோடொன்று இணைந்திருந்தாலும் ஒன்றுக்கொன்று அவைகள் வேறுபட்டவைகளே.

"இரு வழிகளில் சிந்தித்து, எந்த வழியைத் தெரிந்து கொள்ள வேண்டும் எனத் தெரியாமல் நிற்கும் நிச்சயமற்ற நிலைமை, குறைந்த விசுவாசம், கலைக்கப்பட்ட மனநிலைமை, நம்பிக்கைக்கும், பயத்திற்கும் இடையேயுள்ள அலைக்களிப்பு எனப் பல அர்த்தங்களை சந்தேகம் என்ற வார்த்தை நமக்குத் தெளிவுபடுத்துகிறது."

"எப்போதும் கீழ்ப்படியாமையை ஏற்படுத்துதல்" என்பது தான் கிரேக்க மொழியில் அவிசுவாசம் என்ற பதமாகும்.

சத்துருவின் சக்தி வாய்ந்த இந்த இரண்டு ஆயுதங்களை நாம் காணுகிற வேளையில், சந்தேகமானது ஒரு மனிதனை இரண்டு அபிப்பிராயங்களின் நடுவிலே தள்ளாட வைக்கிறது. அவிசுவாசமோ கீழ்ப்படியாமைக்குள்ளே நம்மை நடத்துகிறது.

எதைக் கொண்டு பிசாசு நம்மைத் தாக்க முற்படுகிறான் என்பதை நாம் அறிந்து கொள்ளுதல் நமக்கு மிகவும் உதவியாக இருக்கும். இந்தச் சந்தேகம், அவிசுவாசம் இவற்றோடு நாம் சரியாக இடைபடுகிறோமா?

## சந்தேகம்

நீங்கள் எந்த மட்டும் உங்கள் இரண்டு நினைவுகளால் குந்திக் குந்தி நடப்பீர்கள்?

1 இராஜாக்கள் 18:21

சந்தேகத்தைப் பற்றிய வெளிச்சத்தைத் தரக்கூடிய ஒரு சம்பவத்தை நான் கேள்விப்பட்டேன்.

வியாதிப்பட்ட ஒரு மனிதன் தனது வியாதியிலிருந்து விடுபட ஆரோக்கிய சம்பந்தமான வேத வசனங்களைக் குறிப்பிட்டு, தனது சுகத்தை நம்பி, அற்புதத்திற்காக விசுவாசித்துக் கொண்டிருந்தான். அப்படி வசனங்களை அறிக்கை செய்கிற வேளையில் தன்னையும் அறியாமல் சந்தேகத்திற்குள்ளே தன்னை உட்ப்படுத்திக் கொண்டான்.

இப்படிக் கடினமான ஒரு சூழ்நிலைக்குள்ளே போய் அவன் அதைரியப்பட ஆரம்பிக்கிற வேளையிலே, ஆவியின் எல்லைக்குள்ளே தேவன் அவனது கண்களைத் திறந்தார். ஒரு பிசாசு அவனுடன் பொய் பேசுவதையும் அவன் ஒரு போதும் சுகமடைவதில்லை எனத் தன்னுடன் பிசாசு சொல்லுவதையும் அவன் கண்டான். வேத வசனத்தை அறிக்கை செய்வதொன்றும் பயனுள்ளதாயிராது எனவும் பிசாசு குறிப்பிட்டான். ஆயினும், எப்பொழுதெல்லாம் வேத வசனத்தை அவன் அறிக்கை செய்தானோ அப்பொழுதெல்லாம் தன் வாயிலிருந்து ஒரு ஒளியானது ஒரு பட்டயம் போல் புறப்பட்டு வருவதையும் அதைக் கண்டு பிசாசு நடுங்கிப் பின்னாக விழுவதையும் கண்டான்.

இந்தத் தரிசனத்தை தேவன் இந்த மனிதனுக்குக் காண்பிக்கிற வேளையிலே, வேத வசனத்தை அறிக்கை செய்வதன் முக்கியத்துவத்தை இவன் நன்றாய் விளங்கிக் கொண்டான். தனக்கு விசுவாசம் இருப்பதைப் பிசாசு கண்டு சந்தேகத்தினால் அவனைத் தாக்குவதையும் நன்றாய்ப் புரிந்து கொண்டான்.

சந்தேகத்தை நமக்குள் தேவன் போடுகிறவரல்ல. அவனவனுக்கு தேவன் ஒரு விசுவாச அளவைக் கொடுத்திருக்கிறார். (ரோமர் 12:3) தேவன் நமது இருதயத்திலே இந்த விசுவாசத்தை வைத்திருக்கிற வேளையிலே, பிசாசு நம்மை சந்தேகத்தினால் தாக்குவதின் மூலம் நமது விசுவாசத்தை அவன் எதிர்மாறாக்குவான்.

தேவனுடைய வசனத்திற்கு நேர் எதிரான நிலையில் சந்தேகமானது சிந்தனையின் வடிவில் நமக்குள்ளே வருகிறது. ஆகவே தான் வேத வசனத்தை அறிந்து கொள்ளுவது நம் ஒவ்வொருவருக்கும் மிகுந்த

அவசியமாயிருக்கிறது. நாம் வசனத்தை அறிந்திருந்தால், பிசாசு எப்பொழுது நம்மிடத்தில் பொய் பேசுகிறான் என்பதையும் நாம் நன்கு அறிந்து கொள்ள முடியும். இயேசு தமது மரணம், உயிர்த்தெழுதலின் மூலம் கிரயம் கொடுத்து வாங்கியதை இந்தப் பிசாசு திருடி, அழிக்க நம்மிடத்தில் பொய் பேசுகிறான் என்பதை மறந்துவிடாதிருங்கள்.

## சந்தேகம் - அவிசுவாசம்

உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்று சொல்லப்பட்டபடியே, தான் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான்.

அவன் விசுவாசத்திலே பலவீனமாயிருக்கவில்லை, அவன் ஏறக்குறைய நூறு வயதுள்ளவனாயிருக்கும் போது, தன் சரீரம் செத்துப் போனதையும், சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனதையும் எண்ணாதிருந்தான்.

தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல்

தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான்.

ரோமர் 4:18-21

தேவன் ஒன்றை வாக்குத்தத்தம் பண்ணினார் என்பதை நான் அறிந்திருந்தும், நான் ஒரு யுத்தத்திலே ஈடுபட்டு சந்தேகமும், அவிசுவாசமும் என்னைச் சூழ்ந்த நிலையில், இந்தப் பகுதியை நான் வாசித்து, தியானிப்பது உண்டு.

அவனது சொந்த சரீரத்தின் மூலமாகவே ஒரு சுதந்தரவாளி தோன்றுவான் என ஆபிரகாமுக்குத் தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருந்தார். அநேக ஆண்டுகள் உருண்டோடினாலும் ஆபிரகாம் சாராள் இவ்விருவருடைய உறவினாலே எவ்விதபிள்ளையும் பிறக்கவில்லை. ஆயினும், ஆபிரகாம் இன்னும் தனது விசுவாசத்திலே உறுதியாய் நின்று விசுவாசத்தோடே தேவன் தன்னிடம் சொன்னவை,

நிச்சயமாய் நிறைவேறும் எனக் காத்திருந்தான். அவன் இவ்வண்ணமாய் உறுதியாய் நின்ற போது சந்தேக எண்ணங்களினால் அவன் அதிகமாய்த் தாக்கப்பட்டு, அவிசுவாசத்தின் ஆவி அவனை தேவனுக்குக் கீழ்ப்படியாமற் போகப்பண்ண வகை செய்தது.

முன்னேறிச் செல் என்று தேவன் சொல்லும்போது இந்தக் கீழ்ப்படியாமையானது தேவன் தரும் உற்சாக வார்த்தைகளைக் கைவிட்டுவிட நம்மைச் சோதிக்கிறது. கீழ்படியாமை தேவனுடைய நல்வார்த்தைகளை அவமதித்துவிடுகிறது. தேவன் தனிப்பட்ட ரீதியிலே நம்முடன் பேசுவதையும் இக்கீழ்ப்படியாமை அல்லத் தட்டிவிடுகிறது.

ஆனாலும், ஆபிரகாம் தொடர்ந்து உறுதியாய் இருக்கிறான். தொடர்ந்து தேவனை துதித்துக் கொண்டு அவருக்கு மகிமையைச் செலுத்துகிறான். அவன் அப்படிச் செய்கையில் அவன் விசுவாசத்தில் வல்லவனானான் என வேதம் சொல்லுகிறது.

தேவன் தம்மை ஒன்றைச் செய்யக் கேட்கவோ அல்லது சொல்லவோ செய்யும்போது அதை நம்பவோ அல்லது செய்யவோ தேவையான விசுவாசம் தேவனுடைய வார்த்தையின் மூலம் வருகிறது. தேவன் நாம் ஒரு காரியத்தைச் செய்ய எதிர்பார்த்து, அந்தக் காரியத்தைச் செய்ய நமக்குத் தகுதி உண்டு என்கிற விசுவாசத்தை நமக்கு தராமலிருப்பது என்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாகும். நமது விசுவாசம் நிறைந்த இருதயத்தை சாத்தான் நன்றாக அறிந்தவனாக, சந்தேகம் அவிசுவாசம் இவைகளினால் நமது வாழ்வை அவன் தாக்குகிறான்.

*நமக்கு விசுவாசம் இல்லை என்பதினாலே அல்ல, பொய்களினாலே சாத்தான் நமது விசுவாசத்தை அழிக்கவே விரும்புகிறான்.*

எனது ஊழிய அழைப்பை நான் பெற்ற வேளை, ஒரு சாதாரண காலை வேளையாக இருந்தது. அதற்கு மூன்று வாரங்களுக்கு முன்பாகத்தான், நான் பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவளாக இருந்தேன். முதல் வேத பாட ஒலிநாடாவை அப்பொழுதுதான் கேட்டு முடித்தேன். அந்தச் செய்தியின் தலைப்பு “அக்கரைக்குப் போவோம்” என்பதாகும். யார் வேண்டுமானாலும் எந்த ஒரு வசனத்தையும் எடுத்து ஒரு மணிநேரம் நன்றாக விளக்கிப் பேசி, மற்றவர்களை ஆசீர்வாதத்திற்குள்ளாக்க முடியும் என்று எனது இருதயத்திற்குள் ஊக்குவிக்கப்பட்டேன். வியந்தும் போனேன்.

எனது படுக்கையை நான் ஆயத்தமாக்குகிற வேளையிலே தேவனுடைய வசனத்தை நான் மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற ஆர்வம் என்னையும் அறியாமல் எனக்குள்ளே பொங்கி எழுந்தது. உடனே, "நீ எல்லா இடங்களிலும் போய் எனது வார்த்தைகளை உபதேசிப்பாய். ஒரு பெரிய உபதேச ஒலி நாடா ஊழியத்தை நான் உனக்குத் தருகிறேன்" என்று தேவன் என்னிடம் கூறினார்.

ஆண்டவர் என்னோடு உண்மையாகவே பேசினார் என்பதையும், அவர் கூறியதை என்னால் செயல்படுத்த முடியும் என்பதையும், நம்ப எந்தவிதமான இயற்கையான காரணமும் இல்லை. எனக்குள்ளே அநேகப் பிரச்சனைகள் இருந்து கொண்டிருந்தன. ஒரு ஊழியக்கருவியாக நான் பயன்பட என்னில் ஒன்றுமில்லை. ஆனால் தேவன் ஞானிகளை வெட்கப்படுத்தும்படி இவ்வுலகத்திலே பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார். (1 கொரி 1:27) மனிதனுடைய சரீரத்தை அல்ல. அவனது உள்ளத்தையே அவர் கண்ணோக்குகிறார். இருதயம் சரியாக இருக்குமானால் சரீரமும் தேவனால் சரியாகிவிடும். (1 சாமுவேல் 16:7)

விசுவாசிக்க இயற்கை நியதியில் எனக்கு ஒன்றுமே இல்லாவிட்டாலும், என் இருதயத்திலே அந்த வாஞ்சை வரும்போது, நான் எதைச் செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகிறாரோ, அதைச் செய்யும் படியான விசுவாசத்தினாலே நான் நிறைக்கப்பட்டேன். தேவன் ஒருவனை அழைக்கும்போது, அந்த அழைப்பை நிறைவேற்றக்கூடிய வாஞ்சை, திறமை, விசுவாசம் இவைகளையெல்லாம் தவறாமல் தந்துவிடுகிறார். இப்படி நான் தேவனாலே பயிற்சி பெற்று அவரின் வேலையை நிறைவேற்றும்படி காத்திருந்த காலம் எல்லாம், தொடர்ந்து பிசாசானவன் சந்தேகத்தினாலும் அவிசுவாசத்தாலும் என்னை நிரப்பிக் கொண்டு, தாக்கிக் கொண்டும் இருந்தான்.

தேவன் தமது ஜனங்களுடைய இருதயங்களை தரிசனங்களாலும் சொப்பனங்களாலும் நிரப்புகிறார். அவைகள் சிறிய விதைகளாக ஆரம்பிக்கின்றன. ஒரு ஸ்திரி கர்ப்பம் தரிப்பது போல், நாமும் ஆவிக்கேற்றபடி கர்ப்பம் தரிக்கிறோம். தேவனுடைய வார்த்தைகளை பேசும்படியான நிலையில் இப்படியாகிறோம். நாம் தரித்திருக்கிற கர்ப்பமான ஆவிக்குரிய சொப்பனங்களைக் கலைக்கும்படி பிசாசானவன்

கடினமாக முயற்சிக்கிறான். சிந்தைக்கு விரோதமாக சந்தேகம், அவிசுவாசம் இன்னும் இந்த இரண்டு ஆயுதங்களை அதற்காக உபயோகப்படுத்துகிறான்.

விசுவாசம் ஆவியினால் உற்பத்தியாக்கப்பட்டது. அது ஓர் ஆவிக்குரிய சக்தியாகும். நமது ஆவியோடு, நமது சிந்தையானது ஒருமிக்க, சத்துரு ஒருபோதும் விரும்புவதில்லை. தேவன் ஒரு காரியத்தைச் செய்ய தமது விசுவாசத்தை நமது இருதயங்களிலே கொடுக்கும்போது, நாம் அதைச் செய்ய முடியும் என்ற நிலையில் சாத்தியத்தோடு விசுவாசிக்கிற வேளையிலும், அதை செயல்படுத்தும் வேளையில் சாத்தானுடைய ராஜ்யத்திற்கு ஓர் பெருத்த சேதத்தை நாம் விளைவிக்கிறோம் என்று அவனுக்கு மிக நன்றாய்த் தெரியும்.

## தண்ணீரிலே தொடர்ந்து நடவுங்கள்

அதற்குள்ளாகப் படவு நடுக்கடலிலே சேர்ந்து, எதிர்க்காற்றாயிருந்தபடியால் அலைகளினால் அலைபட்டது.

இரவின் நாலாம் ஜாமத்திலே இயேசு கடலின் மேல் நடந்து, அவர்களிடத்திற்கு வந்தார்.

அவர் கடலின் மேல் நடக்கிறதைச் சீஷர்கள் கண்டு, கலக்கமடைந்து, ஆவேசம் என்று சொல்லி, பயத்தினால் அலறினார்கள்.

உடனே இயேசு அவர்களோடே பேசி திடன் கொள்ளுங்கள், நான் தான், பயப்படாதிருங்கள் என்றார்.

பேதுரு அவரை நோக்கி ஆண்டவரே நீரேயானால் நான் ஜலத்தின் மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும் என்றான்.

அதற்கு அவர் வா என்றார். அப்பொழுது பேதுரு படவை வீட்டிறங்கி, இயேசுவினிடத்தில் போக ஜலத்தின் மேல் நடந்தான்.

காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு, பயந்து அமிழ்ந்து போகையில் ஆண்டவரே, என்னை ரட்சியும் என்று கூப்பிட்டான்.

உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து அற்பவிசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய் என்றார். அவர்கள் படவில் ஏறினவுடனே காற்று அமர்ந்தது.

மத்தேயு 14:24-32

கடைசி வசனத்திற்கு நேராய் உங்கள் கவனத்தை நான் திருப்ப விரும்புகிறேன். சத்துருவின் சதி ஆலோசனையை நாம் இங்குக் காண முடிகிறது. இதற்கு முன் ஒரு போதும் செய்திராத ஒன்றைச் செய்யும்படி பேதுரு அவருடைய வார்த்தையின்படி அடி எடுத்து வைக்கிறான். இயேசுவைத்தவிர, ஒருவரும் ஒருபோதும் செய்யாத ஒன்றாக அது இருந்தது.

*இதற்கு விசுவாசம் தேவையாயிருந்தது!*

ஆனால் பேதுரு ஒரு தவறைச் செய்தான். புயலைக் காண்பதற்கு அதிக நேரத்தை அவன் செலவிட்டு விட்டான். ஆகவே பயந்து போனான். சந்தேகமும், அவிசுவாசமும் அவனை அதிகமாக அமிழ்த்தின நிலையில், அவன் அமிழ்ந்து போக ஆரம்பித்தான். தன்னைக் காப்பாற்ற அவன் இயேசுவை நோக்கிக் கதறினான். இயேசு அவனை உடனடியாகக் காப்பாற்றினார். ஆனால் *பேதுரு மீண்டும் படகுக்குள்ளே ஏறினவுடனே கொந்தளிப்பு நின்றது!*

ரோமர் 4:18-21ல் ஆபிரகாம், நடைபெற முடியாத ஒரு சூழ்நிலையில் கொஞ்சம் கூட சந்தேகப்பட்டு அசையவில்லை. ஆபிரகாம் நிபந்தனைகளை நன்கு அறிந்தவனாக, அதைப்பற்றி அவிசுவாசமாக நினைக்கவோ அல்லது பேசவோ இல்லை. நீங்களும், நானும் கூட நமக்கு நேரிடும் எதிர்மாறான சூழ்நிலைகளிலும் கூட நமது விசுவாசத்தைக் கட்டி எழுப்பக்கூடிய சூழ்நிலைகளிலே உள்ள காரியங்களை நமது சிந்தையைப் பதிப்போமாக.

ஆபிரகாம் கர்த்தரைத் துதிப்பதிலும், மகிமைப்படுத்துவதிலுமே தனது நேரத்தைச் செலவிட்டான். எதிர்மாறான சூழ்நிலைகளிலும் நாம் நமது வாழ்க்கையிலே சரியாய் நமக்குத் தெரிந்தவைகளைத் தொடர்ந்து செய்யும்போது நாமும் கூட தேவனை மகிமைப்படுத்துகிறோம். நமது வாழ்வில் ஆவிக்குரிய யுத்தம் தலைதூக்குகிற வேளையில்

எபேசியர் 6:14ன் படி நாமும் கூட சத்தியம் என்னும் கச்சையை நமது அரையில் இறுகக் கட்டுவோமாக.

புயலும், கொந்தளிப்பும் உங்கள் வாழ்வில் வருகிற வேளையில் இரண்டு கால்களையும் அவரில் பதித்தவர்களாக, உங்கள் முகத்தை நேராக்கினவர்களாய் பரிசுத்த ஆவிக்குள்ளாக படகிற்கு வெளியே தைரியமாக நில்லுங்கள். நீங்கள் பாதுகாப்பின் இடத்திற்குள்ளே கால் வைத்தவுடனே உடனடியாகப் புயல் நின்றுவிடுகிறது.

உங்களை ஒன்றுமில்லாமல் ஆக்கி பயமுறுத்தப் பிசாசு உங்கள் வாழ்வில் புயலைக் கொண்டு வருகிறான். அப்புயலின் வேளையில் உங்கள் சிந்தைப்பகுதி ஒரு போர்க்களமாக மாறிவிடுகிறது. உங்கள் எண்ணங்கள் உணர்வுகள் இவைகள் அடித்தளமாக்கி, தீர்மானங்களை நீங்கள் எடுக்கக் கூடாது. ஆனால், மாறாக உங்கள் ஆவியைச் சற்று பரிசீலித்துப் பாருங்கள். அவ்வாறு நீங்கள் செய்யும் போது, துவக்கத்தில் இருந்த அதே தரிசனத்தை மீண்டும் பெற்றுக் கொள்வீர்கள்.

## அலைக்கழிக்கப்பட இடம் கொடாதே!

உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்.

ஆனாலும், அவன் எவ்வளவாகிலும், சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவான். சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான்.

அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக.

யாக்கோபு 1:5-7

எனது போதகர் ரிக் ஷெக்டன், வேத கலாசாலையில், படிப்பை முடித்து வெளியே வரும்போது, தான் என்ன செய்ய வேண்டும் என அறியாத குழப்ப நிலையை விவரித்தார். அவரது வேதகலாசாலைப்

படிப்பை முடித்தவுடனே, மிசௌரி பட்டணமாகிய சொந்த ஊருக்குப் போய், ஒரு சபையை ஆரம்பிக்க வேண்டும் எனத் தேவன் அவரிடம் திட்டவட்டமாய் பேசினாராம். இப்படியாக அவர் தன் படிப்பை முடித்து, திரும்பி அந்த நகரத்திற்கு புறப்பட மனைவியுடனும், பிள்ளையுடனும் ஆயத்தப்படுகையில் அவருடைய கையில் ஏறக்குறைய ஐம்பது டாலர் மட்டுமே இருந்தது. அந்தத் தருணத்திலே சூழ்நிலைகளும் அவருக்குச் சாதகமாக அமையவில்லை.

தனது தீர்மானத்தை எடுக்க முயற்சிக்கிற வேளையில் வேறொரு இரண்டு நல்ல ஸ்தாபனங்களில் சேர்ந்து உயர்பதிவியில் பணியாற்ற அவருக்கு அழைப்பு வந்தது. அந்த ஸ்தாபனங்களில் அவருக்கு நல்ல சம்பளத்தோடு நிரந்தரமான வேலை கிடைக்கவும் வாய்ப்பு இருந்தது. ஊழிய சந்தர்ப்பங்களும் மிகவும் வசீகரமாயிருந்தன. மாத்திரமல்ல, ஒன்றுமில்லாவிட்டாலும் இவ்விரு ஸ்தாபனங்களில் பணியாற்றினாலே போதும். “நான்” என்ற பெருமையை எளிதாக அவர் பெற சகல வாய்ப்புகளும் இருந்தன. எந்த அளவிற்கு அவர் இதிலே இறங்க முயற்சித்தாரோ, அந்த அளவிற்கு அவர் தமது சிந்தையில் குழப்பமடைந்தார். திருவாளர் சந்தேகம் அவருக்குள்ளே நுழைந்துவிட்டது.

ஒரு சமயத்தில், தான் எதைச் செய்ய வேண்டும் என நன்கு அறிந்தபோதிலும், இப்போது இரண்டு வேலைகளில் எதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று தீர்மானம் செய்ய முடியாத குழப்பநிலையின் நடுவே அகப்பட்டுக் கொண்டார். அவரது பணப் பிரச்சனையானது அவர் ஆண்டவர் வாக்கின்படி மிசௌரிக்குப் போகத் தடையாயிருந்ததால் மற்ற இரண்டு அழைப்புகளில் ஒன்றை ஏற்றுக்கொள்ளும் ஒரு சோதனைக் கட்டத்தில் அவர் அகப்பட்டுக் கொண்டார். இவ்விருநிலையிலும் அவரது மனதில் எவ்வித சமாதானமும் இல்லை. இறுதியாக, செய்வதறியாமல் தனக்கு நல்ல வேலையைத் தருவேன் என்று கூறிய இருபோதகர்களில் ஒருவரை அணுகி, ஆலோசனையைக் கேட்டார். அவர் மிகவும் ஞானமாக இவரைப் பார்த்து, “நீ தனியாக ஓரிடத்திலே போய் அமர்ந்து உன்னுடைய மனதை முற்றிலும் வெறுமையாக்கிவிடு. உன் இருதயத்தின் ஆழத்தைச் சற்று உற்று நோக்கி, அங்கே என்ன இருக்கிறதோ அதன்படி செய் என்றார்!”

இப்போதகருடைய அறிவுடையை அவர் பின்பற்றியவுடனே அவருடைய இருதயத்தின் ஆழத்திலே தேவன் குறிப்பிட்ட செயின்ட் லூயிஸ் பட்டணத்திலுள்ள மிசௌரி நகரைத் தான் கண்டு கொள்ள முடிந்தது. தன்னுடைய கையிலுள்ள குறைந்த பணத்தை வைத்து எப்படி இதற்குக் கீழ்ப்படிய முடியும் என அவர் அறியாதவராய் இருந்தாலும் அவர் உடனே கீழ்ப்படிந்து தேவன் சொன்ன இடத்திற்குப் போகும்போது, கர்த்தர் அவரைக் கனப்படுத்தி, பெருத்த பலனைக் கட்டளையிட்டார்.

இன்றைக்கு இந்த ரிக்ஷெல்டன் அவர்கள், லூயிஸ் பட்டணத்திலுள்ள மிசௌரி நகரின் ஜீவனுள்ள கிறிஸ்தவ மையம் என்ற ஸ்தாபனத்தின் ஸ்தாபகரும், போதகருமாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார். இப்பொழுது இத்திருச்சபையிலே மூவாயிரத்துக்கும் அதிகமான ஆத்துமாக்கள் இருக்கின்றனர். மேலும் இச்சபை உலகத் தொடர் ஊழியத்தையும் செய்கிறது. இத்திருச்சபையின் ஊழியத்தின் மூலம் ஆயிரக்கணக்கானோருடைய வாழ்க்கை ஆசீர்வதிக்கப்பட்டு, மறுரூப வாழ்வை அடைந்துள்ளனர். நானும் ஐந்து ஆண்டுகளாக இச்சபையிலே உதவிப் போதகராகப் பணியாற்றியுள்ளேன். “வார்த்தையில் ஜீவன்” என்ற எனது ஊழியம் இச்சபையிலேதான் பிறந்தது. தனது இருதயத்திலே தேவன் கொடுத்த தரிசனத்தை நிறைவேற்றாதபடி, தன் தலையறிவு சொல்லுவது போல இப்போதகர் செயலாற்றியிருந்திருப்பாரேயானால், சந்தேகம், அவிசுவாசம் இவர் உள்ளத்தில் கிரியை செய்ய, இடம் கொடுத்திருந்தால் சாத்தான் தேவ ஆசீர்வாதங்களை அளவில்லாமல் திருடியிருந்திருப்பான். ஆனால் இவர் மூலமாக இயேசு வெற்றி சிறந்தார்.

## சந்தேகம் ஒரு தெரிந்துக்கொள்ளுதல்

காலையிலே அவர் நகரத்துக்கத் திரும்பி வருகையில், அவருக்குப் பசி உண்டாயிற்று.

அப்போழுது வழியருகே ஒரு அத்திமரத்தைக் கண்டு, அதனிடத்திற்போய், அதிலே இலைகளையன்றி, வேறொன்றையும் காணாமல், இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக்கடவது என்றார் உடனே அத்தி மரம் பட்டுப் போயிற்று.

சீஷர்கள் அதைக் கண்டு இந்த அத்திமரம் எத்தனை சீக்கிரமாய்ப் பட்டுப் போயிற்று என்று சொல்லி ஆச்சரியப்பட்டார்கள்.

இயேசு அவர்களை நோக்கி நீங்கள் சந்தேகப்படாமல் விசுவாசமுள்ளவர்களாயிருந்தால், இந்த அத்திமரத்திற்குச் செய்ததை நீங்கள் செய்வதுமல்லாமல் இந்த மலையைப் பார்த்து நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொன்னாலும் அப்படியாகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மேலும் நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்றார்.

மத்தேயு 21:18-22

அவருடைய சீஷர்கள் ஆச்சரியப்பட்ட நிலையில் எப்படி ஒரே ஒரு வார்த்தையில் அந்த அத்திமரம் பட்டுப் போயிற்று என்று இயேசுவைப் பார்த்துக் கேட்கையில், நீங்கள் எவ்வளவேனும் சந்தேகப்படாமல் *விசுவாசமுள்ளவர்களாயிருப்பீர்களானால், இந்த அத்திமரத்திற்கு நான் செய்த அதே கிரியைகளை உங்களாலேயும் செய்ய முடியும்* என்று தெளிவாய் விளக்கினார். இதைக் காட்டி பெரிய கிரியைகளையும் செய்ய முடியும் என யோவான் 14:12 ல் கூறினார்.

விசுவாசமானது தேவனுடைய ஈவாக இருக்கிறது என்ற உறுதி ஏற்கனவே நமக்குள்ளே இருக்கிறது. ஆகவே நமக்கு விசுவாசம் இருக்கிறது என்று நமக்குத் தெரியும் (ரோமர் 12:3) ஆனால் சந்தேகம் தெரிந்து கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். அது நமது சிந்தைக்கு விரோதமாகப் பிசாசு செய்யும் யுத்த தந்திரமாகும்.

நீங்கள் உங்கள் சுய சிந்தனைகளை தெரிந்து கொள்ளமுடியுமாதலால், சந்தேகங்கள் உங்களுக்குள்ளே வருகிற வேளையிலே, எதற்காக அது வருகிறதென்று நீங்கள் அறிந்து கொண்டு அதற்கு “இல்லை” எனச் சொல்லி, தொடர்ந்து விசுவாசியுங்கள்!

*தெரிந்து கொள்ளுதல்* உங்களிடத்தில் தான் உள்ளது!

## அவிசவாசம் கீழ்ப்படியாமையாகும்

அவர் ஜனங்களிடத்தில் வந்தபோது, ஒரு மனுஷன் அவரிடத்தில் வந்து, அவர் முன்பாக முழங்கால்படியிட்டு

ஆண்டவரே, என் மகனுக்கு இரங்கும், அவன் சந்திரரோகியாய்க் கொடிய வேதனைப்படுகிறான் அடிக்கடி தீயிலும், ஜலத்திலும் விழுகிறான்.

அவனை உம்முடைய சீஷர்களிடத்தில் கொண்டு வந்தேன் அவனைச் சொஸ்தமாக்க அவர்களால் கூடாமற்போயிற்று என்றான்.

இயேசு பிரதியுத்தரமாக விசுவாசமில்லாத மாறுபாடுள்ள சந்ததியே, எதுவரைக்கும் நான் உங்களோடு இருப்பேன்? எது வரைக்கும் உங்களிடத்தில் பொறுமையாய் இருப்பேன்? அவனை என்னிடத்தில் கொண்டு வாருங்கள் என்றார்.

இயேசு பிசாசை அதட்டினார். உடனே அது அவனை விட்டுப் புறப்பட்டது அந்நேரமே அந்த இளைஞன் சொஸ்தமானான்.

அப்பொழுது சீஷர்கள் இயேசுவினிடத்தில் தனித்து வந்து அதைத் துரத்திவிட எங்களால் ஏன் கூடாமற் போயிற்று என்று கேட்டார்கள்.

அதற்கு இயேசு உங்கள் அவிசுவாசத்தினாலே தான் என்றார்.

மத்தேயு 17:14-20

அந்த அவிசுவாசம் கீழ்ப்படியாமைக்குள் நடத்துகிறது.

இவ்வழிகளிலே சில காரியங்களைச் செய்ய வேண்டும் என ஒருவேளை இயேசு தமது சீஷர்களுக்குக் கற்றுக் கொடுத்திருந்திருக்கலாம். ஆனாலும், அவர்கள் அவிசுவாசம் அவர்களை அதற்குக் கீழ்ப்படியாமற் போகப் பண்ணிற்று. ஆகவே, அவர்களால் வெற்றியைக் காண முடியவில்லை.

எப்படியாயினும், இந்த அவிசுவாசமானது சந்தேகத்தைப் போலவே, தேவன் நாம் செய்யும் படியாக அழைத்த, அபிஷேகித்த ஒன்றைச் செய்யாமலும், நிறைவேற்றாமலும், இருக்கப் பண்ணிவிடுகிறது. அவருக்குள் நம் ஒவ்வொருவருடைய இருதயத்திலும் நாம் அனுபவிக்கும்

படியாக அவர் வாக்குப்பண்ணிய இளைப்பாறுதலை நாம் அடையாதபடியும், சமாதானத்தை மகிழ்ச்சியோடு அனுபவியாதபடியும் நம்மைத் தடை செய்து, நிறுத்திவிடுகிறது. (மத்தேயு 11:28-29)

## தேவனின் இளைப்பாறுதல்

ஆகையால், அந்தத் திருஷ்டாந்தத்தின்படி, ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்து போகாதபடிக்கு, நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக் கடவோம்.

எபிரெயர் 4:11

எபிரேய நிரூபத்தின் நான்காம் அதிகாரம் முழுமையையும் நீங்கள் வாசிப்பீர்களானால், தேவனுடைய ஜனங்களுக்குக் கிடைக்கும் இளைப்பாறுதலைப் பற்றி நீங்கள் காண முடியும். பழைய உடன்படிக்கையின்படி ஏழாம் நாள் ஓய்வு நாளாகக் கருதப்பட்டது. புதிய உடன்படிக்கையின்படியோ. இந்த இளைப்பாறுதலானது ஆவிக்குரிய இளைப்பாறுதலின் இடத்தைப் பற்றிக் கூறுகிறது. கவலை, பதட்டம் இவைகளினின்று விடுபடுவதே, ஒவ்வொரு விசுவாசிகளாக நீங்களும், நானும் தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்க முடியும்.

எபிரெயர் 4:11 ஐ கவனமாய் வாசிப்போமானால் விசுவாசத்தால் மாத்திரமே, நாம் அந்த இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்க முடியும் எனக் காண்கிறோம். அவிசுவாசம், கீழ்ப்படியாமை நமக்குள் இருந்தால் நாம் அதை அடைய முடியாது. அவிசுவாசம் நம்மை வனாந்தரப் பாதையில் தான் இருக்க செய்யும். ஆனால் இயேசுவோ, ஒருவன் விசுவாசத்தால் வாழும்போது மட்டுமே அடையக்கூடிய நிரந்தர இளைப்பாறுதலின் இடத்தை நமக்காகக் கொடுத்துள்ளார்.

## விசுவாசத்தின் மேல் விசுவாசத்தால் வாழ்வது

விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது.

ரோமர் 1:17

இக்குறிப்பைத்தெளிவாய் விளக்கும் படியான ஒரு சம்பவம் என் நினைவுக்கு வருகிறது. ஒருநாள் மாலையிலே எனது வீட்டுக்காரியங்களைக் கவனிக்கும்படி என் வீடடைச் சுற்றி, வந்து கொண்டிருந்தேன். அவ்வேளையில் நான் சந்தோஷமற்ற நிலையில், எனது இருதயத்தில் சமாதானமற்றவளாகவும் பரிதபிக்கக் கூடிய நிலையிலும் இருந்தேன். ஆண்டவரே, என்னிலே என்ன தவறு இருக்கிறது என அவரை நோக்கி மன்றாடிக் கொண்டிருந்தேன். அடிக்கடி இப்படி உணர்ந்து கொண்டிருந்த படியால் எனது பிரச்சனை என்ன என்பதை உண்மையாக நான் அறிய விரும்புகிறவளாய் இருந்தேன். இயேசுவோடு நான் நடக்கிற பாதையில் நான் கற்ற அத்தனைக் காரியங்களையும் தீவிரமாகப் பின்பற்ற முயன்று கொண்டிருந்தேன். ஆனால் நிச்சயமாகவே ஒன்றை இழந்தவளாகக் காணப்பட்டேன்.

அவ்வேளையில், தொலைபேசி மணி அடித்ததும் நான் பேசும்படி அதை எடுத்தபோது அருகிலுள்ள வேத வசன அட்டைகள் அடங்கிய ஒரு பெட்டியில் என் கை படவே சாதாரணமாக அதிலுள்ள ஒரு வசனத்தை வெளியே எடுத்தேன். அதிலே எனக்கு ஏதாவது ஓர் தைரியம் கிடைக்குமோ எனப் பார்த்தேன்.

ரோமர் 15:13 ஐ வெளியே எடுத்தேன். பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக.

*நான் அதைக் கண்டேன்!*

எனது முழுப்பிரச்சனையே எனது அவிசுவாசமும், சந்தேகமுமாய் இருந்தது. பிசாசினுடைய பொய்களை நம்பி நான் என்னையே மகிழ்ச்சியற்றவளாக ஆக்கிக் கொண்டிருந்தேன். நான் விசுவாசியாதபடியால் நான் சந்தோஷம் அற்றவளாகவே வாழ்ந்தேன். எதிர்மாறான நிலையிலே நான் காணப்பட்டேன். அவிசுவாசத்திலே வாழ்ந்து கொண்டு மகிழ்ச்சி, சமாதானத்தை நாம் எதிர்பார்க்கவே முடியாது.

*பிசாலையல்ல, தேவனையே விசுவாசிக்கத் தீர்மானம் எடுப்போமாக!*

விசுவாசத்தின் மேல் விசுவாசம் உடையவர்களாக இருக்கக் கற்றுக் கொள்வோமாக. ரோமர் 1:17 ன் படி இப்படியாகத்தான் தேவநீதி வெளியாகிறது. விசுவாசத்திலிருந்து நான், சந்தேகத்திற்கும் விசுவாசத்திற்கும் நேராகத்தான் வாழ்கிறேன் என்பதை தேவன் எனக்கு வெளிப்படுத்த வேண்டியது அவசியம் ஆயிற்று. அடிக்கடி இந்நிலையிலே நான் திரும்ப விசுவாசத்திற்குள்ளே போய் மீண்டுமாக அவிசுவாசம், சந்தேகத்திற்குள்ளே கடந்து போய் விடுகிறேன். இதுவே எனது முன்பின் ஓடுகிற வாழ்க்கையாய் அமைந்து விட்டது. ஆகவே எனது வாழ்வில் அதிகமான பிரச்சனைகளையும், பரிதாப நிலையையும் நான் சந்திக்க நேர்ந்தது.

யாக்கோபு 1:7-8 ன் படி இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான் என்றும், தான் தேவனிடத்திலிருந்து எதையும் பெற்றுக்கொள்ள முடியாது என்பதையும் மனதில் வைத்துக் கொள்வானாக. சந்தேகத்தில் வாழ வேண்டாம். இருமனமாக வாழவேண்டாம் என உள்ளத்தில் தீர்மானித்து விடுங்கள்.

தேவன் உங்களுக்காகத் திட்டமிட்ட ஒரு பெரும் வாழ்வை ஆயத்தமாக்கியுள்ளார். தன் பொய்களின் மூலமாகப் பிசாசு அதை உங்களைவிட்டுத் திருட அனுமதிக்க வேண்டாம். மாறாக, தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம் என்ற வசனத்தின்படி செய்படுவோமாக. (2 கொரிந்தியர் 10:5)

# அதிகாரம்
# 12

## பதட்டமும், கவலையும் நிறைந்த சிந்தை

# *பதட்டமும், கவலையும் நிறைந்த சிந்தை*

**அதிகாரம்**
12

> *பொல்லாப்புச் செய்ய ஏதுவான எரிச்சல் உனக்கு வேண்டாம்.*
>
> சங்கீதம் 37:8

பதட்டமும் எரிச்சலும், கர்த்தரை நாம் சேவியாதபடிக்கு நமது சிந்தையைத் தாக்கி விடுகிறது. சத்துரு நமது விசுவாசத்தைக் கீழே தள்ளவும், எந்த நிலையிலும் அது எழுந்து, நம்மை உறுதிப்படுத்தி நாம் ஜெயத்திற்குள்ளாக்கும் வாழ்வை நாம் நடத்தவும் விடாதபடி இவ்விரண்டு ஆயுதங்களையும் உபயோகப்படுத்துகிறான்.

சிலர் இந்த எரிச்சல், கவலை என்பதற்கு அடிமைகளாக இருக்கிறோம் எனக் கூறக்கூடிய அளவிற்கு பிரச்சனையை உடையவர்களாய் இருக்கிறார்கள். கவலைப்பட தங்களுக்குள் ஏதொன்றும் இல்லாவிடினும், வேறொருவருடைய சூழ்நிலையைக் குறித்துக் கவலைப்படுவார்கள். எனக்கும் இதிலே பிரச்சனை இருக்கிறதால், இப்பகுதியை நான் நன்றாக விளக்க முடியும்.

தொடர்ந்து, ஒன்றைப்பற்றி நான் கவலைப்பட்டபடியால் இயேசு மரித்ததின் மூலம் நான் பெற்றுக்கொள்ளத் தகுதியுள்ள சமாதானத்தை நான் ஒருபோதும் அனுபவிக்க முடியவில்லை.

*கவலைப்பட்டுக் கொண்டே சமாதானத்தையும் அனுபவிப்பது முற்றிலும் கூடாத ஒரு காரியம்.*

சமாதானம் என்பது ஒருவன் மேலே போடப்படுகின்ற ஒன்று அல்ல அது ஓர் ஆவியின் கனியாகும். (கலாத்தியர் 5:22) செடியில் நிலைத்திருக்கிற அனுபவத்தின் மூலம் கனி உண்டாகிறது. (யோவான் 15:4) நிலைத்திருப்பது என்பது தேவனுடைய வார்த்தையில் சொல்லப்பட்டது போல "தேவனுடைய இளைப்பாறுதலை" சம்மந்தப் படுத்தியதாகியுள்ளது.

கவலை என்ற வார்த்தைக்கு சங்கீதம் 37:8 எரிச்சலாகாதே என்றும், மத்தேயு 6:25ல் "மனதிலே கொள்ளாதே" என்றும் பிலிப்பியர் 4:6 ல்

“ஒன்றையும் குறித்துக் கவலை கொள்ளாதே” என்றும் 1 பேதுரு 5:7 ல் “கவலைகளை எறிந்துவிடு” என்றும் பல வேத மொழி பெயர்ப்புகள் நமக்குத் தெளிவுபடுத்துகின்றன. இந்தக் கவலை என்ற வார்த்தையை மட்டும் நமது பாடத்திற்கு எடுத்துக் கொள்வோம்.

## கவலை என்பது என்ன?

கவலை என்ற வார்த்தையை “கலங்கிய நிலையை உணருதல், பதட்டத்துக்குள்ளாக்குதல்” என்ற சொற்றொடர்கள் மூலம் அகராதிகள் நமக்கு விளக்குகின்றன. ஆனால் தடை செய்யும் எண்ணங்களினாலே ஒருவனை அலைக்கழித்தல் என்ற பொருள் சரியாக நமக்கு இச்சூழ்நிலையை விளக்குகிறது.

தடை செய்யும் சிந்தனைகளால் ஒருவன் அலைக்கழிக்கப்படுகிற நிலையை நான் காண்கையில், அதை மேற்கொள்வதற்கு நான் புத்திமானாக இருக்கிறேன் என்பதை அங்கே உணருகிறேன். எல்லாக் கிறிஸ்தவர்களும் இப்படித்தான் என்பதை நான் நம்புகிறேன். விசுவாசிகள் வெறுமனே உட்கார்ந்து தகாத சிந்தனையை சிந்திப்பதைக் காட்டிலும் அதிக ஞானத்தை உடையவர்களாயிருக்கிறார்கள் என நான் எண்ணுகிறேன்.

எந்த ஒரு காரியமும் கவலை கொள்வதன் மூலம் நிச்சயமாக சிறந்த நிலைக்கு வராது என்பதால் நாம், கவலைகொள்ளாமல் இருப்பதே நல்லது.

இந்த வரையறுப்பின் மற்றுமொரு பகுதியும் கூட எனக்கு விளக்கத்தை அளித்தது: “ஒரு மிருகம் மற்றொரு மிருகத்தை பற்களைக் கொண்டு தொண்டையைப் பிடித்து, உலுக்கி, சின்னப்பின்னமாக்குவதோ, அல்லது மீண்டும் மீண்டுமாக கடித்து குதறி துன்புறுத்துவதைப் போன்றது.”

இந்த வரையறுப்பைப்பற்றி நான் ஆழ்ந்து யோசிக்கையில், மேலே சொல்லியதைப் போன்றே தான் பிசாசும் கவலையைக் கொண்டு நம்மை சித்திரவதை செய்கிறான் என்ற ஒற்றுமையைக் கண்டேன். இவ்வாறாகத் தான் நாமும் கூட, ஒரு சில மணி நேரங்கள் நாம் கவலையில்

இருக்கும்போது உணருவோம் - யாரோ ஒருவா் நம் தொண்டையைப் பிடித்து நாம் சின்னப்பின்னமாகும் வரை நம்மை உலுக்கி எடுப்பதை போன்று உணருவோம். இந்த வரையறுப்பில் கூறியதை போன்று மீண்டும் மீண்டுமாக நம்மை கடித்து குதறுவதைப் போன்றுதான், நம் சிந்தனைகளும் மீண்டும் மீண்டுமாக நம் மனதில் தோன்றி நம்மை விடாமல் பற்றிக்கொண்டிருக்கிறது.

கவலையானது, உண்மையிலேயே சாத்தான் நம் மனதை தாக்குவதாகும். ஒரு விசுவாசி தன் மனதைக் கொண்டு சில காரியங்களை செய்ய அறிவுறுத்தப்படுகின்றான். அவற்றை நாம் செய்யாதபடி சத்துருவானவன் கவனமாகப் பாா்த்துக் கொள்கிறான். எனவே தேவன் நம் மனதை எந்த நோக்கத்துக்கென்று வடிவமைத்தாரோ, அதற்காக உபயோகப்படுத்தாதப்படிக்கு சாத்தான் தவறான சிந்தனைகளால் நம் மனதை நிரப்பிவிட முயலுகிறான்.

பின்வரும் அத்தியாயங்களில், நம் மனதைக் கொண்டு நாம் செய்ய வேண்டிய சரியானக் காரியங்களைப் பற்றி நாம் சம்பாஷிப்போம், ஆனால் இப்போதோ, கவலையைப் பற்றிய நம்முடையப் பாடத்தை, அது எவ்வளவு உபயோகமற்றது என்ற முழு வெளிப்பாட்டை நாம் பெற்றுக்கொள்ளும் வரை தொடருவோம்.

நம்மீது கவலை என்னும் தாக்குதல் வரும்போது மத்தேயு 6:25-34 வரை குறிப்பிடப்பட்டிருக்கும் வசனங்கள் நாம் வாசிப்பதற்கு சிறந்த ஓா் வேதபகுதியாகும். இந்த முக்கியமானப் பகுதியைப்பற்றி கா்த்தா் நமக்குச் சொல்லுவதை இந்த வசனங்கள் ஒவ்வொன்றின் மூலமாக நாம் அறிந்து கொள்வோமாக.

## வாழ்க்கை, காரியங்களைக் காட்டிலும் பெரிய ஒன்றல்லவா?

ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகாரத்தைப்பாா்க்கிலும்

ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் வசேஷித்தவைகள் அல்லவா?

மத்தேயு 6:25

அளவற்ற நிலையில் மகிழ்வோடு அனுபவிக்க உள்ள உயர்தரமான ஒன்றுதான் நமது வாழ்க்கை. யோவான் 10:10 ல் திருடன் திருடவும், கொல்லவும், அழிக்கவும் வருகிறானேயன்றி, வேறொன்றுக்கும் வாரான் என்றும் நானோ உங்களுக்கு ஜீவன் உண்டாகவும், அந்த ஜீவனை பரிபூரணப்படவும் வந்தேன் என்றும் இயேசு கூறுகிறார். அநேக முறைகளில் நமது ஜீவனைத் திருட சாத்தான் முயலுகிறான். அவைகளில் ஒன்றுதான் கவலை.

நாம் கவலைப்படுவதற்கு வாழ்க்கையில் ஒன்றுமே இல்லை, எந்தப் பகுதியுமே இல்லை என்று மத்தேயு: 6:25 ல் நாம் கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளோம்.

மற்ற எல்லாக் காரியங்களையும் உள்ளடக்கக்கூடிய அளவில் ஒரு சிறந்த வாழ்க்கையை தேவன் நமக்குத் தந்துள்ளார். ஆனாலும், நாம் அந்தக் காரியங்களைக் குறித்துக் கவலை கொள்ளும்போது, நாம் பெற்று அனுபவிக்கக்கூடிய ஆசீர்வாதங்களையும், நமது ஜீவனையும் இழந்து விடுகிறோம்.

## ஒரு பறவையைக் காட்டிலும் நீங்கள் அதிக விசேஷத்தவர்கள் அல்லவா?

ஆகாய்த்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள், அவைகள் விதைக்கிறதுமில்லை அறுக்கிறதுமில்லை, அவைகளையும் உங்கள் பரம பிதா பிழைப்பூட்டுகிறார். அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா?

மத்தேயு 6:26

நாமெல்லாரும் பறவைகளை சற்றுக் கவனித்துப்பார்த்தால் நலமாயிருக்கும். அதைத்தான் நாம் செய்யும்படி நமது ஆண்டவர் சொல்லுகிறார்.

அனுதினமும் இல்லவிட்டாலும், அவ்வப்போது இறகுகளையுடைய நமது பறவை நண்பர்கள் எவ்வாறு கவனிக்கப்பபடுகின்றன என்பதை நாம் கண்ணோக்கி நம்மை நினைப்பூட்டிக் கொள்ளுதல் மிக்க அவசியம். அடுத்த ஆகாரம் எங்கேயிருந்து வருகிறது என அவைகளுக்குத் தெரியாது. எனினும், கவலைப்பட்டு, சுருண்டு போன நிலையில் ஒரு பறவை ஒரு மரக்கிளையில் உட்கார்ந்திருப்பதை நான் ஒருபோதும் கண்டதில்லை.

*“நீங்கள் அப்பறவையைக் காட்டிலும் அதிக விசேஷித்தவர்கள் அல்லவா?”* என நமது ஆண்டவர் சுட்டிக் காண்பிக்கிறார்.

ஏழ்மையான நிலையின் சாயலாக உன்னோடு கூட நீ போராடிக் கொண்டிருந்தாலும், பரமபிதா உடுத்துவித்து கரிசனையோடு கவனிக்கிற பறவையைக் காட்டிலும், நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் திட்டமாய் விசுவாசிக்க முடியும்.

## கவலை கொள்ளுவதால் உங்களுக்கு லாபம் என்ன?

> கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்?
>
> மத்தேயு 6:27

கவலை, பயனற்ற ஒன்று என நாம் இதன் மூலம் அறிகிறோம். அது எதையும் தன்னிலே நிறைவேற்ற முடியாது. அப்படியானால் நாம் ஏன் கவலை, கவலை எனக் கதறுகிறோம்.

## பதட்டம் ஏன்?

> உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப்புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள். அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை. என்றாலும் சாலொமோன் முதலாய்த் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று,

உங்களுக்குச் சொல்லுகிறேன். அற்ப விசுவாசிகளே இன்றைக்கு இருந்து, நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா?

மத்தேயு 6:28-30

தேவன் தம்முடைய படைப்புகளில் ஒன்றை உதாரணமாகப் பயன்படுத்தி, ஒரு காட்டுப் புஷ்பத்தை அவர் அவ்வளவு அழகாய் உடுத்தி, சாலமோனின் மகிமையைக் காட்டிலும் சிறப்பித்து வைக்கக் கூடுமானால் எத்தனைக்கதிகமாய் அவர் நம்மை உடுத்துவித்துப் போஷித்துப் பாதுகாப்பார் என நாம் நம்ப முடியும் என்பதை தெளிவுபடுத்துகிறார்.

## ஆகையால், கவலையோ பதட்டமோ அடையாதீர்கள்!

ஆகையால், என்னத்தை உண்போம் என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று, கவலைப்படாதிருங்கள்.

மத்தேயு 6:31

நாம் என்ன செய்யப் போகிறோம் என்ற கேள்வியையும் நான் இதனோடே சேர்க்க விரும்புகிறேன். இந்தக் கேள்வியைத் தொடர்ந்து நமது செவிகளில் போட சாத்தான் பேய்களை ஏவிக் கொண்டேயிருக்கிறான். இப்பேய்கள் விசுவாசிகளின் செவிகளில் கடினமாக கேள்விகளைப் போட்டுப் போட்டு அவைகளுக்கு இவர்கள் பதில் கொடுக்க முடியாத நிலையில் ஒரு பதிலை தங்கள் சிந்தையில் யோசித்து, யோசித்து அவர்கள் நேரங்களை வீணாக்க முயற்சிக்கிறான். சிந்தையின் யுத்தக்களத்தில் தொடர்ந்து அவன் போர் தொடுத்துக் கொண்டே இருக்கிறான். ஒரு கிறிஸ்தவனை பிசாசு இந்த நிலையில் ஒன்றுமில்லாதவனாக்கி கீழே தள்ளிவிடுகிறான்.

நீங்கள் கவலைப்படாதிருங்கள் என்று நமது கர்த்தர் 6:31 ல் தெளிவாய்க் குறிப்பிடுகிறார். இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும் என்று மத்தேயு 12:34 குறிப்பிடுகிறது. நமது சிந்தைக்குள்ளே தொடர்ந்து தவறான காரியங்கள் போய்க் கொண்டேயிருக்குமானால் இறுதியாக அது

நமது வாயின் வார்த்தைகளால் வெளியே வரும் என சத்துருவுக்கு நன்றாய்த் தெரியும். நமது விசுவாசத்தை உறுதிப்படுத்தவோ அல்லது அவிசுவாசத்தை ஏற்படுத்தவோ ஏதுவான நிலையில் நமது வாயின் வழியாக வருகின்ற வார்த்தைகள் எப்பொழுதும் முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருக்கின்றன.

## வரங்களை அல்ல தேவனைத் தேடுங்கள்

> இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித் தேடுகிறார்கள். இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரம பிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.
>
> மத்தேயு 6:32-33

தேவனுடைய பிள்ளைகள் உலகத்தாரைப் போல இருக்கக்கூடாது எனத் தெளிவாக நாம் இங்கு காண்கிறோம். உலகம் உங்களுக்கடுத்த காரியங்களை நாடித் தேடுகிறது. நாமோ தேவனை நாடித் தேடுகிறோம். அப்படி நாம் அவரைத் தேடுவோமாகில் நமக்குத் தேவை என அவர் அறிந்த அனைத்துக் காரியங்களையும் அவர் நமக்குக் கூடத் தருவார்.

*தேவனுடைய கரத்தை அல்ல. அவருடைய முகத்தைத் தேட நாம் கற்றுக் கொடுக்க வேண்டும்!*

நமது பரலோகப் பிதா, நற்காரியங்களைத் தமது பிள்ளைகளாகிய நமக்குக் கொடுப்பதில் பெரிதும் மகிழ்ச்சி கொள்ளுகிறார். அவைகளை மட்டுமே நாம் தேடாதிருப்போமாக.

நாம் கேட்பதற்கு முன்பே நமது தேவை இன்னதென்பதை தேவன் அறிந்திருக்கிறார். பிலிப்பியர் 4:6 ன் படி நமது விண்ணப்பத்தை மாத்திரம் அவருக்குத் தெரியப்படுத்தும் போது அவர் தமது வேளையில் நமக்குப் பதிலளிப்பார். கவலைப்படுவதால் நமது தேவைகள் நிறைவேறிவிடுவதில்லை. மாறாக, கவலை நம்முடைய முன்னேற்றத்தைத் தடைசெய்யும்.

## அந்தந்த நாள்

ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள், நாளைய தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்.

மத்தேயு 6:34

கவலையும், பதட்டமும் சேர்ந்து, நாளைய தினத்தைக் குறித்துத் திட்டமிடுதற்காக இன்றைய நேரத்தைச் செலவிடுகிறது. இந்த நாளை தேவன் எதற்காக நமது கையில் கொடுத்துள்ளாரோ அதற்காகவே செலவிட நாம் கற்றுக் கொள்வோமாக.

*வாழ்வு என்பது இங்கே. இன்றே வாழவே அமைக்கப்பட்டது!*

ஒரு சிலர் மட்டுமே அனுதின வாழ்வை முழுமையாய் அனுபவித்து வாழ அறிந்தவர்கள். அவர்களில் ஒருவராக நீங்கள் இருக்க முடியும். யோவான் 10:10 ல் சாத்தானாகிய சத்துரு உங்கள் ஜீவனைத் திருடத்தான் வருகிறான் என்று இயேசு கூறுகிறார். இனி அவன் அப்படிச் செய்ய இடம் கொடாதிருங்கள். நாளைய தினத்தைக் குறித்துக் கவலைப்பட இன்றைய நாளை செலவிடாதிருங்கள். இன்றைக்குச் செய்யும்படியாக உங்களுக்குப் போதுமான காரியங்கள் இருக்கின்றன. அதற்கு உங்களது முழுக்கவனமும் தேவை. இன்றைக்கு உங்கள் காரியங்களை நீங்கள் கவனிக்க தேவனுடைய கிருபை உங்களுக்கு அதிகமாகத் தேவை. ஆனால், நாளைய தினத்திற்கான கிருபை, உங்களுக்கு நாளைய தினம் தான் கிடைக்கும். ஆகவே இன்றைய நாளை நாம் வீணாக்கக் கூடாது!

## எரிச்சலோ, பதட்டமோ அடையாதீர்கள்

நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.

பிலிப்பியர் 4:6

கவலை நம்மைத் தாக்கும் போது, நாம் கவனிக்க வேண்டிய ஒரு முக்கியமான வசனம் இதுவாகும்.

உங்கள் வாயைத் திறந்து தேவனுடைய வார்த்தையைத் தைரியமாகப் பேசுங்கள் என நான் உங்களை அதிகமாய் ஊக்குவிக்கிறேன். சத்துருவுக்கு விரோதமாக உபயோகிக்கப்பட வேண்டிய இருபுறமும் கருக்குள்ள பட்டயமே, வேத வசனம் (எபி 4:12, எபே 6:17). உறைக்குள் தூங்கும் பட்டயம் உதவாத பட்டயம்.

தமது வார்த்தையை, தேவன் கொடுத்திருக்கும்போது அதை உபயோகியுங்கள். இதேபோலுள்ள வசனங்களை நன்கு அறிந்து பிசாசைத் தாக்க உபயோகியுங்கள். இயேசுவும் அப்படித்தான் வார்த்தை அல்லது வசனத்தை உபயோகித்தார்.

## கற்பனை எண்ணங்களை கீழே தள்ளுங்கள்

> அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும் தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாக இருக்கிறோம்.
>
> 2 கொரிந்தியர் 10:5

தேவனுடைய வசனத்தோடு ஒத்துப் போகாத எண்ணங்களைப் பிசாசு உங்களுக்குத் தரும்போது தேவனுடைய வசனத்தைப் பேசுவதே நீங்கள் பிசாசுக்கு இடங்கொடாத ஓர் நிலையாகும்.

ஒரு விசுவாசியின் வாயிலிருந்து, விசுவாசத்தோடுள்ள வார்த்தை வெளிவரும்போது, அதுவே கவலை, பதட்டம் என்னும் சிந்தனையின் போரை எதிர்த்து போராடும் பெரும் ஆயுதமாகும்.

## கர்த்தர் மேல் உங்கள் கவலைகளையெல்லாம் வைத்து விடுங்கள்

> ஆகையால், ஏற்றக்காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். அவர் கவலைகளை யெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள்.
>
> 1 பேதுரு 5:6-7

பிசாசு ஒரு பிரச்சனையை நமக்குத் தர முற்படும்போது அவைகளை தேவன் மேலே போட்டுவிடக் கூடிய ஒரு சிலாக்கியம் நமக்கு இருக்கிறது. வைத்து விடு என்ற வார்த்தையானது எறிந்து விடு என்ற அர்த்தத்தோடு இங்கு வருகிறது. நீங்களும் நானும் நமது பிரச்சனைகளை தேவனிடத்தில் எறிந்து விடும்போது அவர் தம்முடைய கரத்தினாலே அதைப் பிடித்துவிடுவார் என விசுவாசியுங்கள். அவைகளை என்ன செய்ய வேண்டும் என்று அவருக்கு நன்றாய்த் தெரியும்.

நாம் கவலை கொள்ளாதிருக்க நம்மை நாமே நாம் தாழ்த்த வேண்டும் என இவ்வேத பகுதி நமக்குக் கூறுகிறது. கவலை கொள்ளுகிற ஒருவன், ஏதோ ஒரு வழியில் தனது பிரச்சினையைத் தானே தீர்த்துக் கொள்ளலாம் என நினைக்கிறான். சூழ்நிலைக்கேற்ப பரிகாரத்தைத் தானே தேடிக் கொள்ள, கவலை என்ற மனம் முற்படுகிறது. பெருமையுள்ளவன் தன்னிலே தானே பெருமிதம் நிறைந்தவனாய்க் காணப்படுகிறான். தாழ்மையுள்ளவனோ தேவனால் நிறைந்தவனாகக் காணப்படுகிறான். பெருமையுள்ளவன் கவலை கொள்கிறான். தாழ்மையுள்ளவனோ காத்திருக்கிறான்.

தேவன் ஒருவர் தான் நம்மை விடுதலையாக்க முடியும். ஒவ்வொரு சூழ்நிலையிலும் நாம் அவரை மட்டும் சார்ந்து அவருடைய இளைப்பாறுதலுக்குள்ளே நாம் பிரவேசிக்க முடியும் என்பதை நாம் அறிய அவர் விரும்புகிறார்.

## தேவனுடைய இளைப்பாறுதல்

எங்கள் தேவனே, அவர்களை நீர் நியாயத்தீர்க்கமாட்டீரோ? எங்களுக்கு விரோதமாக வந்த இந்த ஏராளமான கூட்டத்திற்கு முன்பாக நிற்க எங்களுக்குப் பெலனில்லை. நாங்கள் செய்ய வேண்டியது இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை. ஆகையால் எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக் கொண்டிருக்கிறது.

2 நாளாகமம் 20:12

இவ்வசனத்தை நான் அதிகமாய் விரும்புகிறேன். மேற்கண்ட வசனத்தில்

குறிப்பிடப்பட்டிருக்கிற மக்கள் மூன்று காரியங்களை நிச்சயமாய் விளங்கிக் கொள்ளக்கூடிய ஓர் நிலைக்கு வந்திருப்பார்கள்.

1. தங்கள் சத்துருக்களுக்கு விரோதமாகப் போராட அவர்களுக்கு பெலன் ஒன்றுமில்லை.

2. என்ன செய்ய வேண்டும் என்று அவர்களுக்குத் தெரியவில்லை.

3. தங்கள் கண்கள் தேவன் மேலேயே நோக்காமாயிருக்க அவர்கள் விரும்பினார்கள்.

இதே அதிகாரம் 15 முதல் 17 வரை வாசிப்போமானால் அவர்கள் இந்த உணர்வுக்குள்ளே வந்து, அவரை முற்றிலுமாய் அங்கீகரிக்கையில், தேவன் மகிழ்ந்து அவரிடம் சொன்ன வார்த்தைகளை இங்கு காண்கிறோம்.

> நீங்கள் அந்த ஏராளமான கூட்டத்திற்குப் பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள். இந்த யுத்தம் உங்களுடையதல்ல தேவனுடையது. இந்த யுத்தத்தைப் பண்ணுகிறவர்கள் நீங்கள் அல்ல. நீங்கள் தரித்து நின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பை பாருங்கள்.

தரித்து நிற்பது என்றால் என்ன? இயேசுவில் நிலைத்து நின்று தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பது என்பதாகும். நமது கண்களை அவர் மீது மட்டும் பதித்து தொடர்ந்து அவருக்காகக் காத்திருப்பது ஆகும். மாம்சீகத்திலே காரியங்களை நடத்த பயபக்தியுடன் கூடிய பயத்துடன் அவர் நம்மை வழிநடத்துகிற பாதையில் காரியங்களைச் செய்வதாகும்.

தேவனுடைய இளைப்பாறுதல் என நாம் கூறும்போது எதிர்ப்பு இல்லாத தேவ இளைப்பாறுதல் ஒன்றுமேயில்லை.

இரு வரைபட ஓவியர்கள் "சமாதானம்" என்ற வார்த்தையை விவரிக்கும்படி வரைபட ஓவியங்களைத் தயாரிக்கக் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். ஒருவர் அமைதியான ஒரு தண்ணீர் தடாகத்தையும், அதன் பின்னே தூரத்திலே அமைந்துள்ள ஒரு அழகிய மலையையும் வரைந்தார். மற்றொருவரோ, பாய்ந்து விழுகின்ற ஒரு நீர் வீழ்ச்சியையும் அதனோடே வெளியே காணப்படுகிற ஒரு மரத்தையும் அம்மரத்தின் கிளை ஒன்றிலே ஒரு அழகிய பறவையையும் வரைந்திருந்தார்.

இவ்விரு படங்களில் மெய்யான சமாதானத்தை எது காண்பித்தது? இரண்டாவது படமேயாகும். ஏனென்றால் எதிர்ப்பு இல்லாத சமாதானமே இல்லை. முதல் ஓவியம், ஒரு அசைவற்ற (உயிரற்ற) தன்மையை வெளிப்படுத்துகிறது. அதில் வரையப்பட்டிருக்கும் காட்சியானது ஒருவேளை மிக அமைதியான தோற்றத்தை வெளிப்படுத்தியிருக்கலாம். அப்படத்தைக் கண்ட ஒருவர், அவ்விடத்திற்குச் சென்று இளைப்பாற ஊக்கத்தைப் பெற்றிருக்கலாம். தேவனுடைய இளைப்பாறுதலை அது வர்ணிக்கவே முடியாது.

"சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன். உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை" என இயேசு, யோவான் 14:27 ல் கூறுகிறார். அவர் தரும் சமாதானம், ஆவிக்குரிய சமாதானம். புயல் நடுவே செயலாற்றுவதே அவருடைய இளைப்பாறுதல். புயல் இல்லாத வேளையில் அல்ல. நமது வாழ்வில் வரும் எல்லா எதிர்ப்புகளையும் அகற்றிவிட இயேசு இவ்வுலகத்தில் வரவில்லை. ஆனாலும் வாழ்க்கையின் பல வகையான புயலின் சூழ்நிலையில் தமது சமூகத்தைக் கொடுக்கவே வந்தார். அவரது நுகத்தை நாம் நம் மேல் ஏற்றுக் கொண்டு அவரிடத்தில் கற்றுக்கொள்ள வேண்டும். (மத்தேயு 11:29) அவருடைய வழிகளை நாம் கற்றுக்கொண்டு அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதே அதன் அர்த்தமாகும்.

*இயேசு கவலைப்படவேயில்லை. ஆகவே நாமும் கவலைப்பட அவசியம் இல்லை!*

ஒன்றையும் பெற்றுக் கொள்ளாத நிலையில் காத்திருந்து நீங்கள் கவலைப்படுவீர்களாகில் கவலைப்படுவதை நிறுத்துமுன் நீங்கள் நீண்ட நாள் காத்திருக்க வேண்டும். ஏனெனில் நான் எதிர்மாறாய் கூறாமல் உண்மையோடு கூறுகிறேன்.

மத்தேயு 6:34 குறிப்பிடுகிற படி நாம் நாளைக்காக கவலைப்படக் கூடாது. நாளைய தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும் என நாம் காண்கிறோம். இயேசுவே இதைச் சொன்னார். சமாதானத்தில் இருந்து கொண்டு புயலின் நடுவில் தேவனுடைய இளைப்பாறுதலை நாம் அனுபவிக்கும் போது,

தேவனுடைய வழிகள் செயலாற்றப்படுவது நிரூபிக்கப்படுகிறபடியால் தேவனுக்கு அதிகமான மகிமையை அது கொண்டுவருகிறது.

## கவலை, கவலை, கவலை!

என்னாலே செய்ய இயலாத காரியங்களைக் குறித்து கவலைப்பட்டு அநேக ஆண்டுகளை நான் விருதாவாய்க் கழித்துவிட்டேன். அவ்வாண்டுகளைத் திரும்ப நான் பெற்றுக் கொள்ள முடியுமானால் அவைகளை வேறுவிதமாய் உபயோகிக்க விரும்புகிறேன். எப்படியும், ஒரு முறை தேவன் கொடுத்த காலத்தை நாம் வீணாக்கிவிட்டு அதைத் திரும்ப உபயோகிக்க விரும்புவோமானால் அது கூடாத காரியம் ஆகும்.

அதற்கு மாறாக எனது கணவர் ஒருபோதும் கவலைப்படுவதேயில்லை. என்னோடு கவலைப்படாதவராய் இருக்கிறபடியால் நான் சில வேளைகளில் அவர் மேலே வருத்தப்பட்டதும் உண்டு. நம்பிக்கையில்லாத சூழ்நிலைகளிலே, தேவன் நமது தேவையைச் சந்திக்காத பட்சத்தில் நான் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிற நேரத்தில், அவர் அதைக் குறித்து எவ்வளவு கவலையில்லாதவராய் இருந்ததுண்டு. சில நேரங்களில் சமையல் கூடத்திலே உட்கார்ந்து, எனது செலவினங்களை கூட்டிப்பார்க்கிற வேளைகளில், நான் எதிர்பார்த்ததைக் காட்டிலும் அதிகமாக செலவுகள் இருந்தபடியாலும் போதுமான பணம் கையில் இல்லாதபடியாலும் வேதனையோடு கூட கவலைப்பட்டுக் குறை கூறுவதும் உண்டு. ஆனால் எனது கணவரோ அதைப் பற்றிக் கொஞ்சம் கூடக் கவலைப்படாதவராய் பக்கத்து அறையில் எனது பிள்ளைகளோடு விளையாடிக் கொண்டும் தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டும், பொழுது போக்கிக் கொண்டிருப்பார்.

விரும்பப்படாத தொனியில் நான் அவரோடு கூட நான் இவ்வளவு குழம்பிக் கொண்டிருக்கிற வேளையில், தயவுசெய்து நீங்கள் “ஏன் உங்கள் விளையாட்டை நிறுத்திவிட்டு என் அருகில் உட்கார்ந்து இக்காரியங்களைக் கவனிக்கக் கூடாது என அடிக்கடி கேட்டதும் என் நினைவுக்கு வருகிறது.” “நான் என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறாய்” என அதற்குப் பதிலாக அவா் கூறுவார். அப்பொழுது என்னாலே ஒன்றுமே சொல்ல முடியாது. இப்படிப்பட்டக் குழப்பமான

பொருளாதார சூழ்நிலையை நான் சந்திக்கும் வேளையில் இவர் இப்படி தன்னையே மகிழ்வித்துக் கொள்கிறாரே என நினைத்து அவர் மீது இன்னும் அதிகமாகக் கோபித்துக் கொள்ளுவேன்.

ஆனால் எனது கணவரோ, என்னச் சமாதனப்படுத்தி, நாம் கர்த்தரை நம்பி, ஜெபித்து அவருக்குத் தசமபாகம் ஒழுங்காய் செலுத்தி நமது பங்கை ஒழுங்காய் நிறைவேற்றுகிறபடியால், இது மட்டுமாய் அவர் நமது தேவைகளைச் சந்தித்தது போல், இன்னமும் சந்திப்பார் என என்னை ஊக்கப்படுத்தி, தொடர்ந்து தனது பங்கை தேவன் செய்வார் என்ற உண்மையை எனக்கு விவரிப்பார், நான் கவலைப்படுகிற வேளையில் எனது கணவர் கர்த்தரை நம்புவதை நான் தெளிவாகப் புரிந்துக்கொண்டு, அவரோடும் பிள்ளைகளோடும் அறைக்குள்ளே போய் என் மனதை மாற்றிக் கொள்ளுவேன், ஆனால் சற்றே நேரத்தில் மீண்டுமாய் அதே சிந்தனைகள் என் எண்ணங்களுக்குள் நுழையும். நான் என்ன செய்வோம்? இவைகளை எப்படி செலுத்தப் போகிறோம் என்றெல்லாம் கேள்விகள் வந்து, என்னை வருத்திவிடும்.

அதன் பின்பு ஒரு திரையில் சினிமா படம் பார்ப்பது போல் எனது கற்பனைத் திரையில் இவையனைத்தின் அழிவையும் நான் காண்பேன். அடமானம் வைத்த உண்மை. வெளியே தெரிந்த நிலை, காரைத் திருப்பிக் கொடுத்த நிலை நண்பர்களிடம் பணம் கேட்டு அவர்கள் மறுக்கவும் அவர்கள் முன்பாக வெட்கப்பட்ட நிலை. இப்படிப்பட்ட நிலையில் ஒவ்வொரு காட்சியாக எனது சிந்தைப் பகுதியில் தொடர்ந்து குறுக்கிட்டது. இப்படிப்பட்ட அனுபவத்திற்குள்ளே நீங்கள் கடந்து சென்றதுண்டா? ஆம், இல்லையென்றால் இந்த புத்தகத்தை நான் வாசிக்காமல் இருந்திருக்கலாம்.

இப்படிப்பட்ட கவலையின் சிந்தனைக்குள் நான் கடந்து வந்த பின்னர், பிசாசு சில நிமிடங்கள் என்னை விடுதலையாக விட்டு விட்டான். அவ்வேளையில் எனது சமையல் அறைக்குள்ளே சென்று எனது பில்கள் எல்லாவற்றையும் எடுத்து, கால்குலேட்டரை வைத்து கணக்குப் பார்ப்பதும், காசோரையைப் புரட்டுவதுமாக என்னை நானே குழப்பிக் கொண்டிருப்பேன், அப்படி எந்த அளவிற்கு நான் செய்தேனோ, அந்த அளவிற்கு நான் எனக்குள்ளாக முற்றிலுமாய் குழம்பிவிட்டேன். மீண்டும்

அதே சிந்தைகள் என் மனத்திற்குள் வந்தன. நான் எல்லாப் பொறுப்புகளையும் கவனிக்கிற வேளையில் எனது கணவரும் பிள்ளைகளும் விளையாடிப் பொழுதுபோக்குவதை என் மனம் ஏற்கவில்லை நான் எரிச்சலுள்ளவளாகி, எனது கணவர் மேல் எரிந்து விழுவேன்.

தேவன் மீது வைக்கவேண்டிய கரிசனையை என்மீது வைத்துக் கொண்டு நான் அதை அனுபவித்தேனேயொழிய பொறுப்பை நான் உணரவில்லை.

எனது திருமண வாழ்க்கையின் ஆரம்பத்தை நான் பின்னிட்டுப் பார்க்கையில் தேவன் எனக்குக் கொடுத்த அத்தனை மாலை நேரங்களைஙயம் நான் விருதாகக் கழித்துவிட்டேன், அவர் நமக்குக் கொடுக்கிற ஒவ்வொரு நேரமும், நமக்கு விலையேறப் பெற்ற நேரமாய் இருக்கிறது, ஆனால் அதை நான் பிசாசின் கரத்தில் கொடுத்துவிட்டேன், உங்களது காலம் உங்களுக்குக் கிடைத்த ஈவு. அதை ஞானமாய்ச் செலவு செய்ய வேண்டும். அந்த நேரம் ஒருபோதும் மீண்டும் உங்களுக்குக் கிடைக்காது.

தேவன் எங்களது தேவைகளை அதிசயமாய் சந்தித்தார், வேறுபட்ட வழிகளில் ஆண்டவர் எங்களை நடத்தி வந்தார். அவர் ஒருபோதும் எங்களைக் கைவிடவே இல்லை. தேவன் உண்மையுள்ளவராய் இருக்கிறார்.

## கவலைப் படாதிருங்கள் தேவனை நம்புங்கள்

> நீங்கள் பண ஆசையில்லாதவராய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள், நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே
>
> எபிரெயர் 13:5

தேவன் உங்களது தேவைகளைச் சந்திப்பாரோ இல்லையோ என்ற சந்தேகம் உங்களுக்குள் வருகிற வேளையில் உங்களைத் தைரியப்படுத்தி, பலப்படுத்தி வசனமாக்கும் இது.

நாம் நமது சிந்தையைப் பயணத்தின் மேல் பதிக்கக்கூடாது என்று இவ்வசனம் நமக்குக் கூறுகிறது. அவர் இவைகளெல்லாவற்றின் பொறுப்பையும் நம்மேல் எடுத்துக் கொண்டபடியால் நாம் கவலைப்பட அவசியமில்லை. நம்மை ஆண்டவர் கைவிடுவதிமில்லை. நம்மை விட்டு விலகுவதுமில்லை என்று வாக்கருளியிருக்கிறார்.

நமது பங்கை நாம் செய்வோமாக. ஆனாலும் ஒருபோதும் தேவனுடைய பங்கை நாம் செய்ய முயற்சி செய்யக் கூடாது. பாரம் அதிகப் பளுவாக இருக்கிற நிலையில், நீங்கள் அதைக்குறித்து கவனமாய் இல்லாவிட்டால், அது நம்மை அப்படியே நசுக்கிவடும்.

கவலைப்படவே வேண்டாம். கர்த்தரை நம்பி நன்மை செய், தேசத்தில் குடியிருந்து சத்தியத்தை மேய்ந்து கொள் (சங்கீதம் 37:3).

*இதுவே வாக்குத்தத்தம்!*

# அதிகாரம்
# 13

## *நியாயந்தீர்க்கிறதும்,*
## *குற்றம் காண்கிறதும்,*
## *சந்தேகிக்கிறதுமான சிந்தை*

## *நியாயந்தீர்க்கிறதும், குற்றம் காண்கிறதும், சந்தேகிக்கிறதுமான சிந்தை*

**அதிகாரம்**
13

நியாயந்தீர்த்து குற்றம் சுமத்தி, பிறரைச் சந்தேகிக்கிற மனப்பான்மையினால் பலரது வாழ்வில் அநேக உபத்திரவங்கள் வருகின்றன. இவ்வித சத்துருக்களினாலே திரளான உறவுகள் அழிக்கப்பட்டுவிடுகின்றன. மீண்டும் சிந்தைப் பக்தி ஓர் யுத்தக்களமாக மாறிவிடுகிறது.

*நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்.*
மத்தேயு 7:1

"நான் நினைக்கிறேன்" என்று சொல்லக்கூடிய எண்ணங்களானது ஒரு மனிதனைத் தனிமையாக்கக்கூடிய பிசாசினுடைய ஆயுதமாக அமைந்துவிடுகிறது. எல்லாவற்றையும் குறித்து தங்களது அபிப்பிராயங்களைக் கூறிக் கொண்டேயிருக்கும் மக்கள் மத்தியில் வாழ, பலர் ஒருபோதும் விரும்புவதேயில்லை.

செல்வந்தரான ஒரு தொழிலதிபரை நான் நன்கு அறிந்திருந்தேன். அவர் இயல்பாகவே அமைதியான குணம் உள்ளவர். அதிகமாகப் பேசமாட்டார். ஆனால் அவரது மனைவியோ அவர் அதிகமாகப் பேச வேண்டும் என்றே விரும்புவாள். அநேகக் காரியங்களைப் பற்றிய சிறந்த அறிவுள்ளவர். தனது கணவர் தனது தொழில் துறையில் நல் அறிவோடு பல காரியங்களை அறிந்திருக்கும்போது, மற்றத் தொழிலதிபர்கள் மத்தியிலே சில கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெறும் வேளையில் வேறு யாராவது முதலாவது தங்கள் வாயைத் திறந்து பேசினால் இவளுக்கு தனது கணவன் மீது மிகுந்த கோபம் வந்துவிடும். தனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் இவர் சொல்லியிருக்க முடியும். எனினும் இவர் அதைச் சொல்லவே மாட்டார்.

ஒரு மாலை வேளையிலே அவரும் அவரது மனைவியும் ஒரு விழாவிலிருந்து திரும்பி வரும்போது அவள் அவரைப் பார்த்து,

“மற்றவர்கள் அறிந்ததை அவர்கள் சொல்லும்போது, நீங்கள் ஏன் அதைச் சொல்லாதபடி அறிந்தவற்றை ஏன் மறைத்து, மௌனமாயிருக்கிறீர்கள் எனக் கடிந்து கொண்டாள். ஒன்றும் தெரியாதவர் போல ஏன் மௌனம் சாதிக்கிறீர்கள் எனக் கடுமையாகக் கணவனை விமர்சித்தாள்!”

அதற்கு அவர், “நான் அறிந்ததெல்லாமே, ஏற்கனவே எனக்குத் தெரிந்தவைகள் தான்” எனப் பதிலுறைத்தார். மற்றவர்கள் என்ன அறிந்திருக்கிறார்கள் என அறியவே நான் மெனம் சாதிக்கிறேன் எனப் பதில் கூறினார்.

அவருடைய அளவில்லாத ஐசுவரியத்திற்கு இதுதான் காரணம் என்பதை நான் அறிந்து கொண்டேன். அவர் ஞானத்தோடு செயல்பட்டார். ஒரு சிலர் ஞானமில்லாமல் செல்வத்தைச் சம்பாதிப்பார்கள் உறவு முறையில் ஞானத்தை உபயோகிக்காமல் சிலர் நண்பர்களைக் கொண்டிருப்பார்கள்.

உறவுகள் முறிக்கப்படக் காரணமே,மற்றோரைக் குறைகூறுவதும், நியாயந்தீர்ப்பதும், அபிப்பிராயங்களை வெளியிடுவதுமான செயல்கள் தான். இப்பகுதியிலே நமது சிந்தனைப் பகுதியை சாத்தான் தாக்குவதன் மூலமாக நீங்களும் நானும் தனிமையாக்கப்பட்டு புறக்கணிக்கப்படுவதையே சாத்தான் விரும்புகிறான். தவறான சிந்தனைகள், சந்தேகித்தல், இவைகளில் வெற்றிபெற இப்பாடம் நமக்கு மிகுந்த உதவியாய் இருக்கும்.

## நியாயந்தீர்த்தல்

கிரேக்க மொழியில் “நியாயந்தீர்த்தல்” என்ற பதத்திற்கு “மற்றவர்களுடைய தவறுகளில் ஓர் தீர்மானத்தை வெளியிடுதல்” அல்லது உருவாக்குதல் என விளக்கம் கொடுக்கப்படுகிறது.

ஒருவனைக் குற்றவாளியென்று தீர்க்க, தேவன் ஒருவருக்கு மாத்திரமே உரிமை உண்டு. ஆகவே நாம் ஒருவனைக் குற்றவாளியென்று தீர்க்கிற வேளையில் நம்மை தேவனுடைய அளவுக்கு உயர்த்திவிடுகிறோம் என்பதை உணர்ந்து ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

அது எனக்குள்ளே ஒருவிதமான "தெய்வீக பயத்தை" உருவாக்கிவிடுகிறது. என்னைப் பற்றிய அதிக வைராக்கியம் எனக்கு இருந்தாலும், நான் தேவனைச் சோதிக்க விரும்பவில்லை. எனது வாழ்வில் ஒருகாலத்தில் இந்நிலை பெரும் பிரச்சனையாய் இருந்ததால், சில அனுபவங்களை கர்த்தர் எனக்குக் கற்றுக் கொடுத்தார். அவைகள் உங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதால் அவைகளை உங்களுக்குக் கூறுகிறேன்.

குற்றவாளியென்று தீர்த்தல், அபிப்பிராயங்களைக்கூறுதல், நியாயந்தீர்த்தல் இவை அனைத்தும் ஒன்றொடொன்று தொடர்புடையது, ஆகவே இவையனைத்தையும் சேர்த்து, ஒரு பெரும் பிரச்சனையாக இதை நாம் அணுகுவோம்.

எது சரி என்பதை காணாதபடி, எங்கே தவறு இருக்கிறது என்பதை மட்டும் நான் எப்பொழுதும் காண்கிறபடியால் நான் குறைகண்டு பிடிப்பவளாகவே வாழ்ந்தேன். இவைகளுக்கு சிலர் அதிகமான இடம் தருகிறவர்களாகக் காணப்படுகிறார்கள் "வேடிக்கையாகவும், ஜாலியாகவும்" இருக்க வேண்டும் என விரும்புகிற சிலர் தாங்கள் வாழ்வில் மகிழ்ச்சியூட்டும் காரியங்களைத் தவிர எதையும் காண விரும்பமாட்டார்கள். ஆகவே தங்கள் மகிழ்ச்சியைப் பாதிக்கக் கூடிய எந்தக் காரியத்திலும் அவர்கள் சற்றேனும் கவனம் செலுத்துவதே கிடையாது.தங்களைளையே அடக்கிக் கொண்டு வாழும் இயல்புடையவர்கள் எது தவறோ அதைத் தான் காண விரும்புவார்கள். இப்படிப்பட்ட சுபாவம் படைத்தவர்கள் பொதுவாக மற்றவர்களின் தோற்றத்தையும் எதிர்மாறான அபிப்பிராயங்களையும் தான் வெளியிட்டுக்கொண்டிருப்பார்கள்.

நமது சுயவழிகளில், சிந்தனைகளில் தான் காரியங்களை அணுகுகிறோம் என நாம் அறிதல் மிகமிக அவசியம். நாம் எதை யோசிக்கிறோமோ அதை நாம் மற்றவர்களுக்குச் சொல்ல விரும்புவதுண்டு. நான் நினைப்பது எனக்கு சரியாகத் தோன்றாலாம். ஆனால் அவை பிறருக்கு சரியாகத் தோன்ற வேண்டும் என்ற அவசியமில்லை. அவ்வாறே, எனக்குத் தவறாகத் தோன்றுவது,பிறருக்கும் தவறாகத் தோன்ற வேண்டும்என்பதும் அவசியமில்லை. களவு

செய்யாதிருப்பாயாக என்ற வசனம் எல்லாருக்கும் பொருத்தமான ஒன்று என நாம் எல்லாரும் அறிந்திருக்கிறோம். ஆனால், ஒரு நாளில் நமது மனதனூடே கடந்து வரும் ஆயிரக்கணக்கானக் காரியங்களிலே, அவைகள் சரியோ, தவறோ அவைகளனைத்தும் நமது தனிப்பட்டத் தெரிந்து கொள்ளுதல்களேயாகும். வெளியிலிருந்து எந்தத் தலையீடும் இல்லாமல் சிந்திப்பதிலும் செயல்படுத்துவதிலும், ஜனங்கள் தமக்குள்ளே தெரிந்து கொள்ளுகிற காரியங்கள், அவைகளுடைய உரிமை என்றே நான் சொல்ல முடியும்.

அநேகக் காரியங்களைச் சந்திப்பதிலே நானும், எனது கணவரும் மாறுபட்டவர்களாகவே இருக்கிறோம். உதாரணமாக எங்கள் வீட்டை எப்படி அழகுபடுத்துவது என்பது அவைகளில் ஒன்றாகும். ஒருவருடைய தெரிந்து கொள்ளுதல் மற்றவருக்குப் பிடிக்கவில்லை என்பதினால் அல்ல. ஆனால் வீட்டுப் பொருட்களை வாங்கும்படி நானும் எனது கணவரும் எப்பொழுதெல்லாம் வெளியே போகும் போது, எனது கணவர் ஒன்றை விரும்புவார். நானோ வேறொன்றை விரும்புவேன். ஏன்? நாங்கள் இருவரும் தனித்தனி நபராக இருக்கிறபடியால் தானே. எனது அபிப்பிராயத்தைப் போலவே அவருடைய அபிப்பிராயமும் நல்லதாகவே இருக்கிறது. அதைப்போலவே அவரது அபிப்பிராயமும் என்னுடைய அபிப்பிராயத்தைப் போலவே நன்றாக உள்ளது. கருத்துக்கள் தான் வித்தியாசமே தவிர வேறொன்றுமில்லை.

என்னுடைய பல காரியங்களில் என் கணவர் ஒத்துப்போகாதவராக இருந்தார். எனினும், அவரில் எந்தத் தவறும் இல்லை என என் கணவரைப் புரிந்து கொள்ளுவதற்கு எனக்குப் பல ஆண்டுகள் பிடித்தன. எனது கருத்துக்களோடு அவர் உடன்படாதபடியால் அவரிடத்தில் ஏதோ ஒரு பிழை இருக்கிறது என நான் நினைத்தேன் என்பதை அவருக்கு எடுத்துச் சொல்வது எனது வழக்கமாய் இருந்தது. இப்படிப்பட்ட எனது கருத்துக்களின் மூலம் எங்கள் இருவருக்குமிடையே கருத்து வேறுபாடுகளும் ஏற்பட்டன. எங்களது உறவுகளும் முறிந்தன.

## பெருமை: "நான்" என்ற ஓர் பிரச்சனை

உங்களில் எவனானாலும் தன்னைக் குறித்து எண்ணவேண்டியதற்கு

மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்குத் தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ண வேண்டும்.

ரோமர் 12:3

உள்ளத்தின் ஆழத்திலே காணப்படுகிற பெருமையின் விளைவுதான் மற்றவர்களைக் குற்றம் சொல்லுதலும், குறைகூறுவதுமாகும். நாம் இருக்க வேண்டிய நிலையைக்காட்டிலும் “நான்” என்ற நிலைமை நமக்குள்ளே பெரிதாய் இருக்குமானால் அது பல பிரச்சனைகளை உருவாக்கும் என்பதை நாம் கற்றுக்கொள்ள போகிறோம். மேட்டிமையான சிந்தையைப்பற்றி வேதம் நம்மை மீண்டும் மீண்டும் எச்சரிக்கிறது.

எப்பொழுதெல்லாம் நமது வாழ்வின் ஓர் குறிப்பிட்ட பகுதியில் நாம் முன்னேறுகிறோமோ, அப்பொழுதெல்லாம், அது தேவன் நமக்கு அருளிய மேலான கிருபை என உணர வேண்டும். அல்லாமல் நம்மைத் திட்டமாய் அறிந்து கொள்ளுதல் அவசியமாய் இருக்கிறது. நம்மைக் குறித்தே நாம் மேட்டிமை சிந்தையுள்ளவர்களாயும் இருப்போமானால், நாம் மற்றவர்களைப் பார்க்கிற வேளையில் அவர்களைக் கீழான நிலையில் நோக்குகிறவர்களாகவே இருப்போம் என்பதில் எவ்விதச் சந்தேகமுமில்லை. இப்பேற்பட்ட மேட்டிமையான மனப்பான்மை, தேவனால் அங்கீகரிக்கப்படாததாயும், நமது வாழ்வில் சத்துரு எளிதாக நுழைவதற்கு பல வழிகளைத் திறக்கக்கூடியதாகவும் இருக்கிறதை நாம் திட்டமாக அறிந்துக்கொள்ள வேண்டும்.

## பரிசுத்த பயம்

சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப்பண்ணுங்கள். நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக் குறித்து எச்சரிக்கையாயிரு.

ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்.

ஒருவன், தான் ஒன்றுமில்லாதிருந்தும், தன்னை ஒரு பொருட்டென்று எண்ணினால், தன்னைத்தானே வஞ்சிக்கிறவனாவான்.

கலாத்தியர் 6:1-3

இவ்வசனத்தைக் கவனமாய் வாசிப்போமாகில் நாம் மற்றவர்களில் காண்கிற குறைபாடுகளில் அவர்களை எவ்வாறு அணுக வேண்டும் என அறிகிறோம். நமக்குள்ளே எவ்வாறான மனநிலையை உருவாக்க வேண்டும் என்பதை அது நமக்குக் காண்பிக்கிறது. மற்றவர்களைக் குறை சொல்லுவதைப் பற்றி நாம் மிகவும் கவனமுள்ளவர்களாய் பரிசுத்த பயத்தோடு கூட செயலாற்றுகிறவர்களாய் இருக்க வேண்டும்.

## நியாயந்தீர்க்க நாம் யார்?

> மற்றொருவனுடைய வேலைக்காரனைக் குற்றவாளியாகத் தீர்க்கிறதற்கு நீ யார்? அவன் நின்றாலும் விழுந்தாலும் அவனுடைய எஜமானுக்கே அவன் உத்தரவாதி. அவன் நிலை நிறுத்தப்படுவான். தேவன் அவனை நிலைநிறுத்த வல்லவராயிருக்கிறாரே.
>
> ரோமர் 14:4

இவ்வண்ணமாய் சிந்தித்துப் பார்ப்போம். ஒருவேளை உங்கள் அயலகத்தார் உங்கள் வீட்டு வாசலில் வந்து, உங்கள் பிள்ளை என்ன ஆடை அணிய வேண்டும். எந்தப் பாடத்தைச் சிறப்புப் பாடமாய் எடுத்துப் படிக்க வேண்டும் என்று அறிவுரை கூறுவதாகக் கற்பனை செய்து பாருங்கள். அதற்கு எப்படிப் பதில் கொடுப்பீர்கள் என்று நீங்களே சிந்தித்துக் கொள்ளுங்கள். உங்கள் வீட்டு வேலைக்காரியை அயல் வீட்டுக்காரர் திருத்த முன்வந்தால் நீங்கள் பொறுத்திருப்பீர்களா?

இந்நிலையில் தான் இந்த வசனத்தை நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். நாம் ஒவ்வொருவரும் தேவனுக்குச் சொந்தமானவர்கள், நமக்குள் ஆவிக்குரிய பலவீனங்கள் இருப்பின், அவைகளை நமது வாழ்வில் சரியாக்கி நம்மை நிலை நிறுத்த அவர் வல்லவராய் இருக்கிறார். மனிதருக்கு அல்ல. தேவனுக்கே நாம் பதில் கூற வேண்டியவர்களாய் இருக்கிறோம். ஆகவே நாம் பிறரைக் குற்றம் சொல்லாதபடியும், நியாயந்தீர்க்காதபடியும் ஜாக்கிரதையாயும் இருப்போமாக.

மக்களுடைய எண்ணங்களில், குறைசொல்லும் ஆவியையும், நியாயந்தீர்க்கும் ஆவியையும் உருவாக்குவதில் பிசாசு எப்போதும்

தீவிரமாய்ச் செயல்படுவான். அதற்காக குட்டிச்சாத்தான்களையும் அவன் ஏவிவிடுவான். நான் ஒரு பூங்காவில் அமர்ந்திருக்கும் போதோ, அல்லது ஒரு கடையில் பொருட்களை வாங்கும் போதோ மற்றவர்களை நான் காண்கையில் இவ்விதமான எண்ணங்களைப் பிசாசு எனது சிந்தனையில்போட்டு விடுகிறான். நான் அதை அங்கீகரித்து, மற்றவர்களைக் குறை கண்டுபிடிக்கிற அனுபவத்திலே பலமுறை காணப்பட்டுள்ளேன். பிறரைப்பற்றிய அப்பிராயங்களைக் காண்பதோ அறிவதோ தவறில்லை. ஆனால் நாம் அவைகளைப் பற்றி பிறரிடத்தில் பேசுவதும், குறை சொல்லுவதுமே தவறுதலாக மாறிவிடுகிறது. மற்றவர்களைக் குறித்த இப்படிப்பட்ட அபிப்பிராயக் கருத்துக்களை அறிவதிலும், பேசுவதிலும் நாம் வளராதபடி இருப்பதே நலம். குறை சொல்லும் சுபாவத்தை உடையவர்களாய் நாம் இருக்கக்கூடாது.

எனக்குள்ளே அடிக்கடி, "இது எனது வேலையல்ல" எனக் கண்டித்துக் கொள்ளுவேன். இப்பேற்பட்ட சிந்தனைகளை நமது மனதில் தக்க வைத்து ஆராய்வதே மற்றவர்களைக் குற்றம் சொல்லும் நிலைக்கு நம்மைக் கொண்டு வந்துவிடுகிறது. பிறரைப் பற்றி, மற்றவர்களிடம் கூறும்போது இத்தீய யோசனைகள் நமது சிந்தனையில் பெரிய பிரச்சனையாக வளர்ந்து விடுகிறது. மனித உறவிலும், ஆவிக்குரிய நிலையிலும் ஓர் பெரும் வேதனையை நமக்குள்ளும், மற்றவர்களுக்குள்ளும் உருவாக்கி விடுகிறது. இது எனது வேலையல்ல, இதற்கும் எனக்கும் சம்மந்தம் இல்லை எனக் கூறுவதே வருங்கால பிரச்சனைகளிலிருந்து நீங்கள் உங்களைக் காத்துக் கொள்ள ஏதுவாக அமைகிறது. ஆகவே, இதனை ஒரு பாடமாக நாம் கற்றுக் கொள்வோமாக.

மற்றவர்களைக் குற்றம் சாட்டுவதும், குறைகண்டு பிடிப்பதும் எனது வாழ்விலும், குடும்பத்திலும் பிரதானமாய் இருக்கும் போது அவைகளோடே நான் வளர்ந்து வந்தேன். ஆகவே நான் அதைப் பேசுகிறேன். இந்நிலையானது. உடைந்து போன எலும்புகளுள்ள காலோடு, கால்பந்து ஆடுவதைப் போன்றது. நான் தேவனோடு பந்தாட முயற்சி செய்து கொண்டிருந்தேன். அவரது வழிகளில் காரியங்களை நான் செய்து, அவரைப் போலவே கிரியை செய்ய முயற்சிகளைச் செய்து பார்த்தேன். ஆனால் என்னாலே முடியவில்லை. எனது கீழான நடத்தை

மாறி, எனது எண்ணங்களிலே வருகிற இந்தப் பலத்த அரணை நிர்மூலமாக்கிப் போட எனக்கு பல நாட்கள் பிடித்தன.

*உங்கள் மனநிலை மாறாத பட்சத்தில், உங்கள் கிரியைகள் ஒரு போதும் மாறவே மாறாது.*

மத்தேயு 7:1-6 வரை நாம் வாசிக்கையில், குற்றம் சொல்லி, நியாயந்தீர்க்கும் நிலைமைகளை நாம் விபரமாக வாசிக்கிறோம். உங்கள் சிந்தையில் நீங்கள் பிரச்சனையோடு காணப்படுகையில், இப்பகுதியில் உள்ள வசனங்களை தயவாக வாசியுங்கள். உங்கள் மனதில் பலத்த அரண்களைக் கட்டி எழுப்ப விரும்பும் சாத்தானுக்கு எதிராக சத்தமாக மீண்டும் மீண்டும் இவ்வசனங்களை வாசித்துத் தியானியுங்கள். ஏற்கனவே பல ஆண்டுகளாக உறுதிப்பட்டுப் போன உங்கள் மனநிலையில் அவன் ஆளுகை செய்ய இடமளிக்கக்கூடாது.

பின்வரும் பகுதியை நாம் கவனமாய் ஆராய்ந்து கற்றறிவோமாக.

## குற்றம் சொல்லுதலை விதைத்தலும், அறுத்தலும்

நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். ஏனெனில்,

நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள். நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்.

மத்தேயு 7:1-2

நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம் என்று இந்த வேதவசனம் தெளிவாய் நமக்குக் கூறுகிறது. (கலாத்தியர் 6:7) இவ்விதைத்தலும், அறுத்தலும், விவசாயம், பணம் இவற்றைச் சம்மந்தப்படுத்தி மட்டும் அல்ல, நமது மனநிலையை சம்மந்தப்படுத்தியும் நாம் கூற முடியும். ஒரு பயிரைப் போலும், முதலீட்டைப் போலும், நாம் ஒரு யோசனையை விதைத்து அறுக்க முடியும்.

தனக்கு விரோதமாய் யாரோ ஒருவர் விரும்பத்தகாத காரியங்களைப் பேசும்போது ஒரு போதகர் எப்போதும் தனக்குள்ளே இரண்டுவிதமாகக் கேட்பாராம். “அவர்கள் விதைக்கிறார்களா? அல்லது நான் அறுக்கிறேனா?” அநேக முறை நாமும் கூட மற்றவர்களுடைய வாழ்வில் விதைத்ததை இப்போது அறுக்கிறோம்.

## வைத்தியனே உன்னைத் தானே நீ குணமாக்கிக் கொள்!

நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?

இதோ, உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி, நான் உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துப் போடட்டும் என்று நீ சொல்வதெப்படி?

மாயக்காரனே முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப் போடு. பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப் போட வகை பார்ப்பாய்.

மத்தேயு 7:3-5

மற்றவர்களுடைய குற்றம், குறைகளைக் கண்டுபிடித்து நியாயந்தீர்ப்பதில் பிசாசு நம்மைத் தீவிரமாக்கி வைத்திருப்பான். அதன் மூலம், நாம் ஒருபோதும் நம்மிலுள்ள குறைகளைக் கண்டு சரியாக்கிக் கொள்ளவே முடியாது.

மற்றவர்களை நாம் மாற்ற முடியாது. தேவன் ஒருவரே அவர்களை மாற்ற முடியும். நம்மையும் நாம் மாற்ற முடியாது. ஆனால், கிரியை செய்வதற்கு நம்மில் உள்ள பரிசுத்த ஆவிக்கு நாம் பூரண ஒத்துழைப்புக் கொடுக்க முடியும். தேவன் நமக்குக் காண்பிக்க முயற்சிக்கிற சத்தியத்தைச் சந்திப்பதே விடுதலைக்கான முதற்படியாகும்.

பிறருடைய தவறுகளில் நமது எண்ணங்களையும், கவனத்தையும் நாம் செலுத்தும் போது பொதுவாக நமது சொந்த நடக்கையினாலேயே நாம் வஞ்சிக்கப்பட்டு விடுகிறோம். ஆகவே தான் நம்மில் தானே நாம் அதிக தவறுள்ளவர்களாய்க் காணப்படும் போது, மற்றவர்கள் தவறுகளை, நாம்

பெரிதுபடுத்தி, குற்றம் சொல்லக் கூடாது என இயேசு குறிப்பிடுகிறார். முதலாவது தேவன் உங்களோடு இடைப்பட இடம் கொடுங்கள். பின்னர் கிறிஸ்தவ நடக்கையில், உங்கள் சகோதரன் வளர, வேதாகம அடிப்படையில் கற்றுக் கொடுக்கவும் உதவவும் முன்வாருங்கள்.

## ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்

> பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள். உங்கள் முத்துக்களைப் பன்றிகள் முன் போடாதேயுங்கள். போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பிக் கொண்டு உங்களைப் பீறிப் போடும்.
>
> மத்தேயு 7:6

ஒருவரையொருவர் நேசிக்கும்படி தேவன் நமக்குக் கொடுத்த பண்பை இவ்வேத வசனம் விளக்குகிறதென்று நான் விசுவாசிக்கிறேன்.

மற்றவர்களில் அன்பு கூற நீங்களும், நானும் தேவனிடத்திலே கட்டளையைப் பெற்றிருக்கையில் அதை நிறைவேற்றாதபடி அவர்களைக் குற்றம் சொல்லியும், நியாயந்தீர்த்துக் கொண்டும் இருப்போமாகில், இப்பரிசுத்தமான தெய்வீக அன்பை எடுத்துப் பன்றிகளுக்கு முன்பாகவும், பிசாசுக்கு முன்பாகவும் நாம் போடுகிறபடியால் பரிசுத்தமான காரியங்களை மிதித்து நாசமாக்க நாம் அவைகளுக்கு இடம் கொடுக்கிறோம். அவைகள் நமக்கு எதிராய்த் திரும்பி, நம்மைச் சின்னாபின்னமாக்கிவிடுகிறது.

நாம் அன்பிலே நடக்கும்போது அது பிசாசின் தாக்குதலிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ளுகிறது என நாம் அறிந்து கொள்ள வேண்டும். அன்பிலே நடக்கிற எவருக்கும் பிசாசு அதிகமானத் தாக்குதலைக் கொடுக்கிறான் என்று நான் எண்ணவில்லை.

எனது நான்காவது மகனை நான் கருத்தரித்திருக்கும் போது, நான் ஒரு இரட்சிக்கப்பட்டவளாகவும், பரிசுத்த ஆவியைப் பெற்று, ஊழிய அழைப்பை ஏற்றவளாகவும், நல்ல ஒரு வேதாகம மாணவியாகவும் காணப்பட்டேன். தெய்வீக சுகத்தையுடைய எனது விசுவாசத்தை எப்படிச்

செயல்படுத்த வேண்டும் என நன்கு கற்றிருந்தேன். ஆகிலும் முதல் மூன்று மாதங்களும் மிகவும் வியாதிப்பட்டவளாகவே காணப்பட்டேன். எனது எடையும், பலமும் அதிகமாய் குறைந்துவிட்டது. மிகக்களைப்புற்றவளாகவும், எனது சரீரத்தை சீராய் அசைக்க முடியாதவளாகவும் அதிகமான நேரத்தைப் படுக்கையிலே செலவிட்டேன்.

இதற்கு முன்பிருந்த பிரசவங்களில் எனக்கு எவ்விதப் பிரச்சனைகளும் இல்லாதபடியால், இப்போதுள்ள நிலை என்னைக் குழப்பத்திற்குள்ளாக்கிற்று. அப்போது, நான் ஆலயத்திற்குச் செல்லுகிறவளாய்க் காணப்பட்டாலும் தேவனுடைய வார்த்தையை அதிகமாய் நான் அறியவில்லை. எனது விசுவாசத்தைத் திறம்பட உபயோகிக்கவும் இல்லை. இப்போதோ, தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அனைத்தும் எனக்குச் சரளமாய் தெரிந்தாலும் அதிக வியாதியுள்ளவளாகவே இருந்தேன். நீண்ட நேர ஜெபமும், பிசாசைக் கடிந்து கொள்ளுதலும் எனது பிரச்சனையைத் தீர்க்கவில்லை!

ஒருநாளில் எனது கணவர் மற்றப் பிள்ளைகளோடு பின்வாசல் பக்கத்தில் தங்கள் நேரத்தைச் செலவழிக்கின்ற வேளையில், நான் ஆண்டவரை நோக்கி, என் படுக்கையில் இருந்த வண்ணம் “தேவனே என்னில் என்ன தவறு இருக்கிறது? நான் ஏன் இன்னும் குணமாகவில்லை?” என்று கதறிக் கேட்டேன்.

மத்தேயு 7:1ம் அதிகாரத்தை வாசிக்கப் பரிசுத்த ஆவியானவர் என்னை ஏவினார். இந்த வேத பகுதிக்கும், எனது நோய்க்கும் என்ன சம்மந்தம் என்று நான் என் தேவனிடம் கேட்டேன். எனினும், அதை எப்படியாவது வாசிக்க வேண்டும் என தேவன் என்னை ஏவுவதை உணர்ந்தேன். கடைசியாக, சில ஆண்டுகளுக்கு முன்பாக நடைபெற்ற ஒரு சம்பவத்தை தேவன் எனக்கு நினைப்பூட்டினார்.

ஒரு வீட்டில் வேதபாட வகுப்பை நான் நடத்திக் கொண்டு வந்தேன். அச்சமயம் ஜேன் என்ற பெண்மணி அதிலே கலந்து கொண்டாள். இவ்வகுப்பிலே ஒழுங்காய்க் கலந்து கொண்ட ஜேன் என்ற பெண்மணி கர்ப்பமாயிருந்தபடியால் தனது சோர்வு, பலவீனத்தின் நிமித்தம் பின்னர் ஒழுங்காக அதிலே கலந்து கொள்ள முடியவில்லை.

அந்த நாளில் நான் வேறொரு சகோதரியிடம் இந்த ஜேன் என்பவள் வேதபாட வகுப்பிலே கலந்து கொள்ளாத நிலையை ஒரு குற்றச் சாட்டாகச் சொல்லி நியாயந்தீர்த்தேன். அவளுக்கு வேறெந்த வழியிலும் உதவி செய்ய நாங்கள் முன் வரவில்லை. மாறாக, இந்தப் பலவீனத்தைத் தனக்கு சாதகமாக அவள் எடுத்துக் கொண்டு சோம்பேறித்தனமுள்ளவளாக இருக்கிறாள் எனக் குற்றம் சாட்டினோம்.

இப்போதும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக ஜேனுக்கு இருந்த அதே நிலைமை எனக்கு இப்போது ஏற்பட்டுள்ளது. எனது முதல் மூன்று பிரசவ சூழ்நிலைகள் எனக்குச் சாதகமாக அமைந்தாலும், இப்போது நான் பிசாசுக்கு ஓர் பெரிய வாசலைத் திறந்து வைத்துவிட்டேன் என தேவன் என்னோடே சொன்னார். காரணம், எனது குறை சொல்லி, நியாயந்தீர்க்கும் சுபாவமேயாகும். ஜேனிடம் நான் காட்ட வேண்டிய எனது அன்பின் பண்பாகிய பரிசுத்த காரியத்தை நான் எடுத்து நாய்களுக்கும், பன்றிகளாகிய பேய்களுக்கும் முன்பாக எறிந்துவிட்டபடியால், அவைகள் இப்போது எனக்கு எதிராய் திரும்பி, என்னைச் சின்னாபின்னமாக்கிவிட்டன. நான் உடனே மனந்திரும்பினேன். உடனே எனது ஆரோக்கியம் எனக்குள் திரும்ப வந்தது. எனது பிரசவ காலம் நிறைவேறுமட்டும் நான் ஆரோக்கியமுள்ளவளாகவே வாழ்ந்தேன்.

இந்த அனுபவத்தின் மூலம் மற்றவர்களைக் குறை சொல்லி குற்றஞ்சாட்டுவதைப் பற்றிய ஒரு பாடத்தை நான் நன்கு கற்றுக் கொண்டேன். நான் என்னுடைய சுபாவத்திலிருந்து மனம் திரும்பிய பிறகு, ஒருபோதும் மீண்டும் அப்பாவத்தைச் செய்யவேயில்லை என நான் சொல்ல விரும்பினாலும், அவ்வாறு சொல்ல முடியாதபடி, இப்படிப்பட்ட தவறை அநேகமுறை மீண்டும் மீண்டும் நான் செய்தபடியால், தேவன் ஒவ்வொருமுறையும் என்னை உணர்த்த வேண்டியதாயிற்று. இதற்காக நான் தேவனுக்கு நன்றியுள்ளவளாயிருக்கிறேன்.

நாம் அனைவரும் தவறு செய்கிறோம். நம்மெல்லாருக்கும் பலவீனங்கள் உண்டு. நாம் கடின மனமுள்ளவர்களாகவும், குற்றம் சுமத்துகிறவர்களாகவும் இருக்க வேண்டாம் என்று சத்திய வேதம் கூறகிறது. நாம் ஒருவருக்கொருவர் மன்னிப்போமாக. (எபேசியர் 4:32)

## குற்றம் சாட்டுதல் ஆக்கினையைக் கொண்டு வரும்

ஆகையால், மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்க்கிறவனே, நீ யாரானாலும் சாக்குப்போக்குச் சொல்ல உனக்கு இடமில்லை, நீ குற்றமாகத் தீர்க்கிறவைகள் எவைகளோ, அவைகளை நீயே செய்கிறபடியால், நீ மற்றவர்களைக் குறித்துச் சொல்லுகிற தீர்ப்பினாலே உன்னைத்தானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய்.

ரோமர் 2:1

எந்தச் செயலில் நாம் பிறரைக் குற்றப்படுத்துகிறோமோ அதே செயலை நாமே செய்கிறோம்.

இதை அறிய தேவன் ஒருமுறை எனக்கு நல்ல ஒரு உதாரணத்தைக் காண்பித்தார். நாம் செய்கிற ஒரு கிரியை நமது கண்களுக்கு முன்பாக நேர்த்தியாகவும், சரியாகவும் தோன்றுகிறது. ஆனால், தேவ காரியத்தை பிறர் செய்யும் போது அது நமக்குத் தவறுதலாகவும், குற்றமாகவும் தோன்றுகிறது. இது ஏன் என்று நான் சற்று ஆராய்ந்து பார்த்தேன். ஆண்டவர் என்னை நோக்கி, “ஜாய்ஸ், உன்னையே நீ பார்க்கும் போது, சாதாரண நிறக் கண்ணாடியின் மூலமாய் காண்கிறாய். ஆனால், அதே நிலையில் நீ மற்றவர்களைக் காணும் போதோ, விரிவுபடுத்தும் கண்ணாடியின் மூலமாய் அவர்களைக் காண்கிறாய்” என விளக்கினார்.

நாம் செய்யும் தவறான செயல்களுக்கு, நாம் அநேக சாக்குப் போக்குகளைக் கூறுகிறோம். ஆனால் பிறர் அதே செயல்களைச் செய்யும் போது நாம் இரக்கமற்றவர்களாக அவர்களைக் குற்றப்படுத்துகிறோம். மனுஷர் நமக்கு எதைச் செய்ய விரும்புகிறார்களோ அவைகளை நாமும் அவர்களுக்குச் செய்வோமாகில் மற்றவர்களைக் குற்றம் சாட்டி, குற்றவாளிகளாகத் தீர்த்துவிடுவதிலிருந்து நாம் விடுதலையடையலாம் (மத்தேயு: 7:12).

குற்றவாளிகளாகப் பிறரைத் தீர்க்கிற அனுபவம், எதிர்மாறான சிந்தையிலிருந்து புறப்படுகிற ஒன்றாகும். ஒருவனைக் குறித்து சரியாய் எண்ணுவதற்குப் பதிலாக, தவறாய் எண்ணுவதாகும்.

*எதிர்மாறாய் அல்ல. சாத்தியமான நிலையிலே செயல்படுவோமாக!*

இதனால் பிறருக்கு நன்மை உண்டாகும். உங்களுக்கோ அவரையும் விட அதிக நன்மை உண்டாயிருக்கும்.

## உங்கள் இருதயத்தைக் காத்துக்கொள்ளுங்கள்

எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைதக் காத்துக் கொள், அதினிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்.

நீதிமொழிகள் 4:23

உங்களிடத்திலிருந்து ஜீவன் புறப்படவும், உங்களுக்குள் ஜீவன் வரவும் நீங்கள் விரும்பினால், உங்கள் இருதயத்தைக் காத்துக் கொள்ளுங்கள்.

ஒரு விசுவாசியின் வாழ்க்கையிலே சில எண்ணங்கள் சிந்திக்கத்தகாதவைகளாகும். அவைகளிலே, குற்றஞ் சொல்லுதலும், குற்றவாளிகளாகத் தீர்க்கிற சிந்தனைகளும் உள்ளடங்கும். தேவன் நமது நன்மைக்காகவும், மகிழ்ச்சிக்காகவுமே அனைத்தையும் நமக்குக் கற்றுத் தருகிறார். அவருடைய வழிகளை நாம் பின்பற்றுவோமானால், அது நமக்குக் கனிதரும் வாழ்வையும், பிசாசின் வழிகளை நாம் பின்பற்றுவோமானால் அது நமக்கு பட்டுப்போன வாழ்வையுமே தரும்.

## சந்தேகங்களைக் குறித்து மௌனமாயிருத்தல்

அன்பு சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்.

1 கொரிந்தியர் 13:7

உண்மையாய்க் கூறுவேனேயாகில் இவ்வசனத்திற்கு நான் கீழ்ப்படிவது எனக்கு எப்பொழுதும் ஓர் சவாலாகவே இருக்கிறது. ஓர் சந்தேகப் பேர்வழியாய் இருக்கவே, நான் வளர்க்கப்பட்டேன். எல்லாரையும் நம்பிக்கையற்றவர்களாகப் பார்க்கவே எனது வாழ்வில் கற்றுக் கொடுக்கப்பட்டேன். தங்கள் வாழ்வில் ஏதோ ஓர் லாபத்தைக் கருதி, நல்லவர்களைப் போல் நடிக்கிறவர்களை வித்தியாசமான முறையில் இவ்விதக் கோணத்திலேதான் நான் பார்ப்பதுண்டு.

ஒரு கிறிஸ்தவளாக நான் மாறுவதற்கு முன்பும், பின்பும் மற்றவர்களை சந்தேகிப்பதோடு நின்றுவிடாதபடி மற்றவர்களால் ஏமாற்றப்பட்ட அநேக அனுபவங்களை உடையவளாயிருந்தேன். ஆயினும், "அன்பு சகலத்தையும் நம்பும்" என்ற வசனத்தைத் தியானிப்பதின் மூலம் எனது மனநிலைமை புதுமையாய் மாற அது பெரிதும் உதவுகிறதாயிருந்தது.

உங்கள் சிந்தை விஷமேற்றப்படுகின்ற போதோ, அல்லது பலத்த அரண்களை சாத்தான் உங்கள் மனதில் கட்டி எழுப்பும் போதோ, அது தேவனுடைய வசனத்தின்படி புதுப்பிக்கப்பட வேண்டியதாயுள்ளது. இது தேவனுடைய வசனத்தைக் கற்று ஆராய்வதன் மூலமே சாத்தியமாகக் கூடியதாய் அமைகிறது.

தவறான திசையில் நமது எண்ணங்கள் திருப்பும்போது நம்மை நினைப்பூட்டி, திருத்தக்கூடிய அற்புதமான பரிசுத்த ஆவி நமக்குள் இருக்கிறார். அன்புள்ள எண்ணங்களுக்கு மாறாக, சந்தேக எண்ணங்கள் பிறரைக் குறித்து எனக்குள் எழும்புகையில், தேவன் இதை எனக்காகச் செய்தார். நான் மக்களை நம்புவேனேயாகில், அவர் என்னைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வார்கள் என எனக்குள் இருக்கிற இயற்கையான மனிதன் சொல்லுவான். ஆனால், எதிர்மாறான அனுபவங்களைவிட, நன்மைகளே எப்போதும் அதிகமாகக் கிடைக்கும்.

*நம்பிக்கையும், விசுவாசமும் எப்பொழுதும் வாழ்க்கைக்கு மகிழ்ச்சியைக் கொண்டு வந்து, உறவுகளை உன்னத நிலைக்கு உயர்த்தும்.*

சந்தேகமோ, முழு உறவையும் முடமாக்கி, பெரும்பாலும் அவற்றை அழித்து விடும்.

தேவனுடைய வழிகள் கிரியை செய்யும், மனித வழிகளோ கிரியை செய்யாது. குற்றம் கண்டுபிடிப்பதையும், குறை சொல்லுதலையும், குற்றவாளிகளாகத் தீர்த்தலையும் தேவன் வெறுக்கிறார். ஆகையால் நாமும் அதை வெறுக்க வேண்டும். தேவன் சிநேகிப்பதை நாம் சிநேகித்து, தேவன் வெறுப்பதை நாம் வெறுப்போமாக. அவர் அனுமதிப்பவைகளுக்கு நாம் நமது வாழ்வில் அனுமதி கொடுத்து, அவர் அனுமதியாதவற்றை நமது வாழ்வில் அனுமதியாமல் இருப்போமாக.

சமநிலை நோக்கம் எப்போதுமே ஓர் சிறந்த கொள்கையாகும். நாம் மற்றவர்களோடு இடைபடும் போது, நமது ஞானம், அறிவு, பகுத்தறிவு இவைகளைப் பயன்படுத்தக் கூடாது என்பது அதன் அர்த்தமல்ல. நாம் சந்திக்கிற எல்லோருக்கும் முன்பாக நமது வாழ்க்கையை அப்படியே வெளிப்படுத்த வேண்டிய அவசியமில்லை. மாறாக, யாரையும் எதிர்மாறான, சந்தேகக் கண்ணோடு பாராதபடியும், அவர்களும் நம்மை தங்களுக்கு சாதகமான நிலையில் கீழ்நோக்கிப் பாராமலும் இருக்க, ஜாக்கிரதையுடன் வாழ்வோமாக.

## தேவனைப் பரிபூரணமாய் நம்பு

பஸ்கா பண்டிகையிலே அவர் எருசலேமிலிருக்கையில், அவர் செய்த அற்புதங்களை அநேகர் கண்டு, அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள்.

அப்படியிருந்தும், இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால், அவர்கள் நம்பி இணங்கவில்லை.

மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்த படியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்க வேண்டியதாயிருக்கவில்லை.

யோவான் 2:23-25

ஒருமுறை, சபையின் ஏமாற்றமுள்ள ஓர் சூழ்நிலையில் நான் அகப்பட்ட போது மேற்கூறிய வேத வசனங்களை தேவன் எனக்கு நினைப்பூட்டினார்.

இயேசுவுக்கு அவருடைய சீஷரோடு இருந்த உறவை இப்பகுதி நமக்கு விளக்குகிறது. அவர் அவர்களை நம்பி இணங்கவில்லை என இப்பகுதி நமக்குத் தெளிவாய் விளக்குகிறது. அவர் அவர்கள் மீது சந்தேகம் கொண்டார் என்றோ, அல்லது அவர்கள் மீது அவருக்கு நம்பிக்கை இல்லை என்றோ இப்பகுதி கூறவில்லை. ஆனால், மனிதனுடைய சுபாவத்தை அவர் நன்கு அறிந்திருந்தபடியால் எல்லைக்கு மீறி அவர் அவர்களை நம்பி இணங்கவில்லை என இவ்வசனம் விளக்குகிறது.

ஓர் நல்ல பாடத்தை இங்கு நான் கற்றுக் கொண்டேன். சபையிலே நான் ஒரு குறிப்பிட்ட பெண்கள் குழுவோடு என்னை அதிகமாய் ஈடுபடுத்திக் கொண்டு, எல்லைக்குச் சற்று மீறிச் சென்றதால் அச்சூழ்நிலையில் மிகவும் வேதனைக்குள்ளாக்கப்பட்டேன். எல்லைக்கு மீறி எப்பொழுதெல்லாம் செல்லுகிறோமோ அப்பொழுதெல்லாம் பிசாசுக்கு நாம் வழியைத் திறந்து கொடுக்கிறோம் என்பதை நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

1 பேதுரு 5:8 ல் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள் ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகிறான் என வாசிக்கிறோம்.

தேவன் மேலே மட்டும் வைக்க வேண்டிய நம்பிக்கையை இப்பெண்கள் குழுவைச் சார்ந்ததன் மூலம் நான் அவர்களுக்குள் வைத்திருந்தேன் என்ற உண்மையை நான் கற்றுக் கொண்டேன். ஒரு குறிப்பிட்ட அளவுதான் மனிதன் மீது நாம் நம்பிக்கை வைக்க வேண்டும். ஆனால் ஞானம் என்ற எல்லையைத்தாண்டி நாம் செல்லுகையில் அங்கு தான் பிரச்சனையும், வேதனையும் நமக்கு வருகிறது.

எப்பொழுதும் உங்கள் முழு நம்பிக்கையை தேவன் மேல் வையுங்கள். அப்படிச் செய்வதினால் நீங்கள் பரிசுத்த ஆவிக்கு வழியைத் திறக்கவும், நீங்கள் எல்லையை மீறும் போதெல்லாம், பரிசுத்த ஆவி அதை உங்களுக்கு உணர்த்தவும் வழி செய்கிறீர்கள் என்ற உண்மையை அறிந்து கொள்வோமாக.

சிலர் தங்களை பகுத்தறிவுள்ளவர்களாக எண்ணிக் கொள்ளுகிறார்கள். ஆனால், உண்மையில் சந்தேகப்பேர் வழியாய் வாழுகிறார்கள்.

ஆவிகளைப் பகுத்தறிதல் என்ற மெய்யான வரத்தை நாம் 1 கொரிந்தியர் 12:10 ல் தெளிவாக வாசிக்கிறோம். அது தீமையை மட்டுமல்ல நன்மையையும் தீமையையும் பகுத்தறிகிறது. புதுப்பிக்கப்படாத சிந்தையிலிருந்தே சந்தேகம் பிறக்கிறது. பகுத்தறிவு புதுப்பிக்கப்பட்ட சிந்தையிலிருந்து பிறக்கிறது.

மெய்யான வரங்களுக்காக ஜெபிப்போமாக மாம்சீக கிரியைகள்

தெய்வீக வரங்களைப் பிரதிபலிக்க முடியாது. உண்மையான ஆவிக்குரியப் பகுத்தறிவானது புறங்கூறுதலையல்ல ஜெபத்துக்கே இடம் அளிக்கும் உண்மையான பிரச்சனை, உண்மையான வரத்தினால் பகுத்தறியப்படுமானால், அதை சரிசெய்ய சத்திய வழியைப் பின்பற்றும் மாறாக மாம்சீக வழிமுறைகளோ குழப்பங்களையே உருவாக்கும்.

## இனிய சொற்கள் மதுரமும் ஔஷதமுமாகும்

> ஞானியின் இருதயம் அவன் வாய்க்கு அறிவையூட்டும். அவன் உதடுகளுக்கு அது மேன்மேலும் கல்வியைக் கொடுக்கும். இனிய சொற்கள் தேன் கூடுபோல் ஆத்துமாவுக்கு மதுரமும், எலும்புகளுக்கு ஔஷதமுமாகும்.
>
> நீதிமொழிகள் 16:23-24

வாயின் வார்த்தைகளும், மனதின் சிந்தனைகளும் எலும்பும், நிணமும் போலக் காணப்படுகின்றன. "கணுக்களையும் ஊனையும் பிரிப்பது மிகவும் கடினமானது" (எபிரேயர் 4:12).

நமது எண்ணங்கள் மௌன வார்தைகளாகவும், அவை நாமும் தேவனும் மட்டும் கேட்கக் கூடியவைகளாகவும், இவைகள் நம்முடைய உள்ளான மனிதனையும், நம்முடைய ஆரோக்கியத்தையும், மகிழ்ச்சியையும், நோக்கத்தையும் பாதிக்கக் கூடியவைகளாய் இருக்கின்றன. நாம் எண்ணுகிற எண்ணங்களானது எப்பொழுதும் நமது வாயின் வழியாகத் தான் வருகிறது. துக்கத்தோடு சொல்வேனேயாகில், அது சில வேளைகளில் நமக்கு மகிழ்ச்சியைக் கொடாமல், நம்மை மதிகேடுள்ளவர்களாக்கி, சந்தேகப்பேர் வழிகளாகவும், குற்றம் கண்டு பிடிக்கிறவர்களாகவும் மாற்றி விடுகிறது.

நித்திய ஜீவனை நாம் மகிழ்வோடு அனுபவிக்கவே தாம் வந்ததாக இயேசு சொன்னார். (யோவான் 10:10) கிறிஸ்துவின் சிந்தையில் நாம் செயல்பட ஆரம்பித்து, புது வாழ்வில் அடி எடுத்து முன்னேறுவோமாக.

# அதிகாரம் 14

## *செயலற்ற, மந்தமான சிந்தை*

அதிகாரம் 14

# *செயலற்ற, மந்தமான சிந்தை*

> *என் ஜனம் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்.*
>
> ஓசியா 4:6

இவ்வசனமானது, இந்த அதிகாரத்தின் தலைப்புக்கு பொருத்தமாகத் தெரிகிறது. பெரும்பாலான கிறிஸ்தவர்களுக்கு இந்த வார்த்தைகள் மிகப் பரிச்சயமானதாகத் தெரிவதில்லை. ஆகவே சில அறிகுறிகள் காணப்படும்போது, அவர்கள் புரிந்து கொள்வதில்லை.

மந்தமான கிரியை என்பது சுறுசுறுப்பின் கிரியை என்பதற்கு எதிர்சொற்றொடராகும். நாம் தெளிந்த புத்தியுள்ளவர்களாயும் ஜாக்கிரதையுள்ளவர்களாயும் இருக்க வேண்டும் என்று தேவ வசனம் சொல்லுகிறபடியால் (1 பேதுரு 5:8) இது ஒரு ஆபத்தான பிரச்சனையாக உள்ளது. நமக்குள்ளே இருக்கிற வரத்தை அனல் மூட்டி எழுப்ப வேண்டுமென்பதே வேத கட்டளையாக இருக்கிறது. (2 தீமோத்தேயு 1:6)

*மந்தமான* என்ற வார்த்தைக்கு அநேக விளக்கங்களை நான் வாசித்துள்ளேன். உணர்வு, வாஞ்சை, பொது அறிவு இவைகள் அனைத்தும் குறைவான நிலையில், செயலற்றதும், சோம்பேறித்தனமானதுமான சிந்தை என அர்த்தப்படுத்திக் கொள்ளலாம். மந்தமான, இச்செயலற்ற நிலைக்குப் பின்னால் அசுத்த ஆவி இருக்கிறது. செயலற்ற இந்த நிலையைப் பிசாசு நன்கு அறிந்திருக்கிறான். இந்த நிலையானது, இறுதியாக விசுவாசியை தோல்விக்குள்ளாக நடத்திவிடுகிறது. ஒரு விசுவாசி தனது சுயசித்தத்தைப் பயன்படுத்தி, பிசாசை எதிர்த்து போரில் அவனை ஒருபோதும் ஜெயிக்க முடியாது. ஆயினும் செயலற்ற, மந்தமான சிந்தைக்கு அவன் இடம் கொடுப்பானாயின் அவன் ஒரு மோசமானதும், ஆபத்தானதுமான நிலையில் அகப்பட்டுவிடுகிறான்.

அநேக விசுவாசிகள் தாங்கள் எதைச் செய்யும்படி கற்றுக் கொடுக்கப்பட்டார்களோ அதைச் செய்யாதபடி தங்கள் சிந்தையின் செயலற்ற நிலையிலே, உணர்ச்சி வசப்பட்டு, ஆளப்படுகிறார்கள். துதிக்கத் தோன்றும்போது அவர்கள் துதிப்பார்கள் துதிக்கத் தோன்றாவிடில் மௌனம் சாதிப்பார்கள், தங்கள் வார்த்தையைக் காத்துக் கொள்ளத் தோன்றினால், காத்துக் கொள்வார்கள். இல்லையேல், காத்துக் கொள்ளாமல், சொன்ன சொல் மாறிவிடுவார்கள்.

## காலியிடம் ஒரு இடமே!

பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்.

எபேசியர் 4:27

சாத்தானுக்கு நாம் கொடுக்கிற இடம் அடிக்கடி காலியாக இருக்கிறது. வெறுமையான செயலற்ற சிந்தை, தவறான எண்ணங்களினால் எளிதாக நிரப்பப்படும்.

செயலற்ற சிந்தையை உடைய ஒரு விசுவாசி இத்தவறான சிந்தனைகளை, எதிர்த்து நிற்க முடியாத நிலையில் அவைகளைத் தனது சொந்த எண்ணங்களாகவே எடுத்துக் கொள்கிறான். தனது மனதிற்குள்ளே இவைகள் அசுத்த ஆவிகளாக நுழைந்து விட்டன என்பதை அவன் உணருகிறதில்லை. ஏனென்றால் அவனது சிந்தையில் வெற்றிடங்கள் நிரப்பப்பட ஆயத்தமாக இருக்கின்றன.

உங்கள் சிந்தையில் நல்லெண்ணங்களையே நீங்கள் கொண்டிருக்கும் போது, தவறான எண்ணங்களை விட்டு நாம் விலகி வாழ முடியும். பிசாசு துரத்தப்படக் கூடிய நிலையில் இருந்தாலும், சற்று காலம் அவன் வறண்ட நிலத்திலே போய் சுற்றித் திரிந்து கொண்டிருப்பான். ஆனால் தனது பழைய வீட்டிற்குத் திரும்பி வருகையில், அது காலியாயிருக்கக் காணும் போது, அவன் திரும்ப வந்து, வேறு ஆவிகளையும் தன்னோடே கூட அழைத்துக் கொண்டு வருகிறபடியால் அதனுடைய முந்திய நிலையைக் காட்டிலும், பிந்திய நிலைமை அதிகக் கேடுள்ளதாயிருக்கிறது. (லூக்கா 11:24-26)

பொல்லாத சிந்தையை உடைய அனைவருமே அசுத்த ஆவி பிடித்தவர்கள் என்று நான் சொல்லவில்லை. ஆனால் ஒரு அசுத்த ஆவி எப்பொழுதும், அசுத்த எண்ணங்களையுடைய ஒருவனுக்கு பின்னாலே இருக்கிறது. ஒரு தனிப்பட்ட நபர் இக்கற்பனைகளை மீண்டும் மீண்டும் கீழே தள்ள முடியும். ஆனால் சரியான சிந்தனைகளினாலே அவன் தனது காலியான சிந்தையை நிரப்பிக் கொள்ளக் கற்றுக் கொள்ளாவிடில், தவறான கற்பனைகள் உடனடியாகவே உள்ளே திரும்ப வந்து விடும். ஆனால், சிந்தை, சரியான சிந்தனைகளால் நிரப்பப்படும் போது, சத்துரு திரும்பி வந்தாலும், அவன் எவ்வித வெற்றிடத்தையும் காணவே மாட்டான்.

செய்கிறதினாலே வரும் பாவங்களும், செய்யாமல் விட்டுவிடுகிறதால் வரும் பாவங்களும் நமது வாழ்வில் இருக்கின்றன. வேறுவழியில் சொல்வேனேயாகில், நாம் செய்ய வேண்டிய நல்ல செயல்களைச் செய்யாமலும், செய்யக்கூடாத தவறான செயல்களைச் செய்து கொண்டும் இருக்கிறோம். உதாரணமாக, யோசியாமல் பேசுகிற வார்த்தைகளால் ஒரு நல்லுறவு முறிந்துவிடுகிறது. அதே நேரத்தில் நல்ல வார்த்தைகளைப் பேசாமல் விட்டு விடும்போதும் இப்படிப்பட்ட நல்லுறவு முறிந்து போய் விடுகிறது.

செயலற்ற, மந்த புத்தியுள்ள ஒருவன், தான் ஒன்றுமே செய்யாமல் இருக்கிறபடியால், “தான் எந்தத்தவறையும் செய்யவில்லை” என எண்ணுகிறான். தனது பிழையையும் தவறையும் எதிர்த்து, தான் எதையும் செய்யவில்லை என்று கூறுகிறான். அவனது வாதம் சரியாய் தோன்றினாலும், அவனது கிரியை சரியானது அல்ல.

## செயலற்ற தன்மையை மேற்கொள்ளுதல்

சில ஆண்டுகளுக்கு முன்பாக எனது கணவருக்கு இந்நிலையில் பிரச்சனைகள் இருந்தன. சில காரியங்களில் மிகவும் சுறுசுறுப்புள்ளவராகவும் செயலாற்றுகிறவராகவும் அவர் இருந்தார். அனுதினமும் வேலைக்குச் செல்லுவார். சனிக்கிழமை கோல்ஃப் விளையாட்டை விளையாடுவார். ஞாயிற்றுக்கிழமை தோறும் கால்பந்தாட்டத்தைக் காண்பதும் அவருடைய வழக்கம். இதைத் தவிர்த்து வேறு எந்தக் காரியங்களையும் செயலாற்ற வைப்பது எங்களுக்கு மிகக்

கடினமாயிருந்தது. சுவற்றிலே தொங்க வைக்க ஒரு படம் வாங்கி, அதை மாட்ட வேண்டும் என்று அவரைக் கேட்டால், அவர் அதைச் செய்வதற்கு மூன்று அல்லது நான்கு வாரங்கள் வரை காலம் தாழ்த்திவிடுவார். இது எங்கள் இருவருக்குமிடையே பெரிய மனஸ்தாபத்தை உருவாக்கி வந்தது. தான் விரும்புவதை மட்டும் அவர் செய்வதாயும், மற்றவற்றை ஒருபோதும் செய்யக் கூடாதவராகவுமே என் பார்வையில் அவர் இருந்தார்.

டேவ், கர்த்தரில் அன்பு கூருகிறவராய் இருந்தபடியால் இப்பிரச்சனைக்காகக் கர்த்தருடைய முகத்தை அவர் தேடுகையில் தேவன் ஆபத்தை அவருக்குக் காண்பித்தார். இப்பேற்பட்ட தனது செயலற்ற நிலைக்குப் பின்னால் அசுத்த ஆவியின் செயல் இருப்பதாக அவர் வெளிப்படுத்தினார். வாழ்வின் சில பகுதிகளில், எனது கணவர் தனது சுயசித்தத்தை ஒழுங்காகப் பரிபாலனம் செய்தபடியால், அக்குறிப்பிட்டப் பகுதிகளில் அவருக்கு எவ்விதப் பிரச்சனையும் இருந்ததேயில்லை. ஆனால் சில பகுதிகளில செயலற்ற மந்தமான சிந்தனைகளினால் பிசாசுக்கு அவா் அதிகமாய் இடம் கொடுத்துவிட்டாா். இப்படி தமது சித்தத்தை சத்துரு ஆட்கொள்ள இடம் கொடுத்த நிலையில் சில காரியங்களைச் செய்ய வேண்டும் என்ற விருப்பமே அவருக்கு இல்லாமல் போய்விட்டது.

தேவனுடைய வாா்த்தையை வாசிப்பதிலும் ஜெபத்திலும் அவா் மந்தமான செயலற்ற நிலையில் காணப்பட்டாா் வழிகாட்டுதலுக்காக தேவனுடைய முகத்தை அவா் தேடாததினாலே அவருக்கு நான் செவி கொடுப்பது எனக்குக் கடினமாய்த் தோன்றியது. முரட்டாட்டம் எனது வாழ்வின் பிரச்சனையாக இருந்தபடியால் பிசாசு எங்கள் இருவருக்குமிடையே சாமாதானக் கேட்டை உருவாக்கி விட இச்சூழ்நிலையைத் தனக்கு சாதகமாக்கிக் கொண்டான். இவ்விதமான பிரச்சனைகளினாலேதான் பலரது இல்லற வாழ்வில் விவாகரத்து ஏற்படுகிறது. பலா், இதன் காரணத்தை ஆராயாதபடி சூழ்நிலையை விட்டு வெளிவரப் பாா்க்கின்றனா்.

நான் மிகவும் அவசரக் குடுக்கையாகக் காணப்பட்டேன். மாம்சத்திலே எப்போழுதும் தேவனைவிட்டுச் செயல்படுகிறவளாகவே காணப்பட்டேன். எனது சொந்தக் காரியங்களை எனது விருப்பப்படி செய்து தேவன் அதை

ஆசீர்வதிக்க வேண்டும் என விரும்பினேன். எனது கணவரோ எதையும் தேவனுடைய சமூகத்திலே காத்திராமல், செய்யமாட்டார். இது ஆத்திரத்தையும், அவசரத்தையும் எனக்குள் உண்டு பண்ணிவிட்டது. இப்பொழுது நாங்கள் இருவரும் அந்தப் பழைய நிலையை நினைத்துப் பார்க்கையில் இதைக் குறித்துச் சிரிக்கிறோம். ஆனால் அப்பொழுது அது எங்களுக்கு வேடிக்கையாகத் தோன்றவில்லை, தேவனுடைய சமூகத்திற்கும், சித்தத்திற்கும் காத்திராமல் இருந்திருப்போமானால் எங்களுடைய வாழ்க்கையிலும் விவாகரத்து ஏற்பட்டிருக்கும்.

தேவ சித்தத்தைவிட என்னுடைய சித்தத்தையே முக்கியப்படுத்துவதாக என் கணவர் என்மீது குறை கூறுவார். நானோ அவர் தேவனை விட 10 மைல்கள் பின்னாக நிற்பதாக அவர் மீது குறை கூறுவேன், ஆத்திரமுள்ளவளாகக் காணப்பட்டேன். அவரோ செயலற்ற மனிதராகக் காணப்பட்டடார்.

ஒரு விசவாசி திறமையிம் தகுதியும் உள்ள எந்தப் பகுதியிலும் தனது வாழ்வில் செயலற்று இருப்பாரானால் அக்குறிப்பிட்டப் பகுதியானது அசைவற்று இயங்க முடியாதபடி காணப்படுகிறது. ஒருவர் காரியத்தை பல காலம் செய்யாமலே இருப்பாரானால் அதைச் செய்வதற்கு அவருக்கு விருப்பமில்லை என்பதே உண்மை. இதற்கு ஒரு சரியான உதாரணம் உண்டானால் சரீர உடற்பயிற்சியாகும்.

எந்த அளவிற்கு நாம் உடற்பயிற்சி செய்கிறோமோ அந்த அளவிற்கு நமது உடல் எளிதாக இருக்கும். உடற்பயிற்சி ஆரம்பித்த போது அது எனக்கு மிகவும் கடினமாகவே இருந்தது. இதை நான் தொடர்ந்து செய்யும் போதெல்லாம் அது எனக்கு வேதனையைத் தான் கொடுத்தது. காரணம் சில வேளைகளிலே நீண்ட காலமாக அதைச் செய்யாமல் விட்டுவிடுவது வழக்கமாக இருந்தது. ஒவ்வொரு முறையும் உடற்பயிற்சியை செய்யாமல் நிறுத்திய போதெல்லாம் எனது சரீரம் அதிகமாக பலவீனப்பட்டதை உணர்ந்தேன். எனது தசைகளைப் பயன்படுத்தாத நிலையில் நான் பலவீனமாகிக் கொண்டே இருந்தேன்.

தனது பிரச்சனை என்ன என்பதை எனது கணவர் விளங்கிக் கொண்டார். செயலற்ற நிலையில் தான் இருந்தபடியால் அசுத்த ஆவிகள் தன்னை நெருக்கி ஆட்கொள்ள முயற்சிப்பதை உணர்ந்தார். இந்த

உண்மையைப் பரிசுத்த ஆவியானவர் அவருக்கு வெளிப்படுத்திய போது செய்ய வேண்டிய காரியங்களை செயலாற்றுவதில் சோம்பலாக இருந்து காலம் தாழ்த்தாதபடி சுறுசுறுப்போடு, தீவிரமாக அவைகளைச் செய்யத் தீர்மானித்தார்.

தீர்மானம் எடுப்பது மிகவும் எளிது, ஆனால் அதை நிறைவேற்றுவதோ மிகவும் கடினம். செயலற்ற அத்தனைக் காரியங்களிலும் மீண்டும் பலப்படுவதற்கு அவர் ஒன்றன்பின் ஒன்றாக “பயிற்சி” செய்ய வேண்டியதாயிருந்தது.

அவர் அதிகாலை 5:00 மணிக்கு எழுந்து வேதம் வாசிக்க ஆரம்பித்தார். வேலைக்குப் புறப்படுமுன் ஜெபிக்கத் துவங்கினார். ஒரு யுத்தம் துவங்கியது. அவருடைய மனதில் ஏற்கனவே நிலையான இடத்தைப் பெற்றிருந்த பிசாசு தன்னுடைய அந்த இடத்தை பிசாசு விட்டுக் கொடுக்க விரும்பவில்லை. பெரிய ஆவிக்குரிய யுத்தமே நடந்து கொண்டிருந்தது. தேவனோடு உறவாட காலையிலே எனது கணவர் எழும்புவார். ஆயினும் அப்படியே படுக்கையிலே தூங்கிவிடுவார், அவர் அப்படியே தூங்கிவிட்ட பல நாட்கள் உண்டு, எனினும் ஜெய வாழ்க்கையை அவர் கட்டி எழுப்ப விரும்பியதால் அவர் காலை வேளையில் எழுந்து ஜெபிக்கும் வழக்கத்தைத் தொடர்ந்தார்.

அவருக்கு எத்தனையோ நாட்கள் சலிப்பு உண்டாயிற்று. முன்னேற்றமே இல்லை என்ற உணர்வுண்டான பல நாட்கள் உண்டு. வேதத்தில் எதை வாசித்தார் என்று அவருக்குப் புரியவில்லை, தாம் எதற்காக ஜெபித்தார் என்பதையும் அறியாதவராகக் காணப்பட்டார். ஆயினும சோர்ந்து போகாதபடி, செயலற்ற அவரது குறைவைப் பரிசுத்த ஆவியானவர் சுட்டிக் காண்பித்தபடியால், விடாப்பிடியாக ஜெபத்திலும்,வேதம் வாசிப்பதிலும் முன்னேறப் “பிரயாசப்பட்டார்.”

இப்பொழுது நான் ஏதாவது அவர் மூலமாய் செயலாற்ற விரும்பும் போது, அவர் உடனடியாக அதைச் செய்ததை என்னாலே காண முடிந்தது. தனது யோசனையின்படியே காரியங்ளைச் செய்யவும் தீர்மானங்களை எடுக்கவும் ஆரம்பித்தார். அநேக முறைகளிலே இயற்கையாக அவைகளைச் செய்ய விரும்பினாலும், அவராலே அதைச் செய்ய

முடியவில்லை. ஆனால், தனது உணர்வுகளையும் மாம்சீக விருப்பங்களையும் மீறிச் செயலாற்ற அவர் முற்பட்டார். சரியாக இருப்பது என தான் அறிந்ததை எந்த அளவிற்கு அவர் செய்ய முற்பட்டாரோ, அந்த அளவிற்கு விடுதலையை அவர் அனுபவித்தார்.

அது அவருக்கு எளிதான ஒன்றாக அமையவில்லை. தனது மந்த நிலைமையிலிருந்து ஒரு சில நாட்களிலோ, அல்லது வாரங்களிலோ அவர் விடுதலையாகிவிடவில்லை. செயலற்ற வாழ்வை மேற்க்கொள்ளுவது மிகவும் கடினமான ஒன்று. ஏனெனில், ஆதரவைப் பெற்றுக்கொள்ள கூடிய உணர்வு எங்குமே இந்நிலையில் கிடைக்காது.

டேவ் தேவ ஒத்தாசையில் வளர்ந்தார். அவரது செலற்ற நிலைமை மாறியது. எங்களது ஊழிய ஸ்தாபனத்தின் நிர்வாகியாகவும், வானொலி - தொலைக்காட்சி ஊழியங்களின் பொறுப்பாளராகவும், பணக் கணக்குகள் அனைத்தையும் நிர்வகிக்கிறவராகவும் இப்போது தீவிரமாய் செயல்படுகிறார். நான் எங்கு பயணம் செய்தாலும், அவர் என்னோடு கூட வந்து, அனைத்து நிகழ்ச்சிகளையும் அவரே, வடிவமைத்துத் தருகிறார். அவர் ஒரு நல்லக் குடும்ப மனிதர். தேவனுடைய வார்த்தையை வாசிப்பதிலும், ஜெபிப்பதிலும் தவறாமல் நேரத்தைச் செலவிடுகிறார். கனத்திற்கும், மரியாதைக்குரிய ஒரு மனிதனாகச் செயலாற்றுகிறார்.

விளையாட்டுகளிலே இன்னும் அவர் ஆர்வமுடையவராய்க் காணப்பட்டாலும் தனது கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றுகிறவராய் இருக்கிறார். இப்பொழுது அவரைப் பார்த்தால், யாரும் அவருடைய முந்திய நிலமையைக் குறித்துச் சொல்லுவதை நம்பவே மாட்டார்கள். அத்தனை மாற்றம் அவரது வாழ்வில் ஏற்பட்டுள்ளது.

செயலற்ற மந்தமான வாழ்வை நாம் நிச்சயமாக மேற்கொள்ள முடியும். ஆனால் அதற்கான முதல்படி நமது சிந்தையிலுள்ள செயலற்ற நிலையை மேற்கொள்ளுவதேயாகும். தனது மனநிலையையும், சிந்தனை நிலையையும் மாற்றும் படியான தீர்மானத்திற்குள் எனது கணவர் வரும் வரையில், வாழ்வில் அவர் முன்னேற முடியவில்லை.

## சரியான எண்ணங்களை சரியான கிரியை தொடருகின்றது

நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.

ரோமர் 12:2

தேவனுடைய வார்த்தைகள் முழுவதிலும் சக்தி வாய்ந்த கொள்கைகளை நாம் காண முடிகிறது. அதைச் சரியாய் விளங்கிக் கொண்டு ஒருவன் செயல்பட்டாலொழிய ஒருவனும் வெற்றியான வாழ்க்கை வாழ முடியாது. *சரியான கிரியை - சரியான சிந்தனையைத் தொடர்ந்து வரும்.*

*உங்கள் சிந்தையை மாற்றினாலொழிய ஒருபோதும் உங்கள் கிரியையை நீங்கள் மாற்றவே முடியாது.*

தேவனுடைய ஒழுங்கின்படி, எப்பொழுதும், சரியான சிந்தனையைத் தொடர்ந்துதான் சரியான கிரியை செயலாகும். சரியான எண்ணத்தின் "கனியே" அந்தச் சரியான கிரியை என நான் நம்புகிறேன். சரியானதைச் செய்ய அநேகர் போராடுகிறார்கள். ஆனால், போராடுவதினால் வருவது கனியல்ல. செடியிலே நிலைத்திருந்தால் மட்டுமே கனியைப் பெற்றுக் கொள்ள முடியும் (யோவான் 15:4). அதற்குக் கீழ்ப்படிதல் அவசியமாயிருக்கிறது (யோவான் 15:10).

இந்தக் கொள்கையைப் பின்பற்றவும், கற்றுக்கொடுக்கவும், நான் எப்பொழுதும் எபேசியர் 4:22-24 வரை உள்ள வசனங்களையே உபயோகப்படுத்துவேன். 22ம் வசனம், அந்தப்படி முந்தின நடக்கைக்குரிய மோசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்து போட்டு, எனவும்,

24ம் வசனம் மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள் எனவும் குறிப்பிடுகிறது.

ஆகவே, தவறான கிரியைகளை நிறுத்த 22ம் வசனமும், சரியான நிலையில் கிரியை செய்ய ஆரம்பிக்க 24ம் வசனமும் நமக்கு அறிவுறுத்துகிறது. ஆனால், 23ம் வசனமோ இவ்விரண்டு "வசனங்களையும் இணைக்கிற பாலமாய்" அமைகிறது. அது 22ம் வசனத்திலுள்ள தவறான வழிகளைவிட்டு, 24ம் வசனத்திலுள்ள சரியான வழிகளைக் கற்றுக் கொள்ள வழிசொல்லுகிறது. உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, என ஆலோசனை கூறுகிறது.

முதலாவது, சிந்தையில் மாற்றம் இல்லாதபடி தவறுதலான நடக்கையிலிருந்து நல்நடக்கைக்கு மாறவே முடியாது. செயலற்ற ஒருவன், சரியான காரியத்தைச் செய்ய விரும்பினாலும், அவன் ஒருபோதும் அதைச் செய்ய மாட்டான். தேவனுடைய வார்த்தை, சித்தம் இவற்றோடு தனது மனதை ஒருமுகப்படுத்தினால் மட்டுமே அப்படிச் செய்ய இயலும்.

ஒருநாளில் தனக்காக ஜெபிக்கும் படியாக ஒருவன் என்னுடைய கருத்தரங்கு முடிந்தவுடன் என்னிடத்தில் வந்தான். இச்சை என்ற பாவத்திலிருந்து விடுபட முடியாத நிலையிலே அவன் காணப்பட்டான். தனது மனைவியை உண்மையாக அவன் நேசித்தான். எனினும், தனது திருமணம் இந்த இச்சை என்ற பாவத்தால் முறிந்து போக அவன் விரும்பவில்லை. இப்பிரச்சனை தீர்க்கப்படாவிட்டால் தன்னுடைய திருமண வாழ்க்கை சின்னாபின்னமாக மாறிவிடும் என்றும் அவன் கூறினான்.

இப்பிரச்சனையை அவன் என்னிடம் பகிர்ந்து, "ஜாய்ஸ், பெண்களிடம் இச்சையோடு பழகுவதை என்னாலே நிறுத்த முடியவில்லை. அநேகமுறை நான் ஜெபித்திருந்தும் எனக்கு அதிலிருந்து விடுதலை இல்லை. ஆகவே தயவாக எனக்காக நீங்கள் ஜெபிக்க வேண்டும்" என்று அவன் என்னைக் கேட்டுக் கொண்டான்.

உடனே, சில காரியங்களை நான் அவனிடம் கூற பரிசுத்த ஆவியானவர் என்னை ஏவினார். "நான் உனக்காக ஜெபிக்கிறேன். ஆயினும் உனது சிந்தைத் திரையில் நீ அனுமதிக்கிற இச்சையான காட்சிகளுக்கு நீதான் உத்தரவாதி. நீ விடுதலையடைய வேண்டுமென்றால் அருவருப்பான நிலையில் பெண்களையோ, அவர்களோடு சேர்ந்த காட்சிளையோ உனது சிந்தைப் பகுதியில் அனுமதிக்கக் கூடாது" எனக் கூறினேன்.

இம்மனிதனைப் போல அநேகர் அந்த இடத்திலே ஓர் உணர்வுக்குள்ளே வந்தார்கள். *அவர்கள் விடுதலை அடைய விரும்பினாலும் ஒரு மாறுதலை ஏன் அடைய முடியவில்லை* என்பதை நன்கு விளங்கிக் கொண்டார்கள். *தங்கள் சிந்தையை அல்ல. தங்கள் நடக்கையை மட்டும் இவர்கள் மாற்றிக் கொள்ள விரும்பினார்கள்.*

“பாவத்தோடே ஜனங்கள் விளையாடும் மைதானமே அவர்களது சிந்தனைப் பகுதியாகும்.” இயேசுவும் மத்தேயு 5:27-28 ல் விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப் பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ் செய்தாயிற்று என்றார். பாவமான எண்ணத்தினால் உருவாக்கப்படும் பாதையே பாவக்கிரியையின் வழிப்பாதையாகும்.

எனது வேதபாட வகுப்பில் கலந்து கொண்ட ஒரு பெண்மணியானவள், தனது வாழ்க்கையை கர்த்தருக்கு ஒப்புக் கொடுத்தப்படியால் தனது திருமண வாழ்க்கையும், குடும்ப வாழ்க்கையும் சரியாக்கப்பட விரும்பினாள். அவளது வாழ்க்கை முழுவதுமே ஒரே குழப்பமாக இருந்தது. குடும்பம், பிள்ளைகள், திருமண உறவு, பொருளாதாரம், சரீர நிலைமை எல்லாமே குழம்பிக் கிடந்தது. தனது கணவனை தான் நேசிக்கவில்லை என் மனம் திறந்து அவள் கூறினாள். சொல்லப் போனால் அவள், தன் கணவனை அற்பமாக எண்ணினாள். இப்போது தன் கிரியை தெய்வீகமாக இல்லை என அறிந்து, அவனை நேசிக்க முன் வந்தாள். ஆனால் அவனைச் சார்ந்து இருப்பதை அவளாலே சகித்துக் கொள்ள முடியவில்லை.

நாங்கள் ஜெபித்தோம், அவள் ஜெபித்தாள், எல்லோரும் ஜெபித்தோம். வேத வசனங்களை அவளோடு பகிர்ந்து கொண்டு, சில வேத வசன ஒலிநாடாக்களையும் அவளுக்குக் கொடுத்தோம். எங்களால் இயன்ற எல்லாவற்றையும் அவளுக்குச் செய்து கொடுத்தோம். அவள் அவைகள் எல்லாவற்றையும் அப்படியே பின்பற்ற விரும்பினாலும், அவள் *எவ்வித முன்னேற்றத்தையும் காணவில்லை. தவறு என்ன?* ஆலோசனை நேரத்தில், அவள் ஒரு பகற் கனவுக்காரி என ஆவியானவர் வெளிப்படுத்திக் காண்பித்தார். அவள் தனது சிந்தையில் தன்னை ஒரு இளவரசியாகவும், ஒரு அழகுள்ள இளவரசன் தனது பணிகளையெல்லாம் முடித்துவிட்டு,

தனது வீட்டிற்குள் வண்ண மலர்களோடும், இனிப்புகளோடும் வந்து தன்னைக் கொஞ்சிக் குலாவி மகிழ்வதாகவும் கற்பனை செய்து கொண்டிருப்பாள்.

இவ்வண்ணமான கற்பனையை தனது மனதில் அநேக நாட்கள் வளர்த்துக் கொண்ட நிலையில் அவளது கணவன் தன் வேலையை முடித்து களைப்போடும் வியர்வையோடும், அழுக்கோடும் ஒரு பல் இழந்த நிலையில் தடித்த மனிதனாக வீட்டிற்குள்ளே நுழையும்போது, அவனை இவள் அவமதித்தாள்.

இந்நிலையைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். இந்தப் பெண் மறுபடியும் பிறந்திருந்தாலும், இவளது வாழ்க்கையே ஒரு குழப்பமாக இருந்தது. தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவருக்காக அவள் வாழ விரும்பினாள். தனது கணவனையும், அவள் நேசித்து வாழ்வது தேவசித்தம் என்பதை அறிந்து அதைச் செயல்படுத்த விரும்பினாள். தனது திருமண வாழ்க்கையில் ஜெயமுள்ளவளாக அவள் வாழ விரும்பினாலும், அவளது சிந்தை அவளைத் தோற்கடித்துக் கொண்டே இருந்தது. தெளிந்த புத்தியுள்ள சிந்தையோடு அவள் செயல்படும் வரை, தனது கணவன் மேலுள்ள "தாழ்வு மனப்பான்மையிலிருந்து" அவளாலே ஜெயம் காண முடியவில்லை.

ஒரு வகையான கற்பனையான உலகத்திலே அவள் தன் சிந்தையிலே வாழ்ந்து கொண்டிருந்தாள். ஆகவே உண்மையோடுள்ள வாழ்வோடு இடைப்பட ஆயத்தமற்றவளாகவே வாழ்ந்தாள். செயலற்ற, மந்தமான சிந்தை அவளுக்கு இருந்தபடியால், தேவனுடைய வார்த்தையின்படி தனது சொந்த எண்ணங்களை அவள் தெரிந்து கொள்ளவில்லை. அசுத்த ஆவிகள் பொல்லாத சிந்தனைகளையே அவளது எண்ணங்களாகப் புகுத்திவிட்டன.

அவைகளனைத்தையும் தனது சுய எண்ணங்களாக எடுத்து அவைகளில் மகிழ்ந்து கொண்டிருக்கும் மட்டும் அவள் ஒருபோதும் ஜெயத்தை அனுபவிக்க முடியவேயில்லை. எப்பொழுது அவளது யோசனைகளை மாற்றினாளோ அப்பொழுதே அவளுடைய வாழ்வு மாற ஆரம்பித்துவிட்டது. தனது கணவனைப் பற்றிய தனது மனநிலையை

அவள் மாற்றியவுடன், அவளது கணவனும் அவரது தோற்றத்தையும், நடத்தையையும் மாற்றிவிட்டார்.

## மேலானவைகளையே நாடுங்கள்

> நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசுத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்.
>
> கொலோசெயர் 3:1-2

மீண்டுமாக அதே கருத்தைத் தான் இங்கே நாம் காண்கிறோம். இயேசு அருளின உயிர்த்தெழுதலின் வாழ்க்கையை நாம் வழ விரும்புவோமேயானால் புதிதும், வல்லமையுமான ஜீவனை - பூமிக்குரிய நிலையில் அல்ல. மேலான நிலையிலுள்ள காரியங்களை நாடி வாழ்வோமாக.

நல்ல வாழ்வை நாம் விரும்புவோமேயாகில், மேலானவைகளிலே நமது சிந்தையைப் பதிக்க வேண்டுமென்பதே அப்போஸ்தலனாகிய பவுலுடைய அறிவுரையாகும்.

பல விசுவாசிகள் நல்ல ஜீவனுள்ள வாழ்க்கையை விரும்பினாலும், நன்மையான காரியங்கள் தானே நடக்க வேண்டும் என்று செயலற்ற நிலையில் சும்மா உட்கார்ந்து விடுகிறார்கள். ஜெயத்தோடு வாழ்கின்ற மற்றவர்களைக் குறித்துப் பொறாமை கொண்டவர்களாய் தங்களது வாழ்க்கை மிகவும் கடினமுள்ளதென்று அறிந்து ஆத்திரமடைகிறார்கள்.

உங்கள் பிரச்சனைகளின் மேல் வெற்றி கொள்ள நீங்கள் விரும்பினால், மெய்யாகவே உயிர்த்தெழுந்த ஜீவியத்தை *நீங்கள் நடத்த விரும்புவீர்களானால் சுய எலும்புடையவர்களாக அல்ல. முதுகெலும்புள்ளவர்களாக நீங்கள் நடக்க வேண்டும்!* கிரியை செய்கிறவர்களாய் இருக்க வேண்டும். செயலற்றவர்களாக இருக்கவே கூடாது. சரியானக் கிரியைகள் சரியான சிந்தனையோடு கூட ஆரம்பிக்கும். உங்கள் சிந்தையில் செயலற்றவர்களாய் இராமல் சரியான சிந்தனைகளைத் தெரிந்துகொள்ள இன்றே ஆரம்பியுங்கள்.

# அதிகாரம்
# 15

## *கிறிஸ்துவின் சிந்தை*

அதிகாரம்
15

# *கிறிஸ்துவின் சிந்தை*

> *கர்த்தருக்குப் போதிக்கத்தக்கதாக அவருடைய சிந்தையை அறிந்தவன் யார்? எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது.*
>
> 1 கொரிந்தியர் 2:16

சரியான சிந்தனைகளைத் தெரிந்து கொள்ள இப்பொழுது நீங்கள் உறுதியான முடிவு எடுத்திருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். ஆகவே, கர்த்தருக்கேற்ற சரியான சிந்தனைகள் எவை என்பதைச் சற்று ஆராய்ந்து பார்ப்போம். இயேசு இந்த உலகத்தில் வாழ்ந்த போது, அவருடைய எண்ணத்திலே உதயமாக முடியாத சில சிந்தைகள் இன்று உலகிலே உள்ளன. நாம் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்ற விரும்புவோமானால், அவர் எப்படிச் சிந்தித்தாரோ, அப்படியே நாமும் சிந்திக்க வேண்டும்.

இது என்னாலே முடியாத காரியம் என்று இப்பொழுதே நீங்கள் எண்ணிக் கொண்டிருக்கலாம். “இயேசு பரிசுத்தமாயிருந்தார். எனது யோசனைகளிலே முன்னேற்றத்தைக் கொண்டு வரலாமேயொழிய, ஒரு போதும் நான் அவர் சிந்தித்தது போல சிந்திக்க முடியாது” என நீங்கள் எண்ணலாம்.

நமக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறதென்றும், புதிய இருதயமும், ஆவியும் நமக்கு உண்டென்றும் வேதம் நமக்குச் சொல்லுகிறது.

## புதிய இருதயமும் ஆவியும்

> உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்.

உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும், என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும் பண்ணுவேன்.

எசேக்கியேல் 36:26-27

கிறிஸ்தவர்களான உங்களுக்கும், எனக்கும் புதிய ஒரு சுபாவம் உண்டு. அதென்னவெனில் மறுபிறப்பினாலே தேவனுடைய சுபாவம் நமக்குள்ளே வைக்கப்படுகிறது.

நாம் அவருடைய கட்டளைகளின்படி நடக்க வேண்டுமானால், அவர் நமக்குள்ளே புதிய இருதயத்தையும், ஆவியையும் வைக்க வேண்டும் என்று வேத வசனம் தெளிவாய் நமக்குக் கூறுகிறது. மாம்சத்தின் சிந்தையைப் பற்றியும், ஆவியின் சிந்தையைப் பற்றியும் ரோமர் 8:6 நமக்கு விளக்குகிறது. மாம்சத்தின் சிந்தை மரணத்தையும், ஆவியின் சிந்தை ஜீவனையும் நமக்குத் தருகிறது எனத் தெளிவாய் நாம் காண்கிறோம்.

ஜீவனையும் மரணத்தையும் தெளிவாய் நாம் பகுத்தறிவோமானால் அபரிவிதமான முன்னேற்றத்தை நாம் அடையக் கூடியவர்களாக இருப்போம்.

ஏதோ ஒன்று உங்களை மரணத்துக்கு நேராய் நடத்துமானால், இனி ஒருபோதும் அதைச் செய்யாதிருங்கள். சில விதமான சிந்தனைகள் உங்களை மரணத்தால் நிரப்புமானால், அது ஆவியின் சிந்தை அல்ல என்பதை உடனடியாக நீங்கள் அறிந்து கொள்ள முடியும்.

இன்னொருவனிமித்தமாக நான் ஒரு அநீதிக்கு உள்ளாக்கப்பட்டேன் என உதாரணமாக வைத்துக் கொள்வோம். இப்போது எனக்குக் கோபம் வருகிறது. அக்குறிப்பிட்ட நபரை எந்த அளவுக்கு வெறுக்கிறேன் என்பதை யோசிக்க ஆரம்பிக்கிறேன். நான் ஆத்திரப்படும்போது மரணத்தால் நிரப்பப்படுகிறேன் என்பதை உணர்கிறேன். இப்பொழுது எனக்குள்ளே அதிகமான கோபமும், மூர்க்கமும் பொங்கி எழும்புகிறது. சரீரப்பிரகாரமாகவும், ஒருவேளை நான் பாதிக்கப்படக் கூடும். தவறான சிந்தையினிமித்தம் தலைவலி, வயிற்றுவலி எனக்கு வரலாம். இவை யாவும் தவறான சிந்தையினால் வருகின்ற வேதனைகளாகும். ஆனால் அதற்கு மாறாக, நான் எந்த அளவிற்கு ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றும்,

தேவன் என்னை எவ்வளவாய் நன்றாக வைத்திருக்கிறார் என்றும் எண்ணும் போது, நான் ஜீவனால் நிறைந்துள்ளேன் என அறிந்து கொள்ளுவேன்.

தனக்குள்ளே இருக்கிற ஜீவனையும் மரணத்தையும் ஒரு விசுவாசி பகுத்தறிய வேண்டுவது மிகவும் நல்ல ஒரு காரியம். அவருடைய சிந்தையை நாம் நமக்குள் கொண்டிருப்பதின் மூலம் ஜீவனாலே நாம் நிறைந்தவர்களாகக் காணப்பட இயேசு வழிகளை உருவாக்கியுள்ளார்.

கிறிஸ்துவின் சிந்தையை நாம் பின்பற்ற நாம் கடைப்பிடிக்க வேண்டிய காரியங்களைக் கீழே கவனிப்போமாக.

*1. சாத்தியக்கூரான சிந்தனைகளை யோசியுங்கள்.*

> இரண்டுபேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்து போவார்களோ?
>
> ஆமோஸ் 3:3

ஒருவன் கிறிஸ்துவின் சிந்தையின்படி எண்ணுவான் ஆனால் அவனுடைய யோசனைகள் எப்படியாக இருக்கும்? நிச்சயமாகவே அவைகள் சீரான எண்ணங்களாகவே இருக்கும். முந்தைய அதிகாரத்தில், சாத்தியக்கூரான எண்ணங்களின் முற்றிலுமான அவசியத்தை நாம் கற்றறிந்து விட்டோம். 5ம் அதிகாரத்தில் தெளிவாய் வாசிக்கும் போது அதன் விளக்கத்தை நன்கு அறிந்து கொள்வோம்.

சாத்தியக்கூரான நிலையில் இருப்பதன் வல்லமையைப் பற்றி, இது போதும் என ஒருபோதும் சொல்லவே முடியாது. தேவன் சாத்தியக்கூரான நிலையிலே இருக்கையிலே, அவருடனே கூட நீங்களும், நானும் இணைந்து செல்ல வேண்டுமாகில், தேவனைப் போல அதே அளவோடுள்ள சாத்தியக் கூரான நிலையில் நாம் சிந்திக்க வேண்டும். மனதை அடக்கி ஆளும் அப்பிரயாசத்தைப் பற்றி நான் இங்குச் சொல்லவில்லை. ஆனால், முழுவதுமாக ஒரு சாத்தியக் கூரான எண்ணமுள்ள மனிதனாக இருக்க வேண்டும் எனக் குறிப்பிடுகிறேன்.

நேர்முக எண்ணத்தையும், நோக்கத்தையும் உடையவர்களாக இருங்கள். நேர்முக சிந்தனைகளையும், எதிர்பார்ப்புகளையும் பரிபாலனம் செய்யுங்கள். நேர்முக சம்பாஷணைகளிலே உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.

இயேசுவும் நிச்சயமாகவே சாத்தியக் கூரான எண்ணத்தையும், நோக்கத்தையும் உடையவராகவே இருந்தார். தனிப்பட்டத் தாக்குதல்கள் முதற்கொண்டு அநேகப் பாடுகளை அவர் சகித்தார். பொய் குற்றம் சாட்டப்பட்டும், சீஷர்களால் ஒதுக்கப்பட்டும், எள்ளி நகையாடப்பட்டும் தனிமையாக்கப்பட்டும், தவறாக எண்ணப்பட்டும், இன்னும் அநேக அதைரியப்படுத்தும் காரியங்களால் நிந்திக்கப்படவும் செய்தார். என்றாலும், இப்பேற்பட்ட எதிர்மாறான சூழ்நிலைகளின் மத்தியிலும் அவர் நேர்முகமான எண்ணமுள்ள நிலையிலேயே காணப்பட்டார். உற்சாகமூட்டும் பதில்களையும், ஊக்குவிக்கும் வார்த்தைகளையும் அவர் எப்பொழுதும் உடையவராய் இருந்தார். தம்மை நாடி வந்தவருக்கெல்லாம் எப்பொழுதும் நம்பிக்கையை ஊட்டுகிறவராய் இருந்தார்.

நமக்குள் இருக்கும் கிறிஸ்துவின் சிந்தை எப்பொழுதும் சாத்தியக் கூரானது. ஆகவே தான், எப்போதெல்லாம் எதிர்மாறான நிலைக்குள்ளாய் நாம் வருகிறோமோ அப்போதெல்லாம் கிறிஸ்துவின் சிந்தையோடு நாம் செயல்படுகிறதில்லை. லட்சக்கணக்கான மக்கள் மனச்சோர்வினால் துன்பப்படுகிறார்கள். எதிர்மாறான எண்ணம் இருந்தாலொழிய இத்தகைய மனச்சோர்வுகளுக்கு இடமேயில்லை. மருத்துவ ரீதியான காரணம் இருந்தாலொழிய அவ்வாறு சோர்வில் இருக்கவே முடியாது. அந்த நிலையிலும் கூட, எதிர்மாறான சூழ்நிலை எப்பொழுதும் பிரச்சனைகளையும், அதன் அடையாளங்களையுமே பெருகப் பண்ணும்.

சங்கீதம் 3:3 ன் படி தேவன் நமது மகிமையும், நமது தலைகளை உயர்த்துகிறவருமாய் இருக்கிறார். நமது நம்பிக்கைகள், நோக்கங்கள், மனநிலைகள், சிரம், கரம், இருதயம் இவை அனைத்தையுமே அவர் உயர்த்தக்கூடியவராய் இருக்கிறார். நமது முழு வாழ்வையும் உயர்த்துகிற தெய்வீக வல்லமை மிக்கவராக அவர் திகழ்கிறார்.

தேவன் நம்மை உயர்த்த விரும்புகிறார். பிசாசோ நம்மைத் தாழ்த்த விரும்புகிறான். நம்மை சோர்வுக்குள்ளாக்க சாத்தான் நமது வாழ்விலுள்ள எதிர்மாறான சூழ்நிலைகளையே உபயோகப்படுத்துகிறான். *"சோர்வ"* என்ற சொல்லுக்கு "ஆவியிலே கீழே இறங்கப்பண்ணுவது" என்று அகராதியில் அர்த்தம் காணப்படுகிறது. *சுற்றியுள்ள எல்லைக்கும் கீழே*

*இறங்குவது* என்பது வேறொரு பொருளாகும். அல்லது "தரைமட்டத்துக்கும் கீழே மூழ்கப்பண்ணுதல்" எனவும் அர்த்தப்படுத்தலாம். வழக்கமாகவே எதிர்மாறாக சிந்திக்கும் தருணங்கள் நம் அனைவருக்கும் உண்டு. ஆனால், இந்த சிந்தனைகள் நம்மை இன்னும் கீழே தான் தள்ளி விடும். எதிர்மாறாய் இருப்பது நமது பிரச்சனைகளைத் தீர்க்காது. ஆனால், பிரச்சனைகள் இதன் மூலம் அதிகரிக்கவே செய்யும்.

## மனச்சோர்வை மேற்கொள்ளுதல்

சங்கீதம் 143:3-10ல் மனச் சோர்வின் விளக்கத்தையும் அதை மேற்கொள்ளும் வழிமுறையையும் நாம் காண்கிறோம். இந்தச் சத்துருவினுடைய தாக்குதலை மேற்கொள்ளும்படியாக அதன் படிகளை இப்பகுதியிலே விபரமாய் படிப்போம்.

1. பிரச்சனையின் நிலமையையும் காரணத்தையும் அடையாளம் கண்டுக்கொள்ளுதல்.

> சத்துரு என் ஆத்துமாவைத் தொடர்ந்து, என் பிராணனைத் தரையோடே நசுக்கி, வெகுகாலத்துக்கு முன் மரிந்தவர்கள் போல் என்னை இருளில் இருக்கப் பண்ணுகிறான்.
>
> சங்கீதம் 143:3

வெகு காலத்துக்கு முன் மரித்தவர்கள் போல, இருளில் வாசம் பண்ணுதல் நிச்சயமாகவே மனச் சோர்வுக்குள்ளான ஒருவனைக் காட்சியாக்கி நமக்குக் காண்பிக்கிறது. இந்த ஆத்துமாவிற்கு விரோதமான தாக்குதல், மனச்சோர்வு இவற்றிற்குக் காரணமே சாத்தான்.

2. ஜீவனையும் ஒளியையும் இம்மனச்சோர்வு திருடி விடுகிறது என்பதை அறிந்து கொள்ளுதல்.

> என் ஆவி என்னில் தியங்குகிறது. என் இருதயம் எனக்குள் சோர்ந்து போகிறது.
>
> சங்கீதம் 143:4

மனச்சோர்வு ஒரு மனிதனுடைய ஆவிக்குரிய விடுதலையையும், வல்லமையையும் ஒடுக்கிவிடுகிறது.

நமது ஆவி, தேவனுடைய ஆவியால் வல்லமையாக்கப்பட்டிருக்கிறது. அது விடுதலையான ஒன்று. ஆகவே, சாத்தான் நமது சிந்தையை இருளாலும், மந்திரத்தாலும் நிரப்புவதன் மூலம் அதனுடைய வல்லமையையும், விடுதலையையும் ஒடுக்கிவிட முற்படுகிறான். மனச்சோர்வு நமது சிந்தைக்குள் நுழைகிறது என்ற உணர்வு நமக்கு வந்தவுடன் அவ்வுணர்வை உடனடியாக எதிர்ப்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும். எந்த அளவுக்கு அதிகமாக “மனச்சோர்வு” நமது சிந்தையில் தங்க இடம் கொடுக்கிறோமோ, அந்த அளவிற்கு அதை வெளியேற்ற மிகவும் கடினமானதாகும்.

3. நல்ல காலங்களை நினைவுகூருவோமாக

> பூர்வ நாட்களை நினைக்கிறேன், உமது செய்கைகளையெல்லாம் தியானிக்கிறேன். உமது கரத்தின் கிரியைகளை யோசிக்கிறேன்.
>
> சங்கீதம் 143:5

இந்த வசனத்தில் தனது நிலைமைக்கான பதிலைச் சங்கீதக்காரன் குறிப்பிடுகிறான். நினைவு கூறுதல், தியானித்தல், ஆராய்தல் இவைகள் எல்லாம் மனதின் செயல்பாடுகளாகும். தனது சிந்தனைகள் தனது உணர்வுகளை பாதிக்கின்றன என்பதை அவன் நன்கு அறிந்தவனாய் தனது சிந்தையை மேற்கொள்ளக்கூடியக் காரியங்களைத் தீவிரமாக சிந்திக்க ஆரம்பிக்கிறான்.

4. பிரச்சனையின் நடுவில் கர்த்தரைத் துதிப்போமாக

> என் கைகளை உமக்கு நேராக விரிக்கிறேன். வறண்ட நிலத்தைப் போல் என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது.
>
> சங்கீதம் 143:6

துதித்தலின் முக்கியத்துவத்தை சங்கீதக்காரன் அறிந்திருக்கிறான். ஆராதிப்பதில் தனது கைகளை அவன் உயர்த்துகிறான். தான் உண்மையாகவே தேவனைத் தேடுகிறதை அவன் உணருகிறான். தேவன் ஒருவர் மாத்திரமே தன்னை திருப்தி செய்ய முடியும் என்பதை அவன் அறிந்திருக்கிறான்.

அடிக்கடி ஜனங்கள் மனச்சோர்வு அடைவதற்கு ஒரு காரணம் உண்டு,

அவர்கள் தங்களுக்கு ஒரு தேவை ஏற்படும் போது அதைத் தவறான இடத்தில் தேடுகிறார்கள், அது பிரச்சனைகளைத்தான் அதிகரிக்கும்.

எரேமியா 2:13 ல் கர்த்தர், என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள், ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள். தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்குத் வெட்டிக்கொண்டார்கள் எனக் கூறுகிறார்.

தாகமுள்ள ஒரு ஆத்துமாவின் தாகத்தை தேவன் ஒருவர் மாத்திரமே தீர்க்க முடியும். வேறு எவரும், எந்த ஒரு கிரியையும் உங்கள் தாகத்தைத் தீர்க்க முடியும் என்று நீங்கள் எண்ணி, உங்களையே வஞ்சித்துக் கொள்ள வேண்டாம். தவறான காரியங்களைப் பின்தொடருவது எப்பொழுதும் உங்களை ஏமாற்றத்துக்குள்ளாக்கி, அந்த ஏமாற்றமானது உங்களை மனச்சோர்வுக்குள்ளாக்கிவிடும் என்பதை மறந்து போகாதீர்கள்.

5. உதவியை தேவனிடத்தில் கேளுங்கள்

> கர்த்தாவே, சீக்கிரமாய் எனக்குச் செவிகொடும், என் ஆவி தொய்ந்து போகிறது, நான் குழியில் இறங்குகிறவர்களுக்கு ஒப்பாகாதபடிக்கு, உமது முகத்தை எனக்கு மறையாதேயும்
>
> சங்கீதம் 143:7

சங்கீதக்காரன் உதவிக்காக மன்றாடுகிறான். உம்மாலெயல்லாமல் என்னாலே ஒன்றும் செய்ய முடியாது. ஆகவே, தயவாகத் துரிதமாகச் செயல்படும் எனக் கூறுகிறான்.

6. அவருக்குச் செவி கொடுங்கள்

> அதிகாலையில் உமது கிருபையைக் கேட்கப்பண்ணும், உம்மை நம்பியிருக்கிறேன், நான் நடக்க வேண்டிய வழியை எனக்குக் காண்பியும், உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன்.
>
> சங்கீதம் 143:8

தான் கர்த்தருக்குச் செவிகொடுக்க வேண்டிய அவசியத்தை சங்கீதக்காரன் நன்கு அறிந்திருக்கிறான். தேவனுடைய அன்பையும்,

தயவையும் குறித்த உறுதிப்பாட்டின் அவசியத்தை உணருகிறான். தேவனுடைய கரிசனைக்காகவும், வழிநடத்தலுக்காகவும் மன்றாடுகிறான்.

7. விடுதலைக்காக ஜெபியுங்கள்

> கர்த்தாவே, என் சத்துருக்களுக்கு என்னைத் தப்புவியும் உம்மைப் புகலிடமாகக் கொள்ளுகிறேன்.
>
> சங்கீதம் 143:9

தேவன் ஒருவர் மாத்திரமே தன்னை விடுதலையாக்க முடியும் என மீண்டும் சங்கிதக்காரன் அறிவிக்கிறான். இவ்விதமான சூழ்நிலை முழுவதிலும் அவன் தேவனிலே மாத்திரம் தனது கவனத்தை வைக்கிறானேயொழிய. வேறு எந்த பிரச்சனையிலும் அவன் கவனத்தை வைக்கவேயில்லை.

8. தெய்வீக ஞானத்தையும் அறிவையும் தலைமைத்துவத்தையும் தேடுங்கள்.

> உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், நீரே என் தேவன், உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக.
>
> சங்கீதம் 143:10

ஒருவேளை, தான் தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாகக் காரியங்களைச் செய்த படியால், தனது அத்துமாவிற்கு ஆபத்தை உண்டாக்கும் வாசலைத் திறந்து விட்டதாக சங்கீதக்காரன் எண்ணுகிறான். தேவ சித்தம் ஒன்று மாத்திரமே பாதுகாப்பான இடம் என அவன் அறிந்தபடியால் அவன் இப்பொழுது தேவ சித்தத்தின் மையத்திலே காணப்படும் படியாக விரும்புகிறான்.

பின்னர், தான் உறுதியாக நிலைத்து நிற்க வேண்டுமென தேவனிடத்திலே மன்றாடுகிறான். “என்னை செவ்வையான வழியில் நடத்தும்” என்ற ஜெபமானது அவன் அதற்கு முன்பாக நிலையற்ற உணர்வுகளை உடையவனாயிருந்தான் எனக் காண்பிக்கிறது மேலும் கீழுமாக அல்ல ஆயினும் ஒரே சமநிலையில் இருக்க விரும்புகிறான்.

## உங்கள் ஆயுதங்களை உபயோகியுங்கள்

எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக் கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவ பலமுள்ளவைகளாயிருக்கிறது.

அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்.

2 கொரிந்தியர் 10:4-5

மக்கள் மனதிலே மனச் சோர்வை சாத்தான் உருவாக்கி இருள், அழிவு என்னும் குழிக்குள்ளே தள்ளும் படியாக பல லட்ச மக்களை அழிக்க முற்படுகிறான். தற்கொலை என்பது அடிக்கடி இந்த மனச்சோர்வினாலே ஏற்படுகின்ற ஒன்றாய் அமைகிறது. வருங்காலத்தைக் குறித்து எந்த ஒரு நம்பிக்கையும் இல்லாத படியால் முற்றிலும் எதிர்மாறாகவே சிந்தித்து ஒருவன் தற்கொலை செய்கிறான்.

*எதிர்மாறான உணர்வுகள் எதிர்மாறான சிந்தையிலிருந்து வருகின்றன.*

சிந்தை ஒரு போர்க்களம் அது வெற்றி பெறுகின்ற அல்லது தோல்வி அடைகிற ஒரு இடமாகும். நேர்முக சிந்தை உள்ளவர்களாயிருக்கத் தெரிந்து கொள்ளுங்கள். எதிர்மாறான எல்லா எண்ணங்களையும் கீழே தள்ளுங்கள். எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிற நிலைக்குக் கொண்டு வருகிறவர்களாக இருங்கள் (2 கொரிந்தியர் 10:5).

2. *தேவனுடைய சிந்தையைக் கொண்டிருங்கள்*

உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்து கொள்வீர்.

ஏசாயா 26:3

இயேசு தமது பரலோகப் பிதாவுடன் தொடர்ந்து உறவு கொண்டிருந்தார். குறிப்பிட்ட ஒரு நபர் மீதிலே உங்கள் மனதை

முற்றிலுமாகப் பதித்தாலொழிய, அவரோடு முழு உறவை நீங்கள் வைக்கவே முடியாது. நானும் எனது கணவரும் காரில் அருகருகே இருந்து அவர் என்னுடனே பேசிக் கொண்டிருந்தாலும், நான் எனது சிந்தையை வேறு எங்காவது பதித்துக் கொண்டிருந்தால், முழு கவனத்தையும் நான் அவர் மீது செலுத்தாதபடியால், நாங்கள் ஒருவரோடொருவர் ஐக்கியப்படவில்லை என்பதை அது காண்பிக்கிறது. ஆகவேதான், கிறிஸ்துவின் சிந்தையோடு இணைந்து செயல்படுகிற ஒருவனுடைய மனது எப்பொழுதும் தேவன் மேலும் அவரது வல்லக் கிரியையின் மீதே சார்ந்திருக்கும் என நாம் உறுதியாய்ச் சொல்ல முடியும்.

## தேவனையும்,அவரது கிரியையும் தியானியுங்கள்

நிணத்தையும் கொழுப்பையும் உண்டதுபோல என் ஆத்துமா திருப்தியாகும், என் வாய் ஆனந்தக்களிப்புள்ள உதடுகளால் உம்மைப் போற்றும். என் படுக்கையின் மேல் நான் உம்மை நினைக்கும்போது, இராச்சாமங்களில் உம்மை தியானிக்கிறேன்.

சங்கீதம் 63:5-6

உம்முடைய கிரியைகளையெல்லாம் தியானித்து, உம்முடைய செயல்களை யோசிப்பேன்.

சங்கீதம் 77:12

உமது கட்டளைகளைத் தியானித்து, உமது வழிகளைக் கண்ணோக்குகிறேன்.

சங்கீதம் 119:15

பூர்வ நாட்களை நினைக்கிறேன், உமது செய்கைகளையெல்லாம் தியானிக்கிறேன். உமது கரத்தின் கிரியைகளை யோசிக்கிறேன்.

சங்கீதம் 143:5

தேவனுடைய நற்குணம் கிரியைகள், வழிகள் முதலியவற்றைத் தியானிப்பதைப் பற்றி சங்கீதக்காரன் அடிக்கடி குறிப்பிடுகிறான். தேவனுடைய தயவையும் அவருடைய கரத்தின் கிரியைகளையும் தியானிப்பது மிகவும் ஆச்சரியமானதாய் இருக்கிறது என்றும் கூறுகிறான்.

இயற்கை, மிருகங்கள், சமுத்திர ஜீவராசிகள் ஆகிய படைப்புகள் அனைத்தும் தேவனுடைய மகத்துவத்தைக் காண்பிப்பதாக இருப்பதால் அவைகளை தொலைக்காட்சியில் அடிக்கடி பார்ப்பது எனக்கு மிகவும் விருப்பமான பொழுது போக்கு. தமது வல்லமையின் மகத்துவத்தால் அனைத்தையும் அவர் தாங்குகிறதை நான் யோசிக்கும் போது அது எத்தனை ஆச்சரியமாயும் அவரது ஒப்பற்ற சிருஷ்டிப்பை விளக்குகிறதாயும் இருக்கிறது என்பதை நான் நினைத்து பூரிப்பேன் (எபிரெயர் 1:3).

நீங்கள் உங்கள் சிந்தையில் ஜெயத்தைப் பெற்றுக் கொள்ள விரும்பினால், தேவனுடைய வழியையும், கிரியையும் உங்கள் சிந்தையில் தொடர்ந்து தியானிக்க வேண்டும்.

சங்கீதம் 17:15 ல் தாவீது நானோ நீதியில் உம்முடைய முகத்தைத் தரிசிப்பேன், நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன் என அழகாக விவரிக்கிறான்.

ஒவ்வொரு நாளும் அதிகாலையில் எழும்பும்போது தவறான அநேகக் காரியங்களை நான் சிந்திப்பதால் அந்த நாள் முழுவதும் எனக்கு மகிழ்ச்சியற்ற நாட்களாகவே இருக்கும், எனக்குள்ளே இருக்கிற கிறிஸ்துவின் சிந்தை செலாற்றும் போதோ, பரிசுத்த ஆவியானவர் எனக்கு உதவி செய்கிறபடியால், நான் முற்றிலும் திருப்தியுள்ளவளாக இருக்கிறேன், நமது வாழ்க்கையை அந்த நாள் முழுவதும் அனுபவிக்க வேண்டுமானால் அதிகாலை தோறும் தேவனோடு உ றவாடுகிற பழக்கம் நமக்கு வேண்டும்.

## கர்த்தரோடுள்ள ஐக்கியம்

நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன், நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும் நான் போகாதிருந்தால் தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார், நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்.

யோவான் 16:7

மகிமையிலே தமது பிதாவினுடைய வலது பாரிசத்தில் உட்காரும்படியாக இந்த உலகத்தைவிட்டு இயேசு கடந்து செல்லு முன்பாக கூறப்பட்ட வார்த்தைகள் இவைகளாகும் நாம் அவரோடு நெருங்கிய ஐக்கியத்தோடு இருக்க வேண்டும் என்பது பரலோகத்திலிருக்கிற தேவனுடைய சித்தமாயிருக்கிறது என நாம் இங்கு தெளிவுறக் காண்கிறோம்.

நமது சொந்த சிந்தனையைத் தவிர வேறொன்றும் நமக்கு நெருக்கமாக இருக்கவே முடியாது, ஆகவே நாம் நமது கர்த்தரோடு கூட நமது சிந்தையை நிரப்புவோமானால் அது அவரை நமது மனச்சாட்சிக்குள் கொண்டு வருகிறபடியால் நாம் மிகவும் நெருக்கமாக அவருடன் ஐக்கியப்பட்டு நமது அனுதின வாழ்வில் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் ஜெயத்தையுமே அனுபவிப்போம்.

நான் உங்களுடனே கூட இருப்பேன் என்று வாக்கருளியது போல அவர் எப்போழுதும் நம்முடனே கூடவே இருக்கிறார் (மத்தேயு 28:20, எபிரெயர் 13:5) ஆனால் நாம் அவரைப் பற்றி எண்ணினாலொழிய அவரது சமூகத்தை நெருக்கமாய் அனுபவிக்கவே முடியாது, நான் ஒரு அறையில் இருவரோடு தனிமையில் இருக்கிறேன், ஆனால், என் மனதில் பலவிதமான சிந்தனைகளைக் கொண்டு யோசித்துக் கொண்டிருந்தால் அவர் இருப்பதையே மறந்து அறையைவிட்டு வெளியே கூட சென்று விடுகிறேன். கர்த்தரோடு நமக்கு இருக்கிற ஐக்கியத்தின் நிலைமையின் சிலாக்கியமும் இப்படியாகத்தான் இருக்கும். அவர் எப்பொழுதும் நம்முடனே கூட இருக்கிறார் ஆனால் நாம் தொடர்ந்து அவரைப் பற்றி எண்ணிக் கொண்டவர்களாய் இருந்து அவருடைய சமூகத்தைக் குறித்துக் கவனமுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

3. *“தேவன் என்னை நேசிக்கிறார்” என்ற சிந்தையயோடு கூட இருங்கள்.*

> தேவன் நம்மேல் வைத்திருக்கற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார் அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான். தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்.
>
> 1 யோவான் 4:16

தேவனுடைய அன்பும் தேவனுடைய சமூகத்தைப் போலவே உண்மையானது என்பதை நான் விளங்கிக் கொண்டிருக்கிறேன். நம்மேலுள்ள அவரது அன்பை நாம் தியானிக்காவிட்டால் அதை ஒருபோதும் அனுபவிக்க மாட்டோம்.

எபேசியர் 3ல் ஜனங்கள் தங்கள் மீது தேவன் காட்டும் அன்பை அனுபவிக்கும்படியாக பவுல் ஜெபிக்கிறார், தேவன் நம்மை நேசிக்கிறார் என்று வேதம் கூறுகிறது. எனினும் எத்தனை தேவனுடைய பிள்ளைகள் தேவனுடைய அன்பைப் பற்றியுள்ள வெளிப்படுத்தலில் இன்னும் குறைவுள்ளவர்களாய் காணப்படுகிறோம்?

வார்த்தையில் ஜீவன் ஊழியங்கள் என்ற ஸ்தாபனத்தை நாம் ஆரம்பிக்கையில் முதல் வாரத்தில் நான் ஒரு ஊழியத்தை நடத்த வேண்டியதாயிருந்தது. நான் ஜனங்களுக்கு எதைக் கற்றுக்கொடுக்க வேண்டும் என்று கர்த்தரை நான் கேட்ட போது நான் அவர்களில் அன்பாயிருக்கிறேன் என்று என் ஜனங்களுக்குச் சொல் என்று கர்த்தர் என்னோடே கூடப் பேசினார்.

“ஆண்டவரே அது உங்களுக்கு நன்றாய்த் தெரியும்” யோவான் 3:16 “நான் அவர்களுக்கு ஓய்வுநாள் பாடமாக கற்றுக்கொடுக்க விரும்பவில்லை உண்மையான வல்லமையோடு வேறு ஒரு வசனத்தைக் கற்றுக்கொடுக்க நான் விரும்புகிறேன்” என்றேன்.

“ஒரு சிலர் மட்டுமே நான் எந்த அளவிற்கு அவர்களை நேசிக்கிறேன் என்று அறிந்திருக்கிறார்கள் அப்படி அறிந்திருந்தால் வேறுவிதமாகவே கிரியையை நடப்பிப்பார்கள்” என தேவன் எனக்குச் சொல்லிக் கொடுத்தார்.

தேவனுடைய அன்பைப் பெற்றுக் கொள்ளுதலைப் பற்றி நான் கற்றுக் கொள்ள ஆரம்பிக்கையில் எனக்குத் தானே அது ஒரு பெருந்தேவை என்பதை நான் புரிந்து கொண்டேன். தேவனுடைய அன்பைக் குறித்து நான் மிகவும் அறிவுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்று தேவன் எனக்கு 1 யோவான் 4:16 மூலம் வெளிப்படுத்திக் காண்பித்தார். அதன் அர்த்தம் என்னவெனில் நாம் தேவனுடைய அன்பைக்குறித்து திறந்த மனதுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்பதே.

தேவன் என்னில் அன்பாயிருக்கிறார் என்பதான ஒரு வெறுமையான விளக்கம் மட்டுமே எனக்குள்ளே இருந்தது. ஆனால் தேவனுடைய அன்பு என்று சொல்லும்போது அது மிகவும் வல்லமை வாய்ந்த ஒரு சக்தியாக நமது வாழ்க்கைக்குள்ளாக இருக்க வேண்டும். அது நம்மை மிகவும் கடினமான சோதனைகளின் ஊடாகவும் ஜெயத்திற்குள்ளதாகவும் நடத்தக் கூடியதாக இருக்கிறது.

ரோமர் 8:35-37 வரையிலுள்ள வசனங்களில் பவுல் கூறும்போது, உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப் போல எண்ணப்படுகிறோம் எனினும் கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூறுகிறவராலே, முற்றும் ஜெயம் கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம் எனக் குறிப்பிடுகிறார்.

நீண்டகாலமாக இந்தப் பகுதியை நான் வாசிக்கவும் கற்றுக் கொள்ளவும் ஆரம்பித்தேன், தேவன் என் மீது அன்பு செலுத்துகிறார் என்பதை சிந்திப்பதன் மூலமாகவும் அதை சத்தமாய் அறிக்கை செய்வதின் மூலமாகவும் எனக்காக உள்ள தேவனுடைய அன்பைக் குறித்து பகுத்தறிவுள்ளவனாயிருக்கக் கற்றுக் கொண்டேன், தேவனுடைய அன்பைக் குறித்த வசனங்களைக் கற்றுக்கொண்டு அவைகளைத் தியானித்து எனது வாயினாலேயே அறிக்கை செய்தேன். இப்படி நான் மீண்டும் மீண்டும் மாதக்கணக்காகச் செய்கையில் நிபந்தனையற்ற தேவனுடைய அன்பானது வெளிப்படுத்தலாக எனக்குள்ளே அதிகமாக நிஜமான ஒன்றாக பெருக ஆரம்பித்தது.

இப்பொழுது கடினமான சூழ்நிலைகளிலும் கூட அவருடைய அன்பு எனக்கு மிகவும் உண்மையானதாக இருக்கிறது, நான் இனிப் பயப்படத் தேவையில்லை என்ற நிலையில் அவருடைய அன்பு என்னை ஆற்றித் தேற்றக்கூடியது என்ற மனநிறைவோடு வாழ்கிறேன்.

## பயப்படாதிருங்கள்

அன்பிலே பயமில்லை பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்...

1 யோவான் 4:18

நாம் எப்படி இருக்கிறோமோ அந்த நிலையிலேயே தேவன் நம்மைப் பரிபூரணமாய் நேசிக்கிறார். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினால் தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணினார்.

கிறிஸ்துவின் சிந்தைக்கு வெளியே இருக்கிற விசுவாசிகள் தாங்கள் எந்த விதமான மோசமான நிலையில் இருக்கிறோம், என்பதை சிந்திக்கிறதேயில்லை, சுயநீதியின் சிந்தனைகளை அவர்கள் உடையவர்களாயிருக்கிறார்கள். கிறிஸ்துவுக்குள் நீங்கள் யார் என்பதை நீதியுள்ள மன அறிவோடு அவ்வப்போது நீங்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

## நீதியுள்ளவர்களாகவும் - குற்றமற்ற மனச்சாட்சி உடையவர்களாகவும் இருங்கள்

நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும் படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்

2 கொரிந்தியர் 5:21

திரள் கூட்டமான விசுவாசிகள் தங்களைக் குறித்தே எதிர்மாறான எண்ணங்களினால் அலைக்கழிக்ககப்படுகிறார்கள் தங்களுடைய பலவீனங்கள் தோல்விகள் இவற்றினிமித்தம் தேவன் எவ்வளவாய் வருத்தப்பட்டிருப்பார் என்பதான எண்ணங்கள்தான் அவைகள்.

குற்ற உணர்வுக்குள்ளாக எத்தனை முறை நீங்கள் வாழ்ந்து நேரத்தை வீணாக்கியிருக்கிறீர்கள் இப்படிப்பட்ட எண்ணங்கள் சிந்தித்துக் கொண்டிருப்பது நமது வாழ்க்கையை வீணாக்கிக் கொள்வதாகும்!

கிறிஸ்துவுக்குள் வருவதற்குமுன் நீங்கள் எவ்வளவு பயங்கரமானவர்களாய் இருந்தீர்கள் என்று எண்ண வேண்டாம் மாறாக அவருக்குள் தேவனாலே எப்படி நீதிமான்களாக்கப்பட்டீர்கள் என்பதை சற்று யோசித்துப் பாருங்கள். *சிந்தனைகள் கிரியைக்குள்ளாகத் திரும்புகின்றன.* எப்போதாவது நீங்கள் நடந்து கொள்ள விரும்பினால் நீங்கள் உங்கள் சிந்தனைகளை முதலாவது மாற்றிக் கொள்ள வேண்டும் பழைய நிலையைத் தொடர்ந்து யோசித்துக் கொண்டிருந்தால்

மோசமாகத்தான் நீங்கள் நடப்பீர்கள். எப்போதெல்லாம், எதிர்மாறான குற்றம் சொல்லும் சிந்தனைகள் உங்களுக்குள் வருகிறதோ, அப்போதெல்லாம் தேவன் உங்களில் அன்பு கூறுகிறார் என்பதையும் நாம் அவருக்குள் எவ்வாறு தேவ நீதியாக மாற்றப்பட்டோம் என்பதையும் நினைவுபடுத்திக் கொள்வோமாக.

எப்போதுமோ ஒரு நல்ல நிலைமைக்கு நேராகவே நீங்கள் கடந்து செல்லுகிறீர்கள், அனுதினமும் ஆவிக்குரிய நிலையிலே நீங்கள் வளர்ந்து கொண்டே போகிறீர்கள். உங்கள் வாழ்வைக் குறித்து தேவன் ஒரு மகிமையான திட்டத்தை உடையவராயிருக்கிறார், நீங்கள் சிந்திக்க வேண்டிய சத்தியங்கள் இவைகளே.

*உங்கள் சிந்தையைக் கொண்டு நீங்கள் செய்ய வேண்டிய காரியங்கள் இவைகளே.*

தேவனுடைய வார்த்தையின்படியே துணிந்து சிந்தியுங்கள் தலைக்குள்ளே வருவதையெல்லாம் நீங்கள் உங்கள் சொந்த சிந்தனையாய் எடுத்துக் கொண்டு தீவிரமாய் யோசித்துக் கொண்டிருக்கக்கூடாது.

*பிசாசை எதிர்த்து நின்று கடிந்து கொண்டு சரியான சிந்தனைகளை எண்ண ஆரம்பித்து முன்னேறிச் செல்ல ஆரம்பியுங்கள்.*

4. *புத்தி சொல்லும் சிந்தையை உடையவர்களாயிருங்கள்*

புத்தி சொல்லுகிறவன் புத்தி சொல்லுகிறதிலும்
தரித்திருக்கக்கடவன்.

ரோமர் 12:8

கிறிஸ்துவின் சிந்தையோடு இருக்கிற மனிதன் சாத்தியக் கூரான நிலையில் சிந்திக்கிறான், தன்னைப் பற்றியும் தனது சூழ்நிலைகளைப் பற்றியும் மற்றவர்களுடைய சூழ்நிலைகளைப்பற்றியும் சரியான வழியில் சிந்திக்கிறதுமன்றி தூக்கிவிடுகிற தம் பக்திவிருத்திக் கேதுவானதுமான சிந்தனைகளையே சிந்திக்கிறான்.

புத்தி சொல்லுகிற ஊழியம் இந்த நாட்களில் உலகத்திலே அதிகம்

தேவையாய் இருக்கிறது, குறிப்பிட்ட ஒரு நபரைப் பற்றி அன்பான எண்ணங்கள் உங்களுக்கு இருந்தாலொழிய ஒருபோதும் அவருக்கு நீங்கள் புத்தி சொல்ல முடியாது, உங்கள் இருதயத்தின் நிறைவினாலே வாய் பேசும் என்பதை மனத்திற்கொள்ள வேண்டும். சரியான நோக்கத்தோடு அன்பான எண்ணங்களை எண்ணுங்கள்.

மற்ற மக்களுக்கு நேராக அன்பின் சிந்தனைகளை அனுப்புங்கள்.

கிரேக்கப்பதமான *'பரக்கலியோ'* (Parakaleo) என்பதற்கு மற்றவனுடைய நடத்தையைக் கண்டு அவனைக் கூப்பிட்டு அன்போடு புத்தி சொல்ல வேண்டும் என்பதே அர்த்தமாக இருக்கிறது, ஒரு கிரியையைத் தொடரும் படியாக ஒருவன் அருகே சென்று அவன் முன்னேறும்படி அன்போடு ஊக்குவிப்பதே இச்செயலாகும். ரோமர் 12:8 ல் கூறப்பட்ட புத்தி சொல்லுகிற ஊழியமானது அதன் வரத்தின்படியே அவர்களது வாழ்வில் எளிதாகக் காணக்கூடிய ஒன்றாக இருக்கிறது, அவர்கள் எப்பொழுதுமே மற்றவர்களை உற்சாகப்படுத்தி ஊக்கப்படுத்தும் வார்த்தைகளையே பேசுவார்கள். மற்றவர்களை நல்ல சூழ்நிலைக்குள்ளாக வழிகாட்ட தைரியமூட்டும் வார்த்தைகளையே பேசுவார்கள்.

இவ்விதமாக புத்தி சொல்லுகிற வரமுடைய ஊழியம் ஒருவேளை நமக்கு இல்லாம் இருக்கலாம். ஆனால் மற்றவர்களைத் தைரியப்படுத்தும்படி இருக்க யாவரும் கற்றுக் கொள்ளலாம். எளிய வழியில் கூறுவதென்றால் புத்தி சொல்லுவது நல்லதல்லவென்று கண்டால் அதை சொல்லவோ யோசிக்கவோ கூடாது,

ஏற்கனவே எல்லாருக்கும் போதுமானப் பிரச்சனைகள் இருக்கின்றன, அவர்களுக்குப் புத்தி சொல்லுவதன் மூலம் அவர்களது பிரச்சனையோடு கூட இன்னும் பிரச்சனையை நாம் கூட்ட அவசியமில்லை அன்பினாலே ஒருவரையொருவர் நாம் தாங்க வேண்டும் (எபேசியர் 4:29) அன்பு எப்பொழுதும் பிறரிடம் உள்ள சிறந்ததை விசுவாசிக்கும் என்பதை மறந்து போக வேண்டாம் (1 கொரிந்தியர் 13:7)

பிறரைப் பற்றி அன்பான சிந்தனைகளைச் சிந்திக்க நீங்கள் ஆரம்பிக்கும்போது அவர்கள் இன்னும் அதிகமான அன்புள்ள

குணாதிசயத்தோடு நடப்பதை நீங்கள் காண ஆரம்பிப்பீர்கள். உருவாக்குகிற அல்லது அழிக்கின்ற ஆயுதங்களாகவோ அல்லது சுமந்து செல்லும் பெட்டிகளாகவோ சிந்தனைகளும் வார்த்தைகளும் இருக்கின்றன, அவைகளை சாத்தானுக்கும் அவனது கிரியைகளுக்கும் எதிராய் உபயோகப்படுத்தலாம், அல்லது அவைகள் அவனது அழிக்கின்ற திட்டத்திற்கு உதவுபவைகளாகவும் இருக்கலாம்.

உதாரணமாக, திட்டவட்டமாய் மாறுதல் தேவைப்படுகிற நிலையில ஒழுங்குக்கட்டுப்பாட்டுப் பிரச்சனை உள்ள ஒரு பிள்ளை இருக்கிறதென்று வைத்துக் கொள்ளுவோம். அவன் வாழ்க்கையை தேவன் மாற்ற வேண்டும் என்று தொடர்ந்து அவனுக்காக நீங்கள் ஜெபிக்கிறீர்கள், தேவைப்பட்டட மாறுதல்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். அவன் சீர்திருந்து இருக்கும் காலக்கட்டத்தில் நீங்கள் உங்கள் சிந்தையில் என்ன யோசித்து சிந்திக்கிறீர்கள் அல்லது பேசுகிறீர்கள்? அநேகர் தங்கள் ஜெபத்திற்கான பதிலை ஒருபோதும் காண்கிறதில்லை, காரணம் தங்கள் சார்பாக தேவன் கிரியை செய்யும் படியாக அவரிடத்தில் கேட்டதைக் குறித்து அவர்கள் தங்கள் சொந்த சிந்தையினாலும் வார்த்தையினாலும் எதிர்மாறாக செயல்படுகிறர்கள், தேவன் கிரியை செய்ய அவர்கள் இடம் கொடுப்பதில்லை.

உங்கள் பிள்ளை மாற வேண்டுமென்று நீங்கள் ஜெபித்த பின்னர் அவனைப் குறித்த எதிர்மாறான எண்ணங்களை நீங்கள் உடையவர்களாயிருப்பீர்களா? இல்லையேல் மாற்றத்திற்காக ஜெபித்துவிட்டு “இவன் ஒருபோதும் மாறப்போவதில்லை என மற்றவர்களிடத்தில் நீங்கள் சொல்லவோ அல்லது உங்களுக்குள் சிந்திக்கவோ செய்வீர்கள்!” தேவனுடைய வார்த்தையோடு கூட நமது சிந்தையை நாம் ஒருமுகப்படுத்தும்போது நிச்சயமாகவே நாம் ஜெயத்தைக் காண்போம்.

*தேவனுடைய வார்த்தைக்கு நேர்மாறாக நமது சிந்தை செயல்படுமானால் நாம் தேவனுடைய வார்த்தைக்கு ஏற்புடையவர்களாய் நடக்கவே முடியாது, தேவனுடைய வார்த்தையை நாம் சிந்தியாதபட்சத்தில் தேவனுடைய வார்த்தையில் நாம் நடக்கவும் முடியாது.*

ஒருவனுக்காக நீங்கள் ஜெபிக்கிற வேளையில் எதற்காக நீங்கள் ஜெபித்தீர்களோ அதற்கான நிலையில் நீங்கள் உங்கள் சிந்தையையும் வார்த்தையையும் ஒருமுகப்படுத்தும்போது எழுப்புதலைக் காண்பீர்கள்.

சமநிலையிலிருந்து உங்களை நான் வெளியே வாருங்கள் என்று சொல்லவில்லை. உங்கள் பிள்ளைகளுக்கு பள்ளியில் ஒரு ஒழுங்குப் பிரச்சனை இருக்குமாகில், உங்கள் நண்பர் உங்களிடம் அப்பிள்ளை எப்படி இருக்கின்றன என்று விசாரிக்கும் போது உண்மையான மாற்றம் அவனில் காணாத நிலையில் நீங்கள் என்ன பதிலைக் கொடுப்பீர்கள்? நீங்கள் சொல்ல வேண்டிய பதிலை நான் உங்களுக்குத் தருகிறேன். “இன்னும் முழு வெற்றியை அவனில் காணவில்லை, ஆனால் தேவன் அவனுக்குள் கிரியை செய்வதை நான் நம்புகிறேன், அவன் உண்மையாகவே தேவனுடைய ஒரு வல்லமை நிறைந்த பிள்ளையாகச் செயல்படுவான், நாளுக்கு நாள் அவன் கொஞ்சம் கொஞ்சமாக மகிமையின் மேல் மகிமை அடைவதை நான் காண்பேன்” இதுவே நமது பதிலாக இருக்க வேண்டும்.

5. *நன்றியுள்ள இருதயத்தைப் பரிபாலனம் செய்யுங்கள்.*

> அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்.
>
> சங்கீதம் 100:4

கிறிஸ்துவின் சிந்தையைப் பின்பற்றுகிற ஒருவனது சிந்தை துதியினாலும் நன்றியினாலும் எப்பொழுதும் நிறைந்தவையாகவே காணப்படும்.

குறை சொல்லுவதனாலே தான் நாம் சத்துருவுக்கு அநேக வாசல்களைத் திறக்கக் கூடியவர்களாக இருக்கிறோம், சிலர் மற்றவர்களைத் தாக்கிப் பேசுவதனாலும் மற்றவர்களைப் பற்றித் தவறாக சிந்திப்பதனாலும் சரீர வியாதியோடும் பலவீனத்தோடும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நன்றி செலுத்தாமல் நாம் வல்லமையோடு கூட வாழவே முடியாது, நன்றி செலுத்தும் வாழ்வை வேதாகமம் மீண்டும் மீண்டும் நமக்கு

அறிவுறுத்துகிறது, சிந்தனையிலும் வார்த்தையிலும் குற்றம் சொல்லுவது சாவுக்கேதுவானதாக இருக்கிறது, ஆனால் நன்றியுள்ள சிந்தையும் வாழ்வும் வாழத்தகுந்தது.

ஒருவனுக்கு நன்றியுள்ள சிந்தையோ வாழ்வோ இல்லாத நிலையில் அவனுடைய வாயிலிருந்து நன்றி சொல்லுதல் ஒருபோதும் வெளியே வராது, நாம் நன்றியுள்ளவர்களாயிருந்தால் நமது வாயும் அதைத்தான் சொல்லும்.

## எப்பொழுதும் நன்றியறிதலுள்ளவர்களாய் இருங்கள்

ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளில் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்.

எபிரேயர் 13:15

நாம் எப்போது ஸ்தோத்திர பலியை செலுத்துகிறோம்? எல்லா வேளைகளிலும் செலுத்த வேண்டும், எல்லா சூழ்நிலைகளிலும் எல்லாக் காரியங்களிலும் செலுத்த வேண்டும் அப்படிக் செய்வதன் மூலமாய் பிசாசு நம்மைக் கட்டுப்படுத்த முடியாத வெற்றிகர வாழ்விற்குள் நாம் பிரவேசிக்கிறோம்.

நமது சூழ்நிலைகள் எந்நிலையில் இருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் நாம் மகிழ்ச்சியோடும் நன்றி நிறைந்த நிலையிலும் இருக்கும்போது இப்பிசாசு எப்படி நம்மைக் கட்டுப்படுத்த முடியும், துதியின் பலியோடுள்ள ஸ்தோத்திர ஜீவியத்தை நாம் செய்யும் போது இப்படிப்பட்ட வாழ்வு நமக்குக் கிடைக்கிறது. எனது சந்தோஷ பலியை சாத்தானுக்கு செலுத்துவதைக் காட்டிலும் எனது துதியின் பலியை நான் தேவனுக்குச் செலுத்துவதையே விரும்புகிறேன். தேவனுக்கு நன்றி செலுத்துவதை நான் மறுப்பேனானால் எனது சந்தோஷமும் மகிழ்ச்சியும் ஒன்றுமில்லாமல் போய்விடும் என்பதை நான் கற்றுக்கொண்டேன். குற்றஞ்சொல்லுதலின் மூலம் அதை இழந்து போவேன் என்பதே அதன் விளக்கமும், அர்த்தமாகும்.

கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன் அவர் துதி எப்போதும் என் வாயில் இருக்கும் என்று சங்கீதம் 34:1 ல் தாவீது சொல்லுகிறான் நமது சிந்தையிலும் நமது வாயிலும் அவர் துதியை எப்போதும் கொண்டிருப்பதன் மூலமே கர்த்தருக்கு நாம் ஆசீர்வாதமாய் இருக்க முடியும்.

தேவனுக்கு மாத்திரமல்ல மனுஷனுக்கும் நன்றியுள்ள நபராக இருங்கள் யாராவது ஒருவர் உங்களுக்கு நன்மையான ஒன்றைச் செய்யும்போது நீங்கள் அதைப் பாராட்டுகிறீர்கள் என்பதை அவர்கள் அறியட்டும்.

குடும்ப அங்கத்தினர்களிடையே இப்பாராட்டுதலை அளித்து வாழுங்கள் தேவன் நம்மை ஆசீர்வதித்துக் கொண்டே இருக்கும்போது நாம் மிகவும் சாதாரணமாக இருந்து விடுகிறோம் பாராட்ட வேண்டிய நேரத்தை நாம் இழந்து போகிறோம்.

நானும் எனது கணவரும் திருமணம் முடிந்து அநேக வருடங்கள் ஆனாலும் இன்னும் அவரிடம் அவரைப் பாராட்டுவதாகக் கூறுவது என்னுடைய வழக்கமாக இருக்கிறது. அநேக நல்ல குணாதிசயங்களோடுள்ள மிகவும் பொறுமைசாலியான ஒருவராக அவர் இருக்கிறார். நாம் ஜனங்களைப் பாராட்டுகிறோம் என்று சொல்லத்தக்கதாக, எனது கணவருடைய சுபாவங்கள் நல்ல உறவை கட்டிப் பரிபாலனம் செய்ய மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது என நான் அறிந்திருக்கிறேன். நாங்கள் எதற்காக நன்றியுள்ளவர்களாய் இருக்கிறோமோ, அவைகளைக் குறிப்பிடவும் இச்சுபாவங்கள் எங்களுக்கு பயனுள்ளவைகளாக இருக்கின்றன.

சிலருடனே நான் இடைபடும் வேளையில் அவர்கள் தங்களுக்குச் செய்யப்பட்ட சிறிய காரியங்களுக்காக எவ்வளவு நன்றியுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்று நான் அறியும் போது அது என்னை வியப்புக்குள்ளாக்குகிறது. அதே வேளையில் சிலர் தங்களுக்காக எத்தனை நன்மைகள் செய்யப்பட்டாலும் அவற்றைக் குறித்து திருப்தி அடையாமல் இருப்பதையே நான் கண்டு அதிசயிக்கிறேன். இந்தப் பிரச்சனைக்குக் காரணம் பெருமையே. எதைச் செய்திருந்தாலும், சிலர் எப்போழுதுமே பெருமையாலே நிறைந்தவர்களாக இருக்கிறார்கள். சிலர்,

தங்களுக்குப் பிறர் எவ்வளவு அதிகமாய் செய்தாலும், தங்களுடைய தகுதிக்கு அது குறைவானது, தாங்கள் அதற்கு மேலும் தகுதியானவர்கள் என்று நினைத்துக் கொள்ளுகிறார்கள். இவர்கள் எதையும் பாராட்டுவதே இல்லை.

பாராட்டுதல் மற்றவர்களுக்கு மட்டுமல்ல. அது நமக்கும் நல்லது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஏனெனில் அது நமக்குள் சந்தோஷத்தைக் கட்டவிழ்த்து விடுகிறது.

ஒவ்வொரு நாளும், நீங்கள் எதற்கெல்லாம் நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டுமோ அதையெல்லாம் தியானிக்கிறவர்களாய் இருங்கள். ஜெபத்திலே தேவனிடத்திலே மன்றாடுங்கள். உங்கள் இருதயங்களானது ஜீவனாலும் வெளிச்சத்தினாலும் நிறைவதை நீங்கள் அறிவீர்கள்.

## எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் தேவனை ஸ்தோத்திரியுங்கள்

துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினால் நிறைந்து,

சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரத்து...

எபேசியர் 5:18-20

எத்தனை வல்லமையுள்ள தேவ வசனத்தைக் கொண்டு பரிசுத்த ஆவியினால், நீங்களும் நானும் எப்பொழுதும் எப்படி நிறைந்திருக்க முடியும்? சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் நமது சிந்தனைகளினாலே நமக்குள்ளே சிந்தித்து, நமது வார்த்தைகளினாலே மற்றவர்களோடே பேசுவதன் மூலமே. வேறு வார்த்தைகளிலே நான் கூறுவேனேயானால், நமது

சிந்தையிலும் வார்த்தைகளிலும் தேவனுடைய வசனத்தினால் நிறைந்திருக்கிற அனுபவத்தை அது குறிப்பிடுகிறது. எப்பொழுதும் துதி செலுத்துகிறவர்களாகவும் எல்லாவற்றிற்காகவும் தேவனுக்கு நன்றி சொல்லுகிறவர்களாகவும் இருப்போமாக.

6. *வசன சிந்தையோடு இருங்கள்.*

> அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசியாதபடியால் அவருடைய வசனம் உங்களில் தரித்திருக்கிறதுமில்லை.
>
> யோவான் 5:38

நம்முடைய பாடத்திற்கும், சிந்தனைக்கும் தேவனுடைய வார்த்தைகளானது அவருடைய சிந்தையில் நமக்காகக் காகிதங்களில் எழுதப்பட்டிருக்கின்றன. எல்லாவற்றையும் அவர் எப்படி சிந்தித்துப் பார்க்கிறார் என்பதே அவருடைய வார்த்தைகளாக வேத நூல் வடிவிலே நமக்கு அளிக்கப்பட்டுள்ளது.

யோவான் 5:38ல் இயேசு சில அவிசுவாசிகளைச் சிட்சிக்கின்றார். தேவனுடைய வார்த்தையானது எழுதப்பட்ட அவரது சிந்தனைத்துளிகள் என நாம் இங்குக் காண்கிறோம். விசுவாசத்தின் விளைவுகளால் வருகிற அனைத்து நல் விளைவுகளையும் விசுவாசித்து அனுபவிக்க விரும்புகிற மக்கள் தங்களது இருதயங்களில் அவரது வார்த்தைகளை உயிருள்ள செய்திகளாக அங்கீகரிக்க வேண்டும். தேவனுடைய வார்த்தையைத் தியானிப்பதன் மூலமே இது சாத்தியமாகும். இப்படியாகத் தான் அவரது சிந்தனைகள் நமது சிந்தனைகளாக மாறுகின்றன. கிறிஸ்துவின் சிந்தையை நமக்குள் பரிபாலனம் செய்யக் கூடிய ஒரே வழி இதுவேயாகும்.

யோவான் 1:14 ல் மாம்சமான வார்த்தையாய் வந்தவர் இயேசு என நாம் வாசிக்கிறோம். அவரது சிந்தையானது தொடர்ந்து தேவ வசனங்களினால் நிறைந்தாலொழிய இது நடக்க முடியாததும், கூடாததுமான காரியம்.

தேவனுடைய வார்த்தைகளை தியானித்தல் என்று சொல்லும் போது, அது நாம் நமது வாழ்வில் கற்றுக்கொள்ளக் கூடிய அவசியமான ஒரு கொள்கையாகும். "கிரேக்க மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட

அகராதியில் தியானித்தல் என்ற பதத்திற்கு, கவனித்தல்," "கவனம் செலுத்துதல்," "அப்பியாசித்தல்" என அர்த்தங்களை காண்கிறோம்.

இந்தக் கொள்கையானது எவ்வளவு முக்கியமானது என்பதை என்னால் போதுமான ஆழத்தோடே வற்புறுத்த முடியாது. தேவனுடைய வார்த்தையானது தியானிக்கப்படுகிற நிலைமையானது, முதலாவது உங்களுக்கும், பின்னர் உங்களைச் சுற்றியுள்ளவர்களுக்கும் ஜீவனை அளிப்பதாக இருக்கிறபடியால், இதை ஒரு வாழ்க்கைத் தத்துவம் என்றே நான் அழைக்கிறேன்.

"தியானம்" என்ற வார்த்தையைக் கேட்கும் போது அநேக கிறிஸ்தவர்களுக்கு பயம் பிடிக்கிறது. காரணம், தியான நிலையானது தங்களை அஞ்ஞானக் கொள்கைக்குள்ளும், பேலியாளின் மனிதாபிமானத்திற்குள்ளும் தள்ளிவிடும் என்று எண்ணி விடுகின்றனர். ஆனால், நீங்கள் முக்கியமான ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும் என நான் விரும்புகிறேன். சாத்தான் ஒருபோதும் முதல் தர அபிப்பிராயத்தை கொண்டவனாக இல்லை. வெளிச்சத்தின் ராஜ்யத்துக்கென மாற்றிக் கொள்ளுகிறேன். தியானம் என்பது தீமையான காரியத்துக்காக அது செயல்பட முடியும் என்பதை நாம் திட்டவட்டமாய் அறிந்திருக்க வேண்டும். தியானத்தின் கொள்கையானது தேவனுடைய வார்த்தையிலிருந்து தான் நேரடியாக வர முடிகிறது. இதைக் குறித்து வேதம் என்ன சொல்லுகிறது என்பதை நாம் சற்று கவனிப்போமாக.

## தியானித்து செழிப்படையுங்கள்

இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக, இதில் எழுதியிருக்கிறவைகளின் படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக, அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்து கொள்ளுவாய்.

யோசுவா 1:8

தேவனுடைய வார்த்தையை நம்முடைய மனநிலைக்கு நாம் கொண்டு

வராவிட்டால், அதை ஒருபோதும் நாம் அனுபவ ரீதியாகச் செயலாற்ற முடியாது என்று இந்த வசனம் குறிப்பிடுவதை நாம் காண்கிறோம்.

சங்கீதம் 1:2-3 தெய்வீக மனிதனைப் பற்றிக் கூறுகிறது. கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டுத் தன் காலத்தில் தன் கனியைத் தந்து இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான், அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்.

## தியானித்து - சொஸ்தமாகுதல்

> என் மகனே, என் வார்த்தைகளைக் கவனி, என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய், அவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக. அவைகளை உன் இருதயத்துக்குள்ளே காத்துக் கொள். அவைகளைக் கண்டு பிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம்.
>
> நீதிமொழிகள் 4:20-22

தியானித்தல் என்ற வார்த்தையின் அர்த்தங்களிலே ஒன்று கவனித்தல் என நாம் கண்டோம். இங்கு கர்த்தருடைய வார்த்தைகள் ஆரோக்கியத்திற்கு வழியும், நமது மாம்சத்திற்கு ஔஷதமுமாகும் என இவ்வசனம் கூறுகிறது.

நமது சிந்தையில் தேவனுடைய வசனத்தைத் தியானிப்பதும், ஆராய்ச்சி செய்வதும் நமது சரீரத்தைப் பாதிக்கக் கூடியதாக அமைகிறது. கடந்த பதினெட்டு ஆண்டுகளில் எனது தோற்றம் மாறியுள்ளது. தேவனுடைய வார்த்தையை நான் கற்றுக் கொள்ள ஆரம்பித்து அவற்றை என்னுடைய நித்திய வாழ்வின் ஆதாரமாக எடுத்துக் கொண்ட நாளைக் காட்டிலும் இப்போது பதினைந்து வயது குறைவுள்ள தோற்றத்தோடு நான் காணப்படுகிறேன் என மக்கள் கூறுகிறார்கள்.

## கேட்டு அறுவடையைப் பெறுங்கள்

பின்னும் அவர் அவர்களை நோக்கி, நீங்கள் கேட்கிறதைக் கவனியுங்கள் எந்த அளவிற்கு அளக்கிறீர்களோ, அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும், கேட்கிற உங்களுக்கு அதிகம் கொடுக்கப்படும்.

மாற்கு 4:24

விதைத்தலும் அறுத்தலுமானக் கொள்ளையைப் போல இது உள்ளது. எந்த அளவிற்கு அதிகமாக நாம் விதைக்கிறோமோ, அந்த அளவிற்கு அதிகமாக, அறுவடை சமயத்தில் நாம் அறுப்போம். மாற்கு 4:24ல் எந்த அளவிற்கு அதிகமாக நேரத்தை நாம் தனிப்பட்ட நிலையிலே, கேட்கிற வசனத்தைத் தியானிப்பதற்கும் கற்றுக்கொள்வதற்கும் செலவிடுகிறோமோ, அந்த அளவிற்கு அதிகமாக நாம் அறுப்போம் என கற்றுக்கொள்கிறோம்.

## அறுப்போம் - அறுத்துக் கொண்டேயிருப்போமாக

வெளியரங்கமாகாத அந்தரங்கமுமில்லை, வெளிக்கு வராத மறைபொருளுமில்லை.

மாற்கு 4:22

இந்த வசனத்தை நாம் கவனமாய் வாசிப்போமானால், அது, தேவனுடைய வார்த்தையானது, தேவன் நமக்கு வெளிப்படுத்த விரும்புகிற அபரிவிதமான பொக்கிஷங்களையும், வல்லமையான ஜீவனைத் தரும் ரகசியங்களையும் தன்னகத்தே மறைத்து வைத்துள்ளது என நமக்கு விளக்குகிறது. அம்மறைபொருள்களானது யார் யார் தேவனுடைய வார்த்தைகளை தியானித்து, ஆராய்ந்து, கற்று, சிந்தனை செய்து, தங்கள் சிந்தையில் அப்பியாசித்து, வேதவசனத்திற்குள்ளாகத் தங்களை உள்ளாக்குகிறார்களோ, அவர்களுக்கு வெளிப்படுத்தப்படுகிறது.

இத்தத்துவத்தின் உண்மையை, வேதவசனத்தைப் போதிக்கும் ஒரு ஆசானாக தனிப்பட்ட நிலையிலே நான் அறிந்திருக்கிறேன். ஒரு வேதவசனத்தை தேவன் எனக்கு விளக்க ஆரம்பித்துவிட்டால் அதற்கு முடிவேயிராது என்றுதான் தோன்றுகிறது. ஒருமுறை அதை வாசிக்கும் போது ஒரு கருத்தைப் பெற்றுக் கொள்வேன். அதே வசனத்தை மறுமுறை வாசிக்கும்போதோ, அதற்கு முன் கண்டிராத வேறொரு கருத்தைக் கண்டுபிடிப்பேன்.

தேவனுடைய வசனத்தைக் குறித்து ஜாக்கிரதையோடு இருக்கிறவர்களுக்கு தேவன் தொடர்ந்து தமது இரகசியங்களை வெளிப்படுத்திக் கொண்டே இருப்பார். வேறொருவருடைய வெளிப்பாட்டிலேயே எப்பொழுதும் வாழ விரும்பும் ஒருவரைப் போல நீங்கள் இருக்க விரும்ப வேண்டாம். நீங்களாகவே, தேவனுடைய வார்த்தையைப் படித்துக் கற்றுக்கொண்டு பரிசுத்த ஆவியானவர் உங்களது வாழ்க்கையை சத்தியத்தால் ஆசீர்வதிக்க அவருக்கு அனுமதி கொடுங்கள்.

தேவனுடைய வார்த்தையை தியானிப்பதைப் பற்றி, நான் தொடர்ந்து உங்களுக்குச் சொல்லிக் கொண்டே போகலாம். நான் சொன்னது போல, செய்யும் படியாக நீங்களும், நானும் கற்றுக்கொள்ளக் கூடிய மிக முக்கியமான பாடமாக இது அமைகிறது. உங்களுடைய அன்றாடக் கடமைகளை நீங்கள் செய்கையில், நாள் முழுவதும், பரிசுத்த ஆவியானவரை சில வேத வசனங்களை உங்களுக்கு நினைப்பூட்டும்படிக் கேட்டு அவைகளைத் தியானிக்க முற்படுங்கள். இந்த அனுபவத்தின் மூலம் எவ்வளவு வல்லமை உங்களுக்குள் புகுத்தப்படுகிறது என்பதை அறிந்து நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். எந்த அளவுக்கு அதிகமாக தேவனுடைய வார்த்தையை தியானிக்கிறீர்களோ அந்த அளவிற்கு அதிகமாக உங்கள் பிரச்சனைகளினூடே, அதன் மேலுள்ள பலத்தைப் பெற்றுக் கொள்ள உங்களாலேயே முடியும். *வேத வசனத்தைத் தியானிப்பதின் மூலமே, வேத வசனத்தின்படி நடக்கத் தேவையான வல்லமை நமக்குள் வருகிறது.*

## வசனத்தை ஏற்றுக் கொண்டு அதற்கு வரவேற்பு கொடுங்கள்

ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்து விட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ள தாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக் கொள்ளுங்கள்.

யாக்கோபு 1:21

நமது இருதயத்திலும், சிந்தையிலும் தேவனுடைய வசனமானது ஆழமாக நாட்டப்பட்டதாயும், ஊன்றப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டதாயும் இருந்தால் மட்டுமே வேத வசனமானது நம்மைப் பாவ வாழ்விலிருந்து இரட்சிக்கக் கூடியதாக இருக்கும் என நாம் இங்கு வாசிக்கிறோம். இந்த நாட்டப்படுதலும் வேர்கொள்ளுதலும் தேவனுடைய வசனத்தில் நாம் கவனம் செலுத்தும்போது மட்டுமே நமக்குள் நடைபெறுகிறதாயிருக்கிறது. அந்தக் கவனமானது வேறு எதைக்காட்டிலும் அதிகமாக நமது சிந்தைக்குள் வேத வசனத்தை வைப்பதன் மூலமாகவே வருகிறது.

எப்பொழுதும் நீங்களும் நானும் நமது பிரச்சனையை மட்டும் தியானித்துக் கொண்டிருப்போமாகில், அப்பிரச்சனைகளிலே தான் நாம் ஆழமாக வேர் கொள்ளுகிறவர்களாக இருப்போம். நமக்குள் அல்லது மற்றவர்களுக்குள் இருக்கிற தவறுகளையே நாம் தியானித்துக் கொண்டிருப்போமானால், அக்குறைகளின் பிரச்சனையைப் பற்றியதான ஆழமான உணர்வுக்குள்ளாக நாம் கடந்து வருவோமேயொழிய அதற்கானப் பரிகாரத்தை நாம் ஒருபோதும் காண்கிறவர்களாக இருக்கவே முடியாது. இது எப்படியெனில் ஜீவன் நிறைந்த ஒரு சமுத்திரம் நமக்கு முன்பாகக் கையளிக்கப்பட்ட நிலையில், அதை எடுத்துக் கொள்ளும் படியாக, வேத வசனத்தைத் தியானிப்பது என்ற ஒரு வாளியைக் கருவியாக நமது கரத்தில் கொடுக்கப்பட்டது போல இருக்கிறது. தேவனுடைய வசனத்தைக் கவனத்துடன் படித்து அதைத் தியானிப்போம்.

வார்த்தையில் ஜீவன் என்று எங்களது ஊழியம் அழைக்கப்படுகிறது. தேவனுடைய வார்த்தையிலே ஜீவன் உண்டு என்பதை நான் அனுபவத்தோடு சொல்ல முடியும்.

## ஜீவனைத் தெரிந்து கொள்ளுங்கள்!

மாம்ச சிந்தை மரணம், ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்.

ரோமர் 8:6

இந்த இரண்டாம் பகுதியை முடிப்பதற்கு பிலிப்பியர் 4:8 சரியான வசனமாக அமைகிறது. கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள் (பிலிப்பியர் 4:8).

ஒருவனுடைய சிந்தையின் நிலைமை எவ்வாறு இருக்க வேண்டும் என்பது இந்த வசனத்தின் மூலமாக தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. உங்களுக்குள் கிறிஸ்துவின் சிந்தை இருக்குமேயாகில், அதைப் பயன்படுத்துங்கள். கிறிஸ்து அவ்வண்ணமாய்ச் சிந்திக்காவிடில், நீங்களும் அவ்விதமாய் சிந்திக்கலாகாது.

எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குள் கீழ்ப்படிய சிறைப்படுத்துகிறவர்களாய் நாம் இருக்கும் போது 2 கொரிந்தியர் 10:5 குறிப்பிடுகிற நமது சிந்தனைகளை நாம் தொடர்ந்து ஜாக்கிரதையாக "கவனத்தோடே" பாதுகாத்துக் கொள்ளுகிறோம்.

உங்களது சிந்தை உங்களைத் தவறான நிலைக்குள்ளே நடத்துமாகில் பரிசுத்த ஆவியானவர் தாமே உங்களைத் துரிதமாய் நினைப்பூட்டுகிறார். அப்பொழுது தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு நம்மிடத்தில் இருக்கிறது. மாம்ச சிந்தையைப் பின்பற்றுவீர்களா? அல்லது

ஆவியின் சிந்தையைப் பின்பற்றுவீர்களா? ஒன்று மரணத்திற்கும், மற்றொன்று ஜீவனுக்கும் நேராய் உங்களை நடத்துகிறது. தெரிந்து கொள்ளுதல் உங்களைப் பொருத்தது.

*ஜீவனைத் தெரிந்து கொள்ளுங்கள்!*

## பாகம் III

# *வனாந்தர மனப்பான்மை*

# முகவுரை

> *சேயீர் மலைவழியாய் ஓரேபுக்குப் பதினொரு நாள் பிரயாண தூரத்திலுள்ள காதேஸ்பர்னேயா இருந்தாலும் (இஸ்ரவேலர் அதைத் தாண்டிச் செல்ல நாற்பது வருஷங்கள் எடுத்தன)*
>
> உபாகமம் 1:2

பதினொரு நாள் மட்டும் பயணம் செய்து சேர வேண்டிய கானான் தேசத்தை இஸ்ரவேலர் நாற்பது வருடங்கள் செய்ய வேண்டியதாய் இருந்தது ஏன்? அவர்கள் சத்துருக்களினாலேயா? சூழ்நிலைகளினாலேயா? அல்லது அவர்கள் சேர வேண்டிய இடம் சேராதபடி அவர்களுக்கு தடங்கல்களாக இருந்த வேறு சிலவற்றினாலேயா?

இவைகளை நான் ஆராய்கையில், எனக்கும், ஆயிரக்கணக்கான மற்றவர்களுக்கும் பயனுள்ளதாய் அமைந்த ஒரு வல்லமையான வெளிப்படுத்தலைத் தேவன் எனக்குத் தந்தருளினார். "இந்த இஸ்ரவேலருக்கு "வனாந்தர மனப்பான்மை" இருந்தபடியால் தான் பதினொரு நாளில் சேர வேண்டியக் கானானைப் போய்ச் சேர அவர்களுக்கு நாற்பது வருடங்கள் பிடித்தன" என விளக்கினார்

## நீங்கள் இங்கே தங்கியிருந்தது போதும்

> நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஓரேபிலே நம்மோடே சொன்னது என்னவென்றால், நீங்கள் இந்த மலையருகே தங்கியிருந்தது போதும்.
>
> உபாகமம் 1:6

இஸ்ரவேலரை நாம் பெரிதொரு வியப்போடு காணக்கூடாது. காரணம், நம்மிலும் அநேகர், அன்று அவர்கள் செய்த செயல்களையே செய்கிறோம். நாம் முன்னேறாதபடி அதே மலையைத் தொடர்ந்து சுற்றிச் சுற்றி

வருகிறோம். அதனாலே, துரிதமாய்க் கிடைக்க வேண்டிய ஜெயத்தை நாம் கால தாமதத்தோடே பெற்றுக் கொள்ள வேண்டியதாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரரோடு அன்று தேவன் சொன்ன அதே காரியத்தை இன்றைக்கும் உங்களிடமும், என்னிடமும் அவர் கூறுகிறார்.

*அதே மலையில் நீங்கள் அநேக நாள் தங்கியது போதும் புறப்படுகிற காலம் வந்துவிட்டது.*

## உங்கள் மனதிலே நாடுங்கள் தொடர்ந்து நாடுங்கள்

பூமியிலுள்ளவைகளையல்ல, மேலான்மைகளையே நாடுங்கள்.
கொலோசெயர் 3:2

இஸ்ரவேலரை வனாந்தரத்திலேயே வைக்கக் காரணமாயிருந்த பத்து விதமான வானாந்தர மனப்பான்மைகளை தேவன் எனக்குக் காண்பித்தார். “வனாந்தர மனப்பான்மை” என்பது ஒரு தவறான மனநிலைமையாகும்.

சரியான அல்லது தவறான மனநிலைமையை நாம் உடையவர்களாக இருக்கலாம். சரியான மனநிலை நமக்கு ஆசீர்வாதங்களையும், தவறான மனநிலைமை நம்மை முன்னேறவிடாத நிலையில் தடுத்து நிற்கிறவைகளாகவும் இருக்கின்றன. நம்முடைய சிந்தையை ஒரு நாட்டத்திற்குள்ளே வைக்க வேண்டும் என்று கொலோசெயர் 3:2 நமக்குக் கூறுகிறது. சரியான திசையை நோக்கி நாம் நமது மனநிலையைச் செலுத்த வேண்டும். தவறான மனநிலைமை நமது சூழ்நிலைகளைப் பாதிப்பது மட்டுமல்ல. நமது உள்ளான ஜீவியத்தையும் அது பாதித்துவிடுகிறது.

மற்றவர்கள் வனாந்தரமாகவே இருக்கிற வேளையில் சிலர் “வனாந்தரத்திலே” வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஒரு காலத்திலே எனக்குள்ளேயே நான் ஒரு வனாந்தரமாய் இருந்த படியினால் எனது சூழ்நிலைகள் மோசமாக அமையாவிட்டாலும், எனது வாழ்க்கையில் நான் ஒன்றையும் மகிழ்ச்சியோடு அனுபவிக்க முடியவில்லை. எனது கணவருக்கும் எனக்கும் ஒரு நல்ல வீடும், மூன்று பிள்ளைகளும், நல்ல வேலைகளும், வசதியாக வாழத் தேவையான பண

வசதிகளும் இருந்தன. எனக்குள்ளேயே பலவிதமான வனாந்தர மனப்பான்மைகள் இருந்த படியினால் எனது சந்தோஷங்களை எங்களாலே அனுபவிக்க முடியவில்லை. வனாந்தரமானச் சூழ்நிலைகளிலேயே நான் எல்லாவற்றையும் காண்கிறவளாக இருந்தபடியால் எனது வாழ்க்கையும் எனக்கு ஒரு வனாந்தரமாகவே இருந்தது.

சிலர், தங்களது வாழ்வில் மகிழ்ச்சியற்ற சூழ்நிலைகளை அனுபவிக்கிறபடியாலும் அவைகளில் எந்தவித முன்னேற்றத்தையும் காண முடியாததாலும் அவர்கள் எல்லாவற்றையும் எதிர்மாறாகவே காண்கிறார்கள். சிலர் தங்கள் உள்ளங்களில் மோசமான எதிர்மாறான சிந்தையைக் கொண்டிருப்பதால் பார்க்கிற அனைத்தையும் அவ்வாறே காண்கிறார்கள். அது எதுவாயிருந்தாலும் எதிர்மாறான ஒருவனது பார்வையும் தோற்றமும் அவனை எப்பொழுதும் பரிதபிக்கக்கூடிய நிலையிலேதான் கொண்டுபோய் விடுமேயொழிய அவன் ஒருபோதும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நோக்கி முன்னேறவே மாட்டான்.

நிரந்தரமான சுதந்திரத்தை பெற்று கொள்ளும்படியாக அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து தேவன் இஸ்வேலரை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானானுக்குள் பிரவேசிக்க அழைத்தார். அந்தத் தேசம் பாலும் தேனும் ஓடுகிற தேசமும் எந்த நன்மைகளும் குறைவுபடாததுமான தேசமாகவும் காணப்பட்டது. ஒன்றுக்கும் அங்கு குறைவே கிடையாது. எல்லாச் சூழ்நிலைகளிலும் செழுமை நிறைந்த தேசமாகவே அது இருந்தது.

ஆயினும் தேவன் எகிப்து தேசத்திலிருந்து அழைத்துச் சென்ற மக்களிலே பெரும்பாலோர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிக்க முடியவில்லை. அதற்கு மாறாக அவர்கள் வனாந்தரத்திலே மரித்தார்கள். எந்த ஒரு தேவனுடைய பிள்ளைக்கும் நடக்கக்கூடாத துக்கமான சம்பவமாகும் இது. அனுபவிக்க அனைத்தும் இருந்தும், ஒருபோதும் அவைகளில் ஒன்றையும் அவர்களால் அனுபவிக்க முடியவில்லை.

எனது கிறிஸ்தவ வாழ்க்கையிலும் அநேக ஆண்டுகளாக நானும் அவர்களில் ஒருவளாகவே இருந்தேன். பரலோகமாகிய வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குப் போகும் வழியிலே நான் காணப்பட்டேன்.

ஆனால் அப்பயணம் எனக்கு மகிழ்ச்சியாக இல்லை வனாந்தரத்திலேயே நான் மரித்துக் கொண்டிருந்தேன். ஆனால் தேவனுடைய இரக்கத்திற்காக நன்றி எனது இருளில் ஒரு ஒளி பிரகாசித்தது. அவர் என்னை வெளியே கொண்டு வந்துவிட்டார்.

இப்புத்தகத்தின் மூன்றாம் பிரிவு உங்களுக்கு ஒரு வெளிச்சமாக அமைய வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். தேவனுடைய ஆச்சரியமான ராஜ்யத்தின் மகிமையான ஒளிக்குள் நீங்கள் வீரநடைபோட உங்களை வனாந்தரத்திலே இருந்து வெளியே கொண்டு வந்து விட்டார்.

# அதிகாரம்
# 16

*“எனது வருங்காலம், எனது கடந்த காலத்தாலும், நிகழ்காலத்தாலும் நிர்ணயிக்கப்படுகிறது”*

வனாந்தர மனப்பான்மை #1

# *“எனது வருங்காலம், எனது கடந்த காலத்தாலும், நிகழ்காலத்தாலும் நிர்ணயிக்கப்படுகிறது”*

**அதிகாரம்**
**16**

வனாந்தர மனப்பான்மை #1

> *தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப் போவார்கள்.*
>
> நீதிமொழிகள் 29:18

இஸ்ரவேலர் தங்கள் வாழ்வைக் குறித்த சாத்தியக் கூரான தரிசனமும், சொப்பனமும் அற்றவர்களாக இருந்தனர். தாங்கள் எங்கேயிருந்து வந்தோம் என்பதை அறிந்திருந்தார்கள். எனினும் தாங்கள் எங்கே போகிறோம் என்பதை அறியாதவர்களாக இருந்தார்கள். தாங்கள் கண்ட, காண முடிந்தவைகளைச் சார்ந்தே எல்லாவற்றையும் சிந்தித்தார்கள். “விசுவாசக் கண்களாலே” எப்படிக் காண வேண்டும் என அறியாதவர்களாகவே இருந்தார்கள்.

## விடுதலையைக் கொண்டுவர அபிஷேகிக்கப்பட்டவர்

> கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார். தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார். இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையாக்கவும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும்,
>
> கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார்.
>
> லூக்கா 4:18-19

நிந்தனை செய்யப்பட்ட பின்னணியிலிருந்து நான் வந்தவள் ஒழுங்கீனமான குடும்பத்தால் நான் வளர்க்கப்பட்டேன். எனது இளமைப் பருவம் பயத்தினாலும், அலைக்களிப்பினாலும் நிரப்பப்பட்டிருந்தது. ஒரு சிறுபிள்ளையின் குணநலன்கள், அந்தப் பிள்ளையின் முதல் ஐந்து வயதிற்குள்ளாக உருவாக்கப்படுகிறது என மருத்துவ நிபுணர்கள்

கூறுகின்றனர். எனது குணநலன் முழுமையுமே ஒரு குப்பைக் கூழமாக இருந்தது. பிறர் என்னை வேதனைப்படுத்தாதபடி, பாதுகாப்பு என்ற பொய்யான, மாய்மாலமான அரணை என்னைச் சுற்றிக் கட்டிக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறேன். மற்றவர்களை வெளியேயும், என்னை உள்ளேயும் பூட்டி வைத்துக் கொண்டிருந்தேன். என்னையே அடக்கிக் கொள்ளுகிறவளாக நான் வாழ்ந்தேன். பயத்தினால் ஆட்கொள்ளப்பட்டு, என்னை நானே கட்டுப்படுத்திக் கொண்டு, இதன் மூலமே ஒருவரும் என்னை வேதனைப்படுத்தாதபடி வாழ்க்கையை எதிர்க்கொள்ள முடியும் என நினைத்தேன்.

ஒரு இளம் பெண்ணாக, கிறிஸ்துவுக்காக வாழ்ந்து, கிறிஸ்தவ வாழ்க்கை முறையை பின்பற்ற முயற்சித்தும், எங்கேயிருந்து வந்தேன் என்பதை அறிந்திருந்தேனேயொழிய எங்கே செல்லுகிறேன் என்பதை அறியாதவளாக வாழ்ந்து கொண்டிருந்தேன். எனது வருங்காலம் எனது கடந்தகால வாழ்க்கையினால் முற்றிலும் பாதிக்கப்பட்டுவிட்டது என்பதை நான் நன்றாய் அறிந்திருந்தேன். என்னைப் போன்ற, கடந்த காலப் பின்னணியைக் கொண்ட ஒரு நபர், எவ்வாறு நல்லவளாக மாற முடியும் என்று எனக்குள்ளே எண்ணிக் கொண்டிருந்தேன். அது முடியவே முடியாத காரியம் என்றே எண்ணிக் கொண்டிருந்தேன். எனினும், வியாதியஸ்தரையும், நொறுங்குண்ட இதயமுள்ளவர்களையும், காயப்பட்டவர்களையும், குழப்பத்தில் சிக்கியவர்களையும் சீர்படுத்தவே தாம் வந்ததாக இயேசு சொல்லியிருக்கிறார்.

சிறைக்கதவுகளைத் திறந்து, கைதிகளை விடுதலையாக்கவே இயேசு வந்தார். என்னாலே விடுதலையாக முடியும் என நான் விசுவாசிக்கும் மட்டும் எந்த முன்னேற்றத்திற்குள்ளும் நான் வர முடியவில்லை. எனது வாழ்வைக் குறித்த சாத்தியக் கூரான தரிசனத்தை நான் உடையவளாக இருக்க வேண்டுவது அவசியமான ஒன்றாயிருந்தது. எனது கடந்த அல்லது நிகழ்கால நிகழ்ச்சிகளினால் எனது வருங்காலம் நிர்ணயிக்கப்படவில்லை என நான் விசுவாசிக்க வேண்டியதிருந்தது.

பரிதபிக்கக்கூடிய கடந்தகாலத்தை நீங்கள் கடந்து வந்திருக்கலாம். தற்போதுள்ள வாழ்வும் எதிர்மாறானதும், அழுத்தம் நிறைந்ததுமாய் இருந்து கொண்டிருக்கலாம். நம்பிக்கைக்கு வழியே இல்லை என்று

எண்ணக்கூடிய மோசமான சூழ்நிலைகளை நீங்கள் சந்தித்துக் கொண்டிருக்கலாம். ஆனாலும் *உங்கள் வருங்காலமானது உங்களுடைய கடந்த கால அல்லது நிகழ்கால சூழ்நிலைகளால் நிர்ணயிக்கப்படவே முடியாது* என நான் தைரியமாக உங்களுக்குக் கூறுகிறேன்.

புதிய மனநிலையை எடுத்துக் கொள்ளுங்கள். தேவனால் எல்லாமே கூடும் என நம்புங்கள் (லூக்கா 18:27) மனிதனாலே சில காரியங்கள் முடியாமல் இருக்கலாம். ஆனால் ஒன்றுமில்லாத நிலையிலிருந்து சகலத்தையும் சிருஷ்டித்த தேவனை நாம் ஆராதிக்கிறோம் (எபிரெயர் 11:3). உங்களுடைய ஒன்றுமில்லாமையை அவரிடம் கொடுத்து, அவர் கிரியை செய்யப் போவதை உற்றுக் கவனியுங்கள். அவருக்குத் தேவை, நீங்கள் விசுவாசிப்பதை அவர் எதிர்பார்க்கிறார். மீதியை அவர் செய்வார்.

## காணும் கண்கள் கேட்கும் செவிகள்

ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும்.

ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர் மேல் தங்கியிருப்பார்.

கர்த்தருக்குப் பயப்படுதல் அவருக்கு உகந்த வாசனையாயிருக்கும். அவர் தமது கண் கண்டபடி நியாயம் தீர்க்காமலும், தமது காது கேட்டபடி தீர்ப்புச் செய்யாமலும் இருப்பார்.

ஏசாயா 11:1-3

நமது இயற்கையான கண்கள் காண்பதன் மூலம் செயல்களைக் குறித்து, நாம் தீர்ப்புச் செய்ய முடியாது. காண்பதற்கு ஆவிக்குரிய கண்களையும், கேட்பதற்கு ஆவிக்குரிய செவிகளையும் நாம் உடையவர்களாய் இருக்க வேண்டும். உலகம் சொல்வதையல்ல ஆவியானவர் சொல்லுவதைத் தான் நாம் கேட்க வேண்டும். பிறர் அல்ல

தேவனே உங்களுடைய வருங்காலத்தை உங்களுக்குச் சொல்லித்தரட்டும்.

இஸ்ரவேலர் கடந்தகால நிகழ்ச்சிகளைத் தான் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். தேவன் அவர்களை மோசேயின் கரத்தினால் எகிப்து தேசத்திலிருந்து வழிநடத்திக் கொண்டு வந்தார். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தைப் பற்றி அவன் மூலம் அவர்களுக்குச் சொல்லிக் கொண்டு வந்தார். அவர்கள் எங்கே செல்ல இருக்கிறார்களோ, அதன் மேலேயே அவர்கள் தங்கள் கண்களைப் பதிக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். அவர்கள் எங்கிருந்து வந்தார்கள் என்பதை மறந்து, எங்கே செல்லுகிறார்கள் என்ற நிலைக்கு அவர்கள் தங்கள் கண்களைத் திருப்ப வேண்டுமென்று அவர் விரும்பினார். அவர்களது தவறான நோக்கத்தை விளக்கும் சில வசனங்களை நாம் கவனிப்போமாக.

## பிரச்சனை என்ன?

> இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள். சபையார் எல்லாரும் அவர்களை நோக்கி. எகிப்து தேசத்திலே செத்துப் போனோமானால் நலமாயிருக்கும், இந்த வனாந்தரத்திலே நாங்கள் செத்தாலும் நலம்.
>
> நாங்கள் பட்டயத்தால் மடியும்படிக்கும், எங்கள் பெண்ஜாதிகளும், பிள்ளைகளும் கொள்ளையாகும் படிக்கும், கர்த்தர் எங்களை இந்த தேசத்துக்குக் கொண்டு வந்தது என்ன? எகிப்துக்குத் திரும்பிப் போகிறதே எங்களுக்கு உத்தமம் அல்லவோ என்றார்கள்.
>
> எண்ணாகமம் 14:2-3

இந்தப் பகுதியை கவனமாய் நீங்கள் படிக்கும்படி நான் உங்களை ஊக்குவிக்கிறேன். வனாந்தரத்தை ஊடுருவி, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள்ளே முன்னேறுவதற்குப் பதிலாகக் குறை சொல்லுவதும், நோக்கத்தைக் கைவிடுவதும், அடிமைத்தனத்திற்கே திரும்பிச் செல்லும்படி விரும்புகிறவர்களாயும் எவ்வளவு எதிர்மாறாகச் செயல்படுகிறார்கள் என்பதை நாம் இங்குக் காண முடிகிறது.

*அவர்களுக்குப் பிரச்சனை இல்லை. அவர்களே ஒரு பிரச்சனையாக இருந்தனர்!*

## கெட்ட சிந்தனை கெட்ட எண்ணத்தையே உருவாக்கும்

ஜனங்களுக்குத் தண்ணீர இல்லாதிருந்தது. அப்பொழுது அவர்கள் மேசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூட்டம் கூடினார்கள்.

ஜனங்கள் மோசேயோடே வாக்குவாதம் பண்ணி. எங்கள் சகோதரர் கர்த்தருடைய சந்நிதியில் மாண்டபோது நாங்களும் மாண்டு போயிருந்தால் நலமாயிருக்கும்.

நாங்களும் எங்கள் மிருகங்களும் இங்கே சாகும்படி, நீங்கள் கர்த்தரின் சபையை இந்த வனாந்தரத்திலே கொண்டு வந்தது என்ன.

எண்ணாகமம் 20:2-4

அவர்களுடைய வார்த்தைகளிலிருந்தே, இஸ்ரவேலர் கர்த்தரை நம்பவில்லை எனத் தெளிவாகத் தெரிகிறது. எதிர்மாறான, தோல்வியான எண்ணங்களை உடையவர்களாய் அவர்கள் இருந்தார்கள். அனைத்து சூழ்நிலைகளும் அவர்களுக்கு ஏற்றதாக இல்லாதபடியால், துவங்குவதற்கு முன்பே தோல்விதான் என்ற முடிவின் தீர்மானத்திற்குள்ளே அவர்கள் வந்துவிட்டார்கள். தவறான மனப்பான்மையுள்ள எண்ணத்தையே அவர்கள் கொண்டிருந்தார்கள்.

தவறான எண்ணம், தவறான சிந்தனைகளின் விளைவாகும்.

## நன்றியுள்ள எண்ணத்தின் குறைவு

அவர்கள் ஏதோம் தேசத்தைச் சுற்றிப்போகும்படிக்கு, ஓர் என்னும் மலையைவிட்டு, சிவந்த சமுத்திரத்தின் வழியாய்ப் பிரயாணம் பண்ணினார்கள், வழியினிமித்தம் ஜனங்கள் மனமடிவடைந்தார்கள்.

ஜனங்கள் தேவனுக்கும் மோசேக்கும் விரோதமாகப் பேசி. நாங்கள் வனாந்தரத்திலே சாகும்படி நீங்கள் எங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணினதென்ன? இங்கே அப்பமும் இல்லை,

தண்ணீரும் இல்லை. இந்த அற்பமான உணவு எங்கள் மனதுக்கு வெறுப்பாயிருக்கிறது என்றார்கள்.

எண்ணாகமம் 21:4-5

கெட்ட நோக்கங்களுடன் கூடிய இஸ்ரவேலரின் மனநிலையை, நாம் முந்தைய அதிகாரங்களில் வாசித்தோம். வருகிற அதிகாரங்களில் அவர்களுடைய நன்றியற்ற தன்மையைக் காண்போம். தாங்கள் எங்கேயிருந்து வந்தோம் என்றும், இதுமட்டும் தாங்கள் தங்கிய இடம் எதுவென்றும் எண்ணிப் பார்ப்பதை நிறுத்த இஸ்ரவேல் புத்திரரால் முடியவில்லை.

அவர்கள் தங்கள் முற்பிதாவாகிய ஆபிரகாமைச் சிந்தித்துப் பார்த்திருப்பார்களானால் அது அவர்களுக்கு நலமாய் இருந்திருக்கும். ஏமாற்றமான சில பாதைகளை அவன் கடந்து சென்றாலும் கூட, தனது வருங்காலம் பாதிக்கப்பட எதிர்மாறான சிந்தைகளுக்கு அவன் ஒருநாளும் அனுமதி கொடுக்கவில்லை.

## சண்டையோடுள்ள வாழ்க்கை இல்லை

ஆபிராமுடைய மந்தை மேய்ப்பருக்கும் லோத்துடைய மந்தை மேய்ப்பருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று. அக்காலத்திலே கானானியரும் பெரிசியரும் அத்தேசத்தில் குடியிருந்தார்கள்.

ஆபிரகாம் லோத்தை நோக்கி. எனக்கும் உனக்கும், என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம். நாம் சகோதரர்.

இந்தத் தேசமெல்லாம் உனக்கு முன் இருக்கிறது அல்லவா? நீ என்னை விட்டுப் பிரிந்து போகலாம். நீ இடது புறம் போனால், நான் வலதுபுறம் போகிறேன், நீ வலதுபுறம் போனால், நான் இடது புறம் போகிறேன் என்றான்.

அப்பொழுது லோத்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து. யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கக் கண்டான். கர்த்தர் சோதோமையும் கொமோராவையும் அழிக்கும் முன்னே, சோவாருக்குப் போம் வழி

> மட்டும் அது கர்த்தருடைய தோட்டத்தைப் போலவும், எகிப்து தேசத்தைப் போலவும் இருந்தது.
>
> அப்பொழுது லோத்து யோர்தானுக்கு அருகான சமபூமி முழுவதையும் தெரிந்து கொண்டு, கிழக்கே பிரயாணப்பட்டுப் போனான், இப்படி அவர்கள் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிந்தார்கள்.
>
> ஆதியாகமம் 13:7-11

சண்டை போடுவதால் வரும் ஆபத்தை ஆபிராம் நன்கு அறிந்திருந்தான். ஆகவேதான் தாங்கள் பிரிந்தாக வேண்டும் என லோத்துவிடம் குறிப்பிடுகிறான். அன்பிலே நடக்கவும், சண்டையே தங்கள் வருங்காலத்திலே இருக்கக்கூடாது எனவும் விரும்பிய ஆபிராம் தனது சகோதரனுக்கு எந்தப் பள்ளத்தாக்கு வேண்டும் என அவனை முதலாவது தெரிந்து கொள்ளும்படிச் சொல்லுகிறான். யோர்தான் பள்ளத்தாக்காகிய நல்ல இடத்தை லோத்து தெரிந்து கொண்டதும் இருவரும் பிரிந்தனர்.

ஆபிராம் லோத்தை ஆசீர்வதிக்கும் வரை, லோத்துக்கு ஒன்றுமேயில்லை. எப்படிப்பட்ட நோக்கத்தை ஆபிராம் உடையவனாயிருந்திருப்பான் என்று சிந்தித்துப் பாருங்கள். தான் உண்மையாயும், உத்தமனாயும் நடக்கும்போது, தேவன் தன்னைப் பற்றிய எல்லாப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளுவார் என்பது அவனுக்கு நன்றாய்த் தெரியும்.

## கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்

> லோத்து ஆபிராமைவிட்டுப் பிரிந்தபின்பு, கர்த்தர் ஆபிராமை நோக்கி, என் கண்களை ஏறெடுத்து, நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் நோக்கிப்பார்.
>
> நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுத்து...
>
> ஆதியாகமம் 13:14-15

ஆபிரகாம் தான் விரும்பாத சூழ்நிலையைத் தெரிந்தெடுத்து, தனது சகோதரனை விட்டுப் பிரிந்தபின்பு, தேவன், அவன் இருந்த

இடத்திலிருந்து, அவனை எங்கே கொண்டுபோகச் சித்தமானாரோ, அந்த இடத்திற்கு நேராய் தன் “கண்களை ஏறெடுக்க” வேண்டும் என்று விரும்புகிறார்.

தனது சூழ்நிலையைக் குறித்து, ஆபிரகாம் நல்லெண்ணத்தோடு இருந்தபடியினால், அவன் தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெறாதபடி பிசாசு அவனைத் தடுக்க முடியவில்லை. தன் சகோதரனை விட்டுப் பிரிவதற்கு முன்பு அனுபவித்ததைக் காட்டிலும் தேவன் அவனுக்கு அதிகமான உடைமைகளைக் கொடுத்து, அனுதினமும் அவனை ஆசீர்வதித்தார்.

வருங்காலத்தைக் குறித்த சாத்தியக் கூரானக் காரியங்களைச் சாத்தியக் கூரானப் பார்வையோடுப் பார்க்கும்படியும், இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல அழைக்க வேண்டுமெனவும் நான் உங்களை ஊக்குவிக்கிறேன். (ரோமர் 4:17) கடந்த காலத்திலே நீங்கள் கண்களால் கண்டதையும் அல்லது இப்பொழுது காண்கிறதையும் விட்டுவிட்டு, தேவன் உங்கள் வருங்காலத்தைப் பற்றி, உங்கள் இருதயத்திலே வைத்திருக்கிற காரியத்தை சாத்தியக் கூரான நிலையிலே யோசித்துப் பேசுங்கள்.

# அதிகாரம்
# 17

## *“யாராவது ஒருவர் எனக்காகச் செய்யட்டும், நான் உத்தரவாதத்தை எடுக்க விரும்பவில்லை”*

வனாந்தர மனப்பான்மை #2

## *“யாராவது ஒருவர் எனக்காகச் செய்யட்டும், நான் உத்தரவாதத்தை எடுக்க விரும்பவில்லை”*

### வனாந்தர மனப்பான்மை # 2

**அதிகாரம்**
17

தேவனுடைய ஆற்றலுக்கு நாம் கொடுக்கும் பதிலைச் சார்ந்து தான் உத்தரவாதம் வருகிறது. நமக்கு முன்பாக தேவன் வைத்துள்ள சந்தர்ப்பங்களை நாம் சந்திக்கிற நிலைதான் உத்தரவாதமுள்ள வாழ்வு.

*தேராகு தன் குமாரனாகிய ஆபிராமையும், ஆரானுடைய குமாரனும் தன் பேரனுமாயிருந்த லோத்தையும், தன் குமாரன் ஆபிராமுடைய மனைவியாகிய தன் மருமகள் சாராயையும் அழைத்துக் கொண்டு, அவர்களுடனே ஊர் என்கிற கல்தேயருடைய பட்டணத்தைவிட்டு, கானான் தேசத்துக்குப் போகப் புறப்பட்டான், அவர்கள் ஆரான் மட்டும் வந்த போது, அங்கே இருந்துவிட்டார்கள்.*

ஆதியாகமம் 11:31

தேவன் தனது ஆற்றலுக்குப் பதிலளிக்கும் ஒரு நல்லத் தருணத்தை ஆபிராமுடைய தந்தைக்குத் தந்தார். கானானுக்குப் போகும் சந்தர்ப்பத்தை அவர் அவனுக்கு முன்பாக வைத்தார். ஆனால் கர்த்தரோடு அவர் வழியிலே தொடர்ந்து நடப்பதற்குப் பதிலாக அவன் வழியிலே நின்று, ஆரோனிலே தங்கத் தீர்மானித்தான்.

முதலாவது தேவன் நம்மோடே பேசி, ஒன்றைச் செய்யும்படியான ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுக்கும்போது நம்மைப் பரவசப்படுத்தும். ஆனால், நம்மில் அநேகர் இப்பரவசத்தைக் காட்டிலும், நாம் செல்லும் வழியில் அநேக ஈடுபாடுகள் இருக்கின்றன என அறியும் போது, தேராகுவைப் போல, துவக்கியக் காரியத்தை ஒருபோதும் முடிக்கிறதில்லை.

புதிதாய் சில காரியங்களை நாம் தைரியமாகத் துவக்கும்போது, அவை புதுமையாய் இருக்கிறபடியினால் பரவசமாய் இருக்கின்றன. இப்பரவசமானது ஒரு நபரை சற்றுத் தூரம் தான் சுமந்து செல்லுமேயொழிய, முடிவுக் கோடு வரைக்கும் அழைத்துச் செல்லாது.

அநேக விசுவாசிகள் தேராகு செய்வதைப் போலச் செய்கிறார்கள். அவர்கள் ஒரு இடத்திலே துவங்கிவிட்டு, வழியிலே எங்கேயோ விட்டுவிடுகிறார்கள். உத்தரவாதங்களை நிறைவேற்றாமலே இவர்கள் தங்கள் ஓட்டத்தை முடிக்க விரும்புகிறார்கள். அவர்களுக்காக யாராவது ஒருவர் உத்தரவாதத்தை நிறைவேற்ற முன் வருவார்களானால், அதற்கு இடம் கொடுத்துவிட்டு, அதனால் வரும் மகிமையை மட்டும் தங்களுக்கு எடுத்துக் கொள்ள விரும்புவார்கள். ஆனால் இது உத்தரவாதமான செயல் ஆகாது.

## தனிப்பட்ட உத்தரவாதத்தை மாற்றிக் கொடுக்கக் கூடாது

மறுநாளில் மோசே ஜனங்களை நோக்கி, நீங்கள் மகா பெரிய பாவஞ் செய்தீர்கள். உங்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யக் கூடுமோ என்று அறிய இப்பொழுது நான் கர்த்தரிடத்திற்கு ஏறிப்போகிறேன் என்றான்.

அப்படியே மோசே கர்த்தரிடத்திற்குத் திரும்பிப்போய், ஐயோ, இந்த ஜனங்கள் பொன்னினால் தங்களுக்குத் தெய்வங்களை உண்டாக்கி, மகாப் பெரிய பாவம் செய்திருக்கிறார்கள!

ஆகிலும், தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும். இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும் என்றான்!

யாத்திராகமம் 32:30-32

நான் வாசித்து தியானித்த மட்டும், இஸ்ரவேலர்கள் எந்த உத்தரவாதத்தையும் தங்கள் மேல் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. அவர்களுக்காக மோசே ஜெபம் செய்தான். தேவனுடைய முகத்தை அவன் தேடினான். அவர்கள் பிரச்சனைகளில் அகப்பட்டுக் கொண்ட வேளைகளிலெல்லாம் மோசே தான் அவர்களுக்காக மனந்திரும்ப வேண்டியதாயிற்று (யாத்திராகமம் 32:1-14).

ஒரு குழந்தைக்கு எந்தவித உத்தரவாதமுமில்லை. ஆனால் அது வளர வளர, அநேக உத்தரவாதங்களைத் தன் தோளின் மேல் எடுக்க

எதிர்பார்க்கப்படுகிறது. உத்தரவாதங்களை எப்படி ஒரு பிள்ளை எடுத்துக் கொள்ள வேண்டும் எனக் கற்றுக்கொடுப்பதுதான் ஒரு பெற்றோருடைய பிரதானமான வேலையாய் இருக்கிறது. தேவனும் தமது பிள்ளைகளுக்கும் அதே காரியத்தைக் கற்றுக் கொடுக்க விரும்புகிறார்.

தேசிய வானொலி, தொலைக்காட்சி மூலமாக அவர் வார்த்தைகளைக் கற்றுக்கொடுக்கவும், அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், மற்ற தேசங்களிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும் முழு நேர ஊழியம் செய்ய, தேவன் எனக்கு சந்தர்ப்பத்தைக் கொடுத்தார். ஆனால் அநேகருக்கு ஒன்றுமே அதைப்பற்றித் தெரியாத நிலையில் பெரிதொரு உத்தரவாதம் அவ்வூழியத்தின் நிமித்தம் என்மேலே இருந்தது என்பதை நான் தைரியமாகக் கூற முடியும். ஊழியமானது, தொடர்ந்து ஆவிக்குரிய ஓர் சம்பவமாக இருக்கிறபடியால் அநேகர் தங்களை ஊழியத்திலே ஈடுபடுத்திக் கொள்ள விரும்புகிறார்கள்.

வாழ்க்கையிலே ஒரு பெரிய காரியம் உண்டானால், தாங்கள் ஒரு ஊழியத்திலே பங்கேற்பது தான் என அநேகர் எண்ணியவர்களாக, எங்களுடைய ஸ்தாபனத்திலே வேலை செய்யும்படியாக பலமுறை ஜனங்கள் விண்ணப்பிக்கிறார்கள், பின்பு, மற்ற உலகப் பிரகாரமான வேலை செய்கின்ற நிலையில்தான் இங்கேயும் வேலை செய்ய வேண்டும் எனக் கண்டறிகிறார்கள். சரியான நேரத்தில் எழுந்து, சரியான நேரத்திற்கு வேலைக்குச் செல்லவும், அதிகாரத்துக்குக் கீழ்ப்படியவும் பல கடமைகளை நிறைவேற்ற வேண்டியதாயிருக்கிறது. ஜனங்கள் எங்களிடத்திலே வேலை செய்ய விரும்பி வரும்போது நான் எப்பொழுதும் அவர்களிடம், ஏதோ “அல்லேலூயா பல்லவியை” மட்டும் நாம் பாடி மேகத்திலே நாளெல்லாம் பறக்க நீங்கள் இங்கு வரவில்லை. நாம் வேலை செய்கிறோம். கடினமாய்ச் செய்கிறோம் எனக் கூறுவது வழக்கம். நாங்கள் உத்தமத்தோடு நடந்து, எங்களால் இயன்ற அளவு சிறந்ததைச் செய்கிறோம் எனவும் கூறுவது வழக்கம்.

கிறிஸ்தவ ஸ்தாபனத்திலே வேலை செய்வது நல்ல ஒரு காரியம் தான். ஆனால், ஆரம்பப் பரவசம் எல்லாம் முடிந்தவுடனே, உத்தரவாதத்தின் உயர்ந்த அளவை நாங்கள் எதிர்பார்க்கிறவர்கள் என்பதைப் புதிதாய்

வேலைக்கு வருகிறவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே எனது விருப்பமாயிருக்கிறது.

## எறும்பினிடத்திற்கு போ!

சோம்பேறியே, நீ எறும்பினிடத்தில் போய், அதின் வழிகளைப் பார்த்து, ஞானத்தைக் கற்றுக் கொள்!

அதற்குப் பிரபுவும், தலைவனும், அதிகாரியும் இல்லாதிருந்தும், கோடைகாலத்தில் தனக்கு ஆகாரத்தைச் சம்பாதித்து, அறுப்புக் காலத்தில் தனக்கு தானியத்தைச் சேர்த்து வைக்கும்.

சோம்பேறியே, நீ எவ்வளவு நேரம் படுத்திருப்பாய்? எப்பொழுது உன் தூக்கத்தை விட்டு எழுந்திருப்பாய்?

இன்னுங் கொஞ்சம் தூங்கட்டும், இன்னும் கொஞ்சம் உறங்கட்டும், இன்னுங் கொஞ்சம் கைமுடக்கிக் கொண்டு நித்திரை செய்யட்டும் என்பாயோ?

உன் தரித்திரம் வழிப்போக்கனைப் போலவும், உன் வறுமை ஆயுதமணிந்தவனைப் போலவும் வரும்.

நீதிமொழிகள் 6:6-11

இஸ்ரவேல் மக்கள் கொண்டிருந்த இந்த சோம்பேறித்தனமான மனநிலைதான், பதினோரு நாட்கள் மட்டும் செய்ய வேண்டிய பிராயணத்தை முடிக்க இயலாமல் வனாந்திரத்தில் நாற்பது வருடங்கள் கழிக்கும்படி செய்த காரணங்களுள் ஒன்றாகும்.

நீதிமொழிகள் புத்தகத்தில், நம் கவனத்தை எறும்பினடமாய் திருப்பும் அந்தப் பகுதியை நான் வாசிக்க விரும்புகிறேன். அது யாதொரு கண்காணிப்பாளரோ அல்லது வேலையிடுகிறவனோ இல்லாமலே தனக்கும் தன் குடும்பத்துக்கும் உணவளிப்பதை காண்கிறோம்.

யாரோ ஒருவர் தங்களை உந்தித்தள்ளிக்கொண்டிருக்க வேண்டுமென்றிப்பவர் மேன்மையான காரியங்களை செய்யவே மாட்டார்கள். யாரோ ஒருவர் தங்களை கவனித்துக் கொண்டிருக்கும் போது மட்டுமே சரியானதெதுவோ அதை செய்பவர்களும்கூட அதிகமாக எதையும் செய்ய மாட்டார்கள். நாம் வெளியேயிருந்தல்ல நமக்குள்ளிருந்து ஊக்கப்படுத்தப்பட

**வேண்டும். தேவன் எல்லவற்றையும் பார்க்கிறார். அவர் நம்மிடம் நாம் என்ன செய்ய வேண்டுமென்று கேட்டாரோ அதை செய்வதில் நாம் நிலைத்திருந்தால் அவரிடமிருந்து நமக்கு பலன்வரும் என்பதை அறிந்தவர்களாய் நாம் நம் வாழ்வை தேவனுக்கு முன்பாக வாழ வேண்டும்.**

## அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர்

அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர்.

மத்தேயு 22:14

இவ்வசனத்தை ஒரு வேதபண்டிதர் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார். கர்த்தருக்காக ஏதாவது ஒன்றைச் செய்யும்படி அழைக்கப்பட்டவர்கள் அநேகர், ஆயினும், அந்த அழைப்பிற்கு இணங்கி, உத்தரவாதத்தை தங்கள் தோள்களில் சுமப்பவர்களோ ஒரு சிலர் மட்டுமேயாவர்.

அநேகருக்கு விருப்ப எலும்பு இருக்குமேயொழிய சரியான முதுகெலும்பு அவர்களுக்கு இல்லவே இல்லை. “வனாந்தர மனப்பான்மை” உடையவர்கள் எல்லாவற்றையும் உடையவர்களாக இருக்க விரும்புவார்கள். ஆனால் ஒன்றையும் செய்யமாட்டார்கள்.

## எழுந்திருந்து போ

கர்த்தருடைய தாசனாகிய மோசே மரித்தபின்பு கர்த்தர் மோசேயின் ஊழியக்காரனான நூனின் குமாரன் யோசுவாவை நோக்கி.

என் தாசனாகிய மோசே மரித்துப் போனான். இப்பொழுது நீயும் இந்த ஜனங்கள் எல்லாரும் எழுந்து, இந்த யோர்தானைக் கடந்து, இஸ்ரவேல் புத்திரருக்கு நான் கொடுக்கும் தேசத்துக்குப் போங்கள்.

நான் மோசேக்குச் சொன்னபடி உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்குக் கொடுத்தேன்.

யோசுவா 1:1-3

மோசே மரித்ததையும், யோசுவா அவனுடைய ஸ்தானத்திலே நின்று மக்களை, யோர்தானைக் கடக்கும்படிச் செய்து, அவர்களைக் கானானுக்குள் நடத்தும்படி யோசுவாவுடனே தேவன் சொல்லும் போது, யோசுவாவின் சிரசின்மேலே அநேக புதிய உத்தரவாதங்கள் வந்து சேருகின்றன என்பது தான் அதனுடைய அர்த்தம்.

நமது ஆவிக்குரிய சுதந்தரத்தை நாம் சுதந்தரித்துக் கொள்வதிலும் இதே நிலைமை உண்மையாகிறது. நமது உத்தரவாதத்தை நீங்களும் நானும் உறுதியாக ஏற்றுக் கொள்ளாத பட்சத்தில் தேவனுடைய அபிஷேகத்திற்கு முன்பாக நாம் ஒருபோதும் நின்று, ஊழியம் செய்யவே முடியாது.

## இதோ இப்பொழுதே அனுக்கிரக காலம்!

காற்றைக் கவனிக்கிறவன் விதைக்கமாட்டான். மேகங்களை நோக்குகிறவன் அறுக்கமாட்டான்.

பிரசங்கி 11:4

1993ஆம் ஆண்டு, தொலைக்காட்சி ஊழியத்தைப் பற்றி, தேவன் என்னோடும், எனது கணவரோடும் பேசி, “நீங்கள் தொலைக்காட்சி ஊழியத்தைச் செய்ய வேண்டும் என நான் விரும்புகிறேன். ஆனாலும் இப்பெரிய உத்தரவாதத்தை நீங்கள் எடுக்காவிட்டால், திரும்ப இந்த சந்தர்ப்பம் ஒருபோதும் உங்களுக்கு வரவே வராது” எனத் தெளிவாய் எங்களிடம் கூறிவிட்டார். ஒருவேளை நாங்கள் தள்ளிப் போடக்கூடிய தற்காலிகமான நிகழ்ச்சியாக மட்டும் அது இருக்காது என்பதை நாங்கள் அறிய வேண்டும் என்பதைத் தேவன் விரும்பினார் போலும். கடைசியாக, எப்படியோ நாங்கள் அதை நிறைவேற்றக்கூடிய நிலைக்கு வந்துவிட்டோம்.

“வார்த்தையில் ஜீவன்” என்ற ஊழியத்தைக் கடந்த ஒன்பது ஆண்டுகளாக நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். நாங்கள் எங்கள் முழு இருதயத்தோடும் செய்ய விரும்புகிற நிலையில் அநேகரைச் சந்திக்கும் ஊழிய சந்தர்ப்பத்தை தேவன் எங்களுக்குக் கொடுத்துக் கொண்டு வருகிறார். எப்படியும் நாங்கள் அதைச் செய்வதற்கு, எங்களுடைய வசதி வாய்ப்புகளை விட்டுவிட்டு, புதிய உத்தரவாதங்களை எங்கள் மேல் சுமக்க எதிர்பார்க்கப்படுகிறவர்களாக இருக்கிறோம்.

தேவன் ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்று தம்முடைய ஜனங்களிடத்தில் கேட்கும் போது அதைச் செய்ய "ஒரு வசதியான நேரம்" ஒன்றிற்காகக் காத்திருப்பது வழக்கமாக வரும் ஒரு சோதனையாகும். (அப்போஸ்தலர் 24:25) அதற்கு எந்தவிதமானக் கிரயமும் செலுத்த அவசியமில்லை என்ற நிலை வருமட்டும் அல்லது செய்வது மிகக் கடினம் என்ற நிலை வருமட்டும் செய்ய வேண்டிய காரியங்களைத் தள்ளிப்போடுவது நமக்கு சகஜமான ஒன்றாகும்.

உத்தரவாதங்களைக் கண்டு ஒருபோதும் பயப்பட வேண்டாம் என நான் உங்களை ஊக்குவிக்கிறேன். எதிர்ப்புகளை சந்திக்கையில், உங்கள் பெலத்தை நீங்கள் பெருக்குவீர்கள். இலகுவானதை மட்டும் நீங்கள் செய்வீர்களானால், தொடர்ந்து நீங்கள் பலவீனர்களாகவே இருப்பீர்கள்.

தேவன் நமது கரத்திலே கொடுக்கிற ஒவ்வொன்றையும் குறித்து நாம் கவனமுள்ளவர்களாகவும், பொறுப்புள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்று தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். நல்ல கனியைக் கொடுக்கிற வகையில் இவ்வுத்தரவாதங்களை நாம் நிறைவேற்ற வேண்டும். அவர் நமக்குக் கொடுத்த வரங்களையும், தாலந்துகளையும் நாம் உபயோகிக்காவிட்டால் அவர் நமது கரத்தில் ஒப்புக்கொடுத்த காரியத்தில், உத்தரவாதமற்றவர்களாக இருக்கிறோம் என்று அர்த்தம்.

## ஆயத்தமாயிருங்கள்!

மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்.

மத்தேயு 25:13

எஜமானுடைய வருகைக்காகக் காத்திருக்கிற வேளையில் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை மத்தேயு 25ம் அதிகாரம் நமக்குக் கற்றுத் தருகிறது.

முதல் பத்து வசனங்களில், ஐந்து புத்தியுள்ள கன்னிகைகளையும், ஐந்து புத்தியில்லாத கன்னிகளையும் பற்றி நாம் காண்கிறோம். அவர் வரும் போது அவரைச் சந்திக்கத் தாங்கள் ஆயத்தமுள்ளவர்களாக

இருக்க வேண்டிய தருணத்தில், குறைந்த நிலையிலே அவர்கள் செயல்பட்டார்கள். ஒரு மைல் கூட அதிகம் செல்ல விரும்பாத நிலையில், தங்கள் விளக்குகளில் இருக்கிற எண்ணெயின் அளவோடு அவர்கள் நின்றுவிட்டார்கள், புத்தியுள்ள கன்னிகைகளோ, தாங்கள் செய்ய வேண்டியதைக் காட்டிலும் சற்று அதிகமான நிலையில் ஆயத்தமாயிருந்தார்கள். நீண்ட காலம் காத்திருக்க அவசியப்பட்டாலும், அதற்குத் தேவையான, போதுமான எண்ணெயோடு அவர்கள் காத்திருந்தார்கள்.

மணவாளன் வந்தபோதோ, புத்தியில்லாதவர்களுடைய விளக்குகளிலுள்ள எண்ணெய் அணைந்து போகவும், புத்தியுள்ளவர்களிடத்திலுள்ள எண்ணெயை நாடினார்கள். இது வழக்கமாக நடக்கிற ஒன்று. சோம்பேறித்தனமாய், எப்பொழுதும் காரியங்களைத் தள்ளிப்போடுகிறவர்கள், தங்களுக்காகத் தாங்கள் செய்ய வேண்டிய கடமையை, மற்றவர்கள் தங்களுக்குச் செய்ய வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள்.

## உங்களுக்குக் கொடுக்கப்பட்டதை உபயோகியுங்கள்

பொல்லாதவனும் சோம்பனுமான ஊழியக்காரனே.

மத்தேயு 25:26

மூன்று ஊழியக்காரர்களுக்கு தன் தாலந்துக்களைப் பிரித்துக் கொடுத்த எஜமானுடைய கதையைப் பற்றி இந்த 25ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறோம். எஜமான் தூரதேசத்திற்குப் பயணப்பட்டுப் போய்விட்டான். அவன் இல்லாத வேளையில், அவனுடைய ஊழியக்காரர்கள் அவன் உடைமைகளைப் பொறுப்போடு பாதுகாப்பார்கள் என்ற எதிர்பார்ப்போடு சென்றான்.

ஐந்து தாலந்தை வாங்கியவன் அதை உபயோகப்படுத்தினான். அவைகளை முதலீடு செய்து, இன்னும் ஐந்து தாலந்துகளைச் சம்பாதித்தான். இரண்டு தாலந்தைப் பெற்றவனோ பயந்தவனாய், அதை நிலத்தினடியில் புதைத்து வைத்தான். வெளியே சென்று எதையும்

செய்ய பயந்தவனாக அவன் ஜீவித்தான். உத்தரவாதத்தை எடுத்துக்கொள்ள அவன் பயந்தான்.

எஜமான் திரும்பி வந்த போது, தான் கொடுத்த தாலந்தை எடுத்துப் பயன்படுத்திய இரண்டு ஊழியர்களை அவன் பாராட்டினான். ஆனால் ஒன்றையும் செய்யாதபடி ஒரு தாலந்தைப் புதைத்து வைத்தவனையோ "பொல்லாதவனும், சோம்பேறியுமான ஊழியக்காரனே" என்று அழைத்தான். அவனைக் கடுமையாகத் தண்டிக்கவும், ஒரு தாலந்தை எடுத்து பத்துத் தாலந்து உள்ளவனிடத்தில் கொடுக்கவும் கட்டளையிட்டான்.

தேவன் உங்களுக்குக் கொடுக்கத் திறனின்படி நீங்கள் கிரியை செய்யும்படி உங்களை ஊக்குவிக்கிறேன். அப்படிச் செய்கையில், எஜமான் வரும்போது, அவர் உங்களுக்குக் கொடுத்ததை மட்டுமல்ல. அதைக் காட்டிலும் அதிகமாகத் திருப்பிக் கொடுக்கவும் நம்மாலே முடியும்.

*நல்ல கனிகளைக் கொடுக்க வேண்டுமென்பதே நம்மைக் குறித்த தேவனுடைய சித்தமாய் இருக்கிறது.* (யோவான் 15:16)

## கர்த்தர் மேல் உத்தரவாதங்களையல்ல, பாரத்தை வைத்து விடுங்கள்

ஆகையால், ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.

அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.

1 பேதுரு 5:6-7

உங்கள் உத்தரவாதங்களைக் குறித்துப் பயப்படவேண்டாம். உங்கள் உத்தரவாதங்களையல்ல. "உங்கள் கவலைகளையெல்லாம்" அவர்மேல் வைத்துவிடக் கற்றுக் கொள்ளுங்கள். ஒன்றையும் குறித்து கவலை கொள்ளாதிருக்க சிலர் கற்றுக் கொள்ளுவதில்லை. சிலர் தங்கள் கவலைகளை அவர் மேல் போடுவதில் சிறந்தவர்களாக மட்டும் நின்றுவிடாதபடி, உத்தரவாதங்களையும் அவர் மேல் போட்டுவிடுகிறார்கள்.

உங்களுக்கு முன் என்ன இருக்கிறதோ, அது எவ்வளவு சவாலுள்ளதாக அமைந்தாலும் அதைவிட்டு ஓடாதபடி அதை நிறைவேற்றி முடிக்குமளவும் உங்கள் மனதை அதன் மேலே பதித்துவிடுங்கள்.

எப்பொழுதெல்லாம் நீங்கள் கேட்பதை தேவன் உங்களுக்குத் தருகிறாரோ, அப்பொழுதெல்லாம் அந்த ஆசீர்வாதத்தோடுள்ள உத்தரவாதமும் அங்கு இருக்கிறது என்பதை நாம் அறிந்துக்கொள்ள வேண்டும். ஒரு வீட்டையோ அல்லது ஒரு காரையோ நீங்கள் சொந்தமாய்க் கொண்டிருப்பீர்களானால், நீங்கள் அதைப் பொறுப்போடு பாரத்துக் கொள்ள தேவன் உங்களிடத்தில் எதிர்பார்க்கிறார். சோம்பேறித்தனமானக் குட்டிச் சாத்தான்கள் உங்கள் சிந்தையையும், உணர்வுகளையும் தாக்க முற்படலாம். ஆனால், உங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை இருக்கிறது. சாத்தானுடைய வஞ்சகங்களை உங்களால் புரிந்து கொள்ள முடியும். உங்களுடைய உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்காமல் சரியாகத் தோன்றுகிறது எதுவோ அதைச் செய்யுங்கள். ஒன்றை, வேண்டுமென்று கேட்பது எளிது. உத்தரவாதத்துடன் செயல்படும் போது, அது நமது குணாதிசயத்தை உருவாக்கிவிடுகிற ஒன்றாக மாறுகிறது.

ஒரு "தனிப்பட்ட ஏரிக்கரை வீடு" ஒன்றை வாங்க வேண்டும் என எனது கணவரோடு நான் தொடர்ந்து சொல்லிக் கொண்டேயிருந்தேன். நாங்கள் இளைப்பாறவும், வாசித்து, ஜெபிக்கவும் "எல்லாச் சந்தடியான சூழ்நிலைகளையும் விட்டு ஒதுங்கக் கூடிய இடமாகவும்" எங்களது பிள்ளைகளும் பேரப் பிள்ளைகளும் மகிழ்ந்து அனுபவிக்கக் கூடிய இடமாகவும் எங்களது தலைமைத்துவ அலுவல் கூட்டங்களை நடத்தவும், கூடி ஜெபித்து மகிமையின் அனுபவத்திற்குள்ளே கடந்து செல்லவும் ஒரு நல்ல இடம் வேண்டும் என்று தொடர்ந்து அவரோடே சொல்லிக் கொண்டிருந்தேன்.

அது ஒரு நல்ல காரியமாகவும், எனது உணர்வுகளுக்கெல்லாம் நன்றாகவும் இருந்தது. ஆனால், எனது கணவரோ, நமது ஊழியத்திலே நாம் எவ்வளவு தீவிரமாய் ஈடுபட்டிருக்கிறோம் என்றும், இன்னொரு வீட்டை வாங்கினால், அதைப் பராமரிப்பது எத்தனைக் கடினம் என்றும் என்னிடம் விளக்கினார். இன்னொரு இடத்தைச் சொந்தமாக வாங்கி

அதை நிர்வகிப்பதைவிட வாடகைக்கு இன்னொரு இடம் போவதே நலமாயிருக்கும். பரிபாலனம் செய்வதற்கும் எளிதாயிருக்கும் எனக் குறிப்பிட்டார்.

உணர்வின் பகுதியை நான் கண்டேன். ஆனால் எனது கணவரோ இந்த விஷயத்தில், அனுபவ ரீதியானச் சூழ்நிலையைக் கண்டு ஆராய்ந்தார். எப்பொழுதெல்லாம் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படுகிறதோ அப்பொழுதெல்லாம், நாங்கள் இரண்டு பக்கங்களிலும் சிந்தித்துப் பார்ப்பதுண்டு. ஏதோ மகிழ்ச்சிக்காக மட்டும் அல்ல. அனுபவ ரீதியிலும் நாம் காண்பதே மேலானது. இப்படிப்பட்ட வசதியான ஒரு இடம், தங்கள் நேரத்தைச் செலவிடக் கூடியவர்களுக்கு நல்ல ஒரு இடமாக அமையக் கூடும். ஆனால் எங்களுக்கோ அது சரியாய் வராது. எனது உள்ளத்தின் ஆழத்திலே நான் இவைகள் எல்லாவற்றையும் அறிந்தவளாயிருந்தாலும், சுமார் ஒரு வருடமாக எனது கணவரை அதை வாங்கும் படி நான் தொந்தரவு செய்து கொண்டேயிருந்தேன்.

தனது தீர்மானத்திலே எனது கணவர் மிகவும் உறுதியுள்ளவராக இருந்தபடியால் நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். ஒருவேளை நாங்கள் அதை வாங்கியிருந்தால், சில நாட்கள் மட்டும் நாங்கள் அந்த வீட்டை அனுபவித்துவிட்டு, அதற்குப் பின்பு அதைப் பராமரிக்க முடியாதபடியால், அதை விற்றிருப்போம், ஆனால், எங்கள் நண்பர்கள் பின்னர் ஒரு ஏரிக்கரை வீட்டை வாங்கி எங்கள் தேவைக்கேற்ப நாங்கள் அதை உபயோகப்படுத்த கர்த்தர் வாசலைத் திறந்தருளினார்.

நீங்கள் ஞானத்தை உபயோகப்படுத்தும்போது உங்கள் தேவைகளைத் தேவன் சந்திக்க முன்வருவதை நீங்கள் காண்பீர்கள். கிறிஸ்துவின் சிந்தையைச் செயல்படுத்துகிற எவனும், உணர்விலே அல்ல. ஞானத்திலேயே நடப்பான்.

*உத்தரவாதமுள்ளவர்களாயிருங்கள்!*

# அதிகாரம்
# 18

*"தயவாக எல்லாவற்றையும் எளிதாக்குங்கள்; காரியங்கள் கடினமாய் இருக்குமானால் எதையும் என்னாலே கிரகிக்க முடியாது!"*

வனாந்தர மனப்பான்மை #3

## *“தயவாக எல்லாவற்றையும் எளிதாக்குங்கள்; காரியங்கள் கடினமாய் இருக்குமானால் எதையும் என்னாலே கிரகிக்க முடியாது!”*

## வனாந்தர மனப்பான்மை #3

# அதிகாரம் 18

*நான் இன்று உனக்கு விதிக்கிற கட்டளை உனக்கு மறை பொருளும் அல்ல, அது உனக்குத் தூரமானதும் அல்ல.*

உபாகமம் 30:11

இந்த தவறான மனநிலை, கடந்த அத்தியாயங்களில் நாம் ஆலோசித்த கருத்துக்களுக்கு ஒத்ததேயாகும். எனினும் தேவனுடைய பிள்ளைகள் மத்தியில் இது ஒரு பிரச்சனையாக இருப்பதால் இதைக் குறித்து, இந்த அதிகாரத்தில் நாம் விரிவாக ஆலோசிப்போம்.

ஜெபிக்கிறதற்காக என்னிடத்தில் வருகிற அநேக ஜனங்கள் சொல்லுகிற ஓர் பொதுவான சாக்குப் போக்குதான், இந்த அதிகாரத்தின் தலைப்பாக நான் கொடுத்திருக்கிற வார்த்தைகளாகும். சிலர் ஜெபத்திற்காகவோ, ஆலோசனைக்காகவோ என்னிடத்தில் வரும்போது, தேவனுடைய வார்த்தையையோ அல்லது பரிசுத்த ஆவி அவர்களைக் குறித்து என்னிடத்தில் வெளிப்படுத்துவதையோ அவர்களிடம் நான் சொல்லும் போது, இவர்கள் அதற்கு மறு மொழியாக, “அதெல்லாம் சரி தான். தேவனும் எங்களுக்கு அதே காரியத்தைத் தான் காண்பித்தார். ஆனால் *ஜாய்ஸ், அதைச் செய்வதோ எங்களுக்கு மிகக் கடினம்”* என்று பதில் கொடுக்கின்றனர்.

தாங்கள் செய்யும் காரியத்தில், சோர்ந்து போய், அதை விட்டுவிடும் நிலைக்கு இவர்கள் வந்துவிடுவதைப் பிசாசு நன்கு அறிந்திருக்கிறபடியால் இப்படிப்பட்ட வார்த்தைகளை சத்துரு இவர்களுக்குள்ளே ஏற்றிவிடுகிறான் என்று தேவன் தெளிவாக எனக்கு வெளிப்படுத்திக் காண்பித்தார். ஒரு சில ஆண்டுகளுக்கு முன் தேவன் இந்த உண்மையை எனக்கு வெளிப்படுத்திய போது, “செய்வது மிகவும் கடினம்” என்று சொல்லுவதை நான் நிறுத்தியதும், கிரியையிலே அதை செய்வது மிகவும் எளிது என்ற உண்மையை எனக்குத் தெளிவாய் விளக்கினார்.

ஏதாவது ஒன்றை நாம் செய்ய முற்படும் போதோ, அல்லது செய்வதற்கு தீர்மானிக்கும் போதோ, இது எவ்வளவு கடினம் என்ற நிலையில் யோசிக்கவும், பேசவும் அதிக நேரத்தைச் செலவிடுகிறோம். எதிர்மாறாக யோசிப்பதை விட்டு சாத்தியக்கூரான நிலையில் அதை யோசித்திருந்திருப்போமானால், இக்கிரியை முடிப்பதற்கு மிகவும் எளிதாய் இருந்திருக்கும்.

எனது ஆவிக்குரிய வாழக்கையின் ஆரம்பக் கட்டத்திலே வேத வசனத்தை நான் தியானிக்க ஆரம்பிக்கும் போது, நான் எந்த நிலையில் இருக்கிறேன். ஆனால் எங்கே இருந்திருக்க வேண்டும் என்று சிந்திப்பேன். அந்த வேளையில் நான் எப்பொழுதும் எனக்குள்ளே "ஆண்டவரே, உமது வழிகளின்படி நான் காரியங்களைச் செய்ய விரும்புகிறேன். ஆகிலும் அவைகள் எனக்கு மிகவும் கடினமானவைகள்" என்று அவரிடம் முறையிடுவது உண்டு. உடனே கர்த்தர், தமது கற்பனைகள் மறைபொருளுமல்ல, அவைகள் தூரமானவைகளும் அல்ல என்பதை உபாகமம் 30:11மூலம் கற்றுத்தந்தார்.

நாம் செய்யும்படி நம்மிடத்தில் அவர் எவைகளையெல்லாம் கேட்கிறாரோ அவைகளைச் செவ்வனே செய்யும்படி தமது பரிசுத்த ஆவியை தேவன் வல்லமையாய் நமக்குள்ளே தருகிறார்.

## உதவியாளர்

> நான் பிதாவை வேண்டிக் கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.
>
> யோவான் 14:16

தேவனுடைய கிருபையை நம்பிச் சாராதபடி, நாமே சுயாதீனமாகக் காரியங்களைச் செய்ய முற்படும் போது, அவைகள் நமக்குக் கடினமாகவே அமையும். வாழ்க்கையிலே எல்லாமே சுலபமாக இருக்குமேயாகில், நமக்குத் துணை செய்வதற்கு பரிசுத்த ஆவியின் துணையே தேவையில்லாததாக மாறிவிடும். "துணையாளர்" என வேதம்

இவரை அழைக்கிறது. நம்மாலே கூடாத காரியத்தை நாம் செய்யும்படி அவர் நமக்கு உதவும் படியாக அவர் நமக்குள்ளும் நம்மோடு கூடவும், எப்பொழுதும் இருக்கிறார். அவர் இல்லாததினாலே நமக்குக் கடுமையாய் செய்வதற்குத் தோன்றும் காரியத்தை அவர் நம்முடன் இருப்பதன் மூலம் இலகுவாகச் செய்ய முடிகிறது.

## எளிதான வழி - கடினமான வழி

> பார்வோன் ஜனங்களைப் போகவிட்ட பின் ஜனங்கள் யுத்தத்தைக் கண்டால் மனமடிந்து, எகிப்துக்குத் திரும்புவார்கள் என்று சொல்லி பெலிஸ்தரின் தேவ வழியாய்ப் போவது சமீபமானாலும், தேவன் அவர்களை அந்த வழியாய் நடத்தவில்லை.
>
> யாத்திராகமம் 13:17

தேவன் எங்கெல்லாம் உங்களை நடத்துகிறாரோ அங்கெல்லாம் அவர் உங்களைக் காக்க வல்லவர் என்ற உறுதி உங்களுக்கு உண்டு. நம்மாலே தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு நம் மேல் பாரத்தை வைக்க அவர் இடம் கொடுக்கவேமாட்டார் (1 கொரிந்தியர் 10:13). அவர் கொடுக்கிற கட்டளைக்கெல்லாம், கிரயத்தைச் செலுத்துகிறார். நமக்குத் தேவையான பெலத்துக்காக அவரைச் சார்ந்து பற்றிக் கொள்ளுகிறவர்களாக நாம் வாழ்வோமாகில் நாம் தொடர்ந்து போராட்டத்தில் வாழ அவசியமேயில்லை.

தேவன் ஏதாவது ஒன்றைச் செய்யும்படி உங்களைக் கேட்டிருப்பதை அறியும் போது, அது கடினம் என்று சொல்லி, ஒருபோதும் நீங்கள் பின்னிட்டுவிடக் கூடாது, காரியங்கள் கடினமாக மாறுகின்ற வேளையில் அவரோடு அதிக நேரம் செலவிடவும், அவரை இன்னும் அதிகமாய்ச் சாரவும், அவரிடத்திலிருந்து இன்னும் அதிகமானக் கிருபையை நாடவும் முற்படுங்கள் (எபிரெயர் 4:16).

உங்களாலே செய்ய இயலாத ஒன்றை உங்கள் மூலமாய்ச் செய்யும்படி உங்களிடத்தில் வருகிற அவருடைய கிருபை இலவசமான தேவனுடைய வல்லமையாய் இருக்கிறது. “என்னாலே இதைச் செய்ய முடியாது. இது மிகவும் கடினம்” என்ற சிந்தனைகள் உங்கள் சிந்தைக்கு உள்ளே பிரவேசியாதபடி ஜாக்கிரதையாய் இருங்கள்.

சில வேளைகளிலே, அவர் நமக்குள்ளே தமது கிரியையைச் செய்கிறபடியால், தேவன் நம்மைச் சுலபமான வழியில் அழைத்துச் செல்லாதபடி, கடினமான வழியினூடாய் நம்மை அழைத்துச் செல்கிறார். எல்லாவற்றையும் நாமாகவே செய்துவிட முடிக்கிற நிலையில் எல்லாமே நமக்கு எளிதாக அமையுமானால் அவரைச் சார்ந்து கொள்ள நாம் எப்படிக் கற்றுக்கொள்ள முடியும்?

இஸ்ரவேலர் இன்னும் கோழைகளாகவே இருந்தபடியினாலே, தேவன் அவர்களைக் கடினமானதும், நெடிய துாரமுள்ள வழியிலே நடத்திச் செல்ல வேண்டியதாயிற்று. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலே அவர்கள் சந்திக்க இருந்த யுத்தத்திற்காக அவர்களுக்குள் அவர் ஒரு கிரியையை செய்ய வேண்டியதாய் இருந்தது.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிப்பதால், அநேகர் யுத்தமே இனி இருக்காது என்று எண்ணுகிறார்கள். இது தவறான கருத்தாகும். யோர்தான் நதியை இஸ்ரவேலர் கடந்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள்ளே போன பின்பும், யுத்தத்திற்கு மேலே யுத்தத்தை அவர்கள் சந்திக்க வேண்டியதாயிற்று. ஆனால் தேவனுடைய பலத்தோடும், வழிநடத்துதலோடும் அந்த யுத்தத்தை அவர்கள் செய்தபோதோ, அந்த எல்லா யுத்தங்களிலும் அவர்கள் வெற்றியைத் தான் பெற்றார்கள்.

அவா்கள் சுதந்தரித்துக்கொள்ளும் தேசத்தில் அவா்கள் சந்திக்கும் யுத்தங்களுக்கு அவா்கள் ஆயத்தமாக இல்லாமலிருந்தால் தான் தேவன் அவா்களை சுலபமான, குறுகிய வழியிலிருந்து அதிக தொலைவான, கடினமான வழியாக அவா்களை நடத்திச் சென்றாா். தேவன் அவா்கள் சத்துருவைக் காணும்போது எகிப்துக்கு ஓடிவிடுவாா்களோ என்பதைப் பற்றி அவா் கரிசனையாய் இருந்தாா். எனவே தான் அவா்களுக்கு அவா் யாரென்றும், அவா்கள் தங்களை தாங்களே சாா்ந்துக்கொள்ள முடியாதென்பதைக் கற்றுக்கொடுக்கவும் அவா்களை கடினமான பாதை வழியாக கூட்டிச்சென்றாா்.

ஒரு மனிதன் ஒரு கடினமான வழியாகச் செல்லும்போது, அவனுடைய மனம் அதை தொடராமல் விட்டுவிட விரும்பும். சாத்தான்

நம்மை மனதளவில் தோற்றுப்போக செய்துவிடலாம் என்பதை சாத்தான் அறிந்திருக்கின்றான். எனவே தான், நாம் சோர்வடைந்து, களைத்து, தொய்ந்து போய்விடாமலிருப்பது மிகவும் முக்கியமானதாகும்.

## திடமாய் நிற்போமாக!

> நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக. நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம்.
>
> கலாத்தியர் 6:9

இருதயத்திலே தளர்ந்து போகுதல், சோர்ந்து போகுதல் மனதை விட்டுக் கொடுப்பதற்கு சமானம். நாம் தளர்ந்து போகாமல் இருக்கும்போது ஏற்ற காலத்தில் நாம் அறுப்போம். ஆகவே, எவ்வளவேனும் நாம் மனதை விட்டுவிடக் கூடாது என்று பரிசுத்த ஆவியானவர் சொல்கிறார்.

இயேசுவைப் பற்றி யோசித்துப் பாருங்கள். ஞானஸ்நானம் எடுத்துப் பரிசுத்த ஆவியைப் பெற்றவுடனே பிசாசினால் சோதிக்கப்படும்படி அவர் ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டார். அவர் குறைசொல்லவோ சோர்ந்து போகவோ அல்லது மனந்தளரவோ இல்லை. எதிர்மாறாக எதையும் சிந்திக்கவோ பேசவோ இல்லை. இது ஏன் எனக்கு நடந்தது என்று குழம்பிப் போய், அதை ஆராயவும் முற்படவில்லை. மாறாக, ஒவ்வொரு பரீட்சையிலும் வெற்றி வீரனாகக் கடந்து சென்றார்.

அவரது சோதனையின் நடுவிலும், இது எவ்வளவு கடினமானது என முணங்கிக் கொண்டு இயேசு அவ்வனாந்தரத்தில் அலைந்து திரியவில்லை. மாறாக, தன்னுடைய பரலோகத் தந்தையிடமிருந்து பலத்தைப் பெற்றுக் கொண்டு ஜெயத்தோடு வெளியே வந்தார்.

ஒருபோதும் ‘எல்லாமே எவ்வளவு கடினம்’ என இயேசு தமது சீஷர்களிடம் சொல்லிக் கொண்டு பட்டணங்கள் தோறும் பயணம் செய்யவில்லை. தனது சிலுவைப் பாடுகளைப் பற்றியோ தாம் சிந்திக்க இருக்கிற காரியங்களைப் பற்றியோ, தமது சீஷர்களோடு தாம் அனுதினமும் நடத்த வேண்டிய வாழ்க்கையின் பல்வேறு சூழ்நிலைகளைப் பற்றியோ அல்லது தங்க வீடு இல்லாதபடி பட்டணங்களில் சுற்றித்

திரிவதைப் பற்றியோ, இராச்சாமங்களில் தலைசாய்க்க இடமற்ற நிலையில் தலைக்கு மேலுள்ள கூரையைப் பற்றியோ, படுக்கையைப் பற்றியோ ஒருபோதும் கவலைப்பட்டு முணங்கிக் கொண்டிருக்கவே இல்லை.

எனது தனிப்பட்ட ஊழியப்பாதையிலும் கூட, நான் எங்கெங்கே போகிறேனோ அங்கெல்லாம் காணப்படுகிற அசௌகரியங்களைக் குறித்துப் பேசக்கூடாது என நான் கற்றுக் கொண்டேன். பலவேளைகளில் பலதரப்பட்ட மக்களைச் சந்திப்பதிலும், வேறுபட்ட ஹோட்டல்களில் தங்குவதன் மூலமும், உணவு உட்கொள்ளுதலின் மூலமும் ஏற்படுகிற அசௌகரியங்களிலும், வீட்டைவிட்டுத் தொடர்ந்து வெளியே பயணப்படுகிற சூழ்நிலைகளில் ஏற்படும் கடினப் பாதைகளைப் பற்றி, ஒருபோதும் குறைகூறக் கூடாது என்ற பாடத்தை நான் நன்கு கற்க வேண்டியதாய் இருந்தது.

கிறிஸ்துவின் சிந்தையை உடைய நீங்களும், நானும், இயேசு தமக்கு நேரிட்டச் சூழ்நிலைகளை எப்படி பரிசுத்தமாய்க் கையாண்டாரோ, அப்படியே கையாளமுடியும். தளர்ந்து போகும் சிந்தனையை அல்ல ஜெயத்தின் சிந்தனையை சிந்தித்து நம்மை இந்நிலையில் ஆயத்தமாக்குவோமாக.

## பாடுகளைத் தொடரும் வெற்றி

> இப்படியிருக்க, கிறிஸ்து நமக்காக மாம்சத்திலே பாடுபட்டபடியால், நீங்களும் அப்படிப்பட்ட சிந்தையை ஆயுதமாகத் தரித்துக் கொள்ளுங்கள்.
>
> ஏனென்றால் மாம்சத்தில் பாடுபடுகிறவன் இனி மாம்சத்திலிருக்கும் காலம் வரைக்கும் மனுஷருடைய இச்சைகளின்படி பிழைக்காமல் தேவனுடைய சித்தத்தின்படியே பிழைக்கத்தக்கதாய் பாவங்களை விட்டோய்ந்திருப்பான்.
>
> 1 பேதுரு 4:1-2

இவ்வேதப் பகுதியானது துன்பமான காரியங்களையும், காலங்களையும் எவ்வாறு கடந்து வெற்றி கொள்வது என்ற இரகசியத்தை

நமக்கு விளக்குகிறது. இவ்விரண்டு வசனங்களைக் குறித்த எனது தெளிவான விளக்கத்தை சற்றே கவனியுங்கள்.

"இயேசு கடந்து சென்ற பாடுகளின் பாதைகளையும் அவைகளை அவர் எவ்வாறு சகித்தார் என்பதையும் நீங்கள் எண்ணிப் பார்ப்பீரகளானால், அது உங்கள் பாதைகளிலே நீங்கள் அவரைப் போலக் கடந்து போக உங்களுக்கு உதவி செய்யும். யுத்தத்திற்கான ஆயுதங்களைத தரித்துக் கொள்ளுங்கள். "தேவனைப் பிரியப்படுத்தத் தவறுவதைக் காட்டிலும், பொறுமையோடு பாடுகளைச் சகிப்பேன்" என்று இயேசு செய்து காட்டியதை சிந்திப்பதன் மூலம் வெற்றி பெற உங்களையே ஆயத்தம் செய்து கொள்ளுங்கள். எனக்கு வரும் பாடுகளுக்கு நடுவில், என்னையே பிரியப்படுத்துகிறவனாக இனி நான் வாழ மாட்டேன். கடினமான சூழ்நிலைகளைவிட்டு, இலகுவானப் பாதைக்கு நேராய் செல்லமாட்டேன். எனது மாம்சீக சிந்தனைப்படியோ, உணர்வுகளின்படியோ அல்ல ஆனால் தேவனுடைய விருப்பத்தின் படியே வாழுவேன் என்ற தீர்மானத்தோடு செயல்படுங்கள்."

தேவனுடைய சித்தத்தை நாம் செய்யும்படி, நாம் சகிக்க வேண்டியப் பாடுகள் நமது சரீரத்தில் உண்டு.

அடிக்கடி பிரயாணம் செய்து ஊழியம் செய்தகிறதினால் எனது சரீரத்திற்கு சங்கடங்கள் , தொல்லைகள் உண்டு. ஆனால், நான் பின்பற்ற வேண்டிய தேவசித்தம் அது தான் என்பதை நான் நன்கு அறிந்திருக்கிறேன். ஆகவே இச்சூழ்நிலையைக் குறித்து, சரியான சிந்தனையினால் எனக்கு நானே ஆயுதத்தை அணிவித்துக் கொள்ள வேண்டும். இல்லையென்றால், நான் காரியத்தைத் துவக்குவதற்கு முன்பே தோற்றுப் போய் விடுவேன்.

அணுக முடியாத ஒரு தனிநபர் உங்கள் வாழ்வைச் சுற்றி இருக்கலாம். அந்தச் சூழ்நிலை எவ்வளவு கடினமாக இருந்தாலும், அந்த உறவைவிட்டு ஓடாமல் அந்த உறவைத் தொடருவதே தேவனுடைய சித்தம் என்பதை நீங்கள் அறிகிறீர்கள். அந்த நபரோடு தொடர்பு வைப்பது கடினமானது என்று நீங்கள் அறியும் போது உங்கள் சரீரம் துன்பப்படுகிறது. எனினும் அந்தச் சூழ்நிலையைப் பற்றி சரியாகச் சிந்திப்பதுடன் உங்களையே நீங்கள் ஆயத்தப்படுத்திக் கொள்ள முடியும்.

## கிறிஸ்துவின் பெலத்திலே எனது பெலன்

தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்பதியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன்.

என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு.

பிலிப்பியர் 4:12-13

சரியாய் சிந்திப்பது நம்மை “யுத்தத்திற்கு” ஆயத்தப்படுத்துகிறது. தவறான சிந்தனைகளோடு யுத்தத்திற்குள்ளே போவது ஆயுதமணியாமல் யுத்தத்தின் முன்னணியில் போய் நிற்பதற்கு சமமாகும். அப்படிச் செய்வோமானால் நாம் முடிவுபரியந்தம் நிலை நிற்க முடியாது.

பதினொரு நாட்களுக்குப் பதிலாக நாற்பது வருடங்கள் பயணம் செய்து இஸ்ரவேலர் கானான் தேசத்தை அடைந்ததன் காரணம் இதுவே. ஒவ்வொரு புது சூழ்நிலைகளையும் கடினப்பாதைகளையும் அவர்கள் காணும் போதெல்லாம் அவர்கள் அதிருப்தி அடைந்தார்கள். எப்பொழுதும் எவ்வளவு கடினம் என்பதைத்தான் பேசிக் கொண்டிருந்தார்கள். “கடினமானச் சூழ்நிலைகளை எங்களாலே தாங்க முடியவில்லையே. தயவாகப் பாதையை இலகுவாக்கும்!” என்பது தான் அவர்களது அன்றாட வாய்ப்பாடாக இருந்தது.

இன்றைக்கு அநேக விசுவாசிகள் ஓய்வு நாள் வீரர்களாகவும், திங்கட்கிழமை தோல்வியாளராகவும் இருக்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமைகளில் ஆலயத்திற்கு வருபவர்களோடு நல்லக் காரியங்களைப் பேசுகிறார்கள். திங்கட்கிழமைகளிலோ “வார்த்தைகளின்படி நடக்கிற” சூழ்நிலையிலே சிறிய சோதனைகளிலும் சோர்ந்து போய் விடுகிறார்கள்.

தோற்கிற, குறை சொல்லுகிறவர்களாக நீங்கள் இருப்பீர்களானால் புதிய மனப்பான்மையோடு கூட, என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு எனக் கூறுங்கள் (பிலிப்பியர் 4:13).

# அதிகாரம்
# 19

*“முறுமுறுத்தலுக்கும், குறை காணுதலுக்கும், குறை கூறுதலுக்கும் நான் அடிமையாகிவிட்டேன்; இதை என்னாலே தவிர்க்க முடியாது.”*

வனாந்தர மனப்பான்மை #4

*“முறுமுறுத்தலுக்கும், குறை காணுதலுக்கும், குறை கூறுதலுக்கும் நான் அடிமையாகிவிட்டேன்; இதை என்னாலே தவிர்க்க முடியாது.”*

வனாந்தர மனப்பான்மை #4

# அதிகாரம் 19

*ஏனெனில், தேவன் மேல் பற்றுதலாயிருக்கிற மனச்சாட்சியினிமித்தம் ஒருவன் அநியாயமாய்ப் பாடுபட்டு உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகித்தால் அதுவே பிரீதியாயிருக்கும்.*

*இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள். ஏனெனில் கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார்.*

1 பேதுரு 2:19-20

கடினமான சூழ்நிலைகளில் நமது சிந்தையினால் கர்த்தரை மகிமைப்படுத்த நாம் கற்றுக் கொண்டாலொழிய நாம் அவற்றினின்று விடுதலை அடைய முடியாது. பாடுகள் கர்த்தரை மகிமைப்படுத்தாது. ஆனால் பாடுகளில் நாம் காண்பிக்கிற தெய்வீக சிந்தை தான் அவரைப் பிரியப்படுத்தி மகிமைப்படுத்துகிறது.

நாம் எதைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் என்பதை நீங்களும், நானும் இந்த வசனத்தை கவனமாய் வாசித்து இதிலுள்ள ஒவ்வொரு சொற்றொடரையும் முற்றிலுமாக அறிந்து கொள்ள வேண்டும். இயேசு எனது பாடுகளையும் வேதனைகளையும் தண்டனையாகச் சுமந்தார் என்று நான் வேதத்தில் வாசிக்கும் போது (ஏசாயா 53:3-6) எனது பாடுகள் தேவனை எவ்வாறு பிரியப்படுத்துகின்றன என்பதைப் புரிந்து கொண்டேன். அநேக ஆண்டுகளாக இதை நான் தொடர்ந்து படித்ததின் மூலம் கற்றுக் கொண்டேன்.

1 பேதுருவிலுள்ள இந்த வசனங்களானது ஒருவனுடைய பாடுகளை முக்கியப்படுத்துவதாக அல்ல. ஆனால் அப்பாடுகளில் ஒருவனுக்கு இருக்க வேண்டிய நோக்கங்களைப் பற்றித்தான் இவ்வசனங்கள் முக்கியப்படுத்துகிறது.

*பொறுமையோடே* என்ற வார்த்தையானது இவ்வேதப்பகுதியிலே உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. யாராவது நம்மைத் தரக்குறைவாக நடத்தும்போது, நாம் அங்கே பொறுமையைக் கையாண்டால், அங்கேதான் நாம் கர்த்தரை பிரியப்படுத்துகிறோம். நமது பாடுகளில் நாம் ஊக்குவிக்கப்படும்படி, தமக்கு விரோதமாய் வந்த அநீதியின் தாக்குதல்களை இயேசு எப்படிச் சந்தித்தார் என நாம் ஆராய்வதே நமக்குப் பயனுள்ளதாக அமையும்.

## இயேசுவே நமது மாதிரி

இதற்காக நீங்கள் அழைக்கப்படுகிறீர்கள். ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார்.

அவர் பாவஞ்செய்யவில்லை. அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை.

அவர் வையப்படும் போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்பு செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்.

1 பேதுரு 2:21-23

இயேசு மகிமையாகப் பாடுபட்டார்! காரியங்கள் எப்படித் தோற்றமளித்தாலும் குறை சொல்லாதபடி தேவனை நம்பியவராய் எல்லாச் சூழ்நிலைகளிலும் மௌனமாக அவர் காணப்பட்டார். காரியங்கள் சாதகமாய் அமைந்தபோது பொறுமையுள்ளவராயும், காரியங்கள் கடினமாக மாறும்போது பொறுமையற்றவராயும் அவர் பதில் கூறவில்லை.

மேற்கண்ட வசனங்களானது, இயேசுவே நமது முன்மாதிரி என்று நாம் அறியவும். நாம் எப்படி வாழ வேண்டும் என நமக்குக் காண்பிக்கும் படி அவர் வந்தார் என்பதை அறியவும் செய்கிறது. மற்ற மக்களுக்கு முன்பாக நாம் எவ்வாறு நடக்கிறோமோ, அதுதான் அவர்கள் வாழ வேண்டிய வாழ்க்கை முறையை அவர்களுக்கு வெளிப்படுத்துகிறது. நமது வார்த்தைகளைக் காட்டிலும் அதிகமான உதாரணங்களைக் காட்டித்தான்

நாம் நமது பிள்ளைகளுக்கும் கற்றுக் கொடுக்கிறோம். எல்லாராலும் வாசித்தறியப்படத்தக்க ஜீவனுள்ள நிருபங்களாக நாம் இருக்க வேண்டும் (2 கொரிந்தியர் 3:2-3) அந்தகார உலகத்தில் பிரகாசிக்கிற விளக்காகவும் நாம் இருக்க வேண்டும் (பிலிப்பியர் 2:15).

## தாழ்மை, சாந்தம், பொறுமை இவற்றிற்கே நாம் அழைக்கப்பட்டுள்ளோம்

> ஆதலால், கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து,
>
> மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்குங்கள்.
>
> எபேசியர் 4:1-2

தாழ்மையோடும் சாந்தத்தோடும், பொறுமையோடும் நடக்க வேண்டும் என்பதை விளக்க நல்ல ஒரு உதாரணம் எனது வீட்டில் சில வருடங்களுக்கு முன்பாக நடைபெற்றது.

குடியரசு நாடுகளில் ஊழியப் பயணம் முடித்து எங்கள் மகன் தானியேல் அப்பொழுது தான் திரும்பியிருந்தான். தனது கைகளில் சொறியோடும், காயங்களோடும் அவன் திரும்பி வந்தான். அது ஒரு தவறான மருந்தின் மூலம் வந்த வியாதி என அவன் கூறினான். மிகவும் மோசமாக அது இருந்தபடியால், அவனை மருத்துவர்களிடத்தில் காண்பிக்க விரும்பினோம். எங்கள் குடும்ப டாக்டர் அன்று இல்லாதபடியால் அவருடைய நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்கிற இன்னொரு மருத்துவரிடம் சென்றோம்.

எங்கள் மகள் சாந்த்ரா, மருத்துவருக்குத் தொலைபேசி மூலம் தானியேலுடைய வயதையும் நிலையையும் சொல்லி, மருத்துவரைச் சந்திக்க நேரத்தை உறுதி செய்து கொண்டாள். நாங்களும், சாந்த்ராவும் அந்த நாள் முழுவதும் அதிகமான வேலையில் இருந்தோம். சாந்த்ரா சுமார் முக்கால் மணி நேரம் பயணம் செய்து, தனது சகோதரன் தானியேலை மருத்துவமனைக்கு

அழைத்துச் சென்றாள். ஆனால், டாக்டர் அலுவலகத்துப் பணிப்பெண், சாந்த்ராவிடம் “பெற்றோரோடு வராத இளம் வயது நோயாளிகளுக்கு நாங்கள் சிகிச்சை அளிப்பதில்லை மன்னித்துக் கொள்ளுங்கள்” என்று சொல்லி விட்டாள்.

ஆனால் சாந்த்ராவோ, நான் தொலைபேசியில் பேசும்போதே, எனது சகோதரனை நான் தான் அழைத்துக் கொண்டு வருவேன். அவனுக்கு இளவயது என்று சொல்லிவிட்டேன். வழக்கமாகவே நான்தான் அவனை மருத்துவமனைக்கு அழைத்துக் கொண்டு போவேன். என் பெற்றோர் அடிக்கடி வெளியூர் சென்று விடுவதால் நான் தான் அவனுக்கு இப்படிப்பட்ட நிலையில் பொறுப்புள்ளவள் எனப் பதில் கூறினாள். ஆனால் பணிப் பெண்ணோ பெற்றோரை அழைத்துக் கொண்டுவராவிட்டால் ஒன்றுமே தன்னால் செய்ய முடியாது என்று உறுதியாய்ச் சொல்லிவிட்டாள்.

இப்பொழுது சாந்த்ராவுக்கு கோபம் வரக்கூடிய ஓர் சந்தர்ப்பம். ஏற்கனவே தனக்கு இருக்கும் நெருக்கமான நிகழ்ச்சியிலே, இந்த ஒரு காரியத்தையும் கவனிக்க சாந்த்ரா தனது நேரத்தை ஒதுக்கியிருந்த நிலையில் இப்படிப்பட்ட ஓர் ஏமாற்றமான பதில் அவளுக்குக் கோபத்தை உண்டாக்கக் கூடியதாய் இருந்தது. மேலும், மீண்டும் அவள் திரும்பிச் செல்ல இன்னொரு நாற்பத்து ஐந்து நிமிடங்கள் ஆகும் என்பதை எண்ணிப் பார்க்கையில் தனது நேரமெல்லாம் வீணாய் செலவழித்து விட்டதே என்ற ஓர் அவல நிலைக்கு அவளைத் தள்ளிவிட்டது.

ஆனால் அவள் சாந்தத்தோடும் அமைதியோடும் இருக்க கர்த்தர் அவளுக்கு உதவி செய்தார். தன் தந்தையுடன் அவள் தொலைபேசியில் தொடர்பு கொண்டதும், அவர் உடனடியாக வருகிறேன் என்று சொல்லிவிட்டார். எனது கணவர் அன்று காலை எங்கள் அலுவலகத்திற்குச் சென்று, சில புத்தகங்களையும், ஒலிநாடாக்களையும் எடுத்து வர வேண்டியதாயிருந்தது. தான் ஏன் அவைகளை எடுத்துக் கொண்டு வர வேண்டும் என்ற உணர்வுடன் அவர் சென்றிருந்தார்.

டாக்டர் இருக்கும் இடத்தை அவர் சேர்ந்த போது அங்கே நோயாளிகளின் பெயர்களைப் பதிவு செய்யும் பெண் எனது கணவரைப் பார்த்து, நீங்கள் திருமதி ஜாய்ஸ் அவர்களது கணவரா? நீங்கள்

தேவனுடைய ஊழியக்காரரா? என்ற இரு கேள்விகளைக் கேட்டாள். உடனே என் கணவர், ஆம் என்று பதிலுரைக்க, அவள் உங்கள் ஊழியங்களைப் பற்றி நான் அதிகம் கேள்விப்பட்டிருக்கிறேன். தொலைக்காட்சியிலே அடிக்கடி உங்கள் மனைவி தேவனுடைய வார்த்தைகளைப் பேசுவதைக் கேட்டிருக்கிறேன் என்ற கூறினாள். உடனே, எனது கணவர் சிறிது நேரம் அவளோடு பேசிவிட்டு, உணர்ச்சிகளிலே சுகம் என்ற எங்களுடைய புத்தகத்தை அவளுக்குக் கொடுத்தார்.

நான் இந்த சம்பவத்தை இங்கே உங்களுக்குச் சொல்லக் காரணம் உண்டு ஒருவேளை, எனது மகள் சாந்த்ரா தன் பொறுமையை இழந்து அவளிடம் கோபமாய் பேசியிருந்திருப்பாளானால் அவளுடைய சாட்சி அங்கே கெட்டிருக்கும் அல்லவா? என்னைத் தொலைக்காட்சியிலே அடிக்கடி பார்க்கிற அப்பணிப் பெண்ணின் ஆவிக்குரிய நிலைமைக்குப் பாதகத்தை உண்டு பண்ணியிருக்கும், மாத்திரமல்ல, எனது குடும்பத்திற்கும் அவப்பெயரைக் கொண்டு வந்திருக்கும்.

இன்றைக்கு இந்த உலகத்திலே தேவனைத் தேடும்படி முயற்சிக்கிற அநேகருக்கு, நாம் எதைச் சொல்லுகிறோம் என்பது முக்கியமல்ல, ஆனால் நம் வாழ்க்கை மூலம் எதை வெளிப்படுத்துகிறோம் என்பது தான் முக்கியம். நாம் நமது வாயின் மூலம் சுவிசேஷத்தை அவர்களுக்கு அறிவிப்பது முக்கியம் தான். ஆனால் நாம் பிரசங்கிப்பதற்கு நேர் மாறாக நாம் நடந்து கொள்வோமானால், நமது வாயைத் திறந்து சுவிசேஷத்தைச் சொல்லாமல் இருந்திருந்தாலே நலமாய் இருந்திருக்கும்.

தனக்கு நேர்ந்த பாடுகளில் சாந்த்ரா பொறுமையாக இருந்தாள். இப்பேற்பட்ட நடக்கைக்கும் நோக்கத்திற்குமே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்று வேதவசனம் நமக்குச் சொல்லித் தருகிறது.

## யோசேப்பின் பொறுமை

அவன் கால்களை விலங்கு போட்டு ஒடுக்கினார்கள், அவன் பிராணன் இரும்பில் அடைபட்டிருந்தது.

கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறுமளவும் அவருடைய வசனம் அவனைப் புடமிட்டது.

சங்கீதம் 105:17-19

பழைய ஏற்பாட்டிலுள்ள உதாரணமாக தனது சகோதரரால் அநீதியாய் நடத்தப்பட்ட யோசேப்பைக் கவனிப்போம். அவர்கள் அவனை அடிமையாக விற்றுப் போட்டு விட்டு, ஒரு காட்டு மிருகம் அவனைப் பட்சித்தது என்று அவனது தகப்பனிடத்தில் பொய் சொல்லிவிட்டார்கள். போத்திப்பார் என்ற செல்வந்தன் ஒருவன் இவனை விலை கொடுத்து வாங்கினான். தனது வீட்டிலே இவனை அடிமையாக வைத்திருந்தான். யோசேப்பு சென்ற எல்லா இடங்களிலும் தேவன் அவனுக்குத் தயை கிடைக்கப் பண்ணினார். துரிதமாக தனது புதிய எஜமானுடைய கண்களில் தயவு பெற்றான்.

இந்த யோசேப்பு, தொடர்ந்து உயர்வு பெற்றுக் கொண்டேயிருந்தான். ஆனால், வேறொரு அநீதியான சம்பவம் அவனுக்கு நடைபெற்றது. போத்திபாரின் மனைவி அவனை வசப்படுத்த முயற்சிசெய்து, தன்னோடு தகாத உறவு கொள்ள அவனை இழுக்கப் பிரயாசப்பட்டாள். ஆனால், அவன் ஒரு உத்தமனாக இருந்தபடியால், அவளுக்கு இணங்க இடங்கொடுக்கவில்லை. தன்னைத் தாக்கியதாக அவள் தனது கணவனிடம் பொய் சொல்லியதால், போத்திபார் யோசேப்பை சிறைக்குள்ளே தள்ளினான்!

தான் சிறையிலே இருந்த காலமெல்லாம் யோசேப்பு மற்றவர்களுக்கு உதவி செய்யவே விரும்பினான். தனது பாடுகளில் அவன் ஒருபோதும் யாரையும் குறைகூறவேயில்லை, இறுதியாக தேவன் அவனை விடுதலையாக்கி அவனை உயர்த்தினார். பார்வோனைத் தவிர எகிப்து தேசம் முழுவதும் எவருக்குமே கிடைக்கப் பெறாத உயர்பதவியை அவன் இறுதியாய் பெற்றான்.

தேவனும், யோசேப்புக்காக அவனுடைய சகோதரருடைய குற்றத்தை நிரூபிக்கும் வண்ணமாக அவர்கள் அனைவரும் தங்கள் பஞ்சகாலத்தில் அவனிடம் வந்து, தானியம் பெற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படத்தினார். இங்கேயும், யோசேப்பு அவர்களைப் பழிக்குப்பழி

வாங்காதபடி அவா்களைப் பட்சமாய் நடத்தி, தெய்வீக சுபாவத்தை வெளிப்படுத்திக் காண்பித்தான். அவனுக்கு அவா்கள் செய்ய நினைத்த தீங்கை, தேவன் எல்லாருக்கும் நன்மையுண்டாக மாற்றினாா் என்று சொன்னான். அவா்கள் தன்னுடைய கரத்திலே அல்ல தேவனுடைய கரத்திலே இருக்கிறாா்கள் என்றும் அவா்களுக்கு தீங்கு செய்ய தனக்கு எந்த உரிமையும் இல்லை எனவும் கூறி அவா்களை ஆசீா்வதித்தான் (ஆதியாகமம் 39-50 அதிகாரங்கள்).

## குறை கூறுதலினால் வரும் ஆபத்துக்கள்

> நாம் தேவனைப் பரீட்சித்து, அவர்களில் சிலர் நடந்தது போல, கொள்ளியாய் சர்ப்பத்தினால் கொல்லப்படக்கூடாது.
>
> அவர்களில் சிலர் செய்தது போல திருப்தியில்லாமல் குறை சொல்லக் கூடாது. வாதையினால் அப்படிப்பட்டவர்கள் கொல்லப்பட்டார்கள்.
>
> இவைகளைல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது, உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது.
>
> 1 கொரிந்தியர் 10:9-11

இவ்வேதப்பகுதிகளிலிருந்து யோசேப்புக்கும், இஸ்ரவேலருக்கும் இடையேயுள்ள வித்தியாசங்களை நாம் கண்டு கொள்ள முடியும். அவன் ஒருபோதும் குறை கூறி, முறையிடவில்லை. இவர்களோ தாங்கள் கடந்து வந்த பாதையில் குறுக்கிட்ட ஒவ்வொரு சிறிய தடங்கல்களைக் குறித்தும் முறையிட்டார்கள். முறுமுறுப்பு, குறை சொல்லுதல், குற்றம் கண்டு பிடித்தல் இவை ஒவ்வொன்றினாலும் வருகிற ஆபத்துக்களை வேதம் நமக்குத் தெளிவாய்க் கூறுகிறது.

இந்தச் செய்தி மிகவும் தெளிவாய் இருக்கிறது. இஸ்ரவேலின் முறையிட்ட அனுபவம் சத்துரு உள்ளே வந்து, அவர்களை அழித்து விட வழிவாசலைத் திறந்தது. தேவனுடைய நன்மையைப் பாராட்ட வேண்டிய அவர்கள் பாராட்டாதபடியினால் அதற்கான விலையைச் செலுத்த வேண்டியதாயிற்று.

அவர்கள் நடந்தது போல நாமும் நடப்போமானால், நமக்கு நேரிடும் ஆபத்தை நாம் அறிந்து கொள்ளும் பொருட்டு, அவர்களது பாடுகளும், மரணங்களும் நமக்கு எழுதி வைக்கப்பட்டுள்ளன.

நமது சிந்தையிலே முதலாவது குறைகூறினாலொழிய நீங்களும் நானும் நமது வாயினால் ஒருபோதும் குறை கூறவே மாட்டோம். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நாம் சுதந்தரித்துக் கொள்ளாதபடி இக்குறைகூறும் சுபாவம் ஓர் வனாந்தர மனப்பான்மையாக மாறிவிடுகிறது.

இயேசுவே நமது முன்மாதிரி, அவரையே நாம் பின்பற்றுவோமாக.

இஸ்ரவேலர் *முறுமுறுத்து வனாந்தரத்திலேயே* தங்கிவிட்டார்கள்.

இயேசு *துதித்து மரித்தோரைவிட்டு உயிரோடே* எழுப்பப்பட்டார்.

இச்சந்தர்ப்பத்திலே, துதித்தல், நன்றி செலுத்துதல் இவற்றால் வரும் வல்லமையையும், குறை சொல்லி முறையிடுதலினாலுள்ள சாபக் கேட்டையும் நாம் காண முடிகிறது. ஆம், குறை சொல்லுதல், முறுமுறுத்தல், குறை கண்டுபிடித்தல், முறையிடுதல் இவையனைத்திற்குமே ஒரு சக்தி உண்டு. ஆனால், இது எதிர்மாறான வல்லமை எப்போழுதெல்லாம் நாம் நமது சிந்தையையும், வாயையும் கொடுக்கிறோமோ அப்பொழுதெல்லாம் சாத்தானுக்கு நம்மீது வல்லமையைச் செலுத்த இடம் கொடுக்கிறோம். ஆனால் தேவனோ அந்த அதிகாரத்தை நம்மேல் அவனுக்குக் கொடுக்கவில்லை.

## முறுமுறுக்காதீர்கள் குற்றம் கண்டு பிடிக்காதீர்கள் குறை சொல்லாதீர்கள்

உலகத்திலே சுடர்களைப் போலப் பிரகாசிக்கிற நீங்கள்.

கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும், கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு,

எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்.

பிலிப்பியர் 2:14-16

சில நேரங்களில் முழு உலகமே குறை சொல்லுவது போல நமக்குத் தோன்றும். குறை சொல்லுதலும் முறுமுறுத்தலும் அதிகமாகி, நன்றியறிதலும் பாராட்டுதலும் குறைவுபட்டு இருக்கும் ஜனங்கள், தாங்கள் பாதுகாப்பற்ற, வேலையில்லாத நிலையில் இல்லாத படி, ஒரு நல்ல வேலை தங்களுக்கு இருக்கிறது என்ற நன்றியுணர்வோடு வாழாதபடிக்கு எபபொழுதும் தங்கள் வேலையைப் பற்றியும், எஜமான்களைப் பற்றியும் குறை கூறுபவர்களாகவே இருக்கின்றனர்.

ஆனால், அநேக ஏழைமக்கள் தங்களுக்கு இருக்கிற சிறிய வேலையிலும் அதிக உற்சாகமுள்ளவர்களாக இருப்பார்கள். தங்களது எஜமான் நல்லவராக இல்லாவிட்டாலும், ஒழுங்காக வருமானம் வருகிறதே என்று எண்ணி, தங்கள் சொந்த வீட்டில் வாழ்வதிலும், தங்கள் ஆகாரத்தைப் புசிப்பதிலும் திருப்தியோடும் நன்றியோடும் இருப்பார்கள்.

ஒருவேளை உங்களுக்கு ஒரு நல்ல வேலை தேவைப்படலாம். உங்கள் எஜமான் உங்களைக் கடினமாக நடத்தலாம். அது துரதிருஷ்டவசமாக உங்களுக்கு இருந்தாலும், அதிலிருந்து வெளியே வருவதற்கான வழி, குறை சொல்லுவதன் மூலம் அல்ல.

## கவலைப்படாதபடி ஸ்தோத்திரம் செய்யுங்கள்!

> நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.
>
> பிலிப்பியர் 4:6

நமது பிரச்சனைகளுக்குத் தேவையானப் பரிகாரத்தை அப்போஸ்தலனாகிய பவுல் இங்கே குறிப்பிடுகிறார். *எல்லாச் சூழ்நிலைகளிலும் ஸ்தோத்திரத்தோடே கூடிய விண்ணப்பங்களை நாம் ஏறெடுக்க வேண்டும்* என அவர் ஆலோசனை கூறுகிறார்.

தேவனும் இதேக் காரியத்தைத்தான் எனக்குக் கற்றுக் கொடுத்தார். ஏற்கனவே நான் உனக்குக் கொடுத்தவைகளிலே நீ நன்றியோடு

இல்லாவிட்டால், ஏன் நான் உனக்கு இன்னும் அதிகம் தரவேண்டும் எனத் தேவன் என்னைக் கேட்டார். குறை சொல்லும்படியாய் நான் ஏன் உனக்கு இன்னொரு காரியத்தைக் கொடுக்க வேண்டும் என்றும் வினவினார்.

இப்போதுள்ள வாழ்க்கைக்காக தேவனுக்கு நன்றி செலுத்தும் இருதயத்தோடு, நமது ஜெப விண்ணப்பங்களை நாம் ஏறெடுக்காவிட்டால், சாதகமான பதிலை அவரிடத்திலிருந்து நாம் ஒருபோதும் பெறவே முடியாது. ஸ்தோத்திரத்தோடு கூடிய விண்ணப்பங்கள் என்று தான் வேதம் சொல்லுகிறதேயொழிய குறைசொல்லுதலோடுள்ள விண்ணப்பங்கள் என்று ஒருபோதும் வேதம் சொல்லவேயில்லை.

ஒரு குறிப்பிட்ட நபர் நமது விருப்பத்திற்கேற்ப செயல்படாவிட்டால் அங்கேதான் முறுமுறுப்பும், முணகுதலும், குறைகண்டுபிடித்தலும், குறைசொல்லுதலும் உண்டாகிறது. அல்லது நாம் எதிர்பார்த்த காரியத்துக்காக நீண்ட நாட்கள் காத்திருக்கும் நிலைக்கு நாம் வரும்போது இவை உருவாகிறது. இக்காலத்தில் தான் நாம் பொறுமையோடு காத்திருக்க வேண்டும் என்று வேத வசனம் நமக்குச் சொல்லுகிறது.

பொறுமை என்பது காத்திருப்பதற்கானத் திறமையல்ல. ஆனால், காத்திருக்கும்போது நாம் காத்துக் கொள்ளுகிறதான நல் நோக்கம் தான் பொறுமை என நான் கற்றறிந்து கொண்டேன்.

இப்படிப்பட்டக் குறைசொல்லுதலும், அதற்குச் சம்மந்தமுள்ள எல்லாவிதமான எதர்மாறான எண்ணங்களும், வார்த்தைகளும் நாம் கடுமையாக எதிர்க்க வேண்டியவைகளாகும். இவைகளுக்கு நாம் நமது மனதையும் வாயையும் கொடுக்கும் போது அது எவ்வளவு ஆபத்தானது என்பதைப் பற்றிய வெளிப்படுதலை தேவன் எனக்குத் தந்தார் என்றே நான் நம்புகிறேன்.

உபாகமம் 1:6 ல் தேவன் இஸ்ரவேலரைப் பார்த்து நீங்கள் இந்த மலையருகே தங்கியிருந்தது போதும் என்று சொல்லுகிறார். ஒருவேளை நீங்களும் ஒரே மலையைச் சுற்றித் தொடர்ந்து

காணப்பட்டவர்களாய், இப்பொழுது முன்னேற ஆயத்தமாயிருக்கிறீர்கள். அப்படியாயிருக்குமானால் உங்கள் எண்ணங்களும் வார்த்தைகளும் குறைகூறுதலாகவே நிறைந்திருக்கும் பட்சத்தில் ஒருபோதும் நீங்கள் எந்தவிதமான சாத்தியமான வழிகளினூடேயும் முன்னேறவே முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

குறைசொல்லாமலிருப்பது கடினமல்ல என்று நான் சொல்லமாட்டேன், ஆயினும் கிறிஸ்துவின் சிந்தையோடு நீங்கள் இருப்பீர்களேயாகில் மேன்மையானவைகளை நீங்கள் செய்யமுடியும்.

# அதிகாரம்
# 20

## *"எதற்கும் என்னைக் காத்திருக்கப் பண்ணாதிரும்; எல்லாமே எனக்கு உடனே வேண்டும்"*

வனாந்தர மனப்பான்மை #5

## *“எதற்கும் என்னைக் காத்திருக்கப் பண்ணாதிரும்; எல்லாமே எனக்கு உடனே வேண்டும்”*

அதிகாரம்
20

### வனாந்தர மனப்பான்மை #5

*இப்படியிருக்க, சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடைய வேண்டும்மென்று, முன்மாரியும், பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான்.*

யாக்கோபு 5:7

பெருமையின் விளைவே பொறுமையின்மையாகும். பெருமையுள்ள ஒருவன் சரியான நோக்கத்தோடு எதற்கும் காத்திருக்கும் திறமையல்ல. ஆனால் காத்திருக்கும் போது காண்பிக்கும் நல்நோக்கமே பொறுமையாகும்.

“காத்திருப்பாயானால் பொறுமையோடிரு” என்று இந்த வசனம் சொல்லவில்லை காத்திருக்கும் போது பொறுமையோடிரு என்று தான் இவ்வசனம் சொல்லுகிறது. காத்திருத்தல் வாழ்க்கையின் ஒரு பகுதியாகும். அநேக மக்கள் “அதிக நேரத்தை காத்திருப்பதில் செலவழிப்பதில்லை.” பெற்றுக்கொள்வதில் அல்ல, “காத்திருப்பதிலேயே” செலவிடுகிறோம்.

இதன் அர்த்தம் என்ன? ஜெபத்திலே விசுவாசத்தோடே தேவனிடத்திலே ஒன்றைக் கேட்கிறோம். பின்னர் நாம் செயல்பாட்டிற்காக தொடர்ந்து காத்துக் கொண்டே இருக்கிறோம். அது வரும்போதோ நாம் களிகூருகிறோம் எதற்காகக் காத்துக் கொண்டிருந்தோமோ அதைப் பெற்றுக் கொண்டோம் என்பதினால் வந்த மகிழ்ச்சி தான் அதுவாகும்.

எப்படியும் நமது வாழ்வில் இலக்குடைய மக்களாய் நாம் இருக்கிறபடியால், முன்னேறிச் செல்வதற்கு நமக்கு எப்பொழுதும் சில காரியங்கள் உண்டு. ஏறிட்டுப் பார்ப்பதற்கு சில காரியங்கள் உண்டு. அடுத்த ஓர் எழுச்சி வருமட்டும், நாம் காத்திருந்து கொண்டேயிருக்கும்படி, தேவனை விசுவாசித்து, அவரிடத்திலிருந்து பெற்றுக் கொள்ளுகிற நிலைக்கு நாம் வந்துவிடுகிறோம்.

இதை நான் யோசிக்கையில், எனது வாழ்விலும் கூட அதிகமான சமயத்தைப் பெற்றுக் கொள்வதைக் காட்டிலும், காத்திருப்பதிலேயே செலவழித்துவிட்டேன். ஆகவே, பெற்றுக் கொள்ளுதலை மட்டுமல்ல, காத்திருக்கிற நேரத்தையும் நான் எனது வாழ்வில் மகிழ்ந்து அனுபவிக்க கற்றுக் கொள்ளத் தீர்மானித்தேன்.

*நாம் போகின்ற பாதையிலே, நாம் இருக்கிற இடத்தை மகிழ்ந்து அனுபவிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்!*

## பொறுமையோடு காத்திருத்தல் பெருமையைத் தடுத்து நிறுத்துகிறது

> அல்லாமலும், எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது, உங்களில் எவனானாலும் தன்னைக் குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்குத் தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ண வேண்டும்.
>
> ரோமர் 12:3

பொறுமையோடு காத்திருப்பதை நீங்கள் அறியாமல் இருப்பீர்களானால், காத்திருத்தலை மகிழ்ந்து நீங்கள் அனுபவிக்க முடியாது. தான் எந்த விதத்திலும் வசதிக்குறைவால் பாதிக்கப்படப் போவதில்லை என்று ஒரு பெருமையுள்ளவன் எண்ணுகிறபடியாலும், எப்பொழுதும் தன்னைக்குறித்து உயர்வுள்ளவனாக எண்ணுகிறபடியாலும், பொறுமையோடு காத்திருத்தலை பெருமையானது தடை செய்துவிடுகிறது.

நம்மைப்பற்றி நாமே மோசமாக எண்ணக் கூடாதென்றாலும், நம்மைக் குறித்து அதிக உயர்வாகவும் நாம் எண்ணவே கூடாது. மற்றவர்களைத் தரக்குறைவாய்ப் பார்க்ககூடிய அளவிற்கு நம்மை உயத்துவது மிகவும் ஆபத்தான ஒன்றாக அமைந்துவிடுகிறது. நாம் விரும்புகிறது போல அவர்கள் காரியங்களைச் செய்யாவிட்டாலும் அல்லது நாம் எதிர்பார்க்கிற அளவிற்கு வேகமாக கிரியை செய்யாவிட்டாலும் உடனே நாம் பொறுமையற்றவர்களாக மாறிவிடுகிறோம்.

தாழ்மையுள்ள ஒருவன் ஒருபோதும் பொறுமையற்ற மனப்பான்மையைக் காண்பிக்கவே மாட்டான்.

## நிஜமான நபராக இருங்கள்!

என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன்.

யோவான் 16:33

நிஜமான எண்ணங்களை எண்ணாதபடி, செயற்கையான எண்ணங்களை எண்ண வைப்பதன் மூலம் சாத்தான் நம் சிந்தையை பொறுமையற்ற நிலைக்குள் தள்ளுகிறான்.

எப்பொழுதும் நமது சூழ்நிலைகளும், உறவுகளும் சரியான நிலையில் தான் இருக்க வேண்டும் என்ற நிலையில் நமது சிந்தையில் எண்ணம் கொள்ளுவோமானால், நம்மையே ஒரு வீழ்ச்சிக்காக ஆயத்தமாக்குகிறோம் என்பது தான் அர்த்தமாகும். இப்படிப்பட்ட வசதியின்மை, தடைகள், அன்பற்ற மக்கள் யாரும் நமது வாழ்வில் குறுக்கிடக் கூடாது என எண்ணும் போது இத்தவறான எண்ணங்களின் மூலம் சாத்தான் நமக்கு முன்பாக ஒரு வீழ்ச்சிக்கு சதி செய்கிறான் என்பது தான் அர்த்தமாகிறது.

நாம் எதிர்மாறாக இருக்க வேண்டும் என்று நான் உங்களுக்குச் சொல்லவில்லை. சாத்தியக்கூரான நோக்கங்கள், எண்ணங்கள் இவைகளை நான் உறுதியாய் நம்புகிறவள். ஆனால் நமது வாழ்வில் நாம் சந்திக்கிற சில காரியங்கள் மட்டுமே மிகவும் பூரணமான நிலையில் அமையும் என்று நாம் அறிந்து கொள்ளுதல் மிக அவசியம்.

நானும் எனது கணவரும் அடிக்கடி ஒவ்வொரு வார இறுதியிலும் வெவ்வேறு பட்டணங்களில் கருத்தரங்குகளை நடத்துவது வழக்கம். அநேகமுறை ஹோட்டல்களிலுள்ள பெரிய கருத்தரங்குக் கூட்டங்களையும் பெரிய மண்டபங்களையும் வாடகைக்கு எடுத்து

இக்கருத்தரங்குகளை நடத்துவது உண்டு. ஆரம்ப நாட்களில் இம்மண்டபங்களிலே இக்கருத்தரங்குகளை நடத்தும் போது நான் மிகவும் ஆத்திரப்படுவது உண்டு. காரணம் குளுகுளு வசதி சில நேரங்களில் சரியாக இருக்காது. நாற்காலிகள் பழையவைகளாகவும், அழுக்குப் படிந்தவைகளாகவும் இருக்கும், அல்லது, தரையிலே முந்தைய நாள் நடந்த திருமண வைபவத்திலே சாப்பிட்டவர்கள் கீழே சிதறிவிட்ட உணவுத் துண்டுகள் பரந்து கிடக்கும்.

அதிகமானப் பணத்தை நாங்கள் செலவிட்டு, இவ்வறைகளை நாங்கள் ஒழுங்கு செய்தபடியினாலே, இப்படிப்பட்ட ஒழுங்கீனங்களை நான் காண்கிற வேளையிலே எனக்குள்ளே நான் எரிச்சலடைவதுண்டு. நாங்கள் இதைச் சரியாக்க எவ்வளவுதான் முயற்சி செய்தாலும், இன்னமும் 75% எங்களுடைய எதிர்பார்ப்புக்கேற்ப இருந்ததில்லை.

ஊழியத்திற்காக வெளியூருக்குச் செல்கையில் நாங்கள் தங்க வேண்டிய ஹோட்டல் அறைகள் ஏற்கனவே முன்பதிவு செய்யப்பட்டிருந்தாலும், நாங்கள் சேரும்போது, தங்கும் அறைகள் ஆயத்தமற்ற நிலையில் வெளியே அதிக நேரம் காத்திருக்க வேண்டிய சூழ்நிலைகளும் ஏற்பட்டதுண்டு. அங்கு நடக்க வேண்டிய கூட்டங்களின் காலம், நேரம் இவைகளைப் பற்றியும் ஹோட்டல் அலுவலர், கேட்பவர்களிடம் தவறான செய்தியை கொடுத்திருப்பார். ஏற்கனவே, எங்களிடமிருந்து அனைத்து நிகழ்ச்சி நிரல்களைப் பெற்றிருந்தும் இப்படிப்பட்ட தவறுகளை அவர்கள் செய்வதுண்டு. அங்குப் பணியிலிருக்கும் அலுவலர்கள் மிகவும் சோம்பலுள்ளவர்களாகவும் மரியாதைக் குறைவாய்ப் பேசுபவர்களாகவும் காணப்பட்டதுண்டு. நாங்கள் ஒழுங்கு செய்த ஆகாரத்தையும் கூட அவர்கள் சரியாய் கொடுக்கத் தவறிய சம்பங்களும் உண்டு.

ஒருமுறை அங்கு கூடிவந்த கிறிஸ்தவப் பெண்கள் 800 பேருக்கு உணவு பரிமாறப்பட்டபோது, முந்தைய நாள் ஒரு திருமண வைபவத்தில் பரிமாறப்பட்ட மதுபானப் பாத்திரங்களில் தவறுதலாய் இனிப்புப் பரிமாறப்பட்டதால், மதுபான ருசியானது ஆகாரத்தில் காணப்பட்டது என அவர்கள் கூறியபோது எங்களுக்கு வெட்கம் தான் உண்டாயிற்று.

நான் இன்னும் சொல்லிக்கொண்டே செல்லலாம், ஆனால் கருத்தென்னவென்றால்: அவ்வப்போது, ஆனால் எப்போதாவதோ, நாம் ஒரு தகுதியான இடத்தையோ, நேர்த்தியான மக்களையோ, நேர்த்தியான கருத்துக்களையோ பெற்றுக்கொள்வோம்.

தொடர்ந்து இன்னும் அநேகக் குறைகளை நான் சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால், இப்படிப்பட்ட சூழ்நிலைகள் என்னைப் பொறுமையற்றவளாக மாற்றியதின் காரணம், நான் ஒரு உண்மையான நபராக எனது ஆவிக்குரிய வாழ்க்கையில் காணப்படவில்லை.

தோல்விக்காக நான் திட்டமிடாவிட்டாலும், உலகத்திலே உங்களுக்கு உபத்திரவம் உண்டு என்ற இயேசுவின் வார்த்தைகள் எனக்கு ஞாபகம் வருகிறது. இச்சோதனைகளும், வேதனைகளும், உபத்திரவங்களும் பூமியிலே வாழ்க்கையின் ஒரு அங்கமாக மாறிவிடுகின்றன. விசுவாசிக்கும், அவிசுவாசிக்கும் அது ஒரே போலவே நடக்கிறது. ஆனால் தேவ அன்பிலே நாம் நிலைத்திருந்து, ஆவியின் கனியை நாம் வெளிப்படுத்துவோமானால் இவ்வுலகத்தின் சோதனைகள் நம்மைக் கீழே தள்ளாது.

## பொறுமையை சகிப்பதற்கான வல்லமை

> ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும் நீடிய பொறுமையையும் தரித்துக் கொள்ளுங்கள்.
>
> கொலோசெயர் 3:12

எல்லாச் சூழ்நிலைகளிலும் நான் எப்படிப்பட்ட சுபாவமுள்ளவளாக இருக்க வேண்டும் என்பதை இவ்வசன மூலமாய் அடிக்கடி என்னை நினைப்பூட்டிக் கொள்வேன். பொறுமையானது, காத்திருக்கும் திறமையல்ல. ஆனால் நாம் காத்திருக்கும் போது நாம் காண்பிக்கும் நல்நோக்கமே அதுவாகும்.

# பொறுமை சோதனையினால் வெளிப்படுத்தப்படுகிறது

நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும் போது,

உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்றுஅறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்.

நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும், நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக் கடவது.

யாக்கோபு 1:2-4

ஆவியின் கனியில் ஒன்று பொறுமை (கலாத்தியர் 5:22). ஒவ்வொரு விசுவாசியின் வாழ்விலும் ஆவியிலும் இது உட்படுத்தப்பட்டிருக்கிறது. தமது ஜனங்கள் பொறுமையை வெளிப்படுத்தும்போது அது கர்த்தருடைய பார்வையில் மிகவும் முக்கியமானதாகும். தம்முடைய பிள்ளைகள் மூலம் தமது குணாதிசயங்களை மற்றவர்கள் காண வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

நாம் பூரண சற்குணராயிருந்தால் ஒன்றிலும் குறைவுபடமாட்டோம் என்று யாக்கோபு 1ம் அதிகாரத்தில் நாம் காண்கிறோம். பொறுமைசாலியான ஒரு மனிதனைப் பிசாசு ஒருபோதும் அடக்கி ஆள முடியாது.

கடினமான சூழ்நிலைகளில் அகப்பட்டதாக நம்மை, நாம் காண்கையில், அதிலே நாம் களிகூற வேண்டும். இச்சூழ்நிலைகளில் நாம் பொறுமையைக் கற்றுக்கொள்ளும்படி தேவன் உபயோகப்படுத்துகிறார் என்று முதல் அதிகாரத்தில் நாம் காண்கிறோம்.

எனது வாழ்விலும் பலவிதமான சோதனைகள் என்னைப் பொறுமைக்குள் கொண்டு வந்தது என்று எனது அனுவத்திலிருந்து அறிந்து கொண்டேன். ஆயினும் முதலாவது அது தெய்வீகமில்லாத அநேகக் காரியங்களை எனக்குள் கொண்டு வந்தது. பெருமை, கோபம்,

முரட்டாட்டம், சுயநலம், குறை சொல்லுதல் போன்ற அநேகக் குணங்களை என வாழ்வில் தந்தன. பொறுமை நமக்குள் வருவதற்கு முன்பே இப்படிப்பட்ட சுபாவங்களை நாம் எதிர்க்க வேண்டும்.

## சோதனையா? சௌகரியக் குறையா?

அவர்கள் ஏதோம் தேசத்தைச் சுற்றிப் போகும்படிக்கு, ஓர் என்னும் மலையைவிட்டு, சிவந்த சமுத்திரத்தின் வழியாய் பிரயாணம் பண்ணினார்கள். வழியினிமித்தம் ஜனங்கள் மனமடிவடைந்தார்கள்.

எண்ணாகமம் 21:4

இஸ்ரவேலரை நாற்பது வருடங்கள் வனாந்தரத்திலே அலையச் செய்தது அவர்களது பொறுமையற்ற வனாந்தர மனப்பான்மை என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

சிறிய அசௌகரியங்களிலும் கூட இஸ்ரவேலர் இப்படி பொறுமையற்ற நிலையில் இருந்திருப்பார்களானால், ஏற்கனவே குடியிருப்பவர்களை இவர்கள் அகற்றி, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை எப்படிச் சுதந்தரித்திருக்க முடியும்?

உங்களுக்குள்ளே பொறுமை என்னும் கனியைப் பரிசுத்த ஆவியானவர் உருவாக்கும் போது, அவரோடு நீங்கள் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும் என்று உங்களுக்கு ஆலோசனை கூறுகிறேன். பரிசுத்த ஆவிக்கு நீங்கள் எதிர்த்து நிற்கும் வரை, பொறுமை உங்கள் இருதயத்திலே உருவாகாது. இதற்காக நீங்கள் காத்திருக்க வேண்டும். எல்லாவிதமான சோதனைகளிலும் பொறுமையைப் பிரதிபலிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் வாழ்வை மகிழ்ச்சியோடு நீங்கள் அனுபவிக்க முடியும்.

## பொறுமை, சகிப்புத்தன்மை இவற்றின் முக்கியம்

நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது.

எபிரெயர் 10:36

பொறுமை, சகிப்புத்தன்மை இல்லாமல் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை நாம் சுதந்தரிக்க முடியாது என்று வேதம் நமக்குத் தெளிவாகக் கூறுகிறது. (எபிரெயர் 6:12) விசுவாசம், பொறுமை மூலம் மட்டுமே நாம் வாக்குத்தத்தங்களைச் சுதந்தரிக்க முடியும் என்று தெளிவாய்க் காண்கிறோம்.

பெருமையுள்ள மனுஷன் தனது சுய சரீர பெலத்தினால் தனக்கு இசைவான நேரத்திலே, காரியங்கள் நடைபெற முயற்சி செய்கிறான். "நான் இப்பொழுது ஆயத்தமாயிருக்கிறேன்!" என பெருமை சொல்லும்.

ஆனால், தாழ்மையோ, "சிறந்ததை தேவன் அறிவார், அவர் ஒருபோதும் தாமதம் செய்யார் என்றே சொல்லும்!"

தாழ்மையான ஒருவன் பொறுமையோடே காத்திருக்கிறான். தனது சுயசரீர பெலத்திலே செயலாற்ற அவன் பயபக்தியின் பயத்தை உடையவனாயிருக்கிறான். பெருமையுள்ளவனோ பயனற்ற நிலையிலே, ஒன்றன்பின் ஒன்றாக முயற்சிக்கிறான்.

## ஒரு இலக்கை அடைய, நேர் வழி எப்போதும் ஒரு குறுகிய தூரமாக அமையாது

மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு. அதின் முடிவோ மரண வழிகள்.

நீதிமொழிகள் 16:25

சில வேளைகளிலே ஆவிக்குரிய பகுதிகளில் நமக்கும் நாம் இருக்க விரும்பும் இடத்திற்குமிடையே உள்ள நேர்வழி குறுகிய தூரமாய் அமையாது. குறுகிய தூரமாய் இருப்பது, அழிவுக்கு நேராகத்தான் நம்மை நடத்தும்.

பொறுமையோடிருந்து, கர்த்தருக்கு நாம் காத்திருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். நாம் விரும்பிய இடத்திற்கு அவர் நம்மை சுற்றிவரச் செய்தாலும், அப்பாதை சுற்று வழியாய் இருந்தாலும் நாம் இப்பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

தேவன் தமது சொந்த வழியில், தமக்குச் சித்தமான நேரத்தில், காரியங்களை கைகூடிவரச் செய்வதற்குப் பொறுமையோடு காத்திராமல், தாங்களே ஒன்றைச் செய்ய முயற்சிப்பதில் மும்முரமாக ஈடுபடுவதிலே, மகிழ்ச்சியற்ற, திருப்தியற்ற அநேகக் கிறிஸ்தவர்கள் உலகத்திலே இருக்கிறார்கள்.

தேவனுக்காக நீங்கள் பொறுமையோடு காத்திருக்கும்போது, "நீங்களாக ஒன்றைச் செய்யும்படி" பிசாசு உங்கள் சிந்தையைத் தொடர்ந்து கிளறிக் கொண்டே இருப்பான். மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது என்பதை அவன் அறிந்திருக்கிறபடியால் உங்களை மாம்சீக வைராக்கியத்தோடு செயல்பட அவன் தூண்டிவிடுவான். (யோவான் 6:63, ரோமர் 13:14).

நாம் கற்றதைப் போல, பொறுமையின்மை பெருமைக்கு அடையாளமாக இருக்கிறது. ஆனால், பெருமைக்கான ஒரே பதில் தாழ்மை.

## உங்களைத் தாழ்மைப்படுத்தி கர்த்தருக்குக் காத்திருங்கள்

ஆகையால், ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.

1 பேதுரு 5:6

"உங்களையே சற்றுத் தாழ்வாக எண்ணிக் கொள்ளுங்கள்" என்ற வார்த்தையானது, உங்களைத் தரக் குறைவாய் எண்ணுங்கள் என்று அர்த்தப்படுத்துவது அல்ல மாறாக, "நீங்களாகவே, உங்களுடைய அனைத்துப் பிரச்சனைகளையும் தீர்த்துக் கொள்ள முடியும்" என்று எண்ணாதிருங்கள் என்பதே அதன் அர்த்தமாகும்.

பெருமையோடு காரியங்களை உங்கள் கரங்களில் எடுத்துக் கொள்ளாமல், தேவனுடையப் பலத்தக் கரத்திற்குள் நாம் நம்மைத் தாழ்த்தக் கற்றுக்கொள்ள வேண்டும். ஏற்ற வேளையை அவர் அறிந்து, நம்மை அவர் உயர்த்துவார்.

நமது சுய சரீர வைராக்கியத்தில் செயலாற்ற நாம் மறுத்து தேவனிலே

காத்திருக்கும்போது "சுயத்திற்குச் சாகுதல்" என்ற நிலைக்கு நாம் வந்து விடுகிறோம். நமது சொந்த நேரத்திற்கும் சொந்த வழிகளுக்கும் நாம் சாக ஆரம்பித்து, நம்மைக் குறித்த தேவனுடைய வழிக்கும் சித்தத்திற்கும் பிழைத்திருக்கிறவர்களாகக் காணப்படுகிறோம்.

தேவன் எதையெல்லாம் நாம் செய்ய வேண்டுமென்று நமக்குச் சொல்லுகிறாரோ அதையெல்லாம் செய்வதற்கு அவருக்குக் கீழ்ப்படிவதில் நாம் ஒழுங்காக இருக்க வேண்டும். மாத்திரமல்ல, மாம்சீகப் பெருமையைக் குறித்து தெய்வீக பயத்தோடு நாம் காணப்பட வேண்டும். பொறுமையின்மையை உருவாக்கும் வேர் பெருமையே. "தயவாக இனி என் பொறுமையை சோதிக்காதிருங்கள் எல்லாம் எனக்கு உடனே வேண்டும்" என்று பெருமையுள்ளவன் சொல்லுகிறான்.

சோர்வும் பொறுமையின்மையும் உங்களுக்குள்ளே உருவாக நீங்கள் சோதிக்கப்படும்போது, "ஆண்டவரே, உமது வேளையில், உமது சித்தம் மட்டுமே என் வாழ்க்கையில் நிறைவேறட்டும். உம்மை முந்திக் கொள்ள நான் விரும்பவில்லை. உமக்குப் பிந்தவும் நான் விரும்பவில்லை. உமக்காகப் பொறுமையோடு காத்திருக்க எனக்கு உதவிசெய்யும்" என ஜெபிக்க ஆரம்பியுங்கள்!

# அதிகாரம்
# 21

## *“எனது நடக்கை தவறாக இருக்கலாம், ஆயினும் அது எனது பிழையல்ல!”*

வனாந்தர மனப்பான்மை #6

# *“எனது நடக்கை தவறாக இருக்கலாம், ஆயினும் அது எனது பிழையல்ல!”*

**அதிகாரம்**
21

## வனாந்தர மனப்பான்மை #6

தன் சொந்தக் கிரியையின் மேல் உத்திரவாதத்தை எடுத்துக் கொள்ளத் தவறுதலும், தவறாக நடக்கும் காரியங்களுக்கு பிறரையே குறை கூறுவதும், குற்றம் சாட்டுவதும் வனாந்தர வாழ்விற்குப் பிரதானக் காரணமாகும்.

*அதற்கு ஆதாம், என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன் என்றான்.*

*...ஸ்திரீயானவள், சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள்.*

ஆதியாகமம் 3:12-13

காலக்கட்டத் துவக்கத்திலிருந்தே பிரச்சனைகள் இருந்ததை நாம் காண்கிறோம். ஏதேன் தோட்டத்திலே ஆதாமும், ஏவாளும் தங்கள் பாவத்திலே பிடிபட்ட போது ஒருவர் மீது ஒருவர் பழிசுமத்தினார்கள் தேவனையும், பிசாசையும் குற்றம் சாட்டினார்கள். இப்படியாக, தங்கள் கிரியைக்குத் தக்க உத்தரவாதத்தை தங்கள் மேல் எடுத்துக் கொள்ளாமல் மாறுபட்டார்கள்.

### எல்லாமே உன் தவறுதான்!

ஆபிராமுடைய மனைவியாகிய சாராய்க்குப் பிள்ளையில்லாதிருந்தது. எகிப்து தேசத்தாளாகிய ஆகார் என்னும் பேர் கொண்ட ஒரு அடிமைப் பெண் அவளுக்கு இருந்தாள்.

சாராய் ஆபிராமை நோக்கி, “நான் பிள்ளை பெறாதபடிக்குக் கர்த்தர் என் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார். என் அடிமைப் பெண்ணோடே சேரும், ஒருவேளை அவளால் என் வீடு கட்டப்படும் என்றாள்.” சாராயின் வார்த்தைகளுக்கு ஆபிராம் செவிகொடுத்தான்.

ஆபிராம் கானான் தேசத்தில் பத்து வருஷம் குடியிருந்த பின்பு, ஆபிராமின் மனைவியாகிய சாராய் எகிப்து தேசத்தாளான தன்

அடிமைப்பெண்ணாகிய ஆகாரை அழைத்து, அவளைத் தன் புருஷனாகிய ஆபிராமுக்கு மறுமனையாட்டியாகக் கொடுத்தாள்

அவன் ஆகாரோடே சேர்ந்தபோது, அவள் கர்ப்பந்தரித்தாள். அவள் தான் கர்ப்பவதியானதைக் கண்டபோது தன் நாச்சியாரை அற்பமாக எண்ணினாள்.

அப்பொழுது சாராய் ஆபிராமை நோக்கி, “எனக்கு நேரிட்ட அநியாயம் உமது மேல் சுமரும்! என் அடிமைப் பெண்ணை உம்முடைய மடியிலே கொடுத்தேன். அவள் தான் கர்ப்பவதியானதைக் கண்டு என்னை அற்பமாக எண்ணுகிறாள். கர்த்தர் எனக்கும் உமக்கும் நடு நின்று நியாயந்தீர்ப்பாராக என்றாள்.”

அதற்கு ஆபிராம் சாராயை நோக்கி, இதோ, “உன் அடிமைப் பெண் உன் கைக்குள் இருக்கிறாள். உன் பார்வைக்கு நலமானபடி அவளுக்குச் செய் என்றான்.” அப்பொழுது சாராய் அவளைக் கடினமாய் நடத்தினபடியால் அவள் அவளைவிட்டு ஓடிப்போனாள்.

ஆதியாகமம் 16:1-6

ஆதாம் ஏவாளுக்குள்ளே நடந்த அதே நிகழ்ச்சி இங்கே ஆபிராமுக்கும், சாராய்க்கும் இடையே நடக்கிறது. தங்களுக்குப் பிறக்கப்போகும் பிள்ளையைக் குறித்த வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருப்பதில் அவர்கள் களைத்துப் போனார்கள். ஆகவே அவர்கள் தங்கள் மாம்ச சித்தத்தின்படி கிரியை செய்து, தங்கள் சுயமாய் செயல்பட ஆரம்பித்தார்கள். அது மோசமாய் மாறி பிரச்சனையை உருவாக்கியபோது, அவர்கள் ஒருவரையொருவர் குறைகூற ஆரம்பித்தார்கள்.

கடந்த காலங்களிலே இதே சூழ்நிலை எங்கள் குடும்பத்தில் எனக்கும் எனது கணவருக்குமிடையே அடிக்கடி ஏற்பட்டிருந்ததை நான் அறிவேன். நிஜமானதைச் சந்திக்க ஒருபோதும் விரும்பாதபடி, எப்பொழுதும் வாழ்க்கையின் உண்மையான பகுதிகளை தொடர்ந்து தள்ளி வைத்துக் கொண்டேயிருந்தோம்.

எனது கணவர் மாற வேண்டும் என்று நான் ஜெபித்தது எனக்கு இன்னும் நினைவிருக்கிறது. நான் வேதத்தை வாசிக்க, வாசிக்க அவரது பிழைகளைத் தான் என்னாலே காண முடிந்தது. அவர் எவ்வளவாய் மாற்றப்பட வேண்டும் என்பதைத்தான் நான் சிந்தித்துக் கொண்டிருந்தேன். ஆனால் நான் ஜெபித்தபோதோ, தேவன் என்னோடே பேச ஆரம்பித்தார். “உனது கணவரல்ல. உன்னிடத்திலே தான் பிரச்சனை” என்று தெளிவாய் என்னிடத்தில் எடுத்துரைத்தார்.

நான் அதிர்ந்து போனேன். நான் அழுதேன். அழுது கொண்டே இருந்தேன். ஒரே வீட்டில் நான் எப்படிப்பட்ட நிலையில் வாழ்கிறேன் என தேவன் எனக்குத் தெளிவாய் காண்பித்தபடியால், மூன்று நாள் அதை உணர்ந்து அழுது கொண்டே இருந்தேன். காரியங்களை எவ்வாறாகக் கட்டுப்படுத்துகிறேன் என்பதை அவர் எனக்குக் காண்பித்தார். எவ்வாறு நான் குற்றம் சாட்டுகிறேன் என்றும் என்னைப் பிரியப்படுத்துவது எவ்வளவு கடினம் என்றும், இன்னும் எதிர்மாறாய் நான் இருக்கிறேன் என்றும், இன்னும் அநேகக்காரியங்களை சுட்டிக் காட்டினார். எனது பெருமைக்கு விழுந்த அடியைக் கண்டு நான் அதிர்ச்சியுற்றேன். ஆயினும், கர்த்தருக்குள் நான் சீர்பட அது ஓர் துவக்கமாக இருந்தது.

அநேகரைப் போல, என் கட்டுப்பாட்டையும் மீறி பிறர் மீது எல்லாப் பழியையும் நான் சுமத்துவது உண்டு. நான் சிறுவயதிலேயே சிறுமைப்படுத்தப்பட்டதால் இப்படி மோசமாக நடக்கிறேன் என்று எண்ணினேன். ஆனால் தேவன் அதற்கு மறுமொழியாக, “அது ஒருவேளை இப்படி நீ நடப்பதற்குக் காரணமாயிருந்தாலும், நீ தொடர்ந்து இப்படி நடக்க இதை ஒருபோதும் சாக்குப் போக்காகச் சொல்லாதே!” என்றார்.

சாத்தான் நமது சிந்தையிலே கடுமையாகக் கிரியை செய்கிறான். சத்தியத்தைப் பாதுகாக்காதபடி பலத்த அரண்களை அவன் கட்டி எழுப்பிக் கொண்டிருக்கிறான். சத்தியம் நம்மை விடுதலையாக்கும். அதையும் அவன் அறிந்திருக்கிறான்!

நம்மைப் பற்றியும் நமது நடத்தையைப் பற்றியும் உள்ள உண்மையைச் சந்திப்பதைக் காட்டிலும் உணர்ச்சி வசப்படும் வேதனை வேறொன்றுமே இல்லை என நான் எண்ணுகிறேன். அது வேதனையான ஒன்றாக இருப்பதால் தான் அநேகர் அதை விட்டு ஓடி விடுகிறார்கள்.

பிறரைப் பற்றிய உண்மையை சந்திப்பது மிகவும் எளிது. ஆனால், அதே காரியம் நம்மைச் சம்மந்தப்படுத்தி வரும்போதோ, அதை செயலாற்ற நாம் கஷ்டப்படுகிறோம்.

## இவ்வாறு இருந்திருக்குமானால்...

ஜனங்கள் தேவனுக்கும் மோசேக்கும் விரோதமாகப் பேசி, நாங்கள் வனாந்தரத்திலே சாகும்படி நீங்கள் எங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணினதென்ன? இங்கே அப்பமும் இல்லை, தண்ணீரும் இல்லை, இந்த அற்பமான உணவு எங்கள் மனதுக்கு வெறுப்பாயிருக்கிறது என்றார்கள்.

எண்ணாகமம் 21:5

ஏற்கனவே நாம் கவனித்தது போல, தங்களுடைய பிரச்சனை அனைத்திற்கும் காரணம் தேவனும் மோசேயும் தான் என இஸ்ரவேலர் குறை கூறிக் கொண்டிருந்தனர். பல காலமாக தாங்கள் வனாந்தரத்திலே தங்கிய காரணத்தின் உத்தரவாதத்தை விட்டுத் தங்களை முற்றுமாக ஒதுக்கிக் கொண்டார்கள். இதுவே அவர்கள் நாற்பது வருடங்கள் வனாந்தரத்தில் அலையக் காரணமாயிருந்த வனாந்தர மனப்பான்மை எனத் தேவன் தெளிவாய் எனக்குக் காண்பித்தார்.

எனது வாழ்விலும் பல ஆண்டுகளாக ஒரே விதமான மலைகளை நான் சுற்றிச் சுற்றி வந்ததன் காரணங்களிலே இதுவும் ஒரு காரணமாகும். நான் மோசமான நிலையில் வாழ்வதற்குத் தந்த எனது சாக்குப்போக்குகளின் பட்டியல் முற்றுப் பெறாத ஒன்றாக இருந்தது.

“சிறுபிள்ளையாக நான் இருந்தபோது சிறுமைப்படுத்தப்படாமல் இருந்திருந்தால், இந்தக் கோப சுபாவம் எனக்கு வந்திருக்காது.”

“எனது பிள்ளைகள் எனக்கு அதிக உதவியாக இருந்திருந்தால், நான் அவர்களிடம் நன்றாக நடந்திருப்பேன்.”

“சனிக்கிழமைகளில் எனது கணவர் கோல்ப் ஆட்டம் விளையாடாமல் இருந்திருந்தால், அவர் மேலே நான் கோபப்பட்டிருக்கமாட்டேன்.”

“எனது கணவர் என்னோடு அதிக நேரம் பேசி இருந்திருந்தால், நான் தனிமையை உணர்ந்திருக்கமாட்டேன்.”

“எனது கணவர் இன்னும் அதிகமான வெகுமதிகளை எனக்கு வாங்கிக் கொடுத்திருந்தால், இவ்வளவு எதிர்மாறாக நான் இருந்திருக்கமாட்டேன்.”

“நான் இன்னும் வீட்டைவிட்டு வெளியிடங்களுக்குப் போகிறவளாக இருந்திருப்பேனானால் நான் சலிப்புள்ளவளாகக் காணப்பட்டிருக்கமாட்டேன்!”

“எங்களுக்கு இன்னும் அதிகமாகப் பணம் இருந்திருக்குமானால்...”

“எங்களுக்கு சொந்தமான வீடு ஒன்று இருந்திருக்குமானால்...”

“பணம் செலுத்த வேண்டிய அதிகமான பில்கள் இல்லாதிருந்திருந்தால்...”

“இன்னும் நல்ல அயலகத்தார், சிநேகிதர்கள் எனக்கு இருந்திருப்பார்களானால்...”

## ஆனால்...

கர்த்தர் மோசேயை நோக்கி,

நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கும் கானான் தேசத்தைச் சுற்றிப் பார்ப்பதற்கு நீ மனிதரை அனுப்பு. ஒவ்வொரு பிதாக்களின் கோத்திரத்திலும், ஒவ்வொரு பிரபுவாகிய புருஷனை அனுப்ப வேண்டும் என்றார்.

மோசே கர்த்தருடைய வாக்கின்படியே அவர்களைப் பாரான் வனாந்தரத்திலிருந்து அனுப்பினான். அந்த மனிதர் யாவரும் இஸ்ரவேல் புத்திரரின் தலைவர்கள்.

எண்ணாகமம் 13:1-3

அவர்கள் தேசத்தைச் சுற்றிப் பார்த்து, நாற்பது நாள் சென்றபின்பு திரும்பினார்கள்.

அவர்கள் பாரான் வனாந்தரத்தில் இருக்கிற காதேசுக்கு வந்து, மோசே, ஆரோன் என்பவர்களிடத்திலும் இஸ்ரவேல் புத்திரராகிய

சபையார் எல்லாரிடத்திலும் சேர்ந்து, அவர்களுக்கும் சபையார் அனைவருக்கும் சமாசாரத்தை அறிவித்து, தேசத்தின் கனிகளை அவர்களுக்குக் காண்பித்தார்கள்.

அவர்கள் மோசேயை நோக்கி, நீர் எங்களை அனுப்பின தேசத்துக்கு நாங்கள் போய் வந்தோம். அது பாலும் தேனும் ஓடுகிற தேசந்தான். இது அதினுடைய கனி.

ஆனாலும், அந்த தேசத்திலே குடியிருக்கிற ஜனங்கள் பலவான்கள். பட்டணங்கள் அரணிப்பானவைகளும் மிகவும் பெரியவைகளுமாய் இருக்கிறது. அங்கே ஏனாக்கின் குமாரரையும் கண்டோம்.

எண்ணாகமம் 13:25-28

இவ்வாறு இருந்திருக்குமானால், ஆனால் ஆகிய இவ்விரண்டு வார்த்தைகளும் சாத்தான் எப்பொழுதும் நமது சிந்தையிலே விதைக்கிற இரண்டு வஞ்சகமான வார்த்தைகளாகும். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை வேவு பார்க்கும் படி அனுப்பப்பட்ட பன்னிரண்டு பேர் திரும்பி வந்த போது, தங்கள் கைகளில் அந்தத் தேசத்திலுள்ள பெரிய திராட்சைக் குலையை ஒரு தூணிலே சுமக்க முடியாமல் சுமந்து கொண்டு வந்தார்கள். ஆனால், மோசேயினிடத்திலும், ஜனங்களிடத்திலும் அவர்கள் துர்ச்செய்தியைத்தான் பரப்பினார்கள்.

“ஆனால்” என்பது தான் அவர்களைத் தோற்கடித்தது! அவர்கள் தங்கள் கண்களை தேவன் மேல் பதித்திருந்திருக்க வேண்டுமேயல்லாமல் காணக்கூடிய பிரச்சனைகளின் மேல் வைத்ததால் தோற்றார்கள்.

நம்முடையப் பிரச்சனைகள் நம்மைத் தோற்கடிக்கும் காரணங்களிலே ஒன்று. நாம் பிரச்சனைகளை தேவனைவிடப் பெரிதாக எண்ணுகிறதினாலே தோற்கடிக்கப்படுகிறோம், வேறொன்றுமில்லை. இதனால் தான் சத்தியத்தை எதிர்கொள்ள நாம் கஷ்டப்படுகிறோம். தேவன் நம்மை மாற்ற முடியும் என்ற நிச்சயமற்றவர்களாக நாமிருக்கிறபடியால், நாமே நம்மிடமிருந்து ஒளிந்து கொள்கிற நிலையில் இருக்கிறோம்.

தேவன் இப்போது என்னோடு இடைபடுகிற வேளையில் என்னைப் பற்றிய உண்மையை நான் சந்திப்பது எனக்குக் கடினமானதாகத் தோன்றவில்லை. ஏனெனில், அவர் என்னை மாற்ற முடியும் என்பதை நான் நன்கு அறிந்திருக்கிறேன். என்னில் அவர் கிரியை செய்ய முடியும் என ஏற்கனவே நான் கண்டு கொண்டபடியால், நான் அவரை நம்புகிறேன். எப்படியும், ஆரம்பத்தில் நான் அவரோடு நடப்பது எனக்கு மிகுந்த கடினமாகவே இருந்தது. என்னுடைய ஒவ்வொரு செயல்களிலிருந்தும் என்னையே ஒளித்துக் கொண்டவளாக வாழ்ந்து கொண்டிருந்தேன். இருளிலே பல காலமாக நான் வாழ்ந்து கொண்டிருந்தபடியால், என்னால் ஒளிக்குள்ளே வருவது மிகவும் கடினமானத் தோன்றியது.

## உள்ளான நிலையில் உண்மை

தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும்.

என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும். என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன். என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது!

தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ் செய்து, உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன்.

நீர் பேசும் போது உம்முடைய நீதி விளங்கவும், நீர் நியாயந் தீர்க்கும் போது உம்முடைய பரிசுத்தம் விளங்கவும் இதை அறிக்கையிடுகிறேன்.

இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன். என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்.

இதோ, உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறீர். அந்தக் காரணத்தில் ஞானத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்.

சங்கீதம் 51:1-6

தாவீது பத்சேபாளோடு பாவம் செய்தபடியினாலும், அவளது கணவரை கொன்றதினாலும் தேவன் அவனோடு இடைபடுகிற நிலையை நாம் 51ம்

சங்கீதத்தில் காண்கிறோம். தாவீது மன்னிப்புக்காகவும் இரக்கத்திற்காகவும் தேவனை நோக்கி மன்றாடுகிறான்.

இந்த சங்கீதத்தை தாவீது எழுதுவதற்கு ஒரு முழு ஆண்டிற்கு முன்பே அவன் இப்பாவத்தை செய்துவிட்டான். ஆனால் இந்த ஒரு ஆண்டுக் காலமாய் அவன் அந்தப் பாவத்தை அறிக்கை செய்யவே இல்லை. உண்மையை சந்திக்கும் மட்டும் அவன் உண்மையாய் மனந்திரும்ப முடியவில்லை. அவன் மன உண்மையோடு மனம் திரும்பு மட்டும், ஒருபோதும் தேவன் அவனை மன்னிக்க முடியவில்லை.

இவ்வதிகாரத்திலுள்ள 6ம் வசனம் மிகவும் வல்லமையான வசனமாகும். "உள்ளத்தில் உண்மையிருக்க" தேவன் விரும்புகிறார். தேவனுடைய ஆசீர்வாதங்களை நாம் பெற விரும்பினால், நம்மைப் பற்றியும் நமது பாவங்களைப் பற்றியும் அவரிடத்தில் நாம் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

## அறிக்கையிடுதல் மன்னிப்புக்குள் நடத்துகிறது

நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது.

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் நமக்குள் இராது.

நாம் பாவஞ்செய்யவில்லையென்போமானால், நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது.

1 யோவான் 1:8-10

நாம் உண்மையாய் மனந்திரும்பினால், தேவன் நம்மை உடனே மன்னிக்கிறார். ஆனால் நாம் செய்த தவறின் உண்மையை அறிந்து உண்மையோடு அதை அறிக்கை செய்யாவிட்டால் நாம் மெய்யாய் அப்பாவத்தை விட்டு மனந்திரும்பவே முடியாது.

ஒரு தவறை நாம் செய்துவிட்டு, அதை ஒத்துக்கொண்ட பிறகு, அதற்கான சாக்குப் போக்கை நாம் சொல்லுவோமானால், அது உண்மையைச் சந்திக்கும் தேவனுடைய வழி அல்ல. இயற்கையாகவே, நம்முடைய செயல்களுக்கு நியாயம் கற்பிக்கும் பழக்கம் நம்மிடத்தில் உண்டு. ஆனால் ரோமர் 3:20-24 ல் நம்முடைய நீதி, கிறிஸ்துவில் மட்டுமே உள்ளது எனக் காண்கிறோம். நீங்களும், நானும் பாவம் செய்த பிறகு இயேசுவின் இரத்தத்தின் மூலமே தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டோமேயொழிய, நம்முடைய கிரியைகளினால் அல்ல.

ஒருநாள் எனது பக்கத்து வீட்டுப் பெண், அவளது கார் பழுதடைந்திருந்ததால், தன்னை என்னுடைய காரில் அருகிலுள்ள வங்கிக்கு அழைத்துச் செல்லும்படி தொலைபேசி மூலம் கேட்டுக் கொண்டாள். “என்னுடைய வேலையில்” நான் மிகவும் தீவிரமாய் இருந்தபடியால், அவளை அழைத்துச் செல்ல விரும்பாதவளாய், பொறுமையற்ற நிலையில் அவளோடு நடந்து கொண்டேன். ஆனால் அவளோடே நான் பேசி, தொலைபேசியைக் கீழே வைத்தவுடன், நான் எவ்வளவு தரக்குறைவாக அந்தப் பெண்ணோடு நடந்து கொண்டேன் என்று உணர்ந்தேன். மீண்டும் அவளோடு தொடர்பு கொண்டு மன்னிப்புக் கேட்டு, அவளை வங்கிக்கு அழைத்துச் செல்ல விரும்பினேன். நான் அவளிடம் முரட்டுத்தனமாக நடந்து கொண்டதைக் குறித்து, அவளிடம் என்னென்ன சாக்குப் போக்குகளைச் சொல்லலாம் என்று நினைத்தேன். “என் உடல் நிலை சரியில்லை...” “நான் மிகுந்த வேலையாயிருந்தேன்...” “இந்த நாள் பல பிரச்சனைகள் நிறைந்த நாளாயிருந்தது...” என்பன போன்றவற்றைச் சொல்லலாமா? என்று சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

ஆனால், எனது இருதயத்தின் ஆழத்திற்குள்ளே, நான் எந்தவிதமான சாக்குப்போக்குகளையும் சொல்லக்கூடாது என்று பரிசுத்த ஆவியானவர் என்னோடே பேசுவதை நான் உணர்ந்தேன்!

“நீ அவளை மீண்டும் கூப்பிட்டு, நீ தவறு செய்து விட்டதை ஒத்துக் கொண்டு அவளிடம் மன்னிப்புக் கேள்! எந்த வித சாக்குப்போக்குகளையும் சொல்லாதே. அவளை வங்கிக்கு அழைத்துக் கொண்டு போ” என்று சொன்னார்.

அது, செய்வதற்கு மிகவும் கடினமான ஒன்றாக எனக்கு இருந்தது. எங்கேயாவது போய் ஒளிந்து கொள்ளலாம் என்று என் மாம்சம் என்னோடே சொன்னது! ஆனால் உண்மைக்கு மறைவிடம் இல்லை. ஏனெனில், உண்மை வெளிச்சமாய் இருக்கிறது.

## உண்மையே வெளிச்சம்

ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்து,

அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்.

சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று, உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை.

அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாய் இருந்தது. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது. இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை.

யோவான் 1:1-5

அந்தகார இராஜ்யத்திற்கு விரோதமாக உள்ள சக்தி வாய்ந்த ஆயுதமாக உண்மை இருக்கிறது. உண்மை, ஒளியாக இருக்கிறபடியால், இருள் அதை ஒருபோதும் பற்றிக் கொள்ள முடியவில்லை. ஒருநாளும் அதைப் பற்றிக் கொள்ளாது.

காரியங்களை இருளிலே ஒளித்து வைக்க சாத்தான் விரும்புகிறான். ஆனால், பரிசுத்த ஆவியானவரோ, நீங்களும் நானும் முற்றிலும் விடுதலையோடு வாழ்வதற்கு இருளிலுள்ள காரியங்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வருகிறார்.

சத்தியமே உங்களை விடுதலையாக்கும் என்று இயேசு சொன்னார். (யோவான் 8:32) சத்தியத்தின் ஆவியினாலே, சத்தியம் வெளிப்படுத்தப்படுகிறது.

## சத்திய ஆவியானவர்

இன்னும் அநேகங் காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்.

சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார், அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப் பட்டவைகள் யாவையுஞ் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.

யோவான் 16:12-13

இயேசு தமது சீஷர்களுக்கு எல்லாச் சத்தியத்தையும் சொல்லியிருக்க முடியும். ஆனால் அவைகளை ஏற்றுக் கொள்ள அவர்கள் ஆயத்தமாய் இல்லை என்பதை அவர் அறிந்திருந்தார். வானத்திலிருந்து பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்து, அவர்களுக்குள்ளே வாசமாயிருக்கும்படி அவர்கள் காத்திருக்க வேண்டும் என்று அவர் அவர்களுக்குச் சொல்லியிருந்தார்.

இயேசு பரத்திற்கு ஏறிச் சென்ற பின்னர், நம்மிடையே கிரியை செய்யவும், வெவ்வேறு அளவில் நம்மை தேவனுடைய மகிமைக்காக ஆயத்தப்படுத்தவும், அவரை பரிசுத்த ஆவியானவரை அனுப்பினார்.

உண்மையை நாம் சந்தியாத நிலையில் பரிசுத்த ஆவியானவர் நம்முடைய வாழ்க்கையிலே எவ்வாறு கிரியை செய்ய முடியும்? அவர் "சத்தியமுள்ள ஆவி" என அழைக்கப்படுகிறார். நாம் சத்தியத்தை சந்திக்க வேண்டும் என்பதே அவரது ஊழியத்தின் பிரதானப்பங்காக இருக்கிறது. சத்தியம் மட்டுமே நம்மை விடுவிக்க முடியுமாதலால் நம்மை சத்தியம் இருக்கிற இடத்திலே அவர் அழைத்துச் செல்லுகிறார்.

கடந்த காலத்திலே நடந்த ஒரு வேதனையான சம்பவமோ அல்லது ஒரு நபர் உங்களை வேதனைப்படுத்தியதாலோ இந்தத் தவறான நோக்கத்திற்கும் நடத்தைக்கும் நீங்கள் உள்ளாயிருக்கக் கூடும். ஆனால் உங்கள் நடத்தையில் அவை சாக்குப்போக்குகளாக அமைய இடம் கொடாதிருங்கள்.

பல ஆண்டுகளாக நான் எனது சரீரத்திலும், மனதிலும், உணர்ச்சிகளிலும் சிறுவயதிலிருந்தே சிறுமைப்படுத்தப் பட்டபடியால் எனது நடத்தைகளிலே பெரும் பிரச்சனைகளுக்குள்ளானேன். ஆனால் சிறுமைப்படுத்தப்பட்டதை ஒரு சாக்குப் போக்காக நான் உபயோகித்த வரை, தவறான நடக்கைகளின் வலைக்குள்ளாக எளிதாக விழக் கூடியவளானேன். இப்படியாகத்தான், "நான் இதை வெறுத்து விடுகிறேன் என்றாலும், ஒரு காரணத்துக்காகவே இதை நான் கைக் கொள்ளுகிறேன்" என்று கூறி உங்கள் சத்துருவைப் பாதுகாக்கிறீர்கள்.

ஒவ்வொரு அடிமைத்தனத்திலிருந்தும் நீங்கள் கண்டிப்பாக விடுதலையை அனுபவிக்க முடியும். வனாந்தரத்திலேயே நீங்கள் நாற்பது வருடங்கள் அலைந்து திரிந்து காலத்தைக் கழிக்க அவசியமேயில்லை. அல்லது, ஏற்கனவே நீங்கள் அங்கே நாற்பது வருடங்களோ அல்லது அதற்கு அதிகமாகவோ செலவழித்திருப்பீர்களானால், இன்றைக்கு நீங்கள் தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

உங்களைப் பற்றிய உண்மையை தேவன் உங்களுக்குக் காண்பிக்கும்படி, அவரிடத்தில் கேளுங்கள். அவர் அதை உங்களுக்குக் காண்பிக்கும்போது, அதைப் பற்றிக் கொள்ளுங்கள். அது எளிதாக இருக்காது. ஆனால், "நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை. உன்னைக் கைவிடுவதுமில்லை" என்ற வாக்குத்தத்தத்தை நினைவில் கொள்ளுங்கள் (எபிரெயர் 13:5).

*வனாந்தரத்திற்கு வெளியே, நீங்கள் உங்கள் பயணத்தில் இருக்கிறீர்கள். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை மகிழ்ந்து அனுபவியுங்கள்!*

# அதிகாரம்
# 22

*“எனது வாழ்க்கை மிகவும் பரிதாபமானது; எனது வாழ்க்கை மிகவும் மோசமாக இருப்பதால் நான் எனக்காக வருந்துகிறேன்!”*

வனாந்தர மனப்பான்மை #7

*“எனது வாழ்க்கை மிகவும் பரிதாபமானது; எனது வாழ்க்கை மிகவும் மோசமாக இருப்பதால் நான் எனக்காக வருந்துகிறேன்!”*

வனாந்தர மனப்பான்மை #7

**அதிகாரம்**
# 22

இஸ்ரவேலர் தங்களுக்காகவே அதிகமாகத் துக்கப்பட்டார்கள். ஒவ்வொரு அசௌகரியமும், சுயபரிதாபத்திற்குள் அவர்கள் போகக்கூடிய ஒரு புதிய சாக்குப்போக்காக மாறியது.

ஒருநாள், நான் கொண்ட “சுயபரிதாபச்” சூழ்நிலையில் தேவன் என்னோடே பேசினார். “ஒன்று நீ பரிதாபமுள்ளவளாக இருக்கலாம். அல்லது வல்லமையுள்ளவளாக இருக்கலாம். ஆனால் ஒரே சமயத்தில் இரண்டு நிலையும் சேர்ந்தவளாக இருக்க முடியாது.”

*அப்பொழுது சபையார் எல்லாரும் கூக்குரலிட்டுப் புலம்பினார்கள். ஜனங்கள் அன்று இராமுழுவதும் அழுது கொண்டிருந்தார்கள்.*

*இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள். சபையார் எல்லாரும் அவர்களை நோக்கி எகிப்து தேசத்திலே செத்துப் போனோமானால் நலமாயிருக்கும். இந்த வனாந்தரத்திலே நாங்கள் செத்தாலும் நலம்.*

எண்ணாகமம் 14:1-2

*“இவ்வதிகாரத்தை விரைவாக முடிக்க நான் விரும்பவில்லை. சுயபரிதாபம் என்னும் பிசாசை நாம் வைத்துக் கொண்டு தெய்வீக வல்லமையில் நாம் நடக்க முடியாது என்பதை நாம் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்!”*

## ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாக்கி புத்தி சொல்லுங்கள்

ஆகையால் நீங்கள் செய்து வருகிறபடியே, ஒருவரையொருவர்

தேற்றி, ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யுங்கள்.

1 தெசலோனிக்கேயர் 5:11

சுயபரிதாபத்தை நான் விட்டுவிட எனக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. நான் வேதனைப்படும் போது என்னை நானே தேற்றிக் கொள்வதில் அதிக ஆண்டுகள் பழக்கமுள்ளவளாக இருந்தேன்.

ஒருவர் நம்மை வேதனைப்படுத்தும் போதோ அல்லது ஏமாற்றத்தை நாம் அனுபவிக்கும் போதோ நாம் எவ்வளவு கொடுரமாகவும், அநீதியாகவும் நடத்தப்பட்டோம் என்ற பொய்யை நமக்குள் செலுத்த, பிசாசு ஒரு குட்டிச்சாத்தானை நமக்குள் ஏவிவிடுகிறான்.

அந்தச் சமயத்தில் உங்கள் சிந்தைக்குள்ளே சத்துரு புகுத்துகின்ற எண்ணங்களை கவனித்துப் பார்ப்பீர்களானால், நம்மை அடிமைத்தனத்திற்குள்ளாக்கும் சுய பரிதாபத்தை பிசாசு நமக்குள்ளே புகுத்துவதை அறிவீர்கள்.

நமக்காக நாம் பரிதாபப்பட, வேதாகமம் நமக்கு எந்த விடுதலையையும் கொடுக்கவில்லை. மாறாக, நாம் ஒருவரிலொருவர் பக்திவிருத்தி உண்டாக்க வேண்டும்.

வேதனைப்படுத்துகிறவர்கள் மீது தெய்வீகக் கரிசனையைச் செலுத்தி, அவர்களுடைய துன்பத்தில் பங்கு கொண்டு அவற்றை நீக்குவதில் நம்முடைய நேரத்தைச் செலவிடும் மனதுருக்கமாகிய ஈவு நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், சுயபரிதாபமோ, மாறுபாடான ஒன்று. ஏனெனில் அது, தேவன் மற்றவர்களிடத்தில் நாம் காண்பிக்கக் கொடுத்த பரிதாப சிந்தையை நமக்குள்ளே சுயபரிதாபமாகத் திருப்பிவிடுகிறது.

அன்பும், மனதுருக்கமாகச் செயல்படுகிறது. பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்மிலே ஊற்றப்பட்டுள்ளது என்று ரோமர் 5:5 ல் நாம் காண்கிறோம். தேவன் நம்மில் எவ்வளவாய் அன்பு கூர்ந்தார் என்று நாம் அறிந்து கொள்ளவும், மற்றவர்களிடத்தில் நாம் அந்த அன்பைக் காண்பிக்கவும், இவ்வாறு தமது அன்பை நமக்குள் ஊற்றியிருக்கிறார்.

மற்றவர்களிடத்தில் காண்பிக்கும்படி தேவன் நமக்குக் கொடுத்த அன்பை நமக்கு நேராகத் திருப்புகிற வேளையில் அது நம்மையே அழித்துக் கொள்ளக் கூடிய சுயநலத்தன்மையாய் மாறிவிடுகிறது. சுயபரிதாபமானது, நம்மையும், நமது உணர்வுகளையும் கவனித்துக் கொள்ளும் நிலையில் ஒரு விக்கிரகாராதனையாய் இருக்கிறது. அது நம்மை மட்டும் அல்லது நமது தேவைகளை மட்டும் நாம் கண்காணிக்கும்படியாக வைக்கும் ஒரு குறுகிய மனப்பான்மையின் வாழ்க்கையாகும்.

## மற்றவர்களைப் பற்றியும் சிந்தியுங்கள்

அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக.

பிலிப்பியர் 2:4

சமீபத்தில், நாங்கள் பேச வேண்டிய ஒரு கூட்டம் ரத்து செய்யப்பட்டது. நான் அதிகமாக எதிர்பார்த்திருந்த ஒரு கூட்டமாக அது இருந்தபடியால், நான் சற்று ஏமாற்றம் அடைந்தேன். வேறொரு தடவை அதைப் போலுள்ள ஓர் சூழ்நிலை ஏற்பட்ட போது, நான் எனக்குள்ளேயே சுயபரிதாபத்துடனும், எதிர் தரப்பினரைக் குறைகூறுவதிலும், எதிர்மாறான எண்ணங்களை யோசித்துச் செயல்படுவதிலும் ஈடுபட்டேன். ஆனால், இப்பொழுதோ, இப்படிப்பட்ட சூழ்நிலையில் மௌனமாக இருக்கவும், தவறான காரியத்தைச் சொல்வதைக் காட்டிலும், பேசாமல் இருப்பதையும் கற்றுக் கொண்டேன்.

நான் அமைதியாக உட்கார்ந்திருக்கிற வேளையில் மற்றவர்கள் ஈடுபாடு கொண்டுள்ள சூழ்நிலையைத் தேவன் எனக்குக் காண்பிக்க ஆரம்பித்தார். அக்கூட்டத்தை நடத்த சரியான இடம் கிடைக்காமல் அவர்கள் மிகவும் ஏமாற்றத்துடன் இருந்ததை எனக்குத் தெளிவுபடுத்தினார். அந்தக் கூட்டத்திற்காக அவர்கள் அதிகமாக எதிர்பார்த்தும் அவர்களாலே அதை நடத்த முடியாத ஓர் நிலை அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது.

நமது நிலையை அல்ல ஆனால் மற்றவர்களுடைய நிலையை நாம் காண்கிற வேளையில், சுயபரிதாபத்தை விட்டு நாம் எளிதாக வெளியே வரலாம். மற்றவர்களைப் பற்றி அல்லாமல், நம்மைப் பற்றியே நாம் எண்ணும்போது சுயபரிதாபம் அதிகமாக ஊக்குவிக்கப்படுகிறது.

பரிதாபத்தைச் சம்பாதிக்க, சில வேளைகளில் நாம் நம்மையே ஒன்றுமில்லாத நிலைக்குக் கொண்டுவருகிறோம். ஆம், சுயபரிதாபமானது, நம்மை வனாந்தர மனப்பான்மையிலே நிறுத்தி, அதை விட்டு வெளிவராதபடி பார்த்துக் கொள்ளும் சாத்தானுடையப் பிரதானமானக் கண்ணியாகவும், ஆயுதமாகவும் அமைந்துவிடுகிறது. நாம் கவனமுள்ளவர்களாக இல்லாவிட்டால், இச்சுயபரிதாபத்திற்கே அடிமைகளாக்கி விடுவோம்.

ஓர் அடிமைத்தனமானது, உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டு ஒரு பழக்கமாக மாறி, அதை விட்டொழிக்க முடியாத ஒரு நடத்தையாகி விடுகிறது?

உங்கள் வாழ்வில் சுயபரிதாபத்திற்கு எவ்வளவு நேரம் செலவிடுகிறீர்கள்? ஏமாற்றங்களை எப்படி நீங்கள் சந்திக்கிறீர்கள்.

ஒரு கிறிஸ்தவன் ஏமாற்றத்தை அனுபவிக்கும்போது, அதிலிருந்து மீள்வதற்கான ஒரு அபூர்வ சிலாக்கியத்தைப் பெறுகிறான். தேவனோடு எப்பொழுதும் ஓர் புது சகாப்தத்தைத் துவக்க வழி உண்டு. சுயபரிதாபமோ, நம்மை கடந்த காலக் கண்ணிக்குள்ளேயே நிறுத்திவிடுகிறது.

## கடந்து போகவிடுங்கள்<br>தேவனுக்கு இடம் கொடுங்கள்!

முந்தினவைகளை நினைக்க வேண்டாம். பூர்வமானவைகளைச் சிந்திக்க வேண்டாம்.

இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன். இப்பொழுதே அது தோன்றும். நீங்கள் அதை அறியீர்களா? நான் வனாந்தரத்திலே வழியையும் அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன்.

எசாயா 43:18-19

எனக்காகவே அதிகப் பரிதாபப்பட்டு, எனது வாழ்வின் பெரும்பகுதியை நான் வீணாகக் கழித்துவிட்டேன். எந்தவிதமான ஏமாற்றத்தையும் நான் சந்தித்தவுடன் வருகிற பின்விளைவு சுயபரிதாபம் தான். சாத்தான் உடனடியாக தவறான சிந்தனைகளால் எனது சிந்தையை நிரப்புவான். "எதை யோசிக்க வேண்டும் என்று சற்றேனும் சிந்திக்காமல், என் சிந்தையில் தோன்றுவதை அப்படியே யோசித்துக் கொண்டிருப்பேன்." எந்த அளவிற்கு நான் யோசிக்கிறேனோ, அந்த அளவிற்கு எனக்காகவே நான் பரிதாபப்படுவேன்.

எங்கள் திருமண வாழ்க்கையின் ஆரம்ப சம்பவங்களை அவ்வப்போது நான் குறிப்பிடுவது உண்டு. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மதிய வேளையில், எனது கணவர் தொலைக்காட்சியில் கால்பந்தாட்டத்தைக் கண்டு களிப்பது வழக்கம். அது கால்பந்தாட்டக் காலமாய் இல்லாவிட்டால் வேறு "பந்தாட்ட காலமாக" அது இருக்கும். எனது கணவர் எல்லா விளையாட்டையும் மகிழ்ச்சியாய் அனுபவிப்பார். நானோ எந்த விளையாட்டையும் கண்டுகளிப்பதில்லை. சில சமயங்களில், நான் அருகில் இருப்பதையும் மறந்துவிட்டு, ஆட்டத்தை மிக ஆனந்தமாய் கண்டு அவர் ரசிப்பது உண்டு.

ஒரு நாளில், நான் அவருக்கு நேர் முன்பாக நின்று, அவரை நோக்கி, "எனக்கு உடல் சரியில்லை. நான் செத்துவிடுவேன் என்ற எண்ணம் என் இருதயத்திலே வருகிறது" என்றேன்.

கண்களை, தொலைக்காட்சிப் பெட்டியைவிட்டு அகற்றாமலே, "அது மிகவும் நல்ல ஒரு காரியம்" என்றார், என் கணவர்.

பல ஞாயிற்றுக்கிழமை மதிய நேரங்களை நான் கோபத்திலும், சுயபரிதாபத்திலேயுமே செலவிட்டேன். எனது கணவர் மீது எனக்குக் கோபம் வரும்போதெல்லாம் நான் எப்பொழுதும் எனது வீட்டைச் சுத்தம் செய்வது வழக்கம். நான் மிகவும் பரிதபிக்கப்படும் நிலையிலே இருக்கும்போது, அவர் மகிழ்ச்சியாய் தொலைக்காட்சி நிகழ்ச்சியை பார்த்துக் கொண்டிருப்பது தவறு என்பதை அவருக்கு சுட்டிக் காட்ட முயற்சி செய்தேன் என்பதை இப்போது நான் உணர்கிறேன். எனது

கடினமான சுபாவத்தை வெளிப்படுத்தும்படியாக அவர் இருக்கும் அறையைச் சுற்றி வேகமாக நடப்பேன். கதவு ஜன்னல்களை ஓங்கி உடைப்பேன். கையிலே துடப்பத்தை எடுத்துக் கொண்டு, கோபத்துடன் இங்கும் அங்கும் நடமாடுவேன்.

எப்படியாவது அவரது கவனத்தை நான் ஈர்த்துவிட முயற்சித்தாலும், அவர் அதை சற்றேனும் கண்டு கொள்வதே இல்லை. உடனே நான் வீட்டின் பின்புறம் சென்று, குளியலரை தரையிலே உட்கார்ந்து கதறி அழுவது வழக்கம். எந்த அளவிற்கு அதிகமாக நான் அழுதேனோ, அந்த அளவிற்கு அதிகமாக நான் எனக்காகவே பரிதாபப்பட்டேன். ஒரு பெண்மணி ஏன் குளியலறைக்குச் சென்று அழுகிறாள் என்ற வெளிப்படுத்தலை தேவன் எனக்குத் தந்தருளினார். காரணம், குளியறையிலே இருக்கும் பெரிய கண்ணாடிமுன் அழுது அழுது, எனது முகத்தை திரும்பத் திரும்பப் பார்ப்பதன் மூலம், எனக்காகவே இன்னும் அதிகமாக நான் பரிதாபப்பட முடியும்.

எனது நிலைமையை அவ்வப்போது முகக் கண்ணாடியிலே நான் பார்க்கிற வேளையில், மோசமானத் தோற்றத்தோடு நான் காணப்படுகிறபடியால், திரும்ப எனக்காகவே நான் அழுவது உண்டு. கடைசியாக, எனது கணவர் இருக்கும் குடும்ப அறைக்குள்ளே மெதுவாக நடந்து செல்லுவேன். பரிதாபத் தோற்றத்தைக் காண்பிப்பேன். அவர் என்னை அப்படியே பார்த்துவிட்டு, நான் சமையலறைக்குள் செல்வதாக நினைத்து, குளிர்ந்த தேனீர் வேண்டுமென்று என்னிடம் கேட்பார்.

நான் எதிர்பார்த்தபடி நடந்ததில்லை! நான் மிகவும் களைத்துப் போய் எனக்குள்ளே உருவாகிய அநாவசியமான உணர்வுகளினாலே சரீரப்பிரகாரமாக வியாதியுள்ளவளாகக் காணப்பட்டேன்.

தேவன் தமது சொந்த புயத்தினாலே உங்களை விடுவிப்பாரேயல்லாமல், உங்கள் கரத்தினாலே உங்களை ஒருபோதும் விடுவிக்கவே மாட்டார் ஜனங்களை, தேவன் தான் மாற்ற முடியும்! எனது கணவர் இப்படிப்பட்ட விளையாட்டுகளை தொலைக்காட்சியில் அதிகமாகப் பார்க்கிற பழக்கத்தைத் தேவன் ஒருவர் மட்டுமே மாற்ற முடியும்.

தேவனை நம்பி எனது சுயபரிதாபத்தை விட்டு நான் வெளியே வர ஆரம்பித்தபோது, எனது கணவர் விளையாட்டு நிகழ்ச்சிகளை தொலைக்காட்சியிலே அளவோடு காண ஆரம்பித்தார்.

இன்னும் அவர் அதில் மகிழுகிறார். ஆனால், அது என்னை இப்போது சற்றேனும் அசைக்கிறதில்லை. நான் மகிழ்கிற காரியங்களைச் செய்வதில் நேரத்தைச் செலவிடுகிறேன். வேறு எதையாகிலும் அவசியமாக நான் செய்ய விரும்பினால், மிகவும் அமைதியாகவும் சாந்தத்துடனும் கேட்கிறேன். அநேக நேரங்களில் தனது சொந்தத் திட்டத்தை மாற்றி எனக்கு உதவ முன்வருகிறார். ஆயினும், சில வேளைகளில் நான் எனது வழிக்கு வருவதில்லை. அவ்வேளையிலே எனது உணர்வுகள் எனக்குள்ளே பொங்கி எழும்போது “ஆண்டவரே, இந்தச் சோதனையை நான் ஜெயிக்க எனக்கு உதவி செய்யும். இன்னொரு தடவை இந்த மலையைச் சுற்ற நான் விரும்பவில்லை!” என்று ஜெபிப்பேன்.

# அதிகாரம்
# 23

## *“நான் தகுதியற்ற நிலையில் இருப்பதால் தேவனுடைய ஆசீர்வாதங்கள் எனக்குத் தேவையில்லை”*

வனாந்தர மனப்பான்மை #8

# *“நான் தகுதியற்ற நிலையில் இருப்பதால் தேவனுடைய ஆசீர்வாதங்கள் எனக்குத் தேவையில்லை”*

**அதிகாரம் 23**

## வனாந்தர மனப்பான்மை #8

> *கர்த்தர் யோசுவாவை நோக்கி, இன்று எகிப்தின் நிந்தையை உங்கள் மேல் இராதபடிக்குப் புரட்டிப் போட்டேன் என்றார்.*
>
> யோசுவா 5:9

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள்ளே போகும்படி யோசுவா இஸ்ரவேலரை யோர்தானைக் கடக்கப்பண்ணின பின்பு, தங்கள் முதல் பட்டணமாகிய எரிகோவை அவர்கள் ஜெயிப்பதற்கு முன்பாக, தேவன் ஒன்றை செய்ய வேண்டியதாயிற்று.

நாற்பது வருட வனாந்தரப் பயணத்தில், செய்யாமல் விட்டுவிடப்பட்டிருந்த விருத்தசேதனக் கிரியையைச் செய்ய வேண்டுமென்று இஸ்ரவேலிலுள்ள அனைத்து ஆண்மக்களுக்கும் தேவன் கட்டளையிட்டார். இதைச் செய்தபிறகு, எகிப்தின் நிந்தையை உங்களைவிட்டுப் “புரட்டிப் போட்டேன்” என்று யோசுவாவிடம் கர்த்தர் சொன்னார்.

அதற்குப் பின்னர் 6ம் அதிகாரத்தில், எரிகோவை ஜெயிக்க தேவன் தமது பிள்ளைகளுக்கு எவ்வாறு உதவி செய்தார் என நாம் வாசிக்கிறோம். முதலாவது, என் நிந்தை அகற்றப்பட வேண்டியதாயிற்று? அந்த நிந்தை என்ன?

### நிந்தை

*நிந்தை* என்ற சொல்லின் “அர்த்தம் அவமதிப்பு அல்லது அவதூறு” என்பதாகும். இஸ்ரவேலரை விட்டு எகிப்தின் நிந்தை இராதபடி “புரட்டிப்” போட்டேன் என்று கர்த்தர் சொல்லும் போது, அங்கே ஒன்றைக் குறிப்பிடுகிறார். எகிப்து உலகத்தைக் காண்பிக்கிறது. ஒரு சில ஆண்டுகள் உலகத்தில் இருந்து விட்டு, உலகத்தாராய் மாறிவிட்ட சூழ்நிலையில் அதன் நிந்தை நம்மைவிட்டு மாற வேண்டியதாய் உள்ளது.

நான் செய்த கிரியையினிமித்தமாயும் எனக்கு செய்யப்பட்ட கிரியையினிமித்தமாயும் அவமதிப்பின் சுபாவம் எனக்குள் வந்தது. எனக்கு நடந்த காரியத்தினால் நான் என்னையே குற்றம் சாட்டிக் கொண்டேன். சிறுபிராயத்திலே அவைகள் அதிகமாக நடந்திருந்தாலும், அவைகளை நிறுத்த என்னால் ஒன்றுமே செய்ய முடியவில்லை.

கிருபையானது, நம்மிடத்திலே வருகிற தேவனுடைய இலவசமான ஈவாகிய வல்லமை என நாம் கூறியிருக்கிறோம். நம்மாலே செய்ய முடியாததை எளிதாகச் செய்துவிட அது நமக்கு உதவி செய்கிறது. தேவன் நமக்குக் கிரிபையைத் தர விரும்புகிறார். ஆனால் சாத்தானோ, *அவமதிப்பையும் நிந்தையையுமே* நமக்குத் தருகிறான்.

அவமதிப்பு அல்லது நிந்தை, நான் தேவனுடைய அன்பையும் உதவியையும் பெறத் தகுதியற்றவன் என்று சொல்லுகிறது. அவதூறு எனது உள்ளான மனுஷியை நச்சேற்றிவிட்டது. எனக்குச் செய்யப்பட்டதற்காக நான் வெட்கப்படுகிறேன். எனது உள்ளத்தின் ஆழத்திலே நான் என்னையே விரும்புகிறதில்லை.

தேவன் நிந்தையைப் புரட்டிப் போடுகிறார் என்றால், தேவனிடத்திலிருந்து நாம் ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்ள வேண்டிய நமது பாவ வாழ்க்கையின் விடுதலையை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே அர்த்தமாகும்.

தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுவதற்கு எவ்வளவேனும் தகுதியற்றவர்கள் என்று நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். அவைகளுக்கு நாம் ஒருபோதும் தகுதியாகவும் முடியாது. தாழ்மையாக அவைகளை நாம் ஏற்றுக்கொண்டு, அவர் எவ்வளவு மகத்துவமானவராயிருக்கிறார் என்றும், எவ்வளவு அன்புள்ளவராய் இருக்கிறார் என்றும் அவரை மெச்சிக் கொள்ளத்தான் முடியும்.

சுய பகை, சுய புறக்கணிப்பு, தேவனுடைய மன்னிப்பை வேண்டாமென்று தள்ளுவது, இயேசுவின் இரத்தத்தால் வரும் நீதியை வெறுப்பது இவையனைத்தும் உங்களை வனாந்தரத்திலேயே அலையப் பண்ணும். இயேசுவின் மூலமாய் தேவனுடைய முன்னிலையில் உறுதியாக நிற்பதற்கு உங்கள் மனம் புதிதாக்கப்பட வேண்டுமேயொழிய, உங்கள் கிரியைகளினால் நீங்கள் தேவன் முன்பு நிற்க முடியாது.

நமது வாழ்வில் காணப்படுகிற பிரச்சனைகளில் 85% நாம் நமது வாழ்வில் நம்மைக் குறித்து எண்ணுகிற எண்ணங்களின் மூலமாகவே உருவாகின்றன என, எனது ஊழியத்தின் அநேக ஆண்டுகளுக்குப் பின்னர நான் உணர்த்தப்பட்டேன். ஜெபத்திலே நடக்கிற ஒவ்வொருவனும், நீதியிலே நடக்கிறான்.

தேவனுடைய ஆசீர்வாதங்களை நான் பெற்றுக்கொள்ளத் தகுதியற்றவள் என நான் அறிந்திருந்தாலும், நான் கிறிஸ்துவுடனே உடன் சுதந்தரவாளியாய் இருக்கிறபடியால், எப்படியும் அதைப் பெற்றுக் கொள்ளுகிறேன். (ரோமர் 8:17) அவர் அதை எனக்காகச் சம்பாதித்திருக்கிறார், நானோ அதை அவரிலே வைக்கும் என் விசுவாசத்தினாலே பெற்றுக் கொள்ளுகிறேன்.

## சுதந்தரவாளியா அல்லது வேலைக்காரனா?

> ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய், நீ புத்திரனேயானால், கிறிஸ்து மூலமாய்த் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்.
>
> கலாத்தியர் 4:7

நீ ஒரு புத்திரனா? அடிமையா? சுதந்தரவாளியா? அல்லது வேலைக்காரனா? ஒரு சொத்தானது ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு ஒரு உயில் மூலமாக மாற்றப்படும் போது, அவனுக்கு அதைப் பெறக் கூடியத் தகுதி இல்லாவிடினும் அந்த உயில் மூலமாக அந்தச் சொத்துக்கு அவன் சுதந்தரவாளியாகிறான். ஒரு கொத்தடிமையோ அல்லது வேதாகம அடிப்படையில் சட்டத்தைப் பின்பற்றுவதில் களைத்துப் போனவனாக இருக்கிறான். பாரம் நிறைந்தப் பிரயாசமும், பிரச்சனையுமே இதற்கான காரணங்களாகும்.

பல ஆண்டுகளாக நான் ஒரு பணிவிடைக்காரியாக வனாந்தரத்தில் அலைந்து கொண்டிருந்தேன். தேவன் தமது கிருபையினாலே இலவசமாக எனக்குத் தர விரும்புவதைப் பெற்றுக் கொள்ள என்னைத் தகுதிப்படுத்த முயற்சித்துக் கொண்டிருந்தேன். ஆனால், தவறான மனநிலையோடு நான் காணப்பட்டேன்.

எல்லாவற்றையும் சம்பாதித்துக் கொண்டு, பின்னர் தகுதியாக்கிக் கொள்ள வேண்டும் என்று முதலாவது நான் சிந்தித்தேன். "யாரும் எதையும் கைமாறு கருதாமல் உங்களுக்குச் செய்வதில்லை என்ற இந்தக் கொள்கைதான் பல ஆண்டுகளாக எனக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டது." நான் வளரும் போது மீண்டும் மீண்டும் இதே வார்த்தையைத் தான் கேட்டுக் கொண்டிருந்தேன். எனக்காக யாராவது எதையாகிலும் செய்ய முற்பட்டால், அந்த நபர் பொய் சொல்லி, என்னைக் கொண்டு தனது காரியத்தைச் சாதிக்க விரும்புகிறார் என்றே எனக்குச் சொல்லப்பட்டது.

உலகத்தோடுள்ள நமது அனுபவம், நாம் பெற்றுக் கொள்ளுகின்ற அனைத்தையும் நாம் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நமக்குச் சொல்லுகிறது. நமக்கு நண்பர்கள் வேண்டுமானால் நாம் அவர்களை எப்பொழுதும் சந்தோஷத்தோடு வைக்க வேண்டும். இல்லாவிடில், அவர்கள் நம்மைத் தள்ளிவிடுவார்கள் என்றே எனக்குக் கூறினார்கள். வேலையிலே ஒரு பதவி உயர்வு நமக்குத் தேவையானால், தகுந்த ஆட்களை நாம் அறிந்து, அவர்களை அணுகி அவர்கள் எதிர்பார்க்கிற நிலையில் அவர்களை நடத்தினால் மட்டுமே ஒருநாளிலே முன்னேறுவதற்கான வழியை நாம் பெறுவோம் என்று கூறினார்கள். உலகத்தோடு நமது வாழ்வு முடிகிற நிலையிலே, உங்கள் மனக்கண் முன்பு நமது நிந்தையானது நம்மேலே அதிகப் பாரத்தோடு அழுத்தப்படுவதால், திட்டவட்டமாய் அந்த நிந்தையை நம்மைவிட்டு புரட்டிப் போட வேண்டியதாயுள்ளது.

## உங்களை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?

அங்கே இராட்சதப் பிறவியான ஏனாக்கின் குமாரராகிய இராட்சதரையும் கண்டோம். நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுக்கிளிகளைப் போல் இருந்தோம். அவர்கள் பார்வைக்கும் அப்படியே இருந்தோம்.

எண்ணாகமம் 13:33

இஸ்ரவேலர் தங்கள் மேலேயே நிந்தையை உடையவர்களாயிருந்தார்கள். தங்களை குறித்த எதிர்மாறான

அபிப்பிராயத்தையே அவர்கள் கொண்டிருந்தார்கள் என இந்த வசனம் உறுதிப்படுத்துகிறது. தேசத்தை வேவுபார்க்கச் சென்ற பன்னிரெண்டு பேர்களில் பத்து பேர் இஸ்ரவேலர் அனைவரும் யோர்தானைக் கடப்பதற்கு முன்னரே, அவர்களிடம் திரும்பிவந்து, அத்தேசத்துக் குடிமக்கள் இராட்சதரைப் போலவும், தாங்கள் அவர்கள் கண்களுக்கு முன்பாக வெட்டுக்கிளிகளைப் போலவும் இருக்கிறோம் என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே, இவர்கள் தங்கள் கண்களுக்கு முன்பாக அப்படியே இருந்தார்கள்.

இந்த ஜனங்கள் தங்களைக் குறித்து எவ்வாறு எண்ணிக் கொண்டனர் என்று இது தெளிவாக நமக்கு விளக்குகிறது.

நீங்கள் இடம் கொடுத்தால், சாத்தான் உங்கள் சிந்தையை எதிர்மாறான எண்ணங்களால் நிரப்பிவிடுவான் என்று அவனைக் குறித்து மிகுந்த ஜாக்கிரதை உள்ளவர்களாய் இருங்கள். உங்களைக் குறித்தும், உங்களைக் குறித்து மற்றவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதைக் குறித்தும் எதிர்மாறான சிந்தனைகளை சாத்தான் உங்கள் மனதிலே அரண்களாகக் கட்டி எழுப்புவான். அவன் எப்பொழுதும் நீங்கள் சோர்ந்து போகும்படி சில சூழ்நிலைகளைக் கொண்டுவந்து, நீங்கள் முன்னேறும் வேளையிலே முன்னேறாதபடி, உங்கள் மனதை வேதனைப்படுத்தும் நிகழ்ச்சிகளை கொண்டுவருவான்.

தோல்வி, நிந்தை என்பதைக் குறித்த பயம் அநேகரை வனாந்தரத்திலே நிறுத்திவிடுகிறது. பல வருடங்களாக எகிப்திலே அடிமைகளாக இருந்தாலும் தரக்குறைவாக நடத்தப்பட்டதாலும் உண்டான மனநிலை, இஸ்ரவேலரை நிந்தைக்குள்ளாக்கிற்று. மேசேயோடே கானான் பயணம் புறப்பட்ட சந்ததியில் ஒருவன் கூட கானானுக்குள் பிரவேசிக்கிவில்லை என்று அறியும்போது, மிகவும் ஆச்சரியமாய் இருக்கிறது என்றாலும் அவர்களது நிந்தையை அவர்களைவிட்டுப் புரட்டிப் போடுவேன் என்று தேவன் கூறுகிறார்.

அவர்களில் அநேகர் தங்கள் பெற்றோர் எகிப்து தேசத்தை விட்டபின்பு, வனாந்தரத்திலே பிறந்தார்கள். எகிப்திலே வாழாதவர்களாயிருந்த இவர்கள் எப்படி எகிப்தின் நிந்தையை தங்கள் மேல் கொண்டிருந்திருக்க முடியும்? உங்கள் பெற்றோர் மேலே இருந்தக் காரியங்கள் உங்கள் மேல்

கடந்து வந்துவிட்டன. நோக்கங்கள், சிந்தனைகள், நடக்கையின் மாதிரிகள் இவைகளை நாம் சுதந்தரிக்க முடியும். உங்கள் பெற்றோருக்கு இருந்த மனோநிலைமை உங்கள் மனநிலைமையாக இப்போது மாறிவிட்டது. ஒரு குறிப்பிட்ட காரியத்தைக் குறித்து நீங்கள் எவ்வாறு சிந்திக்கிறீர்கள் என்ற மனநிலை உங்கள் முன்னோர்களிடமிருந்து உங்களுக்கு வந்திருக்கும். ஆனால் ஏன் அவ்வாறு சிந்திக்கிறீர்கள் என்பதை நீங்கள் அறியாதவர்களாய் இருப்பீர்கள்.

விரத்தியுடன் "நான் தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள எவ்வளவேனும் தகுதியற்றவன்" என்று எண்ணுகிறவனுடைய மனநிலைமை அவனது பிள்ளைகளிடத்திலும் அப்படியே காணப்படும்.

உங்களைச் சம்மந்தப்படுத்துகிற எண்ணங்கள் உங்கள் சிந்தையில் வரும் போது நீங்கள் கவனமுள்ளவர்களாயிருக்க வேண்டும். நீங்கள் பெற்றுக் கொள்ள விரும்பினால் உங்களுடைய தோல்விகளிலே தமது இரக்கத்தை உங்கள் விருப்பத்திற்கேற்பக் கொடுக்க தேவன் வாஞ்சையுள்ளவராயிருக்கிறார். ஒருபோதும் எந்த ஒரு பிழையையும் தவறையும் செய்யாத ஒருவனுக்கு தேவன் பலனளிக்கிறதில்லை. தம்மேல் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் வைக்கிறவனுக்கே அவர் பலனளிக்கிறார்.

## தேவனிலுள்ள உங்கள் விசுவாசம் அவரைப் பிரியப்படுத்தும்

விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்.

எபிரெயர் 11:6

விசுவாசமில்லாமல் நீங்கள் தேவனைப் பிரியப்படுத்துவது கூடாத காரியம். ஆகவே எவ்வளவு "நல்ல காரியங்களை" நீங்கள் செய்திருந்தாலும் அவரது தயவைப் பெறும்படி அவைகள் செய்யப்பட்டிருந்தால், அது தேவனைப் பிரியப்படுத்த மாட்டாது.

தேவனுக்கு நாம் எதைச் செய்தாலும் ஏதாவது ஒன்றை அவரிடத்திலிருந்து நாம் பெறும்படியாக அல்ல. ஆனால் அவர் மீதுள்ள அன்பினாலேயே அதைச் செய்ய வேண்டும்.

தம்மைக் கருத்தாய் தேடுகிறவர்களுக்கு தேவன் பலனளிக்கிறவர் என்று இந்த வல்லமையுள்ள வசனம் நமக்குத் தெரியப்படுத்துகிறது. இதைக் கடைசியாய் நான் வாசித்தபோது மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன். கடந்த காலத்தில் அநேகத் தவறுகளை நான் செய்துள்ளேன் என்று நான் அறிந்திருக்கிறேன். ஆனால், என் முழு இருதயத்தோடும் அவரைக் கருத்தாய் நான் தேடினேன் என்று எனக்கு நன்றாய்த் தெரியும். நான் அதனால் கிடைக்கும் பலன்களுக்குத் தகுதியுள்ளவளானேன். தேவன் எனக்குக் கொடுக்க விரும்பும் எந்த ஆசீர்வாதத்தையும் நான் பெற்றுக் கொள்ளுவேன் என நீண்ட நாட்களுக்கு முன்பாகவே நான் புரிந்து கொண்டேன்.

இஸ்ரவேலரைக் கானான் தேசத்திற்குள் அழைத்துக் கொண்டுபோய், அவர்கள் நினைப்பதற்கும் மேலாக அவர்களை ஆசீர்வதிக்க தேவன் விரும்பியிருந்தார். ஆனால், முதலாவது அவர்களது நிந்தையை அவர்களைவிட்டுப் புரட்டிப் போட வேண்டியிருந்தது. அவமதிப்பு, குற்றம், கனவீனம் இவையனைத்தையும் அவர்கள் அழுத்திவைக்குமட்டுமாக தேவனிடத்திலிருந்து ஒன்றையும் அவர்களாலே பெற்றுக் கொள்ள முடியவில்லை.

## நிந்தைக்கு மேலாக

> தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும், குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே...
>
> எபேசியர் 1:4

இது ஒரு அற்புதமான வேதவசனம்! இதில், நாம் அவருடையவர்கள் என்றும், அவர் நமக்காக எதை ஆயத்தம் பண்ணியிருக்கிறாரோ, அதை நாம் பெற்றுக் கொள்ள வைத்திருக்கிறார் என்றும் தேவன் கூறுகிறார்.

பரிசுத்தமுள்ளவர்களாயும், குற்றமில்லாதவர்களாயும் நிந்தைக்கு மேலாக நாம் அவருடைய பார்வையில் விலையேறப் பெற்றவர்களாயும், நேசிக்கப்படுகிறவர்களாயும், விசேஷித்தவர்களுமாய் இருக்கும்படியாக விரும்புகிறார்.

பரிசுத்த வாழ்வை வாழ்வதற்கு நம்மால் இயன்றதை நாம் வழக்கமாய் செய்ய வேண்டும். ஆனால், நாம் தவறு செய்யும் போது, மன்னிக்கப்பட்டு அவராலே பரிசுத்தமாக்கப்படுகிறவர்களாய் இருக்கிறோம். இந்நிலையிலே, "அவருக்குள்ளாக" நமது நிந்தைக்கும் மேலாக மீண்டும் ஆசீர்வதிக்கப்படுகிறோம்.

## குற்றம் கண்டுபிடியாமல்

> உங்களில் ஒருவன் ஞானத்தில் குறையுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன். அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்.
>
> யாக்கோபு 1:5

நிந்தையில்லாமல் தேவனிடத்திலே நாம் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று இந்த வசனம் குறிப்பிடுகிறது.

யாக்கோபு இதற்கு முந்தைய வசனங்களில் பிரச்சனைகளோடு இருப்பவர்களிடம் பேசுகிறார். இப்பொழுது தங்கள் சூழ்நிலைகளில் அவர்களுக்கு ஞானம் வேண்டுமென்றால், தேவனிடத்தில் கேட்கும்படிக் கூறுகிறார். அவர் யாரையும் குற்றம் பிடித்துக் கடிந்து கொள்ளாதபடி அவர்களுக்கு உதவி செய்பவராக இருக்கிறார் என உறுதியளிக்கிறார்.

தேவனுடைய பெரிய கிரியையாகிய ஒத்தாசையின்றி, நீங்கள் ஒருபோதும் வனாந்தர வாழ்க்கையைத் தாண்டிச் செல்ல முடியாது. ஆனால், அவர் உதவி செய்ய முன்வரும் போது, உங்களைப் பற்றிய எதிர்மாறான நோக்கத்தோடே நீங்கள் காணப்படுவீர்களானால் அந்த நன்மையை நீங்கள் ஒருபோதும் பெற்றுக் கொள்ளவே முடியாது.

வெற்றிகரமானதும், வல்லமையானதும், சாத்தியக் கூரானதுமான வாழ்வை உடையவர்களாக நீங்கள் இருக்க விரும்புவீர்களானால் உங்களைக் குறித்து நீங்கள் எதிர்மாறாக இருக்கவே முடியாது. இன்னும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும் என்று எண்ணாதபடி, இது மட்டும் எவ்வளவு தொலை தூரம் வந்துள்ளீர்கள் என்பதை சிந்தித்துப் பாருங்கள். உங்கள் முன்னேற்றத்தைச் சிந்தித்துப் பார்த்து பிலிப்பியர் 1:5ஐ மனதில் கொள்ளுங்கள் உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்தி வருவாரென்று நம்புகிறேன்.

*உங்களைப் பற்றி முற்போக்கான சிந்தையைக் கொண்டிருங்கள், முற்போக்காக பேசுங்கள்!*

# அதிகாரம்
# 24

## *“எல்லாரும் என்னைக் காட்டிலும் சிறந்தவர்களாக இருக்கும் போது நான் ஏன் பொறாமையோடு இருக்கக்கூடாது?”*

வனாந்தர மனப்பான்மை #9

# *“எல்லாரும் என்னைக் காட்டிலும் சிறந்தவர்களாக இருக்கும் போது நான் ஏன் பொறாமையோடு இருக்கக்கூடாது?”*

## வனாந்தர மனப்பான்மை #9

**அதிகாரம்**
24

> *அவனைக் கண்டு, பேதுரு இயேசுவை நோக்கி, ஆண்டவரே, இவன் காரியம் என்ன என்றான்.*
>
> *அதற்கு இயேசு, நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால், உனக்கென்ன, நீ என்னைப் பின்பற்றிவா என்றார்!*
>
> யோவான் 21:21-22

யோவான் 21 ல் இயேசு, பேதுருவிடம் அவன் அவருக்கு ஊழியம் செய்து அவரை மகிமைப்படுத்தும் போது கடந்து செல்ல வேண்டிய கடினப்பாதைகளை விளக்குகிறார். இந்தக் காரியங்களை இயேசு பேதுருவிடம் கூறியவுடனே, பேதுரு திரும்பி, யோவானைப் பார்த்து, அவனைக் குறித்து, தேவனுடைய சித்தம் என்ன என்பதைக் கேட்டறிய முயற்சித்தான். தான் கடினப்பாதையின் வழியாய்ச் செல்ல வேண்டுமென்றால், யோவானுக்கும் அதே பாதை அவசியம் என பேதுரு எண்ணினான்.

இயேசு அதற்கு மறு உத்திரமாக, “உன் வேலையை நீ கவனி” என்று சொல்லாமலே சொன்னார்.

மற்றவர்களுடைய காரியத்தில் நாம் தலையிடும் போது, நாம் வனாந்தரத்திலேயே தொடர்ந்து காணப்படுவோம். பொறாமை, பகைமை, நம்மையும், நம்முடைய சூழ்நிலைகளையும் பிறரோடு ஒப்பிடுதல் ஆகிய அனைத்தும் நம்முடைய வனாந்தர மனப்பான்மையைக் காண்பிக்கிறது.

### பொறாமை, பகைமையைக் குறித்து ஜாக்கிரதையாயிருங்கள்

சொஸ்தமனம் உடலுக்கு ஜீவன். பொறாமையோ எலும்புருக்கி.

நீதிமொழிகள் 14:30

பகை ஒருவனுக்குள்ளே இருக்கும்போது அது அவனைக் கொடூரமாகவும், மிருகத்தன்மையோடும் நடக்க வைக்கிறது. யோசேப்பின் சகோதரர்களுடைய பகைமை, அவனை அவர்கள் அடிமையாக விற்கப்பண்ணிற்று. அவனுடைய தந்தை அவனை அதிகமாய் நேசித்தபடியால், அவர்கள் அவனை வெறுத்தார்கள்.

உங்களைக் காட்டிலும், அதிகமான தயவு, அன்பைப் பெறக் கூடிய ஒருவர் உங்கள் குடும்பத்தில் இருப்பாரானால், அந்தத் தனிப்பட்ட நபரை பகைக்கக் கூடாது. தேவனை நம்புங்கள்! அவர் செய்யக் கேட்பதைச் செய்யுங்கள். தயவுபெற தேவனை நம்புங்கள். யோசேப்பைப் போல் அபரிவிதமாக ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

*மற்றவர்களுடைய செழுமையைக் காணும் போது, இருதயத்திலே ஒரு விருப்பமற்ற உணர்வுக்குள் வருவது தான் பகைமை* என ஒரு ஆங்கில விளக்க அகராதி கூறுகிறது. பொறாமை என்ற சொல்லுக்கு “பகைமையின் உணர்வு, அல்லது கசப்பு” என்ற வார்த்தைகளை “வெப்ஸ்டர்” அகராதி விளக்கமாகத் தருகிறது. உங்களுக்குரியது மற்றவர்களிடத்திலே போய்விடுமோ என்ற பயம் அல்லது மற்றவன் அடையும் வெற்றியைப் பற்றிய ஒரு உள்ளான முரட்டுத்தனம் அல்லது “பகைமையின் உணர்விலிருந்து எழும்பிவரும் சுபாவம்” என இவ்வார்த்தைகளுக்கு நான் விளக்கம் தருகிறேன்.

## மற்றவனோடே ஒப்பிட்டுப் போட்டியிடாதே

அன்றியும் தங்களில் எவன் பெரியவனாயிருப்பான் என்று அவர்களுக்குள்ளே வாக்குவாதம் உண்டாயிற்று.

அவர் அவர்களை நோக்கி, புற ஜாதியாரின் ராஜாக்கள் அவர்களை ஆளுகிறார்கள். அவர்கள் மேல் அதிகாரம் செலுத்துகிறவர்களும் உபகாரிகள் என்னப்படுகிறார்கள்.

உங்களுக்குள்ளே அப்படியிருக்கக் கூடாது. உங்களில் பெரியவன் சிறியவனைப் போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப் போலவும் இருக்கக்கடவன்.

லூக்கா 22:24-26

எனது ஆரம்ப நாட்களிலே இந்தப் பொறாமை, பகைமை, ஒப்பிடுதல் இவைகளோடு ஏராளமானப் போராட்டங்கள் எனக்கு இருந்தன. இது பாதுகாப்பற்ற தன்மைக்கு ஓர் பொதுவான குணமாக இருக்கிறது. நம்முடைய தகுதியைக் குறித்து நாம் ஒரு ஒப்பற்ற நபர் என்று நம்மைப் பற்றிய மதிப்பை நாம் உணராதவர்களாக இருப்போமாகில், நம்மைக் காட்டிலும் வெற்றி வாழ்க்கை நடத்துகிற வேறொரு நபரைக் குறித்த பொறாமையும், பகைமையும், போட்டி மனப்பான்மையும் நமக்குள்ளே உருவாகி, நம்மைப் பாதுகாப்பற்ற நிலைக்குக் கொண்டு சென்றுவிடும்.

நான் ஒரு தனிப்பட்ட நபர் என்பதை அதாவது தேவன் என் வாழ்க்கைக்கென்று ஒரு இணையற்ற, தனிப்பட்ட திட்டத்தைக் கொண்டிருக்கிறார் என்பதை நான் கற்றுக்கொண்டது. உண்மையிலேயே தேவன் எனக்கு கொடுத்த விலையேறப்பெற்ற, விலைமதிக்கத்தக்க சுதந்தரங்களுள் ஒன்றாகும். நான் என்னையோ என் ஊழியத்தையோ யாரோடும் ஒப்பிட்டுக்கொள்ள தேவையில்லை என்பதில் உறுதியாக இருக்கிறேன்.

என்னைப் போலவே பல்வேறுபட்டப் பிரச்சனைகளில் இயேசுவின் சீஷர்கள் அன்று கவலைப்பட்டார்கள் என்பதை வாசிக்கும்போது நான் உற்சாகமடைகிறேன். எனக்கும் நம்பிக்கை உண்டு என்பதே அந்த உற்சாகம். லூக்கா 22 ல், தங்களில் எவன் பெரியவனாயிருப்பான் என்ற வாக்குவாதம் சீஷர்களுக்குள்ளே உருவாயிற்று. தன்னைச் சிறியவன் என்று தாழ்த்துகிறவனாகவும் ஒரு பணிவிடைக்காரனாக இருப்பவனுமே பரலோகத்தில் பெரியவனாய் இருப்பான் என்று இயேசு பதில் கொடுத்தார். உலகத்திற்கும் மாம்சத்திற்கும் உரிய வழிக்கு நேர்மாறான வழியே. தேவனுடைய ராஜ்யத்திற்கான வழி என்று நமது ஆண்டவராகிய இயேசு தமது சீஷர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்.

“முந்தினோர் அநேகர் பிந்தினோராய் இருப்பார்கள்” என்றும், “ஆசீர்வதிக்கப்பட்டவர்களோடு சேர்ந்து களிகூருங்கள்” என்றும், “உங்கள் சத்துருக்களுக்காக ஜெபியுங்கள்” என்றும், “உங்களைத் தரக்குறைவாய் நடத்துபவர்களை ஆசீர்வதியுங்கள்” என்றும் இயேசு சொன்னார் (மாற்கு 10:31, லூக்கா 15:6,9, மத்தேயு 5:44) உலகம் இதை மதியீனம் என்று சொல்லுகிறது. ஆனால், இயேசுவோ இதை மெய்யான வல்லமை என்று கூறுகிறார்.

## உலகப் போட்டியை விட்டு விலகுங்கள்

வீண் புகழ்ச்சியை விரும்பாமலும், ஒருவரையொருவர் கோபமூட்டாமலும், ஒருவர் மேல் ஒருவர் பொறாமை கொள்ளாமலும் இருக்கக் கடவோம்.

கலாத்தியர் 5:26

உலக வழக்கத்தின் படிப் பார்ப்போமானால், எப்போதும் பிறரை முந்திக் கொண்டு இருப்பதே நல்ல ஸ்தானமாகும். வழியிலே யாருக்கு வேதனையைக் கொடுக்க வேண்டியதிருந்தாலும், அதைப் பற்றிக் கவலைப்படாமல் அவர்களை முந்திக் கொண்டு, எப்படியாவது முதலிடத்தை அடைய வேண்டும் என்பதே உலகப் பிரகாரமான எண்ணமாகும். ஆனால், ஒருவரையொருவர் முந்திக் கொண்டு காரியங்களைச் செய்வது நமக்கு ஒருபோதும் உண்மையான சமாதானத்தைத் தர முடியாது என்று வேதம் சொல்லுகிறது. இதிலிருந்து நாம் முற்றிலும் விடுதலையடைய வேண்டும்.

உலக விளையாட்டுப் போட்டிகளிலும், இப்படிப்பட்ட நிலைமை வரும் போது அங்கு மனஸ்தாபங்களும், சமாதானக் கேடும் வருகிறதேயன்றி ஒரு மன நிம்மதி அங்கு வருகிறதேயில்லை. உலகப்பிரகாரமான விளையாட்டுக்களில் ஈடுபாடு கொள்பவர்கள் ஒருபோதும் தோற்றுப் போவதற்காக விளையாடுவது இல்லை. ஒவ்வொருவனும் தன்னால் இயன்றதையே செய்வான். ஆனால் தான் ஜெயித்தாலொழிய ஒருவன் அந்த விளையாட்டை மகிழ்ந்து அனுபவிக்கமாட்டான். அங்கேதான் பிரச்சனை இருக்கிறது. ஆழமாய் வேர் கொண்ட அந்தப் பிரச்சனை மற்றப் பிரச்சனைகளையும் உருவாக்கி விடுகிறது.

நாம் செய்யும் தொழிலில் நம்மால் இயன்ற அளவு சிறந்ததைச் செய்ய வேண்டும். தெரிந்து கொள்ளப்பட்ட நமது வேலையில், குறைவு இருக்குமானால் அதை நிவிர்த்தி செய்து முன்னேறிச் செல்வதில் எந்தவிதத் தவறும் இல்லை. ஆனால் ஒரு விசுவாசிக்கு, பதவி உயர்வு மனிதனிடத்திலிருந்து அல்ல, தேவனிடத்திலிருந்தே வருகிறது. முந்திக் கொண்டு செல்லும்படியாக நீங்களும் நானும் உலகப் பிரகாரமான விளையாட்டை விளையாட அவசியமில்லை. தேவனுடைய வழிகளில் நாம்

காரியங்களைச் செய்வோமானால், தேவன் நமக்கு அவருடைய தயவைப் பாராட்டுவதோடு, பிறரிடமிருந்தும் தயவு கிடைக்கச் செய்வார் (நீதிமொழிகள் 3:3-4).

பொறாமையும், பகைமையும் நரகத்திலிருந்து வருகிற அலைக்கழிப்பாகும். என்னைவிட வேறு ஒருவர் தாலந்துடையர்களாகவோ, அல்லது சிறந்தவர்களாகவோ இருப்பார்களானால், அவர்களைக் குறித்து பல ஆண்டுகளாக பொறாமையும், பகையும் உடையவளாக நான் இருந்தேன். ஊழியத்திலே இரகசியமாக மற்றவர்களோடு போட்டி மனப்பான்மையுடன் வாழ்ந்தேன். எனது ஊழியம் வளர வேண்டும். எனது ஊழியம் பெரிய அளவிலே, மற்றவர்களைக் காட்டிலும் இருக்க வேண்டும் என்பது தான் எனது போட்டி மனப்பான்மையாக இருந்தது. இன்னொருவருடைய ஊழியம் வேறு எந்த நிலைமையிலாவது எனது ஊழியத்தை விடச் சிறப்பாக நடக்குமானால், அந்த நபரைக் குறித்த தேவனுடைய சித்தம் அதுவாக இருக்கிறபடியால், நான் சந்தோஷப்பட விரும்பினேன். ஆனாலும், ஏதோ ஒன்று எனது ஆத்துமாவிலே அதற்கு இடம் அளிக்கவில்லை.

கிறிஸ்துவுக்குள் என்னை இன்னார் என்று அறிந்து கொண்ட நிலையில் வளரும் போதோ, மற்றவர்களோடு என்னை ஒப்பிட்டுப்பாராத நிலையில் வாழும் போதோ, கிறிஸ்துவுக்குள்ளான விடுதலையை நான் பெற்றுக் கொண்டேன். எந்த அளவிற்கு நான் தேவனை நம்பினேனோ, அந்த அளவிற்கு அதிகமாக நான் விடுதலையைப் பெற்று அனுபவித்தேன். எனது பரலோகப் பிதா என்னை நேசிப்பதையும் எனக்காகச் சிறந்ததைச் செய்வார் என்ற நம்பிக்கையையும் நான் பெற்றுக் கொண்டேன்.

உங்களுக்காகவும், எனக்காகவும் தேவன் செய்யும் செயல் இன்னொருவருக்கு செய்வதைப் போல் இல்லாமல் இருக்கலாம். ஆனால், அவர் பேதுருவைப் பார்த்து, "வேறொருவனைக் கொண்டு செய்ய நான் தெரிந்து கொண்டதைப் பற்றி நீ கவலைப்படாமல், என்னைப் பின்பற்றிவா!" என்று சொன்ன வார்த்தைகளை மனதில் கொள்ளுவோமாக.

நீண்ட நாட்களாக நான் தேவனிடத்தில் விசுவாசித்து, அவரிடம் எதிர்பார்த்த ஒரு வெகுமதியை தேவன் எனது சிநேகிதிக்குக் கொடுத்தார். என்னுடைய பார்வையில் அவள் என்னுடைய "ஆவிக்குரிய" நிலைக்கு சமமானவளாகத் தோன்றாததால் அவளைக் குறித்து நான் பொறாமை கொண்டேன். அவள் என்னுடைய வீட்டிற்கு வந்து, தான் பெற்ற வெகுமதியைப் பற்றிக் கூறியபோது பகைமையுணர்ச்சி கொண்டேன். அவளுக்கு முன்பாக நான் சந்தோஷமானவளாக இருப்பதைப் போல நடித்தாலும் எனது இருதயத்திலோ நான் அப்படியாக இல்லை.

அவள் என்னைவிட்டுச் சென்றபோது, என் இருதயத்திற்குள் இருக்கின்றவை என்று நான் ஒருபோதும் எண்ணியிராத எண்ணங்கள் என்னைப் புரட்டி எடுத்தன. அவள் தேவனுடைய ஆசீர்வாதத்திற்குத் தகுதியற்றவள் என்று நான் எண்ணியபடியால், தேவன் அவளை ஆசீர்வதிப்பதை நான் எதிர்த்தேன். அவள் தன்னுடைய சிநேகிதிகளோடு ஓடி, விளையாடிப் பொழுது போக்குகிற வேளையில், நான் உபவாசம் பண்ணி, ஜெபித்துக் கொண்டிருந்தேன். நான் இந்நிலையிலே, ஒரு மனிதாபிமான "பரிசேயனைப்" போல் இருந்தேன். அதை நானே அறியவில்லை.

நம்முடைய தேவைகளை தேவன் அறிந்திருக்கிறபடியால், அவைகளை நாம் நம்முடைய விருப்பத்திற்குத் தகுந்தாற்போல் தேர்ந்தெடுக்காதபடி, அவைகளை அவர் தன்னுடைய பார்வையில் ஒழுங்கு செய்கிறார். நான் எதற்காக விசுவாசித்து நம்பினேனோ, அதைக் காட்டிலும் அதிகமாக எனது மோசமான நோக்கங்களை விட்டு, நான் வெளியேற வேண்டியதாயிற்று. நாம் நம்மையே காணக்கூடிய அளவிலே, தேவன் நமக்காக சூழ்நிலைகளை ஒழுங்கு செய்வது மிக மிக அவசியமாயிருக்கிறது. இல்லையேல் நாம் ஒருபோதும் விடுதலையை அனுபவிக்கவே முடியாது.

நமது ஆத்துமாவிலே சத்துரு எத்தனை காலம் ஒளிந்து கொண்டிருக்கிறானோ, அத்தனை காலம் அவன் நம்மேல் ஆளுகையை உடையவனாக இருப்பான். ஆனால் தேவன் அவனை வெளிப்படுத்தும்போதோ, நாம் தேவனுடைய கரத்தில் ஒப்புக் கொடுத்து, அவர் செய்ய விரும்புவதை துரிதமாய் செய்யும்படி

அனுமதிப்போமானால், நாம் நமது விடுதலையைப் பெற்றுக் கொள்வோம்.

தொலைக்காட்சி, வானொலி, புத்தகங்கள், கருத்தரங்குகள், மூலமாய் ஊழியத்தை பெரிய அளவிலே நான் செய்ய வேண்டும் என்று தேவன் ஏற்கனவே எனது வாழ்க்கையைக் குறித்துத் திட்டமிட்டுவிட்டார். அதன் மூலம் லட்சகணக்கான மக்கள் தொடப்பட வேண்டும் என்பது அவரது விருப்பம். ஆனால், அவருக்குள் நான் வளர வேண்டிய அளவிற்கு வளராத நிலை மட்டும், இவ்வூழியத்தின் நிறைவுக்குள்ளே அவர் என்னைக் கொண்டுவரமாட்டார்.

## புதிய மனப்பான்மையைப் பெற்றுக்கொள்ளுங்கள்!

> பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்.
>
> 3 யோவான் 2

இவ்வசனத்தை நன்றாய்க் கவனியுங்கள். *நமது விருப்பத்திற்கு மேலாக தேவன் நம்மை ஆசீர்வதிக்க விரும்புகிறார்.* ஆனால் நமது எல்லைக்கு மீறி ஆசீர்வாதம் வரும்போது அதை நாம் கையாள முடியாத சூழ்நிலை வந்து தேவ நாமம் மகிமைப் படாத சூழ்நிலை உருவாகாதபடி நம்மை அவர் ஆசீர்வதிப்பதில் கவனமாக இருக்கிறார்.

பொறாமை, பகைமை, ஒருவரோடொருவர் ஒப்பிட்டுப்பார்த்தல் என்பது சிறுபிள்ளைத் தனமாகும். அது முற்றிலும் மாம்சீகமானது. ஆவிக்குரியது அல்ல. ஆனால், வனாந்தர வாழ்க்கைக்கு அது ஓர் பிரதானமானக் காரணமாக விளங்குகிறது.

சற்று உங்கள் சிந்தனைகளை சீர்தூக்கிப் பாருங்கள். உங்கள் சிந்தையிலே தவறான யோசனைகள் வருகின்றன. என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் போது, கொஞ்சம் உங்களிடத்திலே நீங்களே பேசுங்கள். “மற்றவர்கள் மேல் பொறாமை கொள்வதினால் எனக்கு என்ன பயன்? அது என்னை ஆசீர்வாதமுள்ளவனாக்காது. நம் ஒவ்வொருவரைக் குறித்தும் தேவன் தனிப்பட்டத் திட்டங்களை உடையவராய் இருக்கிறார். அவர் எனக்குச் சிறந்ததைச் செய்யும்படி நான் அவரை நம்பப் போகிறேன்.

மற்றவர்களுக்கு அவர் எதைச் செய்தாலும், அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. அது என் வேலையுமல்ல” என்று உங்களிடத்திலே நீங்களே சொல்லிக் கொள்ளுங்கள். அதற்குப்பின், அவர்களைக் கர்த்தர் அபரிவிதமாக ஆசீர்வதிக்க வேண்டும் என அவர்களுக்காக ஜெபியுங்கள்.

உங்கள் உணர்வுகளைக் குறித்து தேவனிடத்தில் உண்மையுள்ளவர்களாக இருப்பதற்கு நீங்கள் பயப்பட வேண்டாம். நீங்கள் எப்படி உணருவீர்கள் என்பதை எப்படியும் அவர் அறிந்திருக்கிறார். ஆகவே நீங்கள் அவருடனே அதைக் குறித்துத் தெளிவாய்ப் பேசுங்கள்.

“ஆண்டவரே, நீர் இன்னாரை இன்னும் ஆசிர்வதிக்க வேண்டும் என நான் ஜெபிக்கிறேன். அவள் செழுமையடைய உதவி செய்யும். எல்லா நிலைகளிலும் அவளை ஆசீர்வதியும், விசுவாசத்தினாலே இப்படி நான் ஜெபிக்கிறேன். எனது மாம்சத்திலே நான் அவள் மீது பொறாமையோடு காணப்பட்டாலும், அது எனக்கு விருப்பமோ இல்லையோ, இந்த உமது வழியை நான் தெரிந்து கொள்கிறேன்” என்று சொல்லுவேன்.

சமீபத்தில், ஒருவர் இவ்வண்ணமாகச் சொல்லுவதை நான் கேள்விப்பட்டேன். நாம் எவ்வளவு தான் நன்றாகச் செய்தாலும், நம்மைக் காட்டிலும் ஒன்றை நன்றாய்ச் செய்யக் கூடிய இன்னொருவர் எப்பொழுதும் அங்கு இருப்பார் என்று அவர் கூறினார். இது உண்மையான ஒரு அனுபவமானபடியால் இச்சொற்கள் எனக்குள்ளே பதிந்தன. இது உண்மையாய் இருக்குமானால் நமது வாழ்க்கையில் இன்னொருவர் நம்மோடே போட்டிப் போட்டுக் கொண்டு, நம்மைக் காட்டிலும் சிறந்ததைச் செய்ய முடியும் என நிரூபித்து விடுகிறார்.

விளையாட்டுக்களை எடுத்துக் கொள்வோம். ஒரு வீரன் தலை சிறந்தவனாக வந்தவுடன், அவனை மேற்கொள்ள வேறொருவன் வந்து அவனை வென்று பட்டத்தை வாங்கிக் கொள்ளுகிறான். கேளிக்கை உலகத்திலே, இன்று ஒருவன் சிறந்த நட்சத்திரமாகத் திகழுவான். நாளைக்கு வேறொருவன் கொடிகட்டிப் பறப்பான். ஒருவரையொருவர் முந்திக் கொள்ள வேண்டும் என்ற போட்டி மனப்பான்மையோடு கூட செயல்பட்டு, பின்னர், அந்த முதன்மையான ஸ்தானத்திலே இருக்கும்படி சண்டை இடுவது எவ்வளவு வஞ்சகமான ஒரு செயலாகும்.

“சிறந்த நட்சத்திரங்கள்” திடீரென்று தோன்றி, பலருடைய கவனத்தையும் துரிதமாய்த் தங்கள் பக்கம் ஈர்த்துக் கொண்டாலும் கொஞ்சக் காலம் மட்டுமே அவர்கள் இருப்பார்கள். எப்படி எழும்பினார்களோ, அப்படியே வீழ்ந்துவிடுவார்கள். ஆனால் எப்பொழுதும் தன்னந்தனியாக இருந்து, நீண்டகாலமாக அவர் எதைச் செய்யச் சொல்லுகிறாரோ அதை மட்டும் என்னால் இயன்ற மட்டும் நான் செய்யும் போது அதுவே சிறந்ததாக இருக்கும் என்று தேவன் எனக்குச் சொல்லித் தந்தார். எனது செல்வாக்கைப் பற்றியப் பொறுப்பை அவர் ஏற்றுக் கொள்வதாகச் சொன்னார். எனது நிலை என்ன? அவர் எதையெல்லாம் நான் செய்யும்படி விரும்புகிறாரோ அதை மட்டும் செய்தால் போதும். ஏனெனில் நான் செய்வதைக் காட்டிலும் எதை நான் கையாள முடியும் என்பதை என்னைக் குறித்து அவர் நன்றாய் அறிந்திருக்கிறார்.

ஒருவேளை உங்களுக்கு இப்பகுதியில் நீண்ட காலமாக ஒரு பலத்த அரண் இருந்திருக்கலாம். எப்பொழுதெல்லாம் உங்களை விட சற்று, முன்னேறியவர்களைச் சந்திக்கிறீர்களோ அப்பொழுதெல்லாம் அவர்கள் மீது பொறாமையும், பகைமையும், போட்டி மனப்பான்மையும் உங்களுக்குள் ஏற்படலாம். அப்படியானால் ஒரு புதிய மன நிலையை பெற்றுக் கொள்ள உங்களை நான் ஊக்குவிக்கிறேன்.

மற்றவர்களுக்காக சந்தோஷப்படவும், உங்களுக்காக தேவனை நம்பவும் உங்கள் மனதைச் சரிபடுத்தி, சீராக்குங்கள். அதற்கு சற்று நேரமும், விடாமுயற்சியும் தேவை. ஆயினும், அந்தப் பழைய மனதின் அரண்கள் முற்றிலும் தகர்க்கப்பட்டு அதற்கு மாறாக, தேவனுடைய வசனம் உங்கள் மனதில் வரும்போது, நீங்கள் உங்கள் வனாந்தரப் பாதையை விட்டு வெளியே வந்து வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தின் வழியிலே காணப்படுவீர்கள்.

# அதிகாரம்
# 25

## *“எனது வழியில் நான் அதை செய்யப் போகிறேன், அல்லது ஒன்றுமே செய்யமாட்டேன்”*

வனாந்தர மனப்பான்மை #10

## *“எனது வழியில் நான் அதை செய்யப் போகிறேன், அல்லது ஒன்றுமே செய்யமாட்டேன்”*

**அதிகாரம்**
**25**

### வனாந்தர மனப்பான்மை #10

இஸ்ரவேலர் வனாந்தரத்தில் இருக்கையில் அதிகமான முரட்டாட்டமும், பிடிவாதமும் உள்ளவர்களாயிருந்தார்கள். ஆகவே தான் அவர்கள் வனாந்தரத்திலேயே மடிந்தார்கள். தேவன்செய்யச் சொன்னதை அவர்கள் செய்யவில்லை. குழப்பத்திற்குள் அகப்படும் போதெல்லாம் அவர்கள் தேவனை நோக்கி, தங்களை விடுதலையாக்கும்படி கூக்குரலிடுவார்கள். சூழ்நிலைகள் மாறும் வரை, அவர் கூறும் அறிவுரைகள் அனைத்துக்கும் அப்படியே கீழ்ப்படிவார்கள். பின்னர் மீண்டுமாக அதே முரட்டாட்டத்திற்குள்ளே அவர்கள் பிரவேசிப்பார்கள்.

*தேவன் மேல் அவர்கள் தங்கள் நம்பிக்கையை வைத்து, தேவனுடைய செயல்களை மறவாமல், அவர் கற்பனைகளைக் கைக்கொள்ளும்படிக்கும்.*

*இருதயத்தைச் செவ்வைப்படுத்தாமலும், தேவனை உறுதியாய்ப் பற்றிக் கொள்ளாமலும் இருந்த முரட்டாட்டமும், கலகமுமுள்ள சந்ததியாகிய தங்கள் பிதாக்களுக்கு அவர்கள் ஒப்பாகாதபடிக்கும், இவைகளைக் கட்டளையிட்டார்.*

சங்கீதம் 78:7-8

நம்ப முடியாத அளவிற்கு பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இஸ்ரவேலருடைய இந்த நிலமை மீண்டும் மீண்டும் கூறப்பட்டுள்ளதை நாம் வாசிக்கிறோம். இன்னும் நாமும் ஞானத்துடன் வாழாமல் இருப்போமானால், இஸ்ரவேலரைப் போல் நாமும் இதே காரியத்தைச் செய்வதில் நமது வாழ்வை வீணாக்கி விடுவோம்.

நம்மிலும் சிலர் இயற்கையாகவே மற்றவர்களை விட, முரட்டாட்டமாகவும், அடங்காதவர்களுமாகவே இருக்கிறோம். அப்படியானால் அதற்குரிய வேரை நாம் கண்டு பிடித்து வாழ்க்கையை

எப்படி நாம் ஆரம்பித்தோம் என்பதை சிந்திக்க வேண்டும். இல்லையென்றால் அது நம்மையும் பாதித்து விடும்.

நான் ஒரு முரட்டுத்தனமான குணத்தோடே பிறந்தேன். எதைக் குறித்தும் கவலைப்படாதபடி, ஒருவேளை பல வருடங்களாக எனது "சொந்த வழிகளிலேயே" காரியங்களைச் செய்ய முயற்சித்திருப்பேன். ஆனால் தரக்குறைவாகவும் சிறுமைப்படுத்தப்பட்டும் நடத்தப்பட்ட வருடங்கள் எனது முரட்டாட்டத்துடன் சேர்ந்து, ஒருவரும் எனக்குக் கட்டளையிடக் கூடாத மனநிலைமையை எனக்குள் உருவாக்கிற்று.

தேவன் என்னை உபயோகப்படுத்துவதற்கு முன்பு, இந்த மோசமான சுபாவத்துடன் வாழ்ந்த என்னுடனே தேவன் இடைப்பட வேண்டியதாயிற்று.

நாம் நமது சொந்த வழிகளைவிட்டு, அவருடைய கரங்களில் நம்மை உருவாக்கும்படி ஒப்புக் கொடுப்பதையே தேவன் விரும்புகிறார். ஆனால், நாம் முரட்டாட்டமும் பிடிவாதமுமாய் இருக்குமட்டும் தேவன் ஒரு போதும் நம்மை உபயோகிக்கவே முடியாது.

பிடிவாத குணம், கையாள முடியாத ஒரு சுபாவமாகும். "முரட்டாட்டம்" எதிர்த்து நிற்கும் ஒரு சுபாவமாகும். சரியானதை "எதிர்ப்பதும்," அடங்காமலிருப்பதும், சாதாரண வழிமுறைகளைப் பின்பற்றுவதை மறுப்பதும் ஆகிய அனைத்தும் முரட்டாட்ட சுபாவங்களாகும். இந்த இரண்டு விளக்கங்களும் நான் எப்படி இருந்தேன் என்பதை எனக்கு வெளிப்படுத்துகிறது.

சிறுபிராயத்தில் நான் தரக்குறைவாய் நடத்தப்பட்ட நிலைமை, அதிகாரத்தை எதிர்த்து நிற்கும் சூழ்நிலைக்குள் என்னைத் தள்ளிற்று. ஆனால் நான் ஏற்கனவே கூறியது போல, முரட்டாட்டத்திலே நான் காணப்படுவதற்கு எனது, பழைய வாழ்க்கை ஒரு சாக்குப் போக்காக அமைய முடியாது. ஒழுங்கும் தேவனுக்குக் கீழ்ப்படிதலும் வெற்றிகரமான ஜீவியத்திற்கு அடிப்படைகளாகும். நமது சித்தத்தை நாம் ஓரம் வைத்து விட்டு, அவரது சித்தத்தை மட்டும் செய்ய நமது திறமையிலும், சக்தியிலும் நாம் வளருகிறோம். இப்பகுதியில் நாம் தொடர்ந்து முன்னேறுவது மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

“நான் என்னால் போக முடிந்த அளவு போய்விட்டேன் என்று எண்ணி ஒரு குறிப்பிட்ட தொலை தூரத்தைப் போய் சேர்ந்தால்” மட்டும் போதாது. நமக்கென்று எதையும் தக்கவைத்துக் கொள்ளாமல், கர்த்தருக்கென்று நம்முடைய வாழ்வின் எந்தக் கதவுகளையும் மூடாமல் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும். ஆனால் நாமனைவரும் இந்த சில குறிப்பிட்ட பகுதிகளின் கதவுகளை எவ்வளவு காலம் மூடி வைத்துள்ளோம். ஆயினும், கொஞ்சம் புளித்தமா, பிசைந்த மா முழுவதையும் புளிப்பாக்கிவிடும் என்பதை நினைவில் கொள்ளுங்கள் (1 கொரிந்தியர் 5:6).

## தேவன் பலியை அல்ல, கீழ்ப்படிதலையே விரும்புகிறார்

> அதற்குச் சாமுவேல், கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகன பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்.
>
> இரண்டகம் பண்ணுதல் பில்லிசூனிய பாவத்திற்கும், முரட்டாட்டம் பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரகாராதனைக்கும் சரியாய் இருக்கிறது. நீர் கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தபடியினாலே, அவர் உம்மை ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளினார்.
>
> 1 சாமுவேல் 15:22-23

சவுல் ராஜாவாய் இருக்கும்படி ஒரு சந்தர்ப்பம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. முரட்டாட்டத்தினாலும் அகங்காரத்தினாலும் அந்த ஸ்தானத்திலே அதிக நாட்கள் அவனாலே இருக்க முடியவில்லை. காரியங்களில் ஈடுபாடு கொள்வதில் அவன் தனது சொந்த அபிப்பிராயத்துடனே செயல்பட்டான்.

செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டக் காரியத்தை ஒரு தடவை சவுல் செய்யாததை சாமுவேல் கண்டித்தான். அதற்கு “நான் எண்ணினேன்”

என்று சவுல் பதில் கூறினான்.அதற்குப் பிறகு, சவுல், தான் எண்ணியது போல காரியங்கள் எப்படி நடக்க வேண்டும் என்று விளக்க ஆரம்பித்தான் (1 சாமுவேல் 10:6-8, 13:8-14). சாமுவேல் சவுலைப்பார்த்து, தேவன் பலியையல்ல, கீழ்ப்படிதலையே எதிர்பார்க்கிறார் என்று கூறுகிறான்.

பல சமயங்களில் தேவன் செய்யக் கேட்பதை நாம் செய்கிறதில்லை. பின்னர் நமது கீழ்ப்படியாமையை நியாயப்படுத்திக் கொள்ளுவதற்கு, ஏதாவது ஒன்றை நம் விருப்பப்படி செய்ய முயற்சிக்கிறோம்.

எத்தனை தேவனுடைய பிள்ளைகள் இப்பூமியிலே "இராஜாக்களாக ஆளத் தவறிவிட்டடார்கள்?" (ரோமர் 5:17, வெளிப்படுத்தின விசேஷம் 1:6) அவர்களது முரட்டாட்டமும், பிடிவாதமுமே அதற்குக் காரணங்களாகும்.

விரிவாக்க வேதாகமத்தில் பிரசங்கி புஸ்தகத்தின் முன்னுரை இவ்வாறாக சொல்லுகிறது: "இந்த புஸ்தகத்தின் நோக்கம் என்னவென்றால் வாழ்க்கையை முழுமையாக ஆராய்ந்து இறுதியாக தேவன் பேரில் சரியான கவனமும், பயபக்தியும் இல்லாவிட்டால் வாழ்க்கை வெறும் மாயையே என்பதை கடைத்தொகையாக கற்றுக்கொடுப்பதேயாகும்."

கீழ்ப்படிதலில்லாமல், சரியான மரியாதையும் கனமும் இல்லை என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். தங்கள் பெற்றோருக்குக் கொடுக்க வேண்டிய சரியானக் கனத்தையும் மரியாதையையும் அநேகப் பிள்ளைகள் கொடாதபடியினாலே முரட்டாட்டம் இன்று பிள்ளைகளுக்கு முன்பாக நடந்து கொள்ள வேண்டிய முறைப்படி நடந்து கொள்ளாதபடியினாலே, இந்நிலைமை அவர்களுக்கு ஏற்படுகிறது.

பிரசங்கியின் புத்தகம் சாலமோனால் எழுதப்பட்டது என்று வேத ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். தேவனிடத்திலிருந்து இவன் மிகுந்த ஞானத்தைப் பெற்றவனாக இருந்தான். இவ்வளவு தேவ ஞானத்தைப் பெற்ற இவன் எப்படி இத்தனை துக்கரமான தவறுதல்களைச் செய்ய முடிந்தது? பதில் மிகவும் எளிது. ஒன்றை உடையவர்களாயிருந்தும், அதை உபயோகப்படுத்தாமல் இருக்க முடியும். கிறிஸ்துவின் சிந்தை

நமக்கு இருக்கிறது. ஆனாலும் நாம் அதைப் பயன்படுத்துகிறோமா? நமக்காக தேவன் இயேசுவை ஞானமாக்கினார். ஆனால், அந்த ஞானத்தை நாம் உபயோகப்படுத்துகிறோமா?

சாலமோன் தனது சொந்த வழியில் சென்று, தனது சொந்தக் காரியங்களைச் செய்ய விரும்பினான். தனது வாழ்வில் முதலாவது ஒன்றை முயற்சித்துப் பின்னர் மற்றொன்றை முயற்சித்தான். பணத்தால் எதையும், எல்லாவற்றையும் அவன் வாங்கக் கூடியவனாக இருந்தான். எல்லா இன்பங்களின் சிறப்பும் அவனுக்கு இருந்தது. ஆனால், பிரசங்கி புத்தகத்தை முடிக்கும் போது, அவன் இவ்வண்ணமாக எழுதுகிறான்.

> காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள். எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே.
>
> பிரசங்கி 12:13

இந்த வாக்கியத்திலிருந்து நான் பெற்றுக்கொண்டதை என்னுடைய சொந்த வார்த்தைகளில் சொல்லட்டும்.

மனித சிருஷ்டிப்பின் முழு நோக்கமே அவன் தேவனுக்கு கீழ்ப்படிந்து, அவரைக் கனப்படுத்தி, ஆராதிப்பதேயாகும். எல்லாத் தெய்வீக சுபாவமும் கீழ்ப்படுதலிலே வேரூன்றியிருக்க வேண்டும். அதுவே சகல சந்தோஷத்தின் ஊற்றாகும். யாரும் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் உண்மையான சந்தோஷத்தோடே ஒருபோதும் இருக்கவே முடியாது. நமது வாழ்வில் இருக்கும் ஒழுங்கீனங்கள் அனைத்தும் கீழ்ப்படிதலின் மூலமாகவே சரியாக்கப்படும் மனிதனுடைய முழுக் கடமையே கீழ்ப்படிதல் தான்.

இவ்வசனத்தை ஆழமாய்த் தியானித்துப் பயனடையுங்கள்.

## கீழ்ப்படிதல் - கீழ்ப்படியாமை இரண்டிற்கும் விளைவுகள் உண்டு

அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர்

பாவிகளாக்கப்பட்டது போல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்.

ரோமர் 5:19

கீழ்ப்படிதல் அல்லது கீழ்ப்படியாமல் இருத்தல் ஆகிய இரண்டில் ஒன்றை நாம் தெரிந்து கொள்ளும் போது, அது நம்மை பாதிப்பது மட்டுமல்ல. பெரும்பாலானவர்களையும் அது பாதிக்கிறது. சற்று யோசித்துப் பாருங்கள். இஸ்ரவேலர் தேவனுக்கு ஒழுங்காகக் கீழ்ப்படிந்திருந்தார்களானால், அவர்களது வாழ்வு எவ்வளவு மகத்துவமானதாய் அமைந்திருக்கும். தேவனுடைய வழிகளுக்குத் தங்களை அர்ப்பணியாத பட்சத்தில் அவர்களில் பலரும், அவர்கள் பிள்ளைகளும் வனாந்தரத்திலேயே மாண்டுபோனார்கள். அவர்களுடைய தீர்மானத்தினாலே அவர்களுடைய பிள்ளைகள் பாதிக்கப்பட்டார்கள்.

சமீபத்தில் என் மகன் என்னிடத்தில் வந்து, “அம்மா, நான் ஒன்றை உங்களிடம் சொல்ல விரும்புகிறேன். நான் அதைச் சொல்லும் போது ஒருவேளை நான் அழலாம். ஆனால் தயவு செய்து கேளுங்கள்” என்று சொன்னான். மேற்கொண்டு அவன் கூறியதாவது, “உங்களைப் பற்றியும், அப்பாவைப் பற்றியும் நான் யோசிக்கிறேன். இத்தனை ஆண்டுகள் நீங்கள் தேவனுக்குக் கீழ்ப்படிவதையே தெரிந்து கொண்டீர்கள். சில சமயங்களிலே யாரும் அறியாத அது, மிகவும் உங்களுக்குக் கடினமாக இருந்திருந்தாலும், கீழ்ப்படிந்தீர்கள். இந்தக் காலையிலே தேவன் எனக்கு வெளிப்படுத்திய ஓர் உண்மை என்னவென்றால், உங்கள் இருவருடைய கீழ்ப்படிதலினாலே நான் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டேன். அதை நான் பாராட்டுகிறேன்” என்று கூறினான்.

அவன் எனக்குச் சொன்னது, அர்த்தம் நிறைந்ததாக மட்டுமல்ல. வேத வசனம் ரோமர் 5:19 ஐ அது எனக்கு நினைப்பூட்டியது.

தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற உங்கள் தீர்மானம் மற்றவர்களைப் பாதிக்கிறது. அதே சமயம் தேவனுக்குக் கீழ்ப்படியாத உங்கள் தீர்மானமும் மற்றவர்களைப் பாதிக்கிறது. தேவனுக்குக் கீழ்ப்படியாமற் போய் வனாந்தரத்திலே நீங்கள் நிலைத்திருக்கத் தெரிந்து கொள்ளலாம். ஆனால், ஒன்றை மட்டும் நினைவில்

கொள்ளுங்கள். இந்நிலையில் நீங்கள் இப்போதோ அல்லது பின்போ, பிள்ளைகளை உடையவர்களாக இருப்பீர்களானால், அது அவர்களையும் வனாந்தரத்திலேயே தங்க வைத்து விடுகிறது. அவர்கள் வளரும் போது அதை விட்டு வெளியே வர எப்படியாவது முயற்சிக்கலாம். ஆனால், உங்களுடைய கீழ்ப்படியாமைக்கு உண்மையாகவே அவர்கள் விலை செலுத்த வேண்டியதிருக்கும்.

உங்களுடைய கடந்த காலத்தில் யாரோ ஒருவர் தேவனுக்கு கீழ்படிந்திருப்பார்களென்றால் இப்போது உங்கள் வாழ்க்கை நன்றாக இருந்திருக்கலாம்.

உங்கள் வாழ்வில் யாராவது ஒருவர் தேவனுக்குக் கீழ்ப்படிந்தபடியால், உங்கள் வாழ்வில் இப்போது நரக வாசல்கள் அடைக்கப்பட்டு, பரலோக ஜன்னல்கள் திறந்துவிடப்பட்டிருக்கலாம்.

கீழ்ப்படிதலைப் பற்றி நான் ஒரு புத்தகமே எழுதலாம். ஆனால், நான் சொல்ல விரும்பும் குறிப்பு என்னவெனில் கீழ்ப்படியாமையின் வாழ்வு, தவறான எண்ணத்தின் விளைவேயாகும்.

## எல்லா எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குள் சிறைப்படுத்தி விடுங்கள்

நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும், மாம்சத்தின் படி போர் செய்கிறவர்களல்ல.

எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது.

அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவிற்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்.

2 கொரிந்தியர் 10:3-5

பல சமயங்களில் நமது சிந்தனைகள் தான் நம்மைப் பிரச்சனைக்குள்ளாக்குகின்றன.

ஏசாயா 55:8 ல் என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல. உங்கள் வழிகள் என் வழிகளும் அல்ல என்று கர்த்தர் சொல்லுகிறார் என வாசிக்கிறோம். நீங்களும் நானும் எதை யோசிக்கிறோம் என்பது காரியம் அல்ல. தேவன் தமது எண்ணங்களையே வேதாகமம் என்னும் தமது நூலில் நமக்காக எழுதி வைத்திருக்கிறார். தேவனுடைய வார்த்தை என்னும் வெளிச்சத்திலே நமது சிந்தனைகள் நாம் பரிசோதிக்கத் தெரிந்துக் கொள்ள வேண்டும். அவருடைய சிந்தைக்கு நமது சிந்தையை உட்படுத்த ஆயத்தமாயிருக்க வேண்டும்.

இதைத்தான் மேற்கூறிய வசனங்களில் நாம் காண்கிறோம். உங்கள் சிந்தையில் எவை இருக்கின்றன என்பதை ஆராய்ந்து பாருங்கள். வேத வசனமாகிய தேவ சிந்தையோடு அவை இணைந்து வராவிட்டால், உங்கள் சிந்தனைகளை நிர்மூலமாக்கி, அவருடைய சிந்தனைகளை சிந்தியுங்கள்.

தங்கள் சுய சிந்தையின் மாயத்திலே வாழ்கிற மக்கள் தங்களையே அழிக்கிறது மட்டுமல்ல, தங்களைச் சுற்றியுள்ளவர்களுக்கும் அழிவைக் கொண்டு வருகிறார்கள்.

*சிந்தை ஓர் போர்க்களம்!*

இந்த போர்க்களத்திலே சாத்தான் உங்களுக்கு முன்பாக தொடுக்கும். போரிலே, ஒன்று நீங்கள் ஜெயிக்கலாம் அல்லது தோற்கலாம். இந்தப் புத்தகமானது, தாக்கல்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாக எழும்புகிற எல்லா மேட்டிமைகளையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குள் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறதற்கு, உதவி செய்ய வேண்டும் என்பதே எனது ஊக்கமான, இதயப்பூர்வமான ஜெபமாக இருக்கிறது.

# குறிப்புகள்

*அத்தியாயம் 7*

1. டபள் யூ.ஈ, வைன், மெரிள் அங்கர் மற்றும் வில்லியம் ஒயிட் ஜூனியர் அவர்களின் "வைனின் வேதாகம வார்த்தைகளுக்கான விரிவான விளக்கமளிக்கும் அகராதி" (நேஷ்வில்: தாமஸ் நெல்சன், 1985), 662.
2. ஜேம்ஸ் ஸ்டிராங், 'ஸ்டிராங்கின் புதிய விவரமான வேதாகம ஒப்புவாக்கியங்கள்' (நேஷ்வில்: தாமஸ் நெல்சன் 1984) "புதிய எற்பாட்டின் கிரோக்க அகராதி" 24.
3. வெப்ஸ்டரின் II புதிய ரிவெர்சைட பல்கலைக்கழக அகராதி S.V. "தியானம்".
4. வைன், அங்கர் மற்றும் ஒயிட் "வைனின் வேதாகம வார்த்தைகளுக்கான விரிவான விளக்கமளிக்கும் அகராதி" 400.

*அத்தியாயம் 9*

1. வெப்ஸ்டரின் II புதிய ரிவெர்சைட் பல்கலைக்கழக அகராதி S.V. "காரணம்".
2. ஐபிட், S.V. "அதிசயம்".

*அத்தியாயம் 11*

1. டபள் யூ.ஈ. வைனின் பழைய மற்றும் புதிய ஏற்பாட்டின் வார்த்தைகளுக்கான விரிவான விளக்கமளிக்கும் அகராதி (ஓல்டு டாப்பன் நியுஜெர்ஸி: பிளமிங் எச். ரவல் 1981) பகுதி அ, அ-டீஸ்., 335.
2. ஐபிட், பகுதி 4 செட் 2, 165

*அத்தியாயம் 12*

1. வெப்ஸ்டரின் II புதிய ரிவர்சைட் பல்கலைக்கழக அகராதி S.V. "கவலை"

*அத்தியாயம் 13*

1. வைன். வைனின் பழைய மற்றும் புதிய ஏற்பாடு வார்தைகளுக்கான விரிவான விளக்கமளிக்கும் அகராதி பகுதி 2 ELi 281
2. ஐபிட் 280

*அத்தியாயம் 15*

1. வெப்ஸ்டரின் II புதிய ரிவெர்சைட் பல்கலைக்கழக அகராதி S.V. “மனசோர்வு”
2. ஐபிட் S.V. “மனசோர்வு”
3. வைன், வெனின் பழைய மற்றும் புதிய ஏற்பாடு வார்த்தைகளுக்கான விரிவான அகராதி, பகுதி 2 Eli, 60
4. ஐபிட் பகுதி 3: Lo - Ser 55
5. ஸ்ட்ராங்கின் புதிய விவரமான ‘வேதாகம ஒப்புவாக்கியங்கள்’ “எபிரேய மற்றும் கல்தேய அகராதி”. 32.

*அத்தியாயம் 23*

1. வெப்ஸ்டரின் II புதிய ரிவெர்சைட் பல்கலைக்கழக அகராதி, S.V. நிந்தை

*அத்தியாயம் 24*

1. வைன், வைனின் பழைய மற்றும் புதிய ஏற்பாடு வார்த்தைகளுக்கான விரிவான விளக்கமளிக்கும் அகராதி, பகுதி 2. Eli, 37
2. வெப்ஸ்டரின் II புதிய ரிவெர்சைட் பல்கலைக்கழக அகராதி S.V. பொறாமை.

# குறிப்புகள் விவரங்களைத் தரும் புத்தக்பபட்டியல்


ஸ்டிராங், ஜேம்ஸ், "ஸ்டிாங்கின் புதிய விவரமான வேதாகம ஒப்புவாக்கியங்கள் (நேஷ்வில் : தாமஸ் நெல்சன், 1984)".

வைன், டபள் யூ. ஈ. அங்கர், மெரிள்; ஒயிட், வில்லியம், ஜூனியர் வைனின் வேதாகம வார்த்தைகளுக்கான விரிவான விளக்கமிள்ககும் அகராதி, நேஷ்வில் தாமஸ் நெல்சன் 1985.

வைன, டபள்யூ ஈ. வைினன் பழைய மற்றும் புதிய எற்பாடு வார்த்தைகளுக்கான விரிவான அகராதி பழைய டப்பன், புதிய ஜெர்ஸி; பிளமிங் எச். ரிவல், 1981.

வெப்ஸ்டரின் II புதிய ரிவெர்சைட் பல்கலைக்கழக அகராதி, பாஸ்டன்: ஹப்டன் மிப்ளின் கம்பெனி 1984.

# ஆசிரியரைப் பற்றி

ஜாய்ஸ் மேயர் அவர்கள் உலகப்பிரசித்திப்பெற்ற வேதாகமப் போதகர்களுள் ஒருவராவார். நியூயார்க் டைம்ஸின் சிறப்பாக விற்பனையாகும் ஆசிரியரான அவருடையப் புத்தகங்கள், பலலட்சக்கணக்கானவர்கள் இயேசுக் கிறிஸ்துவின் மூலம் நம்பிக்கையையும், மீட்பையும் கண்டடைய உதவியுள்ளன. ஜாய்ஸ் மேயர் ஊழியங்களின் மூலம் பல தலைப்புகளைப் பற்றி அவர் போதிக்கின்றார், அதில் மனம், வாய், மன நிலை, மனப்பான்மை ஆகியவற்றிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அவர் போதிக்கின்றார். அவருடைய வெளிப்படையான உரையாடும் நடையானது, அவருடைய தனிப்பட்ட அனுபவங்களை வெளிப்படையாகவும், நடைமுறைக்கேற்றப்படியாகவும் பகிர்ந்துக் கொள்ள உதவுகிறது.இதனால் கேட்கிறவர்கள் அவர் என்ன வாழ்க்கையில் கற்றுக் கொண்டாரோஅதை அவர்கள் வாழ்க்கையில் அப்பியாசப்படுத்த ஏதுவுண்டாகிறது. ஜாய்ஸ் அவர்கள் சுமார் 100 புத்தகங்களை எழுதியுள்ளார். அவை 100 மொழிகளில் மொழிப்பெயர்கப்பட்டுள்ளது. அவர் ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ பன்னிரெண்டு உலகளாவிய மற்றும் உள்நாட்டு கருத்தரங்குகளை நடத்துகின்றார், இதன்மூலம் மக்கள் தங்கள் அனுதின வாழ்க்கையை அனுபவிக்கப் போதிக்கின்றார். கடந்த 30 ஆண்டுகளாக ஆண்டுதோறும் நடைபெறும் அவருடைய பெண்கள் கருத்தரங்குக்கு சுமார் 20 லட்சம் பெண்கள் உலகெங்கிலுமிருந்து கலந்துக் கொள்கின்றனர். கஷ்டப்படும் மக்களுக்கு உதவ வேண்டுமென்ற ஜாய்ஸின் வாஞ்சை தான் “நம்பிக்கையின் கரம்” என்ற தரிசனத்திற்கு அஸ்திபாரமாக அமைந்திருக்கிறது, இது ஜாய்ஸ் மேயர் ஊழியங்களின் ஊழியப் பணி கிளையாகும், இது அவருடைய ஊராகிய செயின்ட் லூயிலும் உலகின் பல்வேறு இடங்களிலும் நடைபெறும் அருட்பணிகளை தாங்கிவருகின்றது.

# தேவனோடு தனிப்பட்ட உறவை வைத்துக்கொள்வதற்கான ஜெபம்

மற்ற எல்லாவற்றையும்விட இயேசு உங்களை இரட்சிக்கவும், பரிசுத்த ஆவியினால் நிரப்பவும் விரும்புகிறார். நீங்கள் சமாதானபிரபுவாகிய இயேசுவை உங்கள் ஆண்டவராகவும், மீட்பராகவும் இதுவரை ஒருபோதும் அழைத்திராவிட்டால், நீங்கள் அவ்வாறு செய்யும்படி இப்பொழுது நான் உங்களை அழைக்கிறேன். கீழ்க்கண்ட ஜெபத்தை ஏறெடுங்கள். நீங்கள் இதை முழுமனதோடு உண்மையாகவே செய்தால், கிறிஸ்துவுக்குள்ளாக ஒரு புதுவாழ்க்கையை உணருவீர்கள்.

*பிதாவே,*

*நீர் உலகத்தை இவ்வளவாக நேசித்தீர், உம்முடைய ஒரே குமாரனை எங்களுடைய பாவங்களுக்காக மரிக்கக் கொடுத்தீர், அதனால் அவருக்குள் விசுவாசிக்கிறவன் எவனும் அழிந்துபோகாமல், நித்தியவாழ்வைப் பெறுகிறான்.*

*உம்மிடத்திலிருந்துப் பெற்ற வெகுமதியான, விசுவாசத்தின் மூலமாய் கிருபையாக இரட்சிக்கப்பட்டோம் என்று*

*உம்முடைய வசனம் சொல்கிறது. நாங்கள் இரட்சிப்படைய எங்களால் எதுவும் செய்ய இயலாது.*

*உம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே உலகத்தின் மீட்பர் என்று நான் நம்பி, என் வாயினால் அறிக்கையிடுகிறேன். என்னுடைய எல்லாப் பாவங்களையும் ஏற்றுக்கொண்டு, அதற்கான கிரயத்தை செலுத்தி சிலுவையில் எனக்காக மரித்தார். நீர் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினீர் என்று என் இதயத்தில் விசுவாசிக்கிறேன்.*

*நீர், என்னுடைய பாவங்களை மன்னிக்கும்படி வேண்டுகிறேன். நான் இயேசுவை என்னுடைய ஆண்டவராக அறிக்கையிடுகிறேன். உம்முடைய வசனத்தின்படி நான் இரட்சிக்கப்பட்டேன், உம்முடன் நித்தியத்தைக் கழிப்பேன். பிதாவே! உமக்கு நன்றி!*

*நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

யோவான் 3:16; எபேசியர் 2:8,9 ரோமர் 10:9,10; 1 கொரிந்தியர் 15:3,4; 1 யோவான் 1:9; 4:14-16, 5:1,12,13 பார்க்கவும்.

To contact the author in the United States, please write:

Joyce Meyer Ministries
P.O. Box 655,
Fenton, Missouri 63026
or call: (636) 349-0303
or log on to: www.joycemeyer.org

**Go to tv.joycemeyer.org**
**to watch Joyce's messages in a variety of languages**

To contact the author in India, please write:

Joyce Meyer Ministries
Nanakramguda,
Hyderabad - 500 008
or call: 2300 6777
or log on to: www.jmmindia.org